அமிர்த மதண கூத்து நாடகம்

பதிப்பாசிரியர் த. பூமிநாகநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

அமிர்த மதன கூத்து நாடகம்

பதிப்பாசிரியர்

த. பூமிநாகநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சி.பி.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113.

1996

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**AMIRTA MATAṈA KŪTTU NĀṬAKAM**
Author	:	**D. Boominaganathan** M.A., Research Assistant. I.I.T.S.
Publication and Copy right		International Institute of Tamil Studies, C.I.T. Campus Taramani, Chennai - 600 113.
Publication No.	:	239
Language	:	Tamil
Date of Publication	:	1996
Edition	:	First
Paper Used	:	16 kg Creamwove
Size	:	1/8 Demmy
Printing Types	:	10 Points
No of Copies	:	1000
No of Pages	:	438 + 5
Price	:	Rs.90/-
Printers	:	**Shri Vignesh Printers** 158/5, Lake View Road, West Mambalam, Chennai - 600 033. Ph: 4848486
Artist	:	**Shri Vignesh Printers,** Chennai-33.
Subject	:	Mythical Folk Drama

வெள்ளி விழா வெளியீடு

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

அணிந்துரை

பேரறிஞர் அண்ணா அவர்களால் வடிவமைக்கப்பட்டு, முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் முனைவர் கலைஞர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979 முதல் சுவடியியல் துறையில் முதன்முதல் பட்டய வகுப்புகளைத் தொடங்கி நடத்தி வருவதோடு அல்லாமல் நல்ல பல பல்துறை சான்ற அரிய தமிழ்ச் சுவடிகளைத் தேடிப்பிடித்துப் பதிப்பித்தும் வருகின்றது.

அவ்வகையில் இச்சுவடி தமிழகத்தின் முதுபெரும் நூல் நிலையமான அரசு சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகக் கருவறையில் இருந்து பெறப்பட்டு நிறுவன வெள்ளிவிழா வெளியீடாக வெளிவருகின்றது.

'அமிர்த மதன கூத்து நாடகம்' என்ற இச்சுவடி தொன்மப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நாட்டுப்புறக் கலையான கூத்து நாடக வடிவில் பாட்டும் உரைநடையுமாக அமைந்துள்ளது.

இந்நூல் அமிர்தம் பற்றிய விளக்கம், சமூகத்தில் பாற்கடல் கடைந்த புராணக் கதையின் தாக்கம், அரவமும் மக்கள் நம்பிக்கையும், அமிர்த மதன நாடகமும் மோகினி அவதாரமும் போன்ற தலைப்புகளில் புதிய முறையில் அணுகப்பட்டுப் படித்து இன்புறும்படியாக அமையப் பெற்றுள்ளது.

திரு த. பூமிநாகநாதன் அவர்தம் முழு முயற்சியால் பதிப்பிக்கப்பெற்று வெளிவரும் இந்நூலில் மேற்கூறியபடி அரிய பல செய்திகள் நுணுக்கமாக ஆராயப்பட்டு எழுதப்பட்டுள்ளது. இவர் ஆர்வம் பாராட்டுதற்குரியது.

இந்நிறுவனத்தில் ஆய்வு உதவியாளராகப் பணியாற்றி வரும் இவர் சுவடித்துறையில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பயிற்சி உடையவர். சுவடிப் பாதுகாப்பு, பராமரிப்புப் பற்றி 'லக்னோ' சென்று அத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். பெண்ணரசியர் கதை, அருள்மிகு சொரிமுத்து ஐயனார் கதைப்பாட்டு, சுவடி விளக்க அட்டவணை போன்ற நூல்களின் பதிப்பாசிரியர்களில் இருவரும் ஒருவர். இவர் மேலும் பல நூல்களைப் பதிப்பித்துத் தமிழுக்கு வளம் சேர்க்க வேண்டும் என்பது எனது பேராவல்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, உறுதுணை புரிந்து வரும் நிறுவனத்தின் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் அவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலைச் சிறப்பாகப் பதிப்பித்த ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் அச்சகத்தார்க்கும் எனது நெஞ்சு நிறைந்த நன்றி.

இயக்குநர்.

பொருளடக்கம்

அமிர்த மதன கூத்து நாடகம்

கூத்து நாடகம் - பெயர் விளக்கம்

''தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பினளாம் எங்கள் தாய்''

எனப் பாரதியார் பெருமைப்படும் வண்ணம் சீர் இளமைத் திறத்துடன் தமிழ் இலங்குவதற்குக் காரணம் பல்வகையான நுண்கலைகளும் நெடிய பண்பாட்டுப் பயணத்தில் அதுபெற்ற பட்டறிவுமே ஆகும்.

நம் முன்னோர்கள் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவாக வரையறுத்துள்ளனர். அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் எனப்படும். இயற்றமிழ் என்பதற்குத் தஞ்சைப் பல்கலைக் கழகப் பெருஞ்சொல் அகராதி (தொகுதி II-1919) இசையும் நாடகமும் அல்லாத தமிழ் நூல்கள் எனவும், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி 'செந்தமிழ், வழக்குத் தமிழ்' எனவும் பொருள் கூறுகின்றன. நாடகத் தமிழ் என்பதற்கு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதி' நாடக வழங்குந் தமிழ் அஃது முத்தமிழிலொன்று எனப் பொருள் கூறுகிறது. நாடகம் என்றசொல் பழந்தமிழ் இலக்கியத்தில் அருகிக் காணப்படகிறது. கூத்து என்ற சொல்லும் நாடகத்தைக் குறிப்பதற்காகப் பழந்தமிழ் இலக்கியங்களில் பழகி வருவதைக் காணலாம். கூத்து என்பதற்கு 'நடனம் இறை நடனம் (Divine Dance) என சென்னைப் பல்கலைக் கழகம் பேரகராதி பொருள் கூறுகிறது. கழகத் தமிழ்க் கையகராதி 'கூத்து' என்பதற்கு நடனம் நாடகம் எனப் பொருள் பகர்கின்றது. ஆனால் பாட்டு, பேச்சு, நடிப்பு என்ற மூன்று பொருண்மைகளின் கலப்பே கூத்து எனக் கிராமியக்

கலைகளில் ஒன்றான கூத்து என்று பெயரிய கூத்துக்கலை மூலம் அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் குரவைக் கூத்து, துணைங்கைக் கூத்து, குடக்கூத்து, உரற் கூத்து, கரணக்கூத்து, நோக்குக் கூத்து, பாவைக் கூத்து, வெற்றிக் கூத்துகளான வாளமலைக் கூத்து, வள்ளிக்கூத்து, கழல்நிலைக் கூத்து, துடிக் கூத்துகளும் இறை தொடர்புடைய கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலக் கூத்து என்றும் மேற்கண்ட கூத்துகளுக்கெல்லாம் மறுதலையாக விளங்கும் சாந்திகூத்து போன்ற பலவகையான கூத்துகள் இருந்தவற்றைக் காண முடிகிறது.

குரவைக் கூத்து

குரவைக் கூத்து என்பது பலர்கூடி நிகழ்த்தும் கூத்து ஆகும். இதனை ஒரு மலை வாழ்மக்கள் நடனம் என்றும் கூறலாம். குரவை என்பது இசைப் பின்னணியோடு கூடியது; வழிபாட்டின் ஒரு கூறாக அமைவது. ஏழு அல்லது ஒன்பது பேர்கூடி ஆடும் ஆட்டம் என (சோமசுந்தரனார் பொ.வெ. (பெருமழைப் புலவர்) *சிலப்பதிகார உரை பக்:49)* விளக்குவார்.

> தாழைவீழ் கயிற்று ஊசல் தூங்கி (அகம் 20:7)
> மகளி ரொடு குரவை தூங்கி (அகம் 232-9)
> வேங்கை முன்றில் குரவை அயர்தல் (புறம் 129:2)
> மன்று தோறு நின்ற குரவை (மது.காஞ்:615)

போன்ற பாட்டும் தொகையுமான சங்க இலக்கியங் களில் மிகப் பரவலாக இக்கூத்து பேசப்பட்டுள்ளதை அறியலாம்.

துணைங்கைக் கூத்து

இளமகளிர் தகுந்த ஆயுதங்களுடன் குழுவாகக் கூடி ஆடும் கூத்து துணங்கைக் கூத்து ஆகும். இதற்கு உரிய

இசை இமிழிசை என்பர். 'துணங்கை யம் சீர்த்த மழுஉ மறப்ப-6 என சங்க நூல்களில் ஒன்றான மதுரைக் காஞ்சி-16ல் இதன் சிறப்பு விவரிக்கப்பட்டுள்ளதையும் காணலாம். இதற்கு சிங்கிக் கூத்து எனவும் மறுபெயர் உண்டு.

குடக்கூத்து

பானையின் துணைகொண்டு ஆடப்படும் நடனமே குடக்கூத்து ஆகும். 'நீள்நிலம் அளந்தோன் ஆடிய குடம்' எனச் சிலப்பதிகாரம் 5-5ல் இக்கூத்து பற்றிய செய்தியினைக் காணலாம். அடியார்க்கு நல்லார் வகைப்படுத்தும் வினோதக் கூத்துகளில் ஒன்றாக விளங்குவது குடக்கூத்து. இதனைக் கும்பக்கூத்து என்றும் கூறுவர். இன்றைய கரக ஆட்டத்திற்கு முன்னோடியாக இதனைக் கருதலாம்.

உரற்கூத்து

மகளிர் தூக்குவதற்கு வாய்ப்பாக உள்ள உரல் போன்ற அமைப்புடைய பொருளைக் கொண்டு ஆடப்படுவது. பெரும்பாணாற்றுப்படை (54-55ல்)

துளை அறை சீர் உரல் தூங்க தூக்கி
நாடக மகளிர் ஆடும்

என்ற வரிகள் இக்கூத்து பற்றிக் கூறுவதைக் காணலாம்.

இக்காலத்தில் பளுதூக்குவார் எப்படிப் பளுவைத் தங்கள் கழுத்துப் பகுதியில் அல்லது பிடர்ப் பகுதியில் தாங்குகின்றனரோ அதேபோன்று உரல் போன்ற அமைப்பைத் தங்கள் பிடர்மேல் தாங்கி ஆடும் ஆட்டம் ஆகும். இதனை இன்றைய காவடி ஆட்டத்திற்கு ஒப்பானது என்று கூறலாம்.

கரணக்கூத்து

வினோதக் கூத்து வரிசையில் ஒன்றான கரணக்கூத்து பற்றிய செய்தி சங்க இலக்கியங்களில் குறிப்பிடவில்லை. எனினும் சிலப்பதிகாரத்தில் இதுபற்றிய குறிப்பு வருதலைக் காணலாம்.

கண்ணன் மல்லனாய்ச் சென்று அறைகூவி வானாசுரனைப் பிடித்து உயிர்போக நெறித்து ஆடியதாக ஒரு காட்சியை மாதவி ஆடிக்காட்டியதாக சிலப்பதிகாரத்தில் வருகின்றது. ஆகவே மல்லாடல் என்பதே கர்ணகூத்து எனப் பிற்காலத்தில் ஆயிற்று என்பர்.

> ''மல்லிற்காண மணித்தூண் காட்டி
> மல்லிற் பெயர்ந்த கள்வன் - சிலப்பதிகாரம்'' (16:198-199)
> ''அவுணர் கடந்த மல்லினாடல்'' (6:40:49)

என்ற வரிகள் மல்லினாடல் பற்றிக் கூறுவதைக் காணலாம்.

பாவைக் கூத்து

'வண்டல் அயர்தல்' என்ற பாவை விளையாட்டே சங்க காலத்தில் கூத்து வடிவம் பெற்றுப் பாவைக் கூத்து எனப்பட்டது. இப்பாவைகள் முறையே மண்பாவை, கோரைப்புல் பாவை, மரப்பாவை எனப் பல வடிவங்கள் கொண்டு இலங்கின.

> 'வல்லோன் தைஇய வரிவனப்பு உற்ற
> அல்லிப்பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப''

என்ற புற நானூறு (33:6-17) என்ற பாடலின் வரிகள் மூலம் பண்டைக் காலத்தில் பலவகையான பாவைகள் கொண்டு கூத்து ஆடியுள்ளனர் என அறியலாம்.

வென்றிக் கூத்து

வென்றிக் கூத்து என ஒருவகைக் கூத்து இருந்ததாக அடியார்க்கு நல்லார் எடுத்துரைக்கின்றார். சங்க காலத்தில்

விளங்கிய போர்க்கூத்துகளோடு தொடர்புடையதாக இதனைக் கருதலாம். போருக்கு வீரர்களை ஊக்குவித்தற் பொருட்டும் போருக்குப் பின் போரில் கிடைத்த வெற்றி யினைக் கொண்டாடும் முகத்தானும் இவை நிகழ்த்தப் பட்டவை ஆகும்.

வாளமலைக்கூத்து

உரற்கூத்து, குடக்கூத்து போன்றே கருவி தழுவி அமைந்தது இவ்வாளமலைக் கூத்து ஆகும். போர் செய்வதற்கு இன்றியமையாத கருவிகளில் ஒன்றான வாள் துணை கொண்டு ஆடப்படுவதனால் இப்பெயர் அமைவ தாயிற்று.

போர்க்களத்தில் தோல்வியைத் தழுவிய வேந்தனை வெற்றி பெற்ற வேந்தன் எள்ளி நகைத்து ஆடும் விதமே வாளலை என்பர். இதனை,

> ''சட்ட வேந்தனை அட்ட வேந்தன்
> வாளோர் ஆடும் அமலை''

என்ற தொல்காப்பிய புறத்திணையியல் நூற்பா.14 தெளிவு படுத்துவதைக் காணலாம்.

வள்ளிக்கூத்து

போர்க்கூத்துகளுள் ஒன்றாக வைத்துப் பேசப்படுவது வள்ளிக் கூத்து. வள்ளை என்பது வள்ளை என்ற பாட்டினையும் வள்ளைக் கொடியினையும் குறித்ததுபோல் வள்ளிக் கொடியினையும் வள்ளிக் கூத்தினையும் குறிக்கிறது.

தமிழ் இலக்கியங்களில் வெற்றிச் சிறந்த நாடுகளை உள்ளுறையாக சிறப்பிடுவதற்கு வாடா வள்ளியாகிய

கூத்தினை உள்ளிட இடம் என்று குறிப்பிடும் பழக்கம் இருந்துள்ளதாக டாக்டர் உ.வே.சாமிநாதை யர் ஐயர் அவர்கள் குறிப்பிடுவார்.

ஆகவேதான் தமிழில் கதைக் கருவுடன் கூடிய முதல் கூத்தாக இதனைக் குறிப்பிடுவர். பிறபல கூத்துகளுக்கு இசைப் பின்னணி உண்டு. பாடல் பின்னணியும் உண்டு. இவைகளில் கதைப்பின்னணி அருகியே காணப்படுவதை உணரலாம். ஆனால் கதைப் பின்னணியில் அமைந்த கூத்துகளில் வள்ளிக்கூத்துதான் முதன்மையாகவும் தொன்மையாகவும் விளங்குகிறது.

கழல்நிலைக் கூத்து

வென்றிக் கூத்துகளுள் ஒன்றாகக் கருதப்படுவது. போரில் வீரர்கள் துவண்டு விடாமல் இருப்பதற்கும் போரில் வேட்கை கொள்வதற்கான எழுச்சியைத் தூண்டும்படியாக அமைவதற்கும் கால்களில் கழல்களை அணிந்து மகிழ்ச்சிக் கூத்தாக ஆடுவது கழல்நிலைக் கூத்து ஆகும்.

> **கல்லென அருமுனை அலைத்த பெரும்புகல் வலத்தார்;**
> **கனைகுரற் கருந்துடிப்பாணி தூங்கி -**

என்ற அகநானூறு (*150:8-9*) என்ற சங்க இலக்கியக் குறிப்பினால் அறியலாம்.

துடிக் கூத்து

போரில் வெற்றி பெற்ற வீரர் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக துடி என்ற இசைக்கருவியை இசைத்துப் பகற்பொழுதில் ஆடும் ஆட்டம் ஆகும்.

> **கல்லென அருமுனை அலைத்த பெரும் புகல் வலத்தார்**
> **கனை குரற் கருந்துடிப்பாணி தூங்கி - (அகம் 159:8-9)**

கேளா பன்னர் கடாபுலம்புக்கு
நாளா தந்து நளவு தொடை தொலைச்சி
இல்லரு கள்ளின் தோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மட்வாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச
சிலை நவி லெறுழ்த் தோளோச்சி வலன்வளை
பகன்மிழ் தூங்கும் தூங்கா விருக்கை''

(பெரும்.பாணா. 140-146)

என்ற குறிப்புகள் மூலம் துடிக் கூத்தின் சிறப்பினை அறியலாம்.

கொடுகொட்டி

சிவபெருமான் முப்புரத்தை எரித்து ஆடிய கூத்தே கொடுகொட்டி எனப்பட்டது. கொடுமையுள்ள கொட்டிக் கூத்துதான் கொடுங்கொட்டி அல்லது கொடுகொட்டி என ஆனது. (சோமசுந்தனரார் பொ.வெ. - சிலப்பதிகாரம் புகார்க்காண்டம் கழக வெளியீடு பக்.224)

இறைவன் ஆடிய கூத்து என்பதால் இதற்கு ஒரு தனிச்சிறப்பும் உண்டு. கைகொட்டி ஆடிய இக்கூத்தின் ஆடும் முறையால் கொடுகொட்டி என்றும் கொட்டியாடல் என்றும் கொட்டிச் சேதம் என்றும் இலக்கியங்களில் பலவாறாகப் பாராட்டப் பெற்றுள்ளது. இதுவே பிற் காலத்தில் தொழில் முறையாக சாக்கைக் கூத்து எனப் பெயர் பெற்றது.

பாண்டரங்கம்

பாண்டு என்பது தமிழில் வெண்மையைக் குறிக்கும். வெண்மை என்பது திருநீற்றைக் குறிக்கும். திருநீறு என்றால் அது சுடுகாட்டுச் சாம்பலையும் குறிக்கும். அப்படிப்பட்ட சாம்பலையே இறைவன் தன்மேனி எங்கும் பூசிக்

கூத்தாடுவதாகத் தொன்மக் கருத்து ஒன்று உண்டு. சுடுகாட்டில் ஆடப்பட்ட இவ்வெள்ளைக் கூத்தே பாண்டரங்கம் எனப்படுகிறது.

மண்டு அமர் கடந்து மதுகையால் நீறு அணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால்

- என்ற கலித்தொகை; கடவுள் வாழ்த்து (8-9) மூலம் பாண்டரங்கமே சங்க இலக்கியத்தின் பண்டரங்கம் என வழங்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

கபாலக் கூத்து

கபாலம் என்பது தலையோட்டினைக் குறிப்பதாகும். கபாலத்தினை ஆரணமாக அணிந்து சிவபெருமான் ஆடும் கூத்தே கபாலக் கூத்து என்பர். இது காளிக்கு எதிரிடையாக ஈசன் ஆடியதாகப் புராணங்கள் கூறும். அவ்வகையில் கபாலத்தை ஆடுங் கருவியாகக் கொண்டு ஆடப்பட்டது கபாலக் கூத்து ஆகும்.

சாந்திக் கூத்து

குரவை, கலிநடம், கரணம், நோக்கு, குடம், தோற்பாவை என்பவற்றோடு வெறியாட்டினையும் உள்ளிட்ட விநோதக் கூத்துகளுக்கு மறுதலைக் கூத்தாக அமைவனவே சாந்திக் கூத்துகள் ஆகும். சாந்திக் கூத்துகள் என்பன சாந்தி ஆடுதல் என்ற சங்க காலத்தில் விளங்கிய வழிப்பாட்டுக் கூத்துகளே ஆதல் வேண்டும். இறைவனைப் புகழ்தலே சாந்திக் கூத்துகளின் இயல்பு.

அடியார்க்கு நல்லார் சாந்திக் கூத்துகளின் வகைகளாக சொக்கக் கூத்து, மெய்க்கூத்து, அபிநயக் கூத்து, நாடகம் என நான்கு வகைகளைக் கூறுவார், அடியார்க்கு நல்லார்,

சொக்கம், மெய், அபிநயம், நாடகம் என்னும் (அடியார்க்கு நல்லார் உரை பக்:80) மெய்க்கூத்து என்பது சாந்திக் கூத்து வகைகளுள் ஒன்று. பாடல் இன்றித் தாளத்திற்கு ஏற்ப மெய்வினை செய்து ஆடும் கூத்தே மெய்க்கூத்து ஆகும். இது புகழ்க்கூத்து எனப்படும் இறைவனை அல்லது அரசனைப் புகழ்ந்து பாடும் முகத்தான் அமைவது. இப்புகழ்க்கூத்துக்கு மறு தலையாகப் பாடலின்றி அமைவதே மெய்க்கூத்து.

அவிநயக்கூத்து

இஃது பாடற் பொருளுக்கு ஏற்ப ஆடுபவர் பாடலைப் பாடாமல் அங்க அசைவுகள் மூலம் கருத்தை வெளிப் படுத்துவது. இதனையே, அவிநயக் கூத்தாவது கதை தழுவாது பாட்டின் பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக் கூத்து எனப் பதிற்றுப்பத்து (78.3) என்ற பாடலின் உரைமூலம் உணர முடிகிறது.

நாடகம்

கதை தழுவிய கூத்து - நாடகம் என்று அடியார்க்கு நல்லார் குறித்தபடி, கதை + நடிப்பு என்பதே நாடகம் என்று பொருள் ஆகிறது. 'நாடகம்' என்ற சொல் தொல் காப்பியத்தில் ஒன்றாக வளர்ச்சியடைந்த 'நாடகம்' தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பொதுவாக கதையுடன் கூடிய ஆட்டமே நாடகம் எனப்பட்டது. கூத்துக்களைக் குறிக்க தழூஉ, பரணி, ஆடல் என்ற பல சொற்கள் பயின்று வரப் பெற்றாலும் கூத்தினைக் குறிக்க அமைந்த பல்வேறு சொற்களில் ஒன்றாகவே 'நாடகம்' என்ற சொல் சங்க காலத்தில் பயன்பட்டதெனத் தெரிகிறது.

நாடக மகளி ராடு களத் தெடுத்த (பெரும். பாண்.55)
பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும் (பட்டின-பாலை 114)
நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்
பாடல் சான்ற புலனெறி வழக்கு (தொல்.அகத்.56)

போன்ற தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் இதற்குச் சான்றுகளாக அமைந்துள்ளன.

இதுகாறும் கண்டவற்றுள் கூத்து என்ற பொருண்மை சங்க காலத்தில் அமையப் பெற்ற வகைமை பற்றிக் கூறப்பட்டது. சங்க காலத்தில் எளிய மக்கள் முதல் மாளிகையில் வாழ்வோர்வரை, வீரர் முதல் கல்வியாளர் வரை அரசன் முதல் அடிப்படைக் குடிமகன் வரை தொடர்புடைய ஒன்றாகக் கூத்து விளங்கியது எனலாம்.

வீரம், பக்தி, சமூகம் என்ற அனைத்துக் கோட்பாடுகளையும் உள்ளடக்கி மக்களுக்கு மகிழ்ச்சி யையும் உற்சாகத்தையும் நல்கியதைப் பல்வேறு சான்றுகள் மூலம் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் இவ்வகைக் கூத்துகள் தற்போது வழக்கு ஒழிந்து போய்விட்டன. சில திரிந்து வேறுவிதமான பரிணாமத்தைப் பெற்று விளங்குகின்றன. ஒருசில எங்கேயோ சில நூல்களில் மட்டும் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. பெரும்பாலானவை கள் சரியான பொருள் விளக்கம் இல்லாத காரணத்தால் நூல்களில் இருந்து அவற்றை அறிந்து அவை இன்னவைதான் என இனம் கண்டுகொள்ள முடியாமலேயே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கூறினால் அடியார்க்கு நல்லார் கூறும் பல கூத்துகள் பொருள் விளங்காமலேயே இன்றும் புத்தகத்தில் உறங்குகின்றன.

ஆட்சி மாற்றங்கள், மொழிக் கலப்புகள், பண்பாட்டு கொண்டு கொடுப்பினைகள் காரணமாகவும் இக்கலைகள் இன்றைக்கு உணரமுடியாத அளவில் சிதைந்து போயுள்ளன. பொதுவாக எல்லா மொழிகளிலுமே கவிதை வடிவிலேதான் தங்கள் தங்கள் கலை இலக்கியம் பற்றிய நூல்களை யாத்துள்ளனர். இப்போக்கு பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகள் வரை தொடர்ந்து வந்துள்ளதைக் காணலாம். கிரேக்க மொழியில் சோபாக்ளிசும் வடமொழியில் காளிதாசனும் ஆங்கிலத்தில் சேக்ஸ்பியரும் எழுதிய நாடகங்கள் கவிதையின் வாயிலாகவே இன்று வரையும் நிலைபெற்றுள்ளதைக் காணலாம்.

தமிழ் மொழியிலும் இதிகாசங்களான இராமாயணம் மகாபாரதம் ஆகியன பாட்டு வடிவிலயே அமைந்துள்ளன. கவிதை, கவிதை நாடகம் என்னும் சொல்வழக்கு மிக அண்மைக் காலத்தில் தோன்றியதாகும். சென்ற நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை நாடகம் என்றாலே கவிதையில் எழுதப் பெற்றதைத்தான் குறித்தது. அருணாசலக் கவிராயர் தம் நூலை 'இராம நாடகக் கீர்த்தனை என்றே வழங்கியுள்ளார். 'இன்றைக்கு எழுந்த உரைநடை நாடகம் தோன்றிய பின்னர்தான் அதற்கு மாறான கவிதை நாடகம் என்ற தொடரும் உருவாகியிருக்க வேண்டும்.

ஆகவே கவிதை வடிவில் வெளிவந்த கலை இலக்கியத்தைச் சார்ந்ததுதான் 'கூத்து' நூல்கள். சங்க காலத்தில் அல்லது அதற்கு முன்னர் இவற்றைச் சுவடிப் பெட்டகங்களில் பதித்து வைக்கவில்லை என்றாலும் பிற்காலத்தில் இப்பொருண்மையில் அமைந்த பல நூல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதிவைக்கப் பெற்றன.

புராண தொன்மத்தோடு தொடர்புடைய நிகழ்வுகள், வரலாற்றுடன் பேசப்பட்ட வீர மறவர்களின் வாழ்க்கைச் சரிதங்கள், சமுகத்தில் உயர்ந்த கருவூலமாகப் போற்றப் படும் பண்பாட்டுச் சுவடுகள், உயிரினங்கள் பற்றிய பலவகையான செய்திகள் ஓலைச் சுவடிகளில் பொறித்து வைக்கப்பட்டன.

காலங் காலமாக பேசப்பட்டு வந்த புராணத் தொன்மங்கள், பக்தி இலக்கிய காலத்தில் தனி நூல்களாக மக்களிடையே பெருமதிப்பைப் பெற்றன. தேவார மூவர் முதலிகள் சைவசமயத்தின் கோட்பாடுகள், கோயில்கள், வரலாறுகள் பற்றிய செய்திகளை இனிய கவிதைகளில் வடித்துத் தந்தனர்.

பன்னிரு ஆழ்வார்கள் வைணவத்தின் சிறப்புக்களைப் பட்டி தொட்டியெங்கும் பரப்பினர். மூவர் முதலிகளும் ஆழ்வார்களும் தங்கள் தங்கள் தத்துவக் கோட்பாட்டில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த கால கட்டத்தில் தான் மக்கள் அவர்கள் சுட்டிச் சென்ற தொன்மக் கருத்துக்களிலும் புராணச் செய்திகளிலும், தலவரலாற்றுக் கதைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொள்வார் ஆயினர்.

ஆகவே 'கூத்து' நாடகங்கள் உயர்ந்த இறைவர்களின் அருட்பேற்றையும் அவர்தம் தியாக உணர்வுகளையும் வெளிக் கொணரும்படியாக பக்திச் சுவையோடு கூடிய வடிவமைப்பைப் பெற்றுத் திகழ்ந்தன.

காலங் காலமாக மக்களுக்காகப் பாடுபட்டு அரசு ஓச்சிவந்த மாமன்னர்கள், குறுநில மன்னர்கள், போரில் வீரமரணம் எய்திய வீரமறவர்தம் வரலாறுகள் மக்கள் தம் உள்ளத்தில் ஆழப்பதிந்து இருந்தன. அதுவே பண்டை வரலாற்றைப் பேசும் சித்திரங்களாக வடிவெடுத்தன.

சமூகத்தில் பக்தியியக்கத்தின் காரணமாக வேர் ஊன்றி விட்ட சாதி சமயக் கோட்பாடுகள் பண்பாட்டுடன் கலந்து நான்கு வர்ணத்தாருக்கு ஏற்ற குலப் பண்பாடு இன்னதுதான் என்ற வகையில் ஒவ்வொருவர் எண்ணத்திலும் ஆழப் பதிந்து நிற்க அதனை எதிர்க்கத் துணிந்தவரைப் பழிவாங்கக் கூட அஞ்சாத அளவிற்கு மன உரத்தை ஏற்படுத்திய இந்நிகழ்வுகளே பிற்காலத்தில் சமூகக்கூத்து நாடகங்களாக வெளிவரலாயின.

ஓலைச் சுவடிகளில் பலவகையான வில்லுப் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன. அவைகள் தென்பாண்டி நாட்டில் இன்றும் கிடைக்கப் பெறுகின்றன. அவை அனைத்தும் அந்த அந்தக் கால மக்களின் மன உணர்ச்சிகளே என்று நாம் துணியலாம். சுவடிகளில் மட்டுமின்றி இன்று அச்சேறி வந்துள்ள சிற்றிலக்கியங்கள் ஆன குறவஞ்சி, பள்ளு, ஏசல், நொண்டி நாடகம், விலாசம் போன்ற இலக்கியப் பிரிவுகள் முன்கூறியவற்றிற்கு அரணாகவே அமைகின்றன.

'குறவஞ்சி' ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் வாழ்க்கை நெறிமுறை பற்றியும் பள்ளு, மேட்டுக்குடி மக்களிடம் பணி புரியும் எளிய மக்கள் சமயத்தின் காரணமாக எவ்வகையில் முரண்பட்டுள்ளனர் என்பதையும் ஏசல் போன்ற நூல்கள் காதலுக்கும் சமூக உறவுக்கும் உள்ள உறவு நிலையை அஃதாவது சமூகத்தில் பெண்மனநிலை எந்த அளவு மதிக்கப்படுகிறது என்ற அளவில் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குவதைக் காணலாம். விலாசம் போன்ற நாடக நூல்கள் புராண இதிகாசங்களுக்கும் கற்பனை

கலந்த வரலாற்றுக் கதைகளுக்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் காணலாம். நொண்டி நாடகம் என்ன என்ன தவறுகள் சமூகத்தில் தவிர்க்கப்பட வேண்டி யன எனப் பட்டியல் இட்டுக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளதைக் காணலாம்.

இப்படி அச்சான நூல்முதல் சுவடியில் இன்றும் நிற்கும் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் வரை கூத்து நாடகத்தின் பண்பு ஒட்டியே அமைந்துள்ளதைக் காணலாம்.

இங்குப் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும் அமிர்த மதனக் கூத்து நாடகம் என்பதும் புராணக் கதை ஒன்றைப் பின்னணியாக வைத்துச் செய்யப் பெற்றது. மக்களிடையே நடிக்கப் பெற்று ஓலைச் சுவடியிலும் இடம் பெற்றுள்ளது.

நூல் ஆய்வு:

பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட இந்நாடகம் புராணக் கதை ஒன்றினைத் தனது கதைக்கருவாகக் கொண்டு இலங்குகின்றது. அவ்வகையில் பழமை பற்றிப் பேசுவது என்றாலும், கேட்பது என்றாலும் ஒவ்வொரு மனிதனும் புத்துணர்ச்சி பெறுவான் என்பது உளவியலார் கருத்து. அவ்வாறு பேசப்படும் அல்லது கேட்கப்படும் செய்தி இறைவர்களின் அருளிச் செயல்களையும் அவன் சார்ந்துள்ள சமயத்தின் சிறப்புக்களையும் மனித இயல்பு களுக்கு அப்பாற்றபட்ட இயற்கை இறந்த செய்திகளையும் கூறுவதாக அமைந்து விட்டால், அவற்றைக் கேட்பதில் உந்துதல் ஏற்பட்டு ஒருமனதுடன் நுகர ஆர்வப்படுவான். இதற்குரிய அடிப்படைக் காரணம் யாதெனின் இந்நில வுலகில் தன்னால் செய்து பார்க்க முடியாத, இயலாத நிகழ்வுகளைப் புராணங்கள், போலச் சித்தரித்துக் காணும் போது நுகர்வோர் அக்கதை மாந்தனாக மாறி ஆத்மார்த்த இன்பம்தனை நுகரும் வாய்ப்பினை அடைகிறான் என்பதுவே. இவ்வகையான இன்பமே அவனது பால் உணர்வு சார்ந்த ஆசைகள், செல்வச் செழிப்பு எண்ணி அவன் காணும் பொருளாதாரக் கனவுகள், வீர விளையாட்டு கள்பால் அவன் கொண்டிருந்த வாஞ்சை போன்ற பலவகைப்பட்ட மனக்கிளர்ச்சிகளை நிறைவு செய்து

வைக்கின்றது. அதனால்தான் தொன்மக் கருவூலமாக விளங்கும் புராண இதிகாசங்களில் இருந்து பல்வேறுபட்ட கதைக்கருக்கள் கூத்து நாடகங்களாக வெளிவந்துள்ளன.

கடவுளர் அவர்தம் அருளிச் செயல்கள் பற்றியும் தேவர்கள் பற்றியும், தேவமாதர்கள் பற்றியும் அசுரர்களைப் பற்றியும் இறையோர் எடுத்த மானுட அவதாரங்கள் பற்றியும் பல்வேறு வகையான பொருண்மைகள் புராணத்திலும் இதிகாசத்திலும் இடம் பெற்றுள்ளன. இவ் வாறான பெருமைகளைப் பெற்ற பொருண்மைகளில் ஒன்றுதான் ஈண்டுப் பதிப்பிற்கு எடுத்துக் கொண்ட அமிர்த மதனம் என்னும் நாடகம்.

பொதுவாக, புராணக் கதையின் கரு நுவரப்போகும் செய்தி, அதனை ஏற்று வெளிப்படுத்தப் போகும் கதை மாந்தர் ஆகிய இரு கூறுகளுக்கு இடையேதான் படர்ந்து செல்லும் பெரும்பாலும் புராணக் கதையின் ஒரு கரு பலகிளைக் கதைகளுக்குத் தாயாக அமைந்து விடுவதில்லை அல்லது மற்றொரு கதைக்குத் தொடக்கமாகவோ அல்லது வேறு கதையின் முடிவாகவோ அமைந்து விடுவதும் இல்லை. எடுத்துக்காட்டாக சிவராத்திரி கதைக்கும் நவராத்திரி கதைக்கும் இயைபு படுத்த முடியாது. நரசிம்ம அவதாரத் தையும் இராமர் அவதாரத்தையும் ஒருசேரப் பேச முடியாது.

நளாயினி கதையும் சத்தியவான் சாவித்திரி கதையும் கதைக்கரு வடிவில் ஒன்றுபோலத் தோன்றினாலும் அவை முற்றிலும் இரண்டு வேறுவிதமான கதைகளே; ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையதாகக் கருதிவிட முடியாது. இன்னும் நுணுகிப் பார்த்தால், 'இரணிய வதம்' என்ற கதையை எடுத்துக் கொண்டால் நரசிம்ம அவதாரம் என்றும் பிரகலாதன் வரலாறு என்றும் இரண்டு கதைகளாகப் பிரித்துக் காணமுடியாது. ஏனெனில் இரணியன் பிரகலாதன் நரசிம்ம மூர்த்தி ஆகிய மூவருமே அக்கதையின் கதை மாந்தர்களே. ஆகவே கதை ஒன்றே கதைத் தலைப்புகள் வேண்டுமானால் வேறுபடலாம்.

ஆனால் அமிர்த மதன நாடகம் அல்லது அமிர்த மதனம் என்னும் கதையில் பலவித கதைகளின் கலப்பு

காணப்படுகின்றது. அவ்வகைக் கதைகள் சில பின்வருமாறு: 1. நீலகண்டன் கதை 2. மாவலி கதை 3. கூர்மாவதாரம் 4. மோகினி அவதாரம் 5. ராகு கேது வரலாறு 6. தன்வந்திரி வரலாறு 7. மகாலக்ஷ்மி கதை 8. ஐராவதம் என்ற யானையின் கதை 9. உச்சைச்சிரவம் என்ற குதிரையின் தோற்றம் 10. பிரதோஷ வரலாறு 11. காமதேனு கற்பகத்தரு பிறப்புகள் போன்ற கதைகளைக் கூறலாம். (பின் இணைப்பில் இது தொடர்புடைய கதைகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.)

இக்கதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒருகதைக்குத் தொடக்கமாகவும் மற்றொரு கதைக்கு நெருக்கமாகவும், பிறிதொரு கதைக்குக் கொண்டு கூட்டிப் பேசும்படியாகவும் அமைந்து புராணக் கதைகளிலே ஒரு வித்தியாசமான கதையாக இது அமைந்துள்ளது. இதுவே இக்கதைக் கருவின் தனிச்சிறப்பும் ஆகும். இதற்குக் காரணம் அவையோர்கள் பலகதைகளைக் கேட்டு இன்புற வேண்டும் என்ற நோக்கம் முக்கியமானதாக இருந்திருக்கலாம்.

இந்நூல் ஓர்கூத்து நாடகம் என்பதற்கு இணங்க நாட்டுப்புறக் கதைக்குரிய கூறுகளுடன் பாமர மக்களின் சுவைக்கும் கருத்து விளக்கத்துக்கும் ஏற்ற முறையில் படைக்கப் பெற்றுள்ளது. காட்சிகள் விறுவிறுப்புடன் உணர்ச்சி ததும்ப நாடகத்தன்மை சற்றும் குன்றாமல் நூலாசிரியரால் பாடப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு கதைத் திருப்பத்தின் போதும் கதையைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் அடுத்து நிகழ விருப்பது என்ன என்பது குறித்து அறியும்படியான ஆர்வத்தை உண்டாக்கும்படியாக அமைந்துள்ளது. பாமரமக்களின் பேச்சு மொழி நடையிலேயே கதையை மக்களுக்குப் புலப்படுத்தியுள்ளார். கதையின் இடையிடையே கதையின் தொடர்பு தொய்வு அடையாத வகையில் மக்கள் அறிந்து நினைவு கூறவேண்டிய புராணக்கதைச் செய்திகளையும் குறிப்பாகக் காட்டிச்செல்கிறார். இது நூலாசிரியரின் நுண்மான் நுழைபுலத்தையும் புலப்பாட்டுத் திறத்தையும் காட்ட வல்லனவாக அமைந்துள்ளது.

இந்த நாடக நூல் முன்சொன்னதற்கு ஏற்ற வகையில் கதையின் தொடக்கம் கதை சொல்லும் உத்தி மக்களைக் கவரும் படியான இனிய மொழி நடை, அற்புதமான கற்பனை, விறுவிறுப்பான காட்சி அமைப்புகள் மற்றும் மக்கள் மனதில் என்றும் நின்று நிலவும் இனிய முடிவு போன்ற பல வகையான கூறுகளுடன் இலங்குகிறது. இத்தகைய சிறப்புமிகு மதிப்பிற்குரிய இக்கதையின் கதைச் சுருக்கத்தை இனிக்காணலாம்.

கதைச்சுருக்கம்:

அசுரகுல வேந்தனான மாபலி தன்னுடைய அவைக்களத்தில் கொலு வீற்றிருந்தான். மாபலியைப் படைத்தலைவர்கள் இறைவனுக்கு நிகரானவன், உலகம் யாவையும் வென்றவன், திசையெட்டும் புகழ்பெற்ற மன்னர் மன்னன் என வாழ்த்தினர். அப்பாராட்டுரைகளைக் கேட்ட மன்னன் அவையோரைப் பார்த்துத் தான் மன்னர் மன்னன் அல்ல என்றும் ஏன் எனில் இன்னும் தேவருலகை வெல்லவில்லை. ஆகையின் மன்னர் மன்னன் என்ற சிறப்பு தன் பெயருக்குப் பொருந்தாது என்று கூறினான். மேலும் இந்திரனுடன் போர் தொடுக்கவும் துணியலுற்றான்.

அசுரர்களின் போர் முரசு விண்ணுலகை அதிரச் செய்தது. இந்திரன் அவ்வொலி கேட்டு வருந்திய தோடு செய்வதறியாது அஞ்சி நிற்கும் தேவர் குழாத்துடன் படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவனைக் காண வரலானான்.

கலங்கிய நெஞ்சத்தோடு சொல்லொணாத் துயருடன் வரும் இந்திராதி தேவர்களைப் பார்த்துப் பிரம்ம தேவன் இத்துயர் தீர்க்கும் வழிவகைதனைக் கயிலாயத்தில் எழுந்தருளி யிருக்கும் ஈசனாரே தரவல்லவர், ஆகவே அங்குச் செல்வோம் என இந்திராதி தேவர்களை அழைத்துக் கொண்டு முக்கண்ணனாரைக் காண வரலாயினர்.

ஆதிமுதல்வனாம் பிரம்மனுடன் துயரமே வுருவாய், விண்ணோர் வருகை தந்திருப்பதைக் கண்ட சிவபெருமான் இப்போது ஏற்பட்டுள்ள அவலத்தை நீக்கும் ஆற்றல்

பாற்கடலில் பள்ளி கொள்ளும் அருளாளன் திருமால் ஒருவரால்தான் முடியும். கூப்பிய கரத்தோடு தஞ்சமென வருவோரைத் தாய்போலக் காத்துத் துயர் நீக்கும் செம்மல் அக்கார்மேனி வண்ணன் தான். காப்புக் கடவுளாகிய திருமால் உறையும் வைகுந்தம் நோக்கிச் செல்வோம் என அசுரனார் அனைவரையும் அழைத்து வரலானார்.

படைப்புக் கடவுள், அரனார் இவர்களோடு உம்பர் உலத்தார் உடன்வருவதைக் கண்ட திருமால் யாவரையும் பார்த்து அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை என்றும் மாவலியை வென்று விடலாம். ஆனால் தற்போது அவனோடு பொருதுவதைத் தவிர்த்துக் கொள்வதே நன்மை பயப்பது என்றும் கூறினார். மேலும் தற்போது இழந்து விட்ட வலிமையையும் குன்றா இளமையையும் பாற் கடலைக் கடைந்து அதிலிருந்து கிடைக்கும் அமர்தத்தின் மூலம் தேவர்கள் உய்யலாம் என்றும் கூறினார் திருமால்.

பாற்கடலைக் கடைவதற்கு மந்தர மலையை மத்தாகவும் வாசுகியைக் கயிராகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் கடைய அமிர்தம் கிட்டும் என்றும் ஆகவே உடனே சென்று அசுரர்களுடன் நட்பு பாராட்டிக் கொள்ளவும் எடுத்துரைத்தார் திருமால்.

மாயோனின் கருத்தைச் செவி மடுத்த இந்திரன் மாவலியைச் சந்தித்துத் தனது அன்பைப் பரிமாறிக்கொண்டு நட்பைப் புதுப்பித்துக்கொண்டதோடு மரணமிலாப் பெரு வாழ்வு தரவல்ல அமிர்தத்தைப் பெறுவதற்கான பணியில் ஒத்துழைப்புத்தர மாபலியை வேண்ட, பலியும் தன்னுடைய படைகளோடு உதவத் துணிந்தான்.

மந்தரமலை மத்தானது, வாசுகி நாணானது.தேவர்களும் அசுரர்களும் கடைவோர்களாகயிருந்து நாணை இழுத்து மத்தைச் சுழற்றினர். அத்தருணத்தில் வலிபொறுக்க முடியாத வாசுகி ஆலகால விடத்தை உமிழ, அசுர தேவர்கள் அஞ்சிவோட, மந்தரமலை கடலுள் ஆழத்தொடங்கியது. உமிழப்பட்ட நஞ்சைத் திரட்டி எடுத்து சிவனார் தன் கண்டத்தில் நிறுத்தினார்.

இதனைக் கண்ட திருமால் கூர்மம் எனும் ஆமை வடிவம் எடுத்துக் கடலுள் பாய்ந்து அமிழும் மந்தரமலையைத்தன் முதுகில் தாங்கிட மீண்டும் வாசுகியை பூட்டித் தேவ அசுரர் கடையலாயினர்.

புனிதமிகு அமிர்த கலையம் பாற்கடல் விட்டு மேலே எழுந்தது. அதனைக் கைப்பற்றிய அசுரர்கள், எடுத்துக் கொண்டு ஓடலாயினர். செய்வதறியாது திகைத்துத் தேவர்கள் நின்றனர்.

திருமால்தேவர்களுக்கு ஆறுதல் கூறி அசுரர்கள் எடுத்துச் சென்ற அமிர்தத்தை மீட்டுத் தருவதாகவும் அவை அனைத்தையுமே தேவர்களுக்கேத் தருவதாகவும் கூறி, அழகிய பெண் உருக்கொண்டு கண்டோர் கருத்தை எல்லாம் கவரலுற்றார். இவ்வண்ணப் பெண்ணுருவைக் கண்ணுற்ற அசுரர்கள் சிந்தை கலங்கி காமவயப்பட்டு அம்மோகினியின் வேல்விழியில் சிக்கினர்.

அசுரர்கள் தாங்களே முன்வந்து அமிர்த கலசத்தை மோகினியின் வசம் சேர்ப்பித்தனர். மோகினி இரு சாரர் களுக்கும் பகிர்ந்து பங்களிப்பதாக வாக்களித்து விட்டு அமிர்தத்தைத் தேவர்களுக்கு மட்டும் தர, அவ்வமயம் இராகு, கேது என்ற இரு அசுரர்கள் தேவர்கள் போல் உருமாரி அமிர்தம் பருகலாயினர். அதனைக் கண்ணுற்ற சூரிய சந்திரர் இருவரும் திருமாலிடம் கூற, அவ்வசுரர்களின் தலையைத் துண்டித்தார், மோகினி வடிவில் இருந்த திருமால்.

இந்நிலையில் நாரதன் வாயிலாக மோகினி அவதாரத்தில் திகழும் திருமாலின் செவ்விய வனப்பைக் கேள்வியுற்ற அரனார் அதனைக் காண எழுந்தருளினார். படைப்புக் கடவுளின் திறமையை விஞ்சிய அந்த அழகினைக் கண்டவுடன், சிவனார் இணைய விரும்பினார்.

மோகினி வடிவில் இருந்த திருமால்தான் புனைந்த மாய உருவையகற்றிக் காம வாயப்பட்ட சிவனாரின் சிந்தையைத் தெளிவித்துக் கயிலாயம் அனுப்பிவிக்கிறார் என்ற அளவோடு கதை நிறைவடைகிறது.

காப்பு:

பொதுநலக் கருத்துடன் தொடங்கும் நற்பணிகள் குறைவின்றி இனிது நிறைவுற இறைவனைத் துணைக் கோடல் என்பது மரபு. இறைவன் திருவடி வணங்கினால் ஏற்ற செயலில் அவன் உடன் இருந்து பிழையறவும் குறையறவும் செயலாக்கம் பெற அருள் பாலிக்க வல்லான் என்ற கோட்பாடு பண்டு தொட்டு வரும் ஒன்றாகும். அவ்வகையில் சைவ சமயத்தார் சிவபெருமானையும் சமண சமயத்தார் அருகனையும் வைணவ சமயத்தார் திருமாலையும் செளர சமயத்தார் சூரியனையும் கௌமாரத்தார் முருகனையும் இறைவியை சாக்த சமயத்தாரும் போற்றுவதைக் காணலாம். விநாயகனைக் காணாபத்தியத்தார் மட்டும் இன்றி அனைத்து வைதிக சமயத்தாரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பக்தி இலக்கிய பரிணாம வளர்ச்சியில் விநாயகன் முழுமுதற் கடவுள் ஆனது மட்டும் அல்லாது காப்புக் கடவுளர்களில் முதன்மை யானவனாகவும் விளங்குவதாலேயே விநாயகர் துதி நூலின்கண் முதலில் இடம் பெற்றுள்ளது.

பொதுவாக யாகங்கள் நற்சடங்குகள் அல்லது துக்க காரிய நிவர்த்திகள் நடக்கும் போது முதலில் விநாயக பூசை முடித்தே பிற இசை பூசைகளைத் தொடர்வது இன்றும் மரபாக உள்ளது.

இந்நூலாசிரியர் தான் சார்ந்துள்ள சமயத்திற்குச் சிறப்புத் தரவேண்டும் என்ற நோக்கோடு முதற்பாடலில் திருமாலின் அருளிச் செயலை எடுத்துக்கூறி, பாற்கடல் கடைந்த அப்பேராளனின் திருவருள் எங்கும் நிறைந்து நிலைபெறத் திருவடிகளை வணங்கித் தொழுவோம் என்பதாக முதல் காப்புச் செய்யுள் அமைந்துள்ளார்.

பின்னர், தான் சொல்லப் போகும் இந்நாடகத்திற்குப் பக்க பலமாய் நிற்க மூலமுதற் பொருளாம் விநாயகன் குறித்தும், அடுத்து மும்மூர்த்திகளை ஒருசேர வேண்டியும் இராம நாமநேயன் அனுமன், தந்தைக்குப் பாடம் சொன்ன முருகன், . ஆகியோர் மீதும் பாடல்கள் பாடப்பெற்று அவர்தம் அருளையும் வேண்டிப் பின்னுள்ள வணக்கச் செய்யுள்களைப் படைத்துள்ளார்.

அவையடக்கம்

இறைவனை வேண்டி அருள் பாலிக்கக் கோரிய ஆசிரியர், தன்னிடத்தில் கல்வியால் அகந்தை வந்து விடக்கூடாது என்பதிலும் முன்னோர் போன்றே கோட்பாடு உடையவர் எனலாம். அனைத்து வகையிலும் திறமை உடையவராக இருப்பினும் தன் அறிவை மிக அற்பமான பொருளோடு ஒப்பிட்டுப் பேசிக்கொள்வது தமிழ் இலக்கியத்தில் புலவர்கள் போற்றும் ஒரு மரபாகவே காணமுடிகிறது. தனதுகவி ஆற்றலைப் 'புன்கவி' என்றும் 'புன்கவி பூவோடு கூடிய நாறே' -7 பொருளற்ற சிறுபிள்ளைகளின் பேச்சு என்பதுபோல 'குதலைகள் போலவே நான் சொன்ன சொல்' -7 எனவும்

'குற்ற மிருந்தால் திருத்திக் கொள்வீரே
குறையிதிற் சொல்வோர்கள் மொழியைத்தள்வீரே'

என்று கூறும்போது குறை மொழியைத் தவிர்த்துக் குற்றம் களைந்து தத்துவமான பயனைக் கேட்போர் ஏற்க வேண்டும் எனவும்

'குறிப்புள்ள காரிகை நன்னூல் படிக்க வில்லை'
....
இலக்கண வழியொன்று மறியாத நானே
இகபர சாதகமாகச் சொன்னேனே' என்றும்
ஒன்றும் தெரியாம லுளரிய வென்னை
உகந்து பின்னை யுரைக்கு மழலையை யென்னி
நன்றெனக் கொள்வது போலமுன் னைப்பின்னை
நாலுந் தெரிந்தவர் நீங்களென் பிழைதன்னை' (பொது)
பொறுக்க வேண்டும் பெரியோரே

என்ற பாடலின் மூலம் ஆசிரியர் எளிமையான உவமைகள் வழியாக அவையடக்கம் பேசுவது ஈண்டுப்படித்து இன்புறத் தக்கதாகும்.

நுதலிப்புகுதல்:

பொதுவாக நாடகத்தின் தொடக்கம் என்பது நடைபெறப்போகும் கதையின் சாரத்தை ஒருசில மணித்துளிகளில் கூறுவது இன்றும் மரபு. அதுபோன்றே

இந்நாடக நூலிலும் எழுபத்து மூன்று வரிகளில் கதைக்கரு மற்றும் கதையின் பின்னனியை விரித்துக் காட்டி இருக்கிறது எனலாம்.

கூத்து நாடகத்திற்கு உரிய முறைப்படியே கட்டியக் காரன் அவைமுன் வந்து மாந்தர்களை அறிமுகம் செய்வதும் தன்னைத்தானே அறிமுகப் படுத்திக் கொள்வதும் முன்னனிக்கதை மாந்தர்களைக் (main characters) கொலு அல்லது அரசவைக் காட்சி மூலம் அறிமுகப்படுத்துவதும் துணைக் கதை மாந்தர்களை முன்னணிக் கதை மாந்தர் வாயிலாக அறிமுகப்படுத்துவதும் ஆகிய உத்தி முறைகளைக் காணலாம்.

நூலின் பலன்:

இந்நூலைப் படிப்பதாலோ கேட்பதாலோ அல்லது நாடகமாக நுகர்வதாலோ ஏற்படும் நன்மைகள் பற்றிக் கூறும்போது 'தீதெனுஞ் சென்மத் தீவினை தீரும்' முற்பிறவியில் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்ப இப்பிறவிதனில் எதிர்நோக்க உள்ள துன்பங்கள் சுற்றுப்போகும். நாடகத்தை முழுமையாகக் கண்டு களித் தோர்க்கு அவள் மேற்கொள்ளும் பணிகளில் சிறப்பான வெற்றியே கிட்டும் என்பதனை

'.... மாயன் மகிழ்ந்திட்ட விந்தை
நாடகத்தை விபரமாய் கேட்போர் சிந்தை
தான் மகிழச் செயம் பெறுவாறே' எனவும்

'நாடகமா யுரைக்கக் கேட்போர்
கருதிநிதம் படித்திடுவோர் கனிபோற் பாரிற்
சீரணித்து செல்வமதைப் பெறுவார் பார்
சிந்திப்பார் பரகதியைச் சிந்திப்பாரே'

என்ற வரிகள் மூலம் தெளிவு படுத்தியுள்ளதைக் காணலாம்.

நாடகத்தில் காணும் சுவைகள்:

நாடகத்திற்குச் சுவை கூட்ட பலவகையான உத்திகளைக் கையாளுவர். கற்பனை, நகைச்சுவை, சந்த நயம் உவமைகள் போன்றன கற்போர் அல்லது கேட்போர்

கவனத்தை ஈர்ப்பதோடு அவர்களுக்கு மனமகிழ்ச்சியையும் ஏற்படுத்தும்.

எந்த ஒரு சுவைகளும் தான் அடைய முடியாத தன் முயற்சிக்கு அப்பாற்பட்ட செயல்களை நித்திரையின் போது கனவிலோ அல்லது எண்ணும் எண்ணங்களை எல்லாம் வெளிப்படுத்தும் எழுத்தாற்றல் என்ற கலையின் வழியாக நூல் மூலமாக தான் எண்ணியவற்றிற்கு வரிவடிவம் கொடுத்து அவ்வரி வடிவங்களைத் தானே மீண்டும் மீண்டும் படித்தோ அல்லது பிறர் படைத்த நூல்களில் காணும் கதை மாந்தர்களைப் பிறர் வாயிலாகக் கேட்டோ அல்லது நாடகம் போன்ற காட்சி வடிவத்தினைப் படித்து மகிழ்வதாலோ அல்லது கண்டு, கேட்டு நிறைவேற்றிக் கொள்வதாலோ தன்னை நிறைவு செய்து கொள்வது என்பது மனித மனத்தின் தன்மை என உளவியலார் கூறுவர்.

இவ்வாறான நிறைவை இலக்கிய உத்தி அல்லது நாடக உத்தி என ஆய்வாளர்கள் வருணிப்பர். அவ்வகையில் இயற்கை இறந்த நிகழ்ச்சி அல்லது மீவியல் கூறு என்பது மனித மனத்தின் வெளிப்பாடே. அமிர்தம் கடைந்தது என்பதே மீவியல் செய்தியாகும். பொதுவாகத் தொன்மக் கூறுகளே மீவியல் வழிப்பட்டது எனலாம். மந்தர மலையைக் கருடன் தூக்கி வந்தது; வாசுகி என்ற பாம்பு நாணாக அமைந்தது; ஆலகாலம் என்னும் விவத்தை இறைவன் கண்டத்தில் உண்டு நிறுத்தியது; அசுரன் திருமாலின் சட்டுவத்தால் அடிபட்டு இரண்டு உருக்கள் கொள்வது.

இப்படி எல்லையற்ற மீவியல் கற்பனையே இந் நாடகத்தின் பல நிகழ்வுகளாக அமையப் பெற்றிருப்பினும் அவற்றால் நாடகம் தொய்வு அடையாது, பக்தி (இறை நேயம்) என்ற கோட்பாட்டை வலியுறுத்தவே அது கையாளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 'மரணத் தைத் தவரிக்கும் அமிர்தம்' பாற்கடல் கடைந்தால் கிடைக்கும். அதற்கு மாமலை மந்திரகிரி மத்து; வாசுகி நாண் என கற்பனை செய்யும்போது இவற்றை நிறைவேற்றித் தரும் ஆற்றல் இறைவனுக்கே உண்டு. ஆகவே இறைவன் மிகப் பெரியவன் என்ற கோட்பாட்டை இதன் வாயிலாக

ஆசிரியர் நிலை நிறுத்துகிறார். விடத்தை யாரும் உண்ண முடியாது. ஆனால் தேவர் அசுரர் நலன்கருதி சிவானர் விடத்தை உண்டு நீலகண்டன் ஆகிறார். அவ்வகையில் சிவபெருமானின் தியாகம் வெளிப்பட இவ்வுத்தி பயன்படுத்துவதன் மூலம் இறை நேயம், வலியுறுத்தப் படுவதைக் காணலாம்.

இவ்வாறாக இந்நாடக நூல் முழுவதும் மீவியல் கூறுகள் மந்திரமலை, வாசுகி, பாற்கடல், தேவர், அசுரர் பிரம்மா சிவன், திருமால் எனப் பட்டியல் போடும்படியாக அமைந்ததோடு அல்லாது இம்மீவியல் கூறு வழியாகவே ஆசிரியரின் கற்பனை வளம், பக்தியின் சிறப்பு இறை பெருமை போன்றன பெரிதும் வெளிப்படுத்தப் படுகின்றன.

நகைச்சுவை

கூத்து நாடகத்தில் கதையும் கருத்தும் பெற்றுள்ள ஆளுமை போன்றே நகைச்சுவையும் பெற்றுள்ளது. உழைத்து களைத்து வரும் எளிய மக்கள் வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் எனற கோட்பாடு கூத்து நாடகத்தின் தலையாய குறிக்கோள்களில் ஒன்று எனலாம். ஏட்டு இலக்கியங்கள் போன்று கொண்டுகூட்டிப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற இடர்ப்பாடு இல்லாது சொல்ல வரும் நகைச்சுவை எளிதில் மனம் பற்ற வேண்டும் என்பதற்கு இணங்க இடக்கரடக்கல் சொற்கள்கூட அப்படியே பயன்படுத்தப் படுவதுண்டு. அங்கதமாக வெளிப்படும் நகைச்சுவை கூட எளிய உவமை களின் அல்லது உருவங்களின் வாயிலாகவே சொல்லப்படும்.

நகைச்சுவைப் பகுதிக்கு எனவே கதை மாந்தர்களில் கட்டியக்காரன், அகசியக்காரன், சண்டப் பிரசண்டன், சாத்திரப்பாடி போன்ற கோமாளிகள் செயல்படுவதைக் காணலாம்.

'அகசிய கார னென்றுரை செய்திடுங் கொட்டி
ஆண்பிள்ளை நானே - பகலிற் றெருநடு விலகமுடன்
வரும் போதோர் - பால னழக் கண்டிடு காலை
நடுக்கிக் கொண்ட (அக) - 12

என்ற பாடலில் சாலையின் பக்கத்தில் அழுது நிற்கும் ஒரு குழந்தையின் அவல ஒலி கேட்டு உடல் நடுக்கம் பெற்றுவிடும் அளவிற்குப் பலவீனமான இதயம் படைத்தவன் என்பதனை அழகுறக் கூறியிருப்பதைக் காணலாம்.

அகசியக்காரனைப் பற்றிக் கூறும்போது,

சண்டை சச்சரவு எனில் அதனில் பங்கு கொள்ளும் இறுதி மனிதனாகவும் கோயில் உண்டகட்டி என்றால் முதல் மனிதனாகவும் விளங்கும் மனம் படைத்தவன் எனப் பாடல் 12இல் கூறுவதும்

'அரண்மனை வாசலிலொரு பட்டாணி
கையி லறுக்குங் கத்தி கண்டேன்
அதுமுதல் ஒருமாதமதாய் கனவினில்
நினைந்து கொண்டு உலறியலறக்கொண்டேன்' - 12

என்ற வரிகள் மூலம் அச்சவுணர்வை எளிய சொற்களில் நகைச்சுவையோடு எடுத்தியம்புவது ஈண்டுக் காணத்தக்கது.

இதனினும் இவன் தந்தையின் வீரத்தைப் பற்றிக் கூறும்போது பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்டு எத்தனை அழகாக அங்கத வடிவில் நகைச்சுவையை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்:

பின்வைத்த காலதனை முன்வையா - என்
றொருபேர் பெற்றவன் எந்தகப்பன் - பூனன்
கண்ணைக் கண்டு மிரண்டு புலியெனத் - திடுக்கிட்டு
தயங்கிப் பானைக்கும் ளொளிப்பான் அன்னவன் மகன் - 12

என்ற பாடல் வரிகள் எடுத்து இயம்பும் நகைச்சுவை படிக்கப் படிக்க இன்பம் தருவதன்றோ.

பாடலில் மட்டும் அல்லது ஆசிரியர் உரைநடைப் பகுதியிலும் நகைச்சுவை உணர்வு வெளிப்பட அமைந்துள்ள திறத்தைக் காணலாம். கவியில் பயன்படுத்தக் கூடாத இடக்கரடக்கலை ஈண்டு ஆசிரியர் தடையின்றி பயன்படுத்துகிறார். இதற்குக் காரணம் கூத்தைப் பார்க்கும் எளிய பாமர சிறுபிள்ளைகள் போன்றோர் மனம் மகிழ வேண்டும் என்ற நோக்கு அன்றி வேறு நோக்கு இருக்க முடியாது. பலிமகராாசனைச் சந்திக்க வரும் சுக்கிரன் தனது

சிஷ்யர்களிடம் பேசிக் கொள்ளும் காட்சி இடக்கரடக்கல் அடங்கிய நகைச்சுவைக்கு மூத்தாய்ப்பாக உள்ளதைக் காணலாம். அசுர குரு என்பதால் அவரை மக்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும் என்பதை எண்ணி தேவகுருவினும் ஒருபடி குறைத்து அசுரகுருவை ஆசிரியர் படைத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. இதோ அவர்கள் பேசிக்கொள்ளும் பகுதியைக் காண்போம்.

சுக்கிரன்: அட சிஷ்யா! சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி! அட துட்ட பயகாள்! நாஞ் சொல்லிக் கொடுத்த வித்தை எல்லாங் கெடுத்து துர்வித்தை ஊறிக் கொண்டிருக் கிறீர்களாடா! சண்டப் பிரசண்டா!

சாத்திரப்பாடி சிஷ்யாள் வசனம்:

சாமி இது! நீங்கள் சொல்லிக் கொடுத்த வித்தையே யல்லாது வேறே எங்களுக்குக் கென்ன தெரியுமய்யா சாமி!

சுக்கிரன் வசனம்: அட சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி அட துட்டப் பயகளா! உங்களைக் கல்லாய் சபித்துப் போடுகிறேன்டா சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி!

சிஷ்யாள் வசனம்: சுவாமி! நீங்கள் கல்லாய் சமைத்துப் போட்டால் நாங்கள் நல்லாய் பிறக்கிப் போட்டு சாப்பிட்டுப் போடு வோமய்யா சுவாமி!

சுக்கிரன் வசனம்:

அட சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி! இனிமேல் உங்களை நெருப்பா எரித்துப் போடுகிறேனடா சண்டப் பிரசண்டா! சாத்திரப் பாடி!!

சாத்திரப்பாடி: சாமி! நீங்கள் நெருப்பா எரிச்சுப் போட்டால் நாங்கள் ஒண்ணுக்கு இருந்து அவிச்சுப் போடுவோமையா சுவாமி!

இந்த வசனப் பகுதியில் குரு கல்லாய் சபிப்பேன் என்பதை சிஷ்யன் 'சமைப்பேன்' என்ற சொல்லாக எடுத்துக் கொண்டு கல்லாய் சமைத்தால் நன்றாகக் கல்லைப் பொறுக்கிப் போட்டு விட்டு உணவை உண்பதாகக் கூறுவது வேடிக்கை தரும் நகைச்சுவையாகும்.

சிறுநீர் விட்டு நெருப்பை அணைப்பேன் என்பது இடக்கடக்கர் என்றாலும் பாமர மக்கள் இரசிக்கும்படியான ஒன்று என்று நாம் துணியலாம்.

நடை:

எந்த இலக்கியமாக இருந்தாலும் அதனை மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் செல்லும் ஆற்றல் அதன்கண் மிளிர்ந்து காணும் மொழி நடைக்கேயுரியது எனலாம். சிந்தனையும் அதனை வெளிப்படுத்தும் மொழிப் பாங்கும் இணையும் போது உருவாவதுதான் நடை என்ற வெளியீட்டு முறைமை. சிறிய சிறிய வாக்கியங்களாக வெளிப்படுத்துவது; (ரா.பி. சேதுப்பிள்ளை) தேர்வு செய்யப்பட்ட உன்னதச் சொற்களைப் பயன்படுத்திச் சிறு வாக்கியமாக எழுதுவது; (திரு.வி.க.) நெடிய தொடர்களைப் பயன்படுத்துவது; (களவியல் உரைகாரர்) சந்த நடையைப் பின்னிப் பிணைந்து பயன்படுத்துதல்; (அண்ணாதுரை) போன்ற நெறிமுறை களைக் கொண்டவர்களை காலந்தோறும் வகைப்படுத்திக் காட்டலாம்.

இந்நாடக ஆசிரியரும் சந்த இசையில் பெரு விருப்பம் கொண்டவர். அருணகிரி, தாயுமானவர், குமரகுருபரர் போன்ற சந்தக் கவிதை தந்த சான்றோர்கள் வகுத்துத் தந்த அற்புத நடையே சந்த நடை. மோனை களாலும் எதுகைகளாலும் சொற்கட்டு மானங்கள் செய்த இவ்வித்தகர் போன்றே பின்வந்த பல்லோர் தம் திறனைக் காட்டித் தமிழுக்கு அணிகலன்கள் செய்துள்ளார்.

அவ்வகையில் இந்நூலிலும் சந்தம் பல இடங்களில் பின்பற்றப்பட்டுள்ளது.

'பரிமள வாடை சூழப் பரிந்து தென்றலு மேவீச
மருவிய குயில்க ளெல்லா மதனை வாவென்று கூவக்
கருநிற வண்டினங்கள் கறித்த வெங்காரஞ் செய்ய
அரனதைக் கண்டு மையலாகிய யெழுகின் றானே' - 236

என்ற பாடலில் அரனார் மோகினியிடம் கொண்ட காதலை வெளிப்படுத்த சந்த நடையில் அமைந்த பாடலைக் கையாண்டுள்ளதைக் காணலாம்.

'ஏங்காணு மோய்மகா தவசியாரே யிங்க
இதய திடமெங்கே தவசியாரே!
வாங்காமல் பிரமநிட்டை புரிந்தவரே - இப்போ
மயங்கி யெந்தன் பின்னே திரிந்தவரே - 248

என்ற பாடலில் எளிய பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்டு சந்தம் ஏற்படுத்தி யிருப்பது படித்து இன்புறத்தக்கது.

அண்டமுண்ட சத்தனுக்கு மங்களாமாயிர
நாமனுக்குப் பூமனுக்கு மங்களம் - பா.5

என வாழ்த்தும்போது துள்ளல் ஓசை எழுவதைக் காணலாம். மேலும் இந்நூலில் தரு, திபிதை, தொடைய மங்களம் போன்ற இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகைமைகள் இசைக்கு உகந்த நல்லநடை பெற்றுத் திகழ்வதைப் பல பாடல்களில் காணலாம்.

நாடகத்தைக் காண்போர் கருத்தைக் கதையின் சிறப்பால் மட்டும் அல்லாது இசைநயத்தாலும் கவரும் உத்தி இந் நாடகத்தில் முழுமையாகக் கையாளப்பட்டுள்ளது எனலாம்.

உவமைகள் மற்றும் வழக்கு மொழிகள்:

உவமைகள் என்பன எண்ணும் எண்ணத்தை ஏற்ற பொருளின் வாயிலாக ஒப்பிடும்போது அவ் ஒப்பீட்டுப் பொருளாக விளங்குவதே உவமைகள் எனப்படும். அணியிலக்கணம் உவமை குறித்து விரிவாகக் கூறுவதைக் காணலாம். இந் நாடக நூலிலும் உவமைகளுக்குக் குறைவில்லை. முதன்மை மாந்தர்கள், துணை மாந்தர்கள் போன்ற கதை மாந்தர்களின் தன்மைக்கு ஏற்ப உவமைகள் கையாளப்பட்டுள்ளன. பின் இணைப்பில் உவமைகள் அகர நிரல்படித் தரப்பட்டுள்ளன. ஒருசிலவற்றை ஈண்டுக் காண்போம்.

அலைகடல் போலும் (58) கடல் போன்ற பெரிய சேனை மாவலியிடம் இருப்பதைத் தெரியபப்டுத்த அலைகடல் போலும் எனவும் 'எண்ணிக்கை செய்ய முடியாத தன்மையில் அமைந்த ஆற்றின் நுண்மணலைப் போலும் நிலை சொல் அரிதான' (58) என்ற உவமை

வாயிலாக'அசுரப் படையில் இடம் பெற்றுள்ள வீரர்களை அவ்வளவு எளிதில் எண்ணிவிட முடியாது என்ற நோக்கில் இவ்வுவமை கையாளப் பட்டுள்ளதைக் காணலாம். தேவர்கள் அடைந்த மனவேதனையை உவமைகள் மூலம் கூறும்போது 'இலவினைக் காத்த கிள்ளை என மனம் நொந்து' (197) இலவினைக் காத்த கிளிக்கூட்டம் போல ஆச்சுதே (198) கடன் கொண்டார் தங்கள் மனக் கவலை போலும் (87) கறந்த பின்பு பாலில்லாக் கன்று போலும் (87) என அமிர்த கலசத்தை அசுரர்கள் தட்டிப் பறித்துச் சென்றபோது மேற்கொண்ட உவமைகளைப் பயன்படுத்தி உள்ளதைக் காணலாம்.

மோகினியின் உருவை வருணிக்கும் போது, கலைகள் நிறை சந்திரன், தாமரை போன்றவற்றை அவள் முகத்திற்கும்; கருநீல விழிகள் காமத்திற்கும்; முல்லைமலர், முத்து போன்றன பற்களுக்கும்; வண்டும், சூழ்பெற்ற கருமேகமும் கூந்தலைக் குறிக்கவும்; கொங்கைக்கு மலையும் நவரத்தினக் கும்பமும் உவமகைளாகப் பேசப்பட்டுள்ளன. பண்டை மரபு மாறாது உவமைகள் அவ்வவற்றிற்கு உரிய பொருட்களுக்கு உவமித்து இருப்பது காணத்தக்கது. மோகத்தால் தன்னை மறந்த சிவனாரைப் பற்றிக் கூறும்போது 'ஆடு எடுத்தக் கள்ளன்போல் நின்றீரே' (248) என்ற உவமையினைக் கையாளுகிறார் ஆசிரியர். ஆடு திருடுபவன் பிடிபடும் காலத்து ஊர்முன்னே கூனிக் குறுகி நிற்பது போல சிவனாரும் தன் தவறு உணர்ந்து திருமால் முன் நிற்கும் நிலையை எளிய கிராமிய உவமை மூலம் எடுத்துக் கூறியிருப்பது கேட்போர் கருத்தைக் கவர வல்லது ஆகும்.

அணிநலன்

இலக்கியக் கலைத்துறையில் படைப்பாளர் கையாளும் கலை நுணுக்கத் திறன்களுள் மிகப் பழமையானதும் கவிஞரின் வெளியீடுட்டு முறைக்கு ஒளியும் தெளிவும் சேர்ப்பதும் பயில்வாரின் நெஞ்சங்களை எளிதில் ஈர்ப்பதும் கவிஞன் சொல்ல விரும்பும் காட்சியை மற்றவர் அவனது கற்பனை எல்லைக்குள் மிக நெருங்கிச் சென்று உள்ளபடி

கண்டு கொள்ளத் துணைக் கருவியாய் இருப்பது அணிநலனே ஆகும். அவற்றில் உருவக அணியும் ஒன்றாகும்.

உவமை அணியில் உள்ள அன்ன, போல, போன்ற முதலாக வரும் உவம உருபுகள் இன்றி, உபமானத்தையும் உபமேயத்தையும் இரண்டாக அன்றி ஒன்றாக்கிக் காட்டுவது உருவக அணியாகும். சான்றாக தேன் போலும் வாசகம் என்ற உவமையில் தேனுக்கும் வாசகத்துக்கும் இடையே இனிமையாகிய ஒற்றுமையைக் காட்டும் 'போலும்' என்னும் உவம உருபு நிற்பதால் தேன், வாசகம் என்ற இரண்டைத் தனித் தனியே காணுவதாகும். இந்த அளவிற்கு உபமானமும் உபமேயமும் வேறு வேறாக நிற்பதைக் காணலாம். இவ்வேற்றுமையையும் ஒழித்து உபமானமும் உபமேயமும் ஒன்றாகவே காணும்படியாக ஓர் ஒற்றுமைக் கூற்றை கவிதையில் அமைத்து விடின் அஃதே உருவ அணியா கின்றது. தேன் போலும் வாசகம் இப்போது வாசகத் தேன் என உருவக நிலைக்கு வந்து வாசகமும் தேனும் ஒன்றென்றே அறியலாம். இதனால் தான் தண்டி அலங்கார ஆசான்

உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
ஒன்றென மாட்டின் அஃது ருவகமாகுமு'

என்கிறார். தேவர்கள் வேதனையை விளக்கிக் கூறும் இடத்து உவமை உருபினைக் கையாளாமல் 'பட்ட பாடெல்லாந் சாம்பலிட்ட நெய்யாச்சுதே' என்ற தொடர் வாயிலாக அமிர்தம் பெற அவர்கள் பட்ட துன்பம் செயல்குலைந்து போனதைக் கூறுவது ஆசிரியரின் நாடகக் கலைத்திறனை எடுத்துக்காட்ட வல்லது எனலாம்.

கவிஞன் தான் கருதும் கருத்தை வெளியிட விரும்பும்போது சுவைப்போர் நுகர்வதற்கு ஏற்ப எண்ணி யதை எண்ணியபடி கூறிவிடாது அதனை மெருகுபடுத்தி வேறு ஒரு பொருளின் மேல் ஏற்றிச் சொல்வது தற்குறிப் பேற்ற அணி ஆகும்.

''புவனம் ஈரேழையும் சிறுவீடாய் மதித்துப் புகழ்ந்து மறப்
பாவையென்று உயிர்களைப் பதிப்பித்து''

என்ற பாடலில் இந்நில உலகை சிறுவீடாகக் கற்பனை செய்து படைப்புக்குரிய பொருட்களைப் பாவையாகக் கற்பனை செய்து கவிஞர் படைத்திருப்பது தற்குறிப்பு ஏற்றத்திற்கு ஏற்ற எடுத்துக்காட்டு.

''பரிமளவாடை சூழப் பரிந்து தென்றலு மேவீச
மருவிய குயில்க ளெல்லா மதனை வாவென்று கூவக்
கருநிற வண்டினங்கள் கத்தத் செங்காதலுஞ் செய்ய
அரனதைக் கண்ட மையலாகியே யெழுகின்றானே'' - 236

இந்நிலவுலகில் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளை எடுத்துக் கொண்டு உயர்ந்தோர் வியப்புறச் சொல்வது அதிசய அணி என்பர். அவ்வகையில் இப்பாடல் தென்றல் பல்வேறு மலர்களின் மகரந்தத்தின் ஊடே சென்று நறுமணம் பெற்று வீசுவது குயில் கூவுவதும் அது இளமைக்குத் துணையாகக் காமனைக் கூப்பிடும்படியாகவம் வண்டினங் களின் சிறு சத்தம் இனிமையான சுகத்தை எழுப்ப இவ்வகையான சூழல் ஒருவர்க்கு காமத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆகவேதான் அரனும் காமவயப்பட்ட காரணத்திற்கு இச்சூழலை காரணம் என அதிசயித்துச் சொல்லிச் செல்வது படித்து இன்புறத்தக்க ஒன்று. இதேபோன்று வேற்றுப் பொருள் வைப்பணிக்கு பாடல் 16ம் பொருட்பின் வருநிலை அணிக்கு பாடல் 147 சொற்பொருட் பின்வரு நிலையிணிக்கு பாடல் 15ம் அமைவதைக் காணலாம். முதனிலை பொருட் தீவக அணியாக 'கடைவோம் வாரீர்' என்ற 18 ஆம்பாடல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மற்றும் தீவக அணியாக 165ஆம் பாடலும் அமையப் பெற்றுள்ளமை காணத்தக்கது. வாழ்த்தணியாக இந்நூலின் இறுதிப்பாடல் (254) அமைந்துள்ளது.

மங்களம் மங்கள் நித்திய செயமங்களம்
சீரான லெக்ஷ்மியும் நாரணனும் வாழி
தேவியுமையவளும மகாதேவனுமே வாழி
காரார்குழல் வாணியு நான்முகனும் வாழி
கன்னியிருவருடன் கந்தனும் வாழி
வேதந்தமிழ் செய் நாவிதனும் வாழி
வேதியர் பணி செய்த ராமானுசன் வாழி
வோது புராண நால்வேதமு வாழி!

என்ற இப் பாடலில் புனிதப் பொருள்கள் இறைவர் மற்றும் ஞானப் பெரியோர்கள் வாழ்த்தப் பட்டிருப்பதைக் காணலாம்.

இந்நூலின்கண் நாட்டுப்புற இலக்கியத்தின் நறுமணம், தமிழ் இசையின் வாசம், வட்டாரப் பேச்சு வழக்குகள் எனப் பல் வடிவங்களில் இன்பம் தரும் கூறுகள் நிறைந்திருப்பதைக் காணலாம்,

சமயச் செய்திகள்:

இந்நூலில் வைதிக சமயங்களின் சிறப்புகள் பல இடங்களிலும் பேசப்பட்டுள்ளன. சிவபெருமானைத் துதித்துப் பாடல்களும் திருமாலைச் சிறப்பித்துப் பாடல் களும் குருபகவான் எனப்படும் நவகோள்களில் ஒன்றான வியாழனைப் போற்றிப் புகழும் துதியும் அசுர குருவாகத் திகழும் சுக்கிர பகவான் சிறப்பைக் கூறும் புகழ்மாலை போன்ற துதிப் பாடல்கள் மேற்சொன்ன கருத்திற்குச் சான்றாக அமைந்துள்ளதைக் காணலாம்.

புவனம் ஈரேழையும் சிறுவீடாக எண்ணி உயிர்களை மரபொம்மைகளாகப் படைத்து அவற்றிற்கு மாயை என்னும் மறைப்பு தந்து, இறைவன் பெருமைகளை உணர்ந்து ஞானத்தின் வாயிலாக மீண்டும் இறையடி சேரும்படியாக அமைந்துள்ள படைப்புக் கோட்பாடு இந்நூலில் பேசப் பட்டிருப்பது எண்ணத்தக்கது.

எள்ளுக்குள் எண்ணெய் போல ஆற்றல் மிக்கது நவகோள்கள். இறைவர்க்கு அடுத்து மக்களின் உயர்ந்த மதிப்பைப் பெறுவது நவகிரகங்களே ஆகும். ஆகையால் தான் அவற்றின் சிறப்பைக் காட்டுவதற்காக நவகோள்களின் ஒன்றான சுக்கிர பகவானைச் சிறப்பித்துக் காட்டும்போது

'சிவத்திருநீறு பூண்டு செபமணி கையிலேந்தி
பவக்கட லதனை நீக்கிப் பிரமன் மெய்யருளைப் பெற்ற
தவத்தினால் உயர்ந்த சுக்கிரன்' (34)

என்ற வரிகள் மூலம் மழைக் கோள் எனப் பேசப்படும் வெள்ளி என்று தமிழ் புகழும் சுக்கிரனின் ஆற்றலை எடுத்தியம்புகிறார்.

குறையில்லா மருந்து குறித்தன ணான்று

ஏதமில் லமுத மென்பதை யுண்டாலத்
தீதெனுஞ் சென்மத் தீவினை தீரும் (70)

என்ற விடத்து அமிர்தத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுவதோடு அமிர்தம் உண்டால் தீதென்னும் முற்பிறவியில் வந்த தீவினைகள் தீரும் என்பது குறிப்பிடத்தக்கது. ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பு, எட்டெழுத்து மந்திரத்தின் தனித்திறம் முதலியவையும் சிறப்புற பேசப்படுகின்றன.

'ஓருரு வாய் பலவாகி யுலக மெல்லா
முணர்கின்ற அஞ்செழுத்தி னுண்மை யாகி' (100)

என சிவபெருமானின் சிறப்பு மந்திரமான 'சிவாய நம' என்ற மந்திரம் பற்றியும் எட்டெழுத்து மந்திரம் எனப்படம் விஷ்ணுவின் சிறப்புமிகு மந்திரமான 'நாராயணாய நமக' என்பதைக் கூறும்போது

'பிறையணி யிறையும் பூவுறை யையனம்
பேசு பொன்னகரி லுள்ளோரும்
மறைமொழிப் படியே மனதி லெட்டெழுத்தா
மந்திரமதனை யுச்சரித்து'' - (82)

சிவபிரானும் பிரம்மனும் மற்றுமுள்ள முப்பத்து முக்கோடி தேவர்களும் துதிக்கின்ற மந்திரம் எட்டெழுத்து மந்திரம் எனச் சிறப்பித்துக் கூறுகின்றார் ஆசிரியர்.

சமூகச் செய்திகள்:

புராணக் கருத்தை நிலைப்படுத்த எழுந்த நூல்போலத் தோன்றினும் அக்கால கட்டத்தில் சமூகத்தில் இருந்த பலவகையான நிலைகளைத் தெரிந்துகொள்ள இந்நூல் துணை செய்யும் எனலாம். 'அஞ்சல் செய்தி' என்பது தொன்றுதொட்டு இன்றுவரை உள்ள ஓர் சாதனமாகும்.

காலங் காலமாக அஞ்சல்துறை என்பது இயங்கி வந்திருக்கின்றது. ஓலை அனுப்புதல் என்பது கதைப் பாடலின் கட்டுக்கோப்பில் ஒரு உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளது எனலாம். அறிய வேண்டியதை அறிவிக்கவும், தெரியாததைத் தெரிவிக்கவம் புலனாகா தவற்றைப் புலப் படுத்தவும் ஓலை அனுப்புதல் என்னும்

உத்தி பெரிதும் பயன்படுகிறது. இந்நூலினும் ஓலை அனுப்புதல் என்ற நிகழ்வு நிகழ்கிறது.

ஓலை எழுதும் அதிகாரியை இந்நூல் 'நாயகன்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது. சோழர் காலத்தில் 'ஓலைநாயகம்' என்பார். இப்பணி செய்ததாக வரலாற்று நூல்கள் பகரும்: ஓலை எழுதப்பட்டவுடன் அதனை எடுத்துச் செல்லும் அலுவல் செய்பவனை 'ஓட்டக்காரன்' எனக் கூறுவர் அல்லது வேகன் என்றும் கூறுவர். இந்நூல்

'குஞ்சமுங் கிலுக்குஞ் சேர்ந்த கோலொன்று கையிலேந்தி
வஞ்சிய ைசை கொள்ளு மன்னர் மாவலி தன்துய்ய
நெஞ்சினில் நினைத் தெல்லா நிமிஷத்தி லுரைத்து மீளும்
மிஞ்சிய வஞ்சல்க்கார வேக னுந்தான் வந்தானே' (59)

(என்ற பாடலில் மிஞ்சிய அஞ்சல்காரன் என்பதே வஞ்சல்காரன் என உள்ளது). இப்பாடல் வழியாகவும்

'வாகுடனே பலிராச னிருபந் தன்னை
லோகத் தசுரர்க்கு மராசற்குந் தெரிவிக்கவே
சருகை யுறுமா துலங்க மார்பி லணிந்த
சரப்பணி தானிலங்க
....
ஞாலமுழுது நொடிநொந் தனிலே செல்ல
சீலமுடனே பலிராச னோலையைச் சொன்ன (54)

என்ற பாடலின் வாயிலாகவும் அன்றைய அஞ்சல் முறை செயல்பட்ட வகைமையை விளக்கிக் கூறுகிறார் ஆசிரியர்.

அரசு வரியாக ஆறிலொரு கடமை பெறுவது என்பது பண்டுதொட்டு வரும் ஒரு மரபு ஆகும். இந்த ஆறில் ஒரு பங்காக வசூலிக்கப்பட்ட இறையானது இறைகாரியத்திற்குப் பயன்படுத்தப்படுவதாக இந்நூலில் குறிப்பு உள்ளது. பாடல் (7ல் காண்க) மேலும் நாடகம் என்ற போதும் சமூக நிகழ்வுகளேயே வினாக்கள் போல அமைத்து மன்னன் கேட்க அமைச்சன் விடை தருவதாக அமைப்பது அன்றையக் கூத்து முறையில் காணப்படும் ஒன்றாகும். அஃது வருமாறு:

“திங்கள் மும்மாரி பெய்கிறதா? சித்தர்களும் முனிவர்களும் யாகாதி காரியங்கள் நடத்தி வருகின்றனரா? முக்கடவுள் பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களுடனே தேவர்கள், கணங்கள் இவர்களுக்குரிய பூசை நல்ல முறையில் நடந்து வருகின்றதா? எழுவகையான மேகங்கள் முறைமை தவறாமல் மூன்றுமழை பெய்கின்றனவா? வருடம் பொய்க்காது செந்நெல் விளைகின்றதா? பாராளும் மன்னர்கள் நீதி தவறாமல் நடக்கின்றார்களா? வணிகர்கள் நேர்மையுடன் பொதுநலத்துடனும் வாணிபம் செய்கின்றார்களா? வேளாளர் சிறப்பாக விவசாயம் செய்து வருகின்றார்களா?” என அன்றாடம் நடைபெறும் சமூக நிகழ்வுகளை வினாக்களாகத் தொகுத்துக் கேட்பதன் மூலம் எளிய மக்கள் விரும்பும் அவர்கள் எண்ணத்தில் எழும் பொதுவினாக்கள் நாடகத்திலும் இடம் பெறுவது கூத்து நாடகத்தின் ஒரு கூறாகவே விளங்குவது எனலாம்.

இந்நூலில் காணப்படும் செய்திகளுடன் புராணச் செய்திகளும் இதிகாசச் செய்திகள் பற்றியும் அவற்றின் கதைகள் பற்றியும் பின் இணைப்பில் கூறப்பட்டுள்ளன. ஈண்டுச் செய்திகள் மட்டும் திரட்டித் தரப்பட்டுள்ளன.

திருமாலைப் பற்றிக் கூறும்போது ஓர் ஆனைக்கு இறங்கியவன் பாடல் (111, 116, 117); பூதேவியையும் ஸ்ரீதேவியையும் புணரும் இறைவன் (116) துருவனுக்கப் பதவியளித்தவன் (116) நரசிங்கமாய் அவதாரம் எடுத்து இரணியனைக் கொன்றவன் (96) பிரமனே நாரணன் திருமார்பில் பிறந்தவன் (89) வாமன அவதாரம் எடுத்தவன் (35) கிட்டிணாவதாரம் எடுத்தவன் (168) ஞாலம் உண்டு உமிழ்ந்த பத்துமநாபன் (111) எனவும் சிவபெருமான் பற்றிக் கூறும்போது மான்தோலைப் போர்வையாய் விரித்தவன் (170) காலனை முன் காலால் முன்கடந்தவன் (170) ஆனைத்தோலை உரித்தவன் (246) போன்ற கதைகளும் இதிகாசமான இராமாயணத்தில் இருந்து பரசுராமன் பற்றிய செய்தியும் (111) இராவணன் தம்பி விபீடணன் பற்றிய குறிப்பும் (116, 126) போன்ற பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வகையில் இந்நாடகம் நிறைந்த செய்திப் பெட்டகமாகவும் இறைநேயத்தை வளர்க்கத் துணை செய்யும்படியான கதையைக் கொண்டதாகவும் பண்பாட்டு கருவூல விளக்கப் புத்தகமாகவும் இலங்குவதைக் காணலாம்.

கூத்து நாடகம் என்பதற்கு ஏற்றபடி சாமானிய மக்கள் மனங்களைக் கவரும்படியான பல நாடக உத்திகள் நிறைந்த புராண காவியமாக அமிர்தமதன நாடகம் விளங்குவதைக் காணமுடிகிறது.

அமிர்தம் - பேரின்பம் - ஒரு விள கம்

புகழ்ச்சி, கொடை, ஆட்சி, கல்வி, செல்வம் . பெண், மது போன்றன மனித சமூகத்திற்குப் போதை தரவல்லன எனலாம். இவற்றில் புகழ்ச்சி, கொடை, ஆட்சி, கல்வி, செல்வம் என்பன முயன்று ஒருவரால் கைவரப்பெற்று அதன் பயனாகப் பிறர் பாராட்டுவதனால் ஏற்படும் உள்ளப் புலகாங்கிதமே நாளடைவில் மதுதரும் மயக்கம் போன்று மயக்கத்தைத் தரவல்லன வாகின்றன. பெண்ணும் மதுவும் ஒருவர் துய்ப்பதனாலே உணர்வுகள் பெறும் புலகாங்கிதமே நாளடைவில் போதையைத் தரவல்லன ஆகின்றன.

மனித சமூகம் மட்டும் இப்போதை வழக்கத்திற்கு அடிமைப்பட்டது என்று ஒருதலையாகக் கூறிவிட முடியாது. தேவர்களும் கடவுளர்களும் இப்பழக்கத்தில் மெத்தப் புகழுடன் விளங்கினர் என்பது வேதங்கள் எடுத்துக் கூறுவதிலிருந்து தெளியலாம். 19ஆம் நூற்றாண்டில் சீனர்களை சோயாபீன்ஸ் என்ற தாவரத்திலிருந்து தயாரிக்கப் பட்ட போதைப் பொருள் எந்த அளவு பாதித்ததோ அந்த அளவினும் மேலாக இன்று உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஹிராயின், பிரவுன் சுகர் போன்றன எந்த அளவு இன்று மனித சமூகத்தை அழிவுக்குக் கொண்டு செல்லும் ஆற்றலைப் பெற்றதோ, அதனினும் மேலாக வேதகால சமூகத்தில், போதைப் பழக்கம் ஆதிக்கம் செய்தது. வேத காலத்தில் பயன்படுத்திய மிகவும் சக்தி வாய்ந்த போதைப் பொருள் சோம பானந்தான்.

சோமபானம் அழியாத தன்மையைக் கொடுக்கும் என்றும் ஒளியை நோக்கிக் கொண்டு செல்ல வல்லது என்றும் ரிக்கேவத சூக் ங்கள் சில விமர்சிப்பதைக் காணலாம். சோமத்திற்குக் கடவுள்தன்மை உண்டு. இறைவனோடு ஒருவரை ஐக்கியப்படுத்திப் பேரின்பத்தைத் தரவல்லது. கீழ்த்தர உணர்ச்சிகளில் இருந்து விடுபட்டு

ஞானநெறியினை நிதானமாகக் காட்டும்; பேரின்பதை இச்சோமபானம் பருகியவுடன் தெளிவாகக் காட்டுது மட்டு மல்லாது, அங்கேயே நிறுத்தும் வல்லமை இப்பானத்திற்கு மட்டும்தான் உண்டு என மேற்சொன்ன சூக்தங்கள் விளக்குகின்றன. மேலும், கண் இழந்தவன் கண் பெறலாம். முடமானவன் சோமரசம் அருந்தினால் எழுந்து நடப்பான். கொடிய நோய் பீடித்தவன் சோமத்தின் மூலம் வசீகரமான வனப்பைப் பெற முடியும் என அன்றைய மக்களும் நம்பினர்.

சோமபானம் என்பது சோமன் செடியில் இருந்து தயாரிக்கப்படும் ஓர் மது பானம் ஆகும். ஸ்வத்ராமணி யாகத்திற்காக ஸோமம் தயாரிப்பதைப் பற்றிச் சதபத பிரமாணம் கூறுவதாவது:

'சோமத்தைக் கொண்டுவந்து முதல்நாள் இரவு முழுதும் நீரிலிட்டு வைத்து மறுநாள் காலையில் எழுந்து நீரைக் களைந்து நன்றாகக் கழுவி எடுக்க வேண்டும். இந்த சுத்திக்கு 'ஆஸ்வினம்' என்று பெயர்,

இரண்டாவது நாள் இரவிலும் நீரிலிட்டு வைத்துவிட்டு மறுநாள் மதியம் எடுத்து நன்றாகக் கழுவி எடுக்க வேண்டும். இவ்வாறு செய்கிற சுத்திக்கு 'ஸாரஸ்வதம்' என்று பெயர்.

மூன்றாவது இரவிலும் இதேபோன் று தண்ணீரை விட்டுச் சுத்தம் செய்ய வேண்டும். இந்த சு திக்கு அய்ந்தரம் என்று பெயர்.

தனக்காகவும், தன்னுடைய இடத்திற்காகவும் அத்வர்யூக்கள் ஆஸ்வினத்தையும், ஹோதா, பிரம்மா, மைத்ரா வருணன் போன்றோர் ஸ்ராஸ்வத்தையும் யாகம் செய்விக்கின்றவன் (எஜமானன்) அய்ந்தரத்தையும் பருக வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

சோமபானம் என்பது இந்திரன் ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில் மட்டுமே கிடைக்கக் கூடியது. வேறு எந்த உலகிலும் இது கிடைத்தற்கு அரியது என்பது வேதத்தின் மூலம் அறிய முடிகிறது.

சோமபானத்தைப் போன்று சிறப்புமிக்க மற்றொரு தொன்மையான பானம் சுரா பானம் என்று வேதம் பகர்கின்றது. சுரா ஒன்றே பிராமணர்கள் அருந்தக் கூடிய பானம் எனவும் வேதம் வலிந்து கூறுகிறது.

தானியங்களைப் பொடித்துக் கலக்கிப் புளிக்கவைத்துத் தயாரிக்கப்படுகின்ற மதுவே 'சுரா' ஆகும். சுராவைத் தயாரித்துத் தெளிய வைத்து எடுத்த பின்னர் மீதியை ஒதுக்கிவிட வேண்டும் என ஸாயண பாஷ்யத்தில் விளக்கப்பட்டுள்ளது.

சுராவின் சிறப்புக் கூறுகளை சதபத பிராமணம் பின்வருமாறு கூறுகின்றது: "அச்சுறுத்தவும் அயரவைக்கவும் படியான மரணத்தை வெல்லும் ஆற்றல் படைத்தது; அமரத்துவத்தை நல்கவல்ல அற்புதமான மூலிகை; பலவிதமான மந்திரங்கள் மூலமாகவும் சூக்தங்கள் மூலமாகவும் கைவரப் பெறும் நற்பேறுகளை அல்லது சுகத்தைப் பருகியவுடன் தரவல்லது; எங்கே சுகமும் அனந்தமும் திருப்தியும் ஐக்கியமாய் வாழுகின்றதோ அங்கே இணையச் செய்வது; எங்கே ஆசைகள் நிறைவேற்றப் படுகின்றதோ அங்கே இருக்கச் செய்யும் வல்லமையும் பெற்றது சுராபானம் எனப்படுகின்றது.

கள்: தொன்மை மிகுந்த பானங்களில் இஃதும் ஒன்று. பனங்கள், தென்னங்கள், ஈச்சங்கள், வேப்பங்கள் எனத் தாவரங்களில் இருந்து பெறப்படுவது ஆகும். தமிழ் இலக்கியத்தில் கள்ளைப்பற்றி வழங்கி வரும் பெயர்கள் முறையே அரியல், கள், காந்தாரம், விசும்பு, தேறல், தேன், தோப்பில், நரவு, நனை, நாரறி, நொடை, பிழி, மட்டு, மது, வெப்பர், வேரி எனப் பலபடியாகக் கூறுவர். சொல்விளம்பி என்றும் இதற்குப் பெயர் உண்டு.

சங்க இலக்கியத்தில் மதுவின் அடிப்படையில் மக்களைப் பாகுபடுத்தியுள்ளனர். அது குறித்து 'தமிழகம்' என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார் ந.சி. கந்தையா.

'பனை, தென்னையிலிருந்து இறக்கப்படும் கள்ளு வறியோர் தொழிலாளர் போர் மறவர் முதலியோரால் பானஞ் செய்யப்பட்டது. பழஞ்சோறு, அரிசி, தாகிரிமலர் முதலிய வற்றிலிருந்து இறக்கப்பட்ட வாசனையோடு கூடிய

மதுவர்க்கங்களைச் செல்வர்கள் அருந்தினர். யவன தேசத்து நின்றும் கப்பல் மார்க்கமாகக் கொண்டு வரப்பட்ட உயர்ந்த மதுவினைப் பருகினார்கள் (தமிழகம் கழக வெளியீடு (1937). ஔவை அதியமானுடன் கூட இருந்து கள் பருகியதாக புறநானூறு கூறுகின்றது.

யாகாதி காரியங்கள் நடைபெற வேண்டிக் கள்ளைப் பருகலாம் என படைப்புக் கடவுளான பிரம்மனே ஆணை பிறப்பித்ததாக வேதம் கூறும். இதனைத் தேவ பானம் என்றும் கூறுவர். இதற்கு மருத்துவத்தில் என்தனியிடம் உண்டு. உற்சாகப் பொருளாக இது பயன்படுத்தப் பட்டுள்ளது சிந்தனையைத் தூண்டிவிட்டு மகிழ்ச்சியுடன் பரவசமாக ஒருவரைத் தன்போக்கில் அலையும்படியான காரியத்தைச் செய்யவல்ல கள் போதையையும் தரக்கூடியது.

இயற்கைச் செல்வமான பல்வேறு வகையான மரங்களில் இருந்து வெளிப்படுவதே கள். பனை, தென்னைப் பாளைகளில் இருந்தும் பெறப்பட்ட கள்ளானது மக்களிடம் காலையிலும் மாலையிலும் போய்ச் சேர்ந்தன. ஈச்சங்கள் என்பது வெப்பம் மிகுந்த பாலைவனப் பகுதிகளில் அதிகம் கிடைக்கும்படியான மதுபானம் இதுவே ஆகும். வேப்பங்கள் என்பது முற்றிலும் மருத்துவத்திற்கே உரியது என்று சித்த மருத்துவர்கள் கூறுவர்.

பழச்சாறு:

வாழை, திராட்சை, மா, பலா போன்ற சுவைமிகுந்த கனிகளைக் கொண்டு தேன் சேர்த்துப் பக்குவப்படுத்திப் பழரசம் தயாரித்துப் பருகியுள்ளனர். திராட்சையின் கனிகளில் இருந்து தயாரிக்கபப்டுவதே திராட்சை ரசம் என்பர்.

இயேசுபிரான் தன் அன்பர்களுக்குத் திராட்சை ரசம் தந்து அருளியதாக விவிலியம் பகர்கின்றது. திராட்சை ரசம் ஈச்சம்கள் இரண்டையும் போதைப் பொருளாகப் பயன் படுத்துதல் தவறு என்று மாமறை குராஅன் கண்டிக்கிறது.

தமிழ் மறையாம் திருக்குறள்கள், பருகுவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. பதினெண் கீழ்க்கணக்கு

நூல்களும் திருக்குறளை அடியொற்றியே இக்கோட்பாட்டை வலியுறுத்துகின்றன.

பொதுவாகப் பழரசம் என்பது மருத்துவப் பொருளாக உட்கொண்டால் உடம்புக்குத் தீங்கு செய்வதில்லை. அதையே போதைப் பொருளாகக் கைக்கொள்ளும்போது உடல் நலத்தை மிகவும் பாதிக்க வல்லதாகத் திகழ்கிறது. இன்றை சாராயம் எனப்படுவது பழரசத்தின் திரிபே ஆகும்.

கள், பழரசம் போன்றன சிறுதெய்வ வழிபாட்டில் பெரிதும் இடம் பெற்றுள்ளன. சோமபானம் எவ்வாறு பெருங் கடவுளர்களுக்கு யாக காரியங்களில் அவிர் பாகமாகப் பயன்படுகின்றதோ அதேபோன்று சுடலை மாடன், கறுப்பன், கருப்பணசாமி, ஐயனார், சோணையன், பிடாரன், காளி என எண்ணற்ற சிறு தெய்வங்களுக்குப் படைப்புப் பொருளாக இவைகள் இடம் பெற்றுள்ளன. நடுகல் வழிபாடு இறந்தோர் நினைவு வழிபாட்டிலும் இறந்தவர் விரும்பும் விருப்புப் பொருளாக இதனையும் இணைத்துப் படைப்பது சமுகத்தில் இன்றும் நடை முறையில் உண்டு.

எனவே பானங்கள் என்பன மனித மனத்தை ஒருவகையான இன்ப நிலைக்குக் கொண்டு சென்று உவகை ஊட்ட வல்லனவாக அமைகின்றன. கடுமையான தவம், உடல் உழைப்பு, ஒழுக்க நெறிப்பாடுகள் இவைகள் எல்லாம் இன்றி, உண்ட மாத்திரத்தில் பேரின்பத்தை நுகரச் செய்யும் ஆற்றல் மதுபானங்களுக்கு உண்டு என மனித சமுகம் ஆழமாகக் கருதுகிறது.

மனக்கட்டுப்பாடு, ஆன்மிக நெறிகள், பெருநெறி களைப் பற்றிய ஒருசார்புச் சிந்தனைகள், வேத அப்பியாசங் கள் என எவ்வகைப் பயிற்சியும் இல்லாது பானங்கள் மனத்தை ஒரு நிலைப்படுத்தவல்லன. பேரின்பத்தைத் தந்து இந்நிலவுலகத் துயரங்களில் இருந்தும் சஞ்சலத்தில் இருந்தும் மனித மனத்தை அப்பறப்படுத்திக் களிப்படையச் செய்யும் ஆற்றல் பெற்ற பான வகைகள் பேரின்பத்தைக் காட்டும் ஏணிகள் என மக்கள் நம்புகின்றனர்.

அமிர்தம்:

அமிர்தம் என்பதற்குத் தேவர் உணவு, மழை, சுவை பால், தயிர், உப்பு, திரிகடுகம் மற்றும் முக்தி என்ற பேரின்பநிலை எனத் தமிழகராதி கூறுகிறது. திருக்குறளில் வள்ளுவர் அமிழ்தம் என்னும் சொல்லை சுவைக்கு ஒப்பிட்டுக் கூறுவர். புறநானூற்றில் அமிர்தம் யென்பது அழிவின்மையைத் தரும் பொருளில் கையாளப்பட்டுள்ளது.

பொதுவாக தேவர்கள் அசுரர்கள் இணைந்து கடைந்து பாற்கடலில் இருந்து எடுத்ததுதான் அமிர்தம் என நமது புராணங்கள் பகர்கின்றன. மரணத்தைத் தடுக்க வல்லது; இளமையைக் காக்க வல்லது; அழியாத்தன்மையைத் தரவல்லது; இந்திர லோகத்தில் கிடைக்கப் பெறுவது; இந்திரனின் கட்டுப்பாட்டில் இருப்பது; இறை ஐக்கியத்தைக் தரக்கூடியது; முயன்று முனைந்து கடுந்தவம் மேற்கொள்ளு வோர்க்கு மட்டுமே இது கிட்டும் என்பது வேதத்தின் கோட்பாடு.

சிற்றின்பம் எனப்படும் இல்லறத்தில் சிந்தை சென்றவர்க்கு அமிர்தம் என்பது கனவுப் பொருளே. தன்னலம் மிகுந்து உலக இச்சையில் உணர்வுகளை இழப்போருக்கு இத்தேவ பானம் கிடைப்பது அரிது என அறநூல்கள் எடுத்தியம்புகின்றன.

தன்னலம் நீங்கிப் பொது நலம் கருதுவோருக்கும் மக்கள் தொண்டு செய்வோர்க்கும் அவர்கள் உள்ளத்திலேயே அமிர்தம் ஊறும் என்பது ஆன்றோர் வாக்கு. மதுபானங்கள் வாயிலாக இப்பேரின்ப நிலையைப் பருகியவுடனே காண முயன்றோரும் முயல்வோரும் உண்டு. இரசவாத முறை மூலம் பலவகை மூலிகைகளைக் கொண்டு மருந்து வழிவகை யின் துணையுடன் பலவகையான இரசாயனப் பொருட் களைத் தயாரித்து அதனை உண்டு அதன் வாயிலாக பேரின்பத்தையும் அழியாத் தன்மையையும் இளமையை யும் மீட்டுப் பெறலாம் என நம்பி முயன்றோர் பலருண்டு.

அமிர்தம் காரணமாகவே தேவ அசுரர்களுக்குப் பலமுறை போர் ஏற்பட்டதாக நமது புராணங்கள் பகர்கின்றன.

தாயுமானவர், வள்ளலார், பட்டினத்தடிகள், அருணகிரி நாதர் போன்றோர் தன்னை உணர்ந்தவரே பேரின்பத்தை அடைய வல்லார் எனக் கூறுகின்றனர். சமயக்குரவர் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் போன்றோர் சிவபிரானின் பேரருளும் பற்றற்ற மனநிலையுமே அமிர்தமாம் பேரின்பத்தைத் தரவல்லது; அதற்கு சிவநாமத்தைச் சிந்திப்பதே சிறந்த வழியாகும்; இறையடி எனப்படும் சிவபிரானின் பாதங்களே அப்பேற்றை தரவல்லது எனக் கூறுகின்றனர்.

திருமூலர் பெருமான் உடம்பை ஒழுக்கமாகப் பேணி உள்ளத்தில் இறைவனை நிறுத்தி மூலாதாரத்தை எழுப்பி சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி போன்ற தீநிலை வழிகளைச் செம்மை செய்து ஆக்ஞை என்னும் இறுதி நிலையில் ஈஸ்வர சிந்தை, ஆன்மபேதம் உடற்கட்டுப் பாடு ஆகியவற்றின் துணையோடு சிவனைச் சேரலாம். அதுவே அழியாத பேரின்பம். சொல்ல முடியாதது! சொல்லிற்கு அடங்காதது! பலகோடிச் சூரியப் பிரகாசம் கொண்டது. ஒளி வெள்ளமாகத் திகழ்வது எனக் கூறுகிறார். வைணவமோ சரணாகதியே ஒருவனை இறைவனுடன் ஐக்கியப்படுத்துவது. நான் எனது என்ற நிலை நீங்கி அடியார்க்கு செய்யும் தொண்டின் மூலமே பேரின்பத்தை எய்தலாம் என்கிறது.

அகந்தையை அகற்றிச் சிந்தையை இறைவன், இறைப் பணி என்ற வளாகத்தில் கொண்டு சேர்த்துப் பொது நலத்துடன் தொண்டுகள் புரிபவனே பேரின்பமாம் அமிர்த நிலை அடையக் கூடியவன் என இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்றோர் கூறுகின்றனர்.

அற ஒழுக்கத்துடன் பொதுப்பணியே தன் கடனாகக் கொண்டவன் துன்பமற்றவன். இளமையானவன், நல்ல ஆரோக்கியன் என அறநூல்கள் பாராட்டுகின்றன. அவ்வகையாக வாழ்பவனே பேரின்பத்தை நுகரத் தகுதியுடையவன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த மனப்பான்மையே சிறந்த இறைப் பேறான அமிர்த நிலையைத் தரக்கூடியது எனத் தமிழ்நூல்கள் கூறும்.

எனவே, பேரின்பம் என்பதன் குறியீடாக அமிர்தம் என பேசப்படுகிறது. ஆகவே அமிர்தம் அல்லது பேரின்பம் என்ற இப்பேருண்மையை அறிந்து கொள்ளப் பலரும் பல வழிமுறைகளில் சென்றுள்ளனர் என்பதையும் அவ்வழி களில் நன்மை பயப்பது, தீமை உய்ப்பது எது என்பதையும் நம்மால் ஆய்ந்து அறிந்து தெளிந்த வழியினைத் தேடிக் கொள்ளலாம்.

இந்த நூலின் தலைப்பு அமிர்தமதன நாகடம் என்பதற்கு ஏற்ப அமிர்தத்தைப் பற்றிய சிறப்புச் செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஒரு செயலைச் செய்தால் அதற்கு ஒரு பயன் எதிர்பார்த்தல் என்பது இயல்பு.

பாற்கடலைக் கடைந்ததாக ஒரு நூலை இயற்றி அப்பாற்கடலில் இருந்து பேரின்பத்தைத் தரும் அமிர்தம் தோன்றியது எனக் காட்டி, அந்த அற்புதத்தின் பேரிலேயே இந்த நூலுக்கும் தலைப்பு அமைந்துள்ள இந்நூலாசிரி யருடைய திறன் போற்றுதலுக்குரியது.

❋ ❋ ❋

அமிர்த மதன நாடகமும் - இசையும்

தமிழர்கள் தங்களுடைய சாத்திரங்களையும் நுண்கலைகளையும் செறிவு மிக்க நடையில் அமையும்படியான செய்யுட்களில் பொதிந்து வைத்தனர். "நவமணிகளைப் பற்றிய சாத்திரம், சிற்பக் கலை, நடனக் கலை, மருத்துவம் மற்றும் இசைக்கலை போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். தக்க ஆசிரியரின் துணையின்றி இத்தகைய பட்டறிவுக் கலைகளை உய்த்து உணர இயலாது.

இத்தனை இறுக்கமாக நுண்கலைகள் கூறப்பட்டு இருந்தாலும் ஒருகாலத்தில் இந்தியா முழுமையும் பலுசிஸ்தானம் வரை மேற்கிலும், வங்காளம் வரைக் கிழக்கிலும் திராவிட நாகரிகமே பரவியிருந்தது என எஸ்.கே. பானர்ஜி போன்ற வரலாற்றுப் பேரறிஞர் கூறுவது கவனிக்கத் தக்கது. சரித்திரப் பேராசிரியர் சுனித்குமார் சட்டர்ஜி என்பவர் இந்திய நாகரிகத்தின் முக்கால் பாகம் திராவிடம் கால்பாகம் ஆரியம் என்று கருதுகிறார்.

ஆகவே தமிழும் தமிழிசையும் மிகப் பழமையானவை என்பது யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. முன்னே படைக்கப்படும் இலக்கியத்தைக் கொண்டுதான் இலக்கண நூல் எழுகின்றன என்பர் மொழி ஆய்வாளர். அவ்வகையில் தமிழ் இசைக்கு எழுந்துள்ள இலக்கண நூற்கள் பலவாகும்.

நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்னரே இறந்துபட்ட அகத்தியம், அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டும் சிகண்டியின் இசை நுணுக்கம், 'யாமே ளேந்திரர்' என்பவரால் செய்யப்பட்ட இந்திர காவியம், நாடகத் தமிழ் நூல்களுள் ஒன்றாக விளங்கும் குணநூல், சயந்தம் என்னும் நாடக நூல் செயிற்றியனார் என்பவரால் செய்யப்பட்டதாகக் கருதப்படும் செயிற்றியம், பஞ்ச பாரதீயம் என்ற நூல், தமிழ் நூல்களான முருகு, பெருங்குருகு, பெருநாரை என்ற

இசைநூல்கள் போன்றன அக்காலத்திலே இருந்து இறந்துபட்ட நூல்களாகக் கருதலாம். இதுதவிர அறிவனார் என்ற ஆசிரியரால் செய்யப்பட்ட பஞ்சமரபு என்ற இசைத்தமிழ் நூல் நாட்டியக்கலை சார்ந்த பரதசேனா பதியம் என்னும் நூல். இந்நூல் ஆதிவாயிலார் என்பவரால் இயற்றப்பட்டது. இயற்றியவர் பெயர் அறியப்பட முடியாத வகையில் அமைந்த பரதம் என்னும் நூல் தமிழ் இசைத் தொடர்பான நூலாகவே கருதுவார் அடியார்க்கு நல்லார்.

இவ்வாறு இசைக்கு இலக்கணம் வகுத்த பலதுறை நூல்கள் தமிழகத்தில் நுண்மாண் நுழை புலத்தோரால் பயன்படுத்தப்பட்டே வந்துள்ளன என அறியமுடிகிறது.

கி.பி. 7, 8, 9ஆம் நூற்றாண்டுவுகளில் தேவார ஆசிரியர்களும், திவ்விய பிரபந்த ஆசிரியர்களுமான ஆழ்வார்களும் தோன்றித் திருநெறியை தெய்வத்தமிழ் இசையைப் பாடித் தமிழுக்கு அரிய தொண்டாற்றினர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவாறு தமிழுக்கும் இசைக்கும் சிறப்பான சேவை செய்தவர்கள் மூவர் முதலிகள் எனலாம்.

கீர்த்தனை என்ற சொல் முன்னர் குறிப்பிட்ட நூல்களில் காணப்படா விட்டாலும் சிலப்பதிகாரத்தில் 'வாரப்பாடல்' என்ற இசைப்பாடல் வகை பேசப்படுவதைக் கொண்டும் தேவாரத்தை தே + வாரம் என்று பிரிப்பதன் மூலம் 'வாரம்' என்ற இசை பொருண்மை அமைவதைக் கொண்டும் கீர்த்தனையின் பண்டைய வடிவங்களைத் தெளிவாகவே விளங்கலாம்.

அந்நாளில் சப்த சுவரங்கள் தமிழில் பழக்கத்தில் இருந்ததாகக் குடுமியான்மலைக் கல்வெட்டு எடுத்தியம்பு கிறது. தெலுங்கரான அன்னமாச்சாரியர் அமைத்துத் தந்த வடிவமே இன்றைய கீர்த்தனை வடிவமாகும். கீர்த்தனை என்ற சொல் சங்காலம் முதல் காப்பியக் காலம் வரை இல்லை என்றாலும் வாரப்பாடல் போன்ற இசை வடிவங்கள் அக்காலத்தில் கீர்த்தனை இருந்திருக்கலாம் என்பதையே உணர்த்து கின்றன. சாஸ்திரிய கர்நாடக இசையென இன்று பேசப்படுவதில் வரும் 'ஆலாபனையே' அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் ஆளத்தியாகும் என இசை வல்லுநர்கள்

குறிப்பிட்டுள்ளனர். கர்நாடக இசைக்கு சொந்தமான 'ஆரோகம், அவரோகம்' என்பன சேக்கிழார் குறிப்பிடும் 'ஆரோசை, யமரோசை'யே எனக் கொள்ளலாம். இதனை, 'ஆரோசை, யமரோசைகளினமைத்தார்' என்ற பெரிய புராண அடி வலியுறுத்தும் (பெரி.புரா. ஆன.24) பல்லவி அனுபல்லவி சரணம் என்ற மூன்று கூறுகளைக் கொண்ட கீர்த்தனைக்கு முன்னோடியாக 'கலிப்பா' அமைவதைக் காணலாம். தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற அமைப்பே பிற்காலத்தில் மேற்சொன்னபடி ஆகியிருக்க லாம் எனத் தோன்றுகிறது.

கூத்து நாடகமும் இசையும்:

இறையுணர்வு, இசையுணர்வு வாழ்க்கை அனுபவம் என்ற மூன்று பொருண்மைகளின் கூட்டமைப்பே கூத்துப் பாடல்களில் காணப்படும் இசைப் பாடல்களின் பொருண்மை எனலாம். கூத்து நாடகத்தில் இசையின் பங்கு உரைநடையின் பங்கை விட அதிகமாகும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் யுக்திக்கும், பாத்திரத்தின் வெளிப் பாட்டிற்கும், பாத்திரத்தையும் பார்வையாளர் களையும் இணைக்கும் ஓர் சாதனமாகவும் இசைப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. நாடகத்தின் தொடக்கம் இசையோடு கூடிய துதிப் பாடலாகத் தொடங்கி இடையில் பலவகையான விருத்தங்கள், தரு, திபிதை போன்ற உறுப்புக்களைப் பெற்று இறுதியில் மங்களம் என்ற பொருண்மையோடு கூத்து நாடகத்தில் இசைப் பின்னிக் கிடக்கும் அமைப்பினைக் காண முடிகிறது.

அவ்வகையில் கூத்து நாடகத்தில் பல்வேறு விதமான இராகங்களும் தாளங்களும் பயின்று வருதல் மரபு. கூத்து மேடையிலிருந்து பார்வையாளர்கள் வெகு தொலைவு வரை குழுமியிருக்கின்ற காரணத்தால் கதாநாயகன் முதல் வில்லன் பாத்திரம் வரைத் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் தங்கள் உணர்ச்சிகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் படியாக அமைத்துக் கொள்வதற்கும் இசையே பெரும் சாதனமாக அமைகிறது.

இராகங்களும் பயன்களும்:

'ஒரு பாத்திரம் இறைவனைத் துதிப்பதாக வரும் பாடல்களில் புன்னாக வராளி, சகானா, சுருட்டி, கலியாணி, பைரவி, ஆபூர்வம், நாதநாமக்கிரியை முதலிய ராகங்கள் பயின்று வருவதைக் காண முடிகிறது.

ஒரு கருத்தைத் தெரிவிப்பதற்குக் காப்பி ராகமும் தேர்தல் சொல்லுதற்கு நாதநாமக் கிரியையும் முறையீடாக வரும்போது ஆரபி, சுருட்டி ஆகிய இராகங்களும் இறைவனின் பெருமையை வருணிக்கும்போதும் மனதைத் தூது அனுப்பும்போது சங்கராபரணம் என்னும் இராகமும் துன்பத்தை வெளிப்படுத்துவதற்கு முகாரியும் அறிவுரை கூறுங்காலத்து ஸ்ரீராகமும் மக்களுக்கு உபதேசம் செய்யும போது காம்போதியும் பொதுவாகப் பழகி வருவதைக் காணமுடிகிறது. உணர்வுகளைக் காட்டும் நேரத்தில் காமத்திற்கு - கமாஸ், நகைக்கு வசந்தாவும், வெகுளிக்கு அடாணாவும், தாய் குழந்தையிடம் காட்டும் அன்புக்கு நீலாம்பரி, ஆனந்த பைரவி, யதுகுல காம்போதி போன்ற இராகங்கள் பழகி வருவதைக் காணலாம் என முனைவர்.

சௌந்தரபாண்டியன் தனது தமிழில் கீர்த்தனை இலக்கியம் - பக். (58-59) என்ற நூலில் கூறியுள்ளது ஈண்டு எண்ணத் தக்கது.

பொழுதுகள் பற்றிக் கூறும்போது வைகறையைக் குறிப்பிட பூபாளமும், காலையைக் குறிப்பிட பிலகரியும், நண்பகலுக்கு மத்திமாவதி, சுருட்டி ஆகிய ராகங்களும் மாலையைக் குறிக்க வசந்தாவும் பின்மாலைப் பொழுது பற்றிக் கூறும்போது லதாங்கி, சராங்கம் ஆகிய இராகமும் அமீர்கல்யாணி, நீலாம்பரி போன் இராகங்கள் இரவினையும், காம்போதி, கரகரப்பிரியா ஆகிய இராகங்கள் எல்லாக் காலங்களுக்கும் ஏற்பவும் கூத்து நாடகத்தில் பெரிதும் பயன்பட்டு வருவதைக் காணலாம்.

பதிபிற்கு எடுத்துக் கொண்ட இந்நூலில் இறைவனைத் துதிக்க தொடையமங்களம் (4), காம்பேதி (5) சுருட்டி (10) போன்ற இராகங்களும், கட்டியம் கூறும்போது மத்திமாவதியும் (17) இறைவனின் துதியைப் பேச ஆனந்தபைரவி (171) கலியாணி (226) போன்ற இராகங்கள் பயின்று வந்துள்ளதைக் காணலாம்.

தரு: கூத்து நாடகத்தில் வரும் தரு என்பது இசையோடு தொடர்புடையது. இது கதை கூறுவதற்கான இசைப்பாடல் என்று இசை வல்லுநர் கூறுவர். எடுத்துக்காட்டாக, சரணப் பகுதியில் அடிகளுக்குள் அமையும் எதுகைகளை நோக்கினால் அது புலனாகும். ஓர் அடியைப்ச பல பிரிவுகளாக எழுதி அந்தஉட்பிரிவுகளுக்குள்ளும் எதுகை அமைய அமைப்பர். இவ்வகையான செறிவுகள் பொதுவாகக் கீர்த்தனையில் காணமுடியாது. கீர்த்தனை யைப் போலல்லாது அனுபல்லவி தருவில் பெரியதாகவே அனுமதிக்கப்படுகிறது. சரணங்களும் தருவில் பெரிதாகவே இருப்பது இயல்பு. கீர்த்தனை இவ்வமைப்பு பேசப்படு வதில்லை. தருக்களைக் குறிப்பிட்ட யாப்பில் அடக்கி விடமுடியாது. இசைத்துடிப்புக்கு ஒக்கவே அவைகள் அளவு இடுன்றன. ஆகவே யாப்பு என்பது தருவிற்கு அத்தனை சிறப்பாக நோக்கப்படுவதில்லை.

திபிதிகை: திபிதிகை என்ற இச்சொல் த்விபதா' என்று தெலுங்கு மொழியில் கூறப்படுவதாகும். தெலுங்கு யாப்பு என்றும் கூறுவர். திபிதைப் பாடலில் இரண்டு இரண்டாக அமைத்துக் காணப்படும். இரண்டு அடிகளும் முதல் சீர்களும் இறுதி சீர்களும் ஓர் எதுகை கொண்டனவாக இருக்கும். திபிதைப் பாடலுக்கு இராகம் தாளமிருப்பினும் பல்லவி, அனுபல்லவி போன்ற அமைப்புகள் பெற்றிருக்காது.

இசையைப் பெரும் பகுதியாகக் கொண்ட கூத்து நாடகம் ஏனைய நாடகங்களை விட இசைக்கு முழுமை கொடுப்பது போலத் தெரிந்தாலம் கவிதை நாடகமென்றோ இசை நாடகமென்றோ நாட்டிய நாடகமென்றோ (அ) அபிநய நாடகமென்றோ பெயர் பெற்றுவிடாமல் இசையை ஓர் அங்கமாகப் பெற்று நடிப்பு போன்ற ஏனையவற்றிற்கும் பங்களித்துப் பரிமளிக்கும் கூத்து நாடகத்தை முழுமையான கீர்த்தனை நாடகமாக எண்ணிவிட முடியாது. முழுமையான கீர்த்தனை நாடகத்தில் இசைக்கே சிறப்புண்டு. இசையின் வாயிலாகவே செய்திகள் வெளியிடப்படும். எடுத்துக் காட்டாக இராமநாடகக் கீர்த்தனை முற்றும் கீர்த்தனையில் அமையப் பெற்றது.

அமிர்த மதன நாடகம் என்னும் இந்நூல் கூத்து நாடகமாக முத்தமிழிலும் இயைந்து உள்ளது. இசையும் கதையுமாக கீர்த்தனை நாடகங்களும், நடனமும் கதையுமென நாட்டிய நாடகங்களும், உரைநடையும் நடிப்பும் என இன்றைய நாடகங்களும் அமைய கூத்து நாடகம் மட்டும் மூன்று தமிழையும் இணைத்துச் செல்லும் பண்பினைக் கொண்டு விளங்குகிறது.

இவ்வாறு பதிப்பிக்கப் பெறும் இந்நூல் இலக்கியச் சிறப்புக்களே அன்றி இசைச் சிறப்பையும் கொண்டு இலங்கி மக்களிடையே ஒரு நல்ல வரவேற்பினைப் பெற்று விளங்கியுள்ளமை தெரிகிறது.

இந்நூல் ஆசிரியர் இந்நாடகத்தில் இசைக்குத் தந்துள்ள சிறப்பு, அவர் கையாண்டுள்ள பல்வேறுபட்ட இராக, தாளங்கள் ஆகியவற்றை நோக்கும்போது ஆசிரியர்க்கு மட்டும் அல்லது இந்நாடகத்தில் பாத்திரங்களாகப் பங்கேற்று நடிக்கும் கலைஞர்களுக்கும் இவ்விசைத் துறையில் பெற்றிருந்த ஞானம் அதனை மக்களிடையே வெளிப் படுத்தும் பாங்கு ஆகியவற்றைப் பார்க்கும்போது ஆசிரியர், நடிகர், சுவைஞர் ஆகியோர் இசைத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாகவே இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

அமிர்தமும் நஞ்சும் - சமூக சமயத் தாக்கம்

இந்தியத் துணைக் கண்டமே உலகின் சமயக்கூரையெனப் போற்றப்படும் படியாக அமைந்தது எனலாம். வேதமும் அதன் வழிப்பட்ட வைதிக மதங்களும், பௌத்தம், சமணம் சீக்கியம் போன்ற தொன்மை மிக்க மதங்களுக்கெல்லாம் இந்நிலமே தாய்வீடாக விளங்கு கிறது.ரிக், யஜுர், சாம, அதர்வணம் எனச் சொல்லப்பட்ட நான்கு வேதங்களின் வழிவந்த வைதிகமே, பிற்காலத்தில் பல்வேறுபட்ட காலச் சூழலில் பல்வேறு கூறுகளாப் பிரிந்து இன்று மீண்டும் இணைந்து இந்துமதம் என்ற பெயரில் பரந்து விரிந்து கிடக்கிறது.

மதத்திற்கு மதம், கொள்கை சித்தாந்தங்களில் வேறு வேறு கருத்து மாறுபாடுகள் அமைந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டிற்கு ஒப்ப இவற்றின்கண் ஒற்றுமை இழைந்தோடுவதைக் காண முடிகிறது. சிவபிரானைத் தலைவனாகக் கொண்டு சைவம் தழைத்தது. திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வைணவம் எழுந்தது. கௌமாரத்தின் இறைவன் முருகன் சிவ பெருமானின் மகனாகக் கருதப்பட்டான். காணாபத்தியத்தின் முதற்கடவுளான கணபதி திருமாலின் மருகனாகப் போற்றப படுவதோடு இறைவர்க்கெல்லாம் மூத்த பொருளாகவும் பிரணவ மந்திரத்தின் சாரமாகவும் போற்றப்படுகிறான். பெண் தெய்வங்களில் பார்வதி சிவானரின் துணைவியாகவும், இலக்குமி திருமாலின் மனைவியாகவும் சிவபெருமானின் தங்கையாகவும், கலைமகளின் கணவன் பிரமன் எனவும் அப்பிரமன் திருமாலின் உந்தியில் தோன்றியவன் எனவும் பற்பல வகையான தொன்மங்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையனவாக இன்றுவரை நின்று நிலவுவனவாகக் காட்டப்படுகிறன.

ஊருகள்தோறும் பாஷைகள் வேறு என்பது பழமொழி. அவ்வகையில் பொதுமையான தொன்மங்கள் மேற் சொன்னது போன்று இருந்தாலும் அந்த அந்த நிலத்திற்கு ஏற்ப, இறைவர் சமூக அங்கீகாரம் பெறுவதையும் காண முடிகிறது.

தமிழகத்தில் சிவபெருமான் தமிழ்ச்சங்கத் தலைவராக இருந்தது; முருகன் அவ்வையின் தமிழில் இன்புற்றது; முருகன் வள்ளியை மணம் புரிந்தது; புலவன் அழைக்க நாரணன் தனதுபாய்படுக்கைதனைச் சுருட்டிக் கொண்டு புலவருடன் சென்றது; ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையை அரங்கன் மனம் உவந்து அன்புடன் ஏற்றது; சிவபெருமான் தாயும் அவனாக இருந்து மகப்பேறு பார்த்தது; இறை நேயரான அடியவர் கேட்க சிவன் தன் ஆலயத்துக் கதவின் தாளை நீக்கியும் பூட்டியும் பணி செய்தது; தொண்டர்களைச் சோதித்து அவர்தம் பெருமைகளை உலகறியச் செய்தது; தானே தனது திருவிளையாடல்கள் மூலம் இறைநேயர்தம் அகஇருளை அகற்றி ஆட்கொண்டது; மேலை நாட்டுக்காரன் ஒருவன் அகந்தையோடு கேலி பேசியதற்காகத் தஞ்சை மாரி அவன்மேல் முத்துப் பொழிந்து; அவனை அவன் தவறு உணரச் செய்து அன்னைமாரி அருள் பாலித்தது என்பன போன்ற தொன்மங்கள் தமிழகத்தின் வட்டார அளவோடு நின்றுவிட்டதைக் காணலாம். இந்நிகழ்வுகள் காசுமீரத்து வாழ்மக்கள் அறிய வாய்ப்பில்லை.

கபீர், துளசிதாசர் போன்றோர் கதைகள்; குஜராத்தில் இறைநேயச் செல்வி மீராவின் வரலாறு; துக்காராமின் இறைநேயம்; சூர்தாசின் சிறப்புகள்; வங்கத்தில் தோன்றிய கிருஷ்ண சைதன்யர், பஞ்சாபில் அவதரித்த இராமதீர்த்தர் அருளிச் செயல்கள் போன்ற செய்திகள், அவரவர் அந்தஅந்த மண்ணிலே பெற்ற பெருமைகள் பிரிது ஓர் இடத்தில் வாழும் எளிய பாமர மக்களால் அத்தனை முழுமையாகவும் சிறப்பாகவும் அறிந்து பேசப்படவில்லை.

ஆனால் இறைவன் சிவபிரான் கயிலயங்கிரிக்குச் சொந்த மானவன்; அவன் ஆளும் இடம் கயிலாயம்; பூதகணங்கள் அவன் வசப்பட்டது; அவன் முக்கடவுள்களில் ஒருவன் இயமன் மரணத்தின் கடவுள்; சித்திர புத்திரன் உயிர்கள்

செய்யும் நல்லன, அல்லனவற்றைக் குறித்து வைத்துக் கொள்ளும் கடவுள்; விட்ணுவின் உலகம் வைகுந்தம் துளசி திருமாலுக்குப் பிரியமான அர்ச்சனைப் பொருள்; ' பில்வம் சிவனுக்குரியது; தாழை பூசைக்கு அருகதை யற்றது; கிருஷ்ணன் வதைத்த நரன் என்ற அசுரனின் ' ருப்பமே தீபாவளி என்ற திருநாள்; பாற்கடலைக் கடையப் பெற்றுப் பெற்ற அமிர்தம் அமரர்களுக்குப் பேரின்பம் நல்கியது போன்ற தொன்மக் கருத்துக்கள் காசுமீரம் முதல் கன்னியாகுமரி வரை உள்ள இந்துக்கள் (பாமரர் முதல் படித்தவர் வரை) உள்ளத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

அவ்வகையில் தேவர், அசுரர் திருமாலின் அருளோடு அமிர்தம் கடைந்த வரலாறு இவ்விந்தியத் திரு மண்ணில் இந்து சமயத்தார்க்கெல்லாம் தெரிந்த ஒன்றே.

அத்தகைய அமிர்தம் கடைந்த வரலாறு சமுகத்தின் பல்வேறு நிலைகளில் பண்பாட்டின் கண் இரண்டறக் கலந்துள்ள பேற்றினை ஈண்டுக் காண்போம்.

தேவர்களும் அசுரர்களும் வாசுகியை நாணாகவும் மந்திரமலையை மத்தாகவும் கொண்டு கடைந்தபோது முதலில் வெளிப்பட்டது ஆலகாலம் ஆகும். அதனைத் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சிவபிரான் அவ்வால காலத்தைத் திரட்டி ஓர் உருண்டையாகத் தன் கண்டத்தில் அடக்கிக் கொண்டார். அதன்பின் பல நற்பொருள்கள் தோன்றின இறுதியில் அமிர்தம் வந்தது.

இந்நிகழ்வுக்குப் பின் சமுதாயத்தில் முதலில் எதைச் செய்யத் துணியும் போதும் அதனை இறைவர்க்கு என்று ஒப்புவித்து விடுவது இன்றுவரை நம்பிக்கை அல்லது பழக்கமாக உள்ளது. எடுத்துக்காட்டாக ஏதேனும் ஒரு நல்ல காரியத்தை எழுதத் தொடங்கும்போது முதல் எழுத்தாக பிள்ளையார் சுழி 'உ' என இடுவது காணலாம். இதன் உட்பொருள் முதல் எண்ணத்தின் வரிவடிவை இறைவனுக்குச் சமர்ப்பித்தல் என்பதே.

இன்றும் காயத்திரி போன்ற மந்திரங்கள் மற்றும் இறைகாரியங்கள் செய்யும்போது பஞ்சபாத்திரம் உத்தரணியும் மிகவும் அடிப்படைப் பொருட்களாகும். பஞ்ச பாத்திரம் என்பது தாம்பிரத்தினால் ஆனது. இப்பாத்திரத்தில் உள்ள நீர் பாற்கடல் எனக் கருதப்படும். உத்தரணியின் அடிப்பாகம் மந்திரமலை. மேல்பாகம் வாசுகி என்பர்.

ஏனெனில் உத்தரணியின் மேல்பாகம் பாம்பு படம் எடுத்தாற்போல தலை வளைந்து அகன்று இருக்கும். இதைக் கொண்டு மந்திரங்கள் சொல்லும் நீரைக் கடைய வேண்டும் என்பது மரபு.

''அபோவா இதகும் ஸர்வம் விசுவா பூதானி ஆபஃ
ப்ராணாவாபஃ பசவ ஆபஃ அன்னமாபஃ அம்ருதமாபஃ
ஸ்ம்ராடாபஃ விராடாபஃ ஸ்வரா டாபஃ
சந்தா குஸ்யாபஃ ஜ்யோதி குஷ்யாபஃ யஜோகுஷ்யாபஃ
ஸத்யமாபஃ ஸர்வா தேவதாஃ ஆபஃ
பூர்புவஸ் ஸிவராப ஓம்'' என்பதே மந்திரம்.

இம்மந்திரத்தைச் சொல்லிக் கடைந்து பின் அந்த நீரை ஆசமனம் செய்ய வேண்டும். முறையாகச் செய்யும்போது முதல் உத்தரணி நீரை ஆசமனம் செய்யாமல் (பருகாமல்) வெளியில் தெளித்து விடுவர். ஏனெனில் அதனை ஆலகால விஷம் எனக் கருதினர். பின் அமிர்தமான அடுத்த நீரை ஆசமனம் (பருகி) செய்வர். வேதகாலம் தொட்டே இம்முறை பின்பற்றப்பட்டு வருவதைக் காணலாம்.

பொதுவாக நமது வீடுகளில் பெரியோர்கள் இலையில் அமர்ந்து அன்னம் புசிக்கும்போது 'முதற் பிடி சாதத்தைப் பிண்டமாகப் பிடித்து' இலையில் மூலையில் இட்டு விடுவர். அடுத்த பிடியிலிருந்தே உணவு உட்கொள்வர். இதுவும் பாற்கடல் நிகழ்வு கருதியே முதல் பிடி ஆலகாலமாக வெளியே விடப்படுகிறது. பிற்காலத்தில் இதுவே பிதுர் உணவு என்றும் மருவி விட்டது. எந்தப் பொருளானாலும் முதலில் இறைவனுக்குப் படைப்பது என்பது நமது பண்பாடு. அவ்வாறு படைக்கப்படும் உணவில் ஒரு சிறு அளவு வெளியில் எரிந்து விடுவர். இந்நிகழ்ச்சியினை இன்றும் பெரிய ஆலயங்களில் கவனித்துப் பார்க்கலாம்.

விலங்கினங்கள் கூடத்தான் ஈன்ற குட்டிகளில் முதல் குட்டியை உண்டு விடுவதுண்டு. எடுத்துக்காட்டாக நாய், பன்றி, பூனை போன்ற விலங்குகள் இவ்வகை இயல்பை உடையன. தன்னுடைய பார்ப்புகளில் முதலில் தோன்றியது நச்சுத்தன்மை உடையது என்பதாலும் அதுவே அத்தாய்க்கு மருந்துப் பொருளாகப் பயன்படுவதாலும் இவ்விலங்குகள் இவ்வாறு செய்கின்றன என்பது ஈண்டுக் கருதத்தக்கது.

ஆகவே விலங்கினம் கூட முதற் பொருளை இவ்வுலக வாழ்க்கைக்கு உகந்ததல்ல எனக் கருதி அழித்து விடுவதைக் காணலாம்.

அமுது என்று போற்றப்படும் தாய்ப்பாலைக் குழந்தை பிறந்தவுடன் தாய்மார்கள் புகட்டுவதில்லை. முதலில், பிறந்த குழந்தைக்குச் சர்க்கரைக் கரைசலே உணவாகத் தரப் படுகிறது. தாய்மார்கள் சுரக்கும் முதற் தாய்ப்பாலை வெளியில் வார்த்து விடுவர். பின்னர் சுரக்கும் பாலையே குழந்தைக்குப் புகட்டுவர். இதுவும் பாற்கடல் கடைந்த வரலாற்றின் தாக்கமே எனலாம்.

பசுவின் பாலில்கூட முதற் சீம்பாலை யாரும் பயன்படுத்துவதில்லை. அடுத்தடுத்த பாலையே உண வாகப் பயன்படுத்துவர். மழை நீரை மக்கள் மழைக் காலத்தில் சேமித்துப் பயன்படுத்தும் பழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் உண்டு. வாரியின் வழியாக வரும் மழைநீரை உடனே பயன்படுத்த மாட்டார்கள். ஊற்றுத் தோண்டிக் குளிக்கும் பழக்கமுடைய ஆற்றுப் படுகை அல்லது கரையோரத்தில் வாழும் மக்கள் ஊற்றின் முதல் நீரை அஃதாவது (இறைத்துப் பின் ஊறிய முதல் நீரை) இறைத்து எடுத்துவிட்டு அடுத்த நீரையே பயன்படுத்துவர்.

கிராமப்புறங்களில் கொடிகளில் தோன்றும் முதற்காயை உண்ணாது அதனை விதைக்கு என்று பயன்படுத்துவர். இதன் உள்நோக்கம் முதற்பொருள் தவிர்த்தல் என்பதாக இருக்கலாம். அவ்வகையில் பார்க்கும்போது பூசணி, சுரை, பாகல், புடலை போன்ற தாவரங்களின் காய்கள் முற்றிப் போகும்வரை விட்டு விடுவதை இன்றும் கிராமப்புறங்களில் காணலாம்.

கோழியின் முதற்குஞ்சு பசுவின் முதற் கன்று போன்ற வற்றைக்கூட இறைவனுக்கே காணிக்கை ஆக்கி விடும் பழக்கம் இன்றும் தென்பாண்டி நாட்டில் உண்டு.

பிறந்த குழந்தையின் முதல் முடியை இறைவனுக்கு என்ற பெயரில் மழித்துவிடுவது கூட மேற்சொன்ன நிகழ்வின் தாக்கமே. அதுவே இன்று இறைகாணிக்கை என வழக்கில் மாறிப்போய் விட்டிருக்கிறது.

இப்படிப் பல்வேறு கூறுகளிலும் இத்தொன்மத்தின் எச்சம் சமூகத்தின் கண் ஊடுருவி இருத்தலைக் காணமுடிகிறது.

ஆலகாலத்தை உண்ட சிவபெருமான் ‘நீலகண்டன்’ என்று பெற்ற சிறப்புத் திருப்பெயரை மக்கள் தங்களுக்கும் தங்கள் சந்ததியினருக்கும் சூட்டிக் கொள்கின்றனர்.

கூர்மமாக அவதாரம் செய்த திருமாலின் புகழ் பரவும்படியாக ஆந்திர நாட்டில் கஞ்சம் மாவட்டத்தில் கூர்மம் என்ற பெயரில் ஒரு தலம் உள்ளது. அங்கு எழுந்தருளியுள்ள திருமால் இடுப்பின் கீழ், கூர்மமாகவும் அதற்கு மேல் மனித உருவத் துடனும் நான்கு கைகளுடனும் காட்சியளிக்கின்றார். இதுவன்றி, சிகாகோல் ரோடு இரயில் நிலையத்திலிருந்து எட்டுக் கல் தொலைவில் கூர்மமூர்த்தி சங்கமம் என்கிற கூடுதுறையுள்ளது. திருக்கச்சூர் என்ற ஊரில் விட்ணு கூர்ம ரூபத்தில் சிவனை வழிபடுகிறார். காஞ்சிபுரம் கச்சாபேஸ்வரர் ஆலயத்திலும் கூர்ம விட்ணுவாக எழுந்தருளியுள்ளார். (கச்சபம் என்றால் ஆமை.)

பாற்கடலைக் கடைந்தபோது முதலில் நஞ்சும் பின்பு அமிர்தமும் தோன்றின. நஞ்சை சிவபிரான் ஏற்றுக் கொண்டார். அமிர்தத்தை விட்ணு எடுத்து தேவர் அனைவர்க்கும் பங்கிட்டார்.

சமயக் காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு, சைவ வைணவ சமயங்களின் இணைப்புப் பாலமாக ‘பாற்கடல் கடைதல்’ என்ற நிகழ்வு அமைந்துள்ளது. சைவமும் வைணவமும் பெருமைக்குரிய சமயங்கள் ஆவதற்கு ஏனைய வைதிக சமயங்கள் வழிவிடக் காரணமாக அமைந்தது. ‘இப்பாற்கடல் கடைதல்’ நிகழ்வே ஆகும்.

ஆகவே ஒருமைப்பாட்டிற்கும் இறைநேயத்திற்கும் வித்திட்ட இந்நிகழ்வு பல்வேறு கோணங்களில் நம் பண்பாட்டில் கலந்துள்ள நிலையை இதுவரை கூறியவற்றின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

அமிர்த மதன நாடகம் தெளிவுபடுத்தும் தத்துவ உண்மைகள்

'எப்பொழுதெல்லாம் தருமம் அழிகின்றதோ, அதர்மம் ஓங்கி உலகம் சீர்குலைகிறதோ அப்போ தெல்லாம் சாதுக்களைக் காக்கவும் தீயவர்களை ஒழிக்கவும் அறத்தை நிலைநிறுத்தவும் நான் ஒவ்வொரு யுகத்திலும் என்னையே படைத்துக்கொண்டு உதிக்கிறேன்' என்று கீதையில் கண்ணன் குறிப்பிடுகிறான்.

இவ்விறைக் கோட்பாடே இறைவன் பலத் திட்டமிட்ட வடிவங்களை (அவதாரங்களை) எடுப்பதற்குக் காரண மாகிறது. பாகவதம் திருமால் பதினெட்டு அவதாரங்கள் எடுத்ததாகக் காட்டுகிறது. பொதுவாக, பத்து அவதாரங்களே பேசப்பட்டாலும் இறைவன் பதினெட்டு அவதாரங்கள் அருளிச் செய்தான் என்பதே வைணவ மரபு. அவை முறையே:

கடலில் மூழ்கிப்போன பூமியை மீண்டும் வெளிக் கொணர எடுத்த அவதாரம் வராக அவதாரம் ஆகும்.

உருசி என்ற முனிவருக்குப் புதல்வனாகத் தோன்றி தேவர்களைப் படைத்து அருளினார். இதுவே யக்ஞாவதாரம்.

கர்த்தமர் மகனாகத் தோன்றி, கபிலன் என்ற பெயரோடு தாய்க்குத் தத்துவங்கள் பல விளங்கச் செய்த அவதாரமே கபில அவதாரம்.

யோகத்தின் சிறப்பை உலகு அறிய உணர்த்திய அவதாரமே தாத்ரேய அவதாரம்.

பிரமனுக்கு ஆத்மஞானம் தந்தருளிய அவதாரமே குமாரவதாரம்.

இறைவன் நாராயணன் என்ற பெயரில் அவதாரம் செய்ததே நரநாராயண அவதாரம்.

பிருது என்ற பெயரில் வேனன் என்ற மன்னனுக்கு அருள் பாலித்ததே ப்ருது சக்கரவர்த்தி அவதாரம்.

இறைவன் ரிசபராகப் பிறந்து ஆத்மஞானத்தை யடைந்து, அருள்நேயராக (பரமஹம்சராக) வாழ்ந்து காட்டிய அவதாரமே "ரிஷபயோகின் அவதாரம் என்பர்.

ஹயக்கிரீவர் என்ற பெயரில் நான்குமறையாக உருவெடுத்த அவதாரமே ஹயக்கிரீவு அவதாரம் ஆகும். பத்தாவது அவதாரமாக பிரளயத்தின் காரணமாக அழிய இருந்த நான்கு வேதங்களை மீன் உரு எடுத்துக் காத்தவர் இறைவன். இதுவே 'மத்ஸ்யாவதாரம்' எனப்படுகிறது.

தேவரும் அசுரரும் பாற்கடல் கடையும் காலத்து கடலுள் ஆழும் மந்திர மலையை மீண்டும் நிமிர்த்த எடுத்த அவதாரம் கூர்மாவதாரம்.

இரணியனின் ஆணவம் அடக்க எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரம்.

மாபலியின் கர்வம் அடக்க வாமனன் என்ற பெயரில் தோன்றிய அவதாரமே வாமன அவதாரம்.

ஆயுர்வேதத்தின் சிறப்பை வெளிப்படுத்த எடுத்த அவதாரம்தான் தன்வந்திரி அவதாரம்.

சத்திரியர்தம் இறுமாப்பை அழிக்க எடுத்த அவதாரம் பலராம அவதாரம்.

நீதி, நேர்மை, தருமம் போன்றவற்றை மக்கள் அறிந்து, ஏற்று, வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற நோக்கோடு இறைவன் அருளிச் செய்ததுதான் இராமாவதாரம்.

'சேவையே வாழ்க்கையின் உன்னத கோட்பாடு' என்பதனை வெளிப்படுத்த இறைவன் அருளியதே கிருஷ்ணாவதாரம்.

மனிதர்களுக்கு வேதத்தின் சிறப்பை எடுத்துரைக்க இறைவனால் எடுக்கப்பட்டதுதான் வேத வியாசர் அவதாரம். இவ்வாறாக மேற்கண்ட பதினெட்டு அவதாரங்கள் அமையும்.

பிணி, மூப்பு, மரணம் என்ற மூன்றும் அற்ற இறைவன் அவதாரங்கள் செய்ய வேண்டிய காரணம் அவதாரங்கள் மூலம் மக்கள் சமதரிசன மனப்பான்மை பெற வேண்டும் என்பதுதான்.

மேலும் தீவினை என்பது பொதுவாக எந்த ஒரு மனித மனநிலையையும் கெடுத்துவிடக் கூடியது. இத்தீவினை விரிந்துகொண்டே போனால் நிலையில்லாத தீவினை யாகத்தான் நிகழும். தீவினையைத் தடுத்து நிறுத்துவது இறையைத் தவிர வேறு எந்த சக்திக்கும் இயலாத ஒன்றாகும். ஆகவே தீவினை என்னதான் விரிந்து விரிந்து படர்ந்தாலும் அது தர்மத்தை அழித்துவிட முடியாது. எனவே மக்கள் நீதிமயமான நெடிய தரும வழியில் செல்ல வேண்டும் என்பதே இறைவன் நோக்கம். அதற்கு இடையூறு செய்யும் தீய சக்திகள் இறைவனால் அழிவுறுகின்றன; தூய சக்திகள் இடர்நீங்கி இறை அன்பால் முன்னேறுகின்றன; சினமும் பொறாமையும் பகையும் மேலோங்கி அன்பையும் அருளையும் கெடுக்கும் காலத்தில் இறைவனே நீதி பரிபாலனம் செய்து உயிர்களை உய்விக்கிறான் போன்ற தத்துவத்தை உணர்த்துவதே அவதாரங்கள்.

அற்பமான மீன், ஆமை, பன்றி போன்ற விலங்கினங் களாக இறைவன் உருக்கொள்ளக் காரணம் அற்பத்திலும் ஒரு நன்மையுண்டு என்பதை விளக்கவே. இதைத்தான் வேதம் இறைவன் பிறவியில்லாதவனாக, பரிணாமமில்லாத வனாக, அனைத்து பூதங்களுக்கும் ஈசுவரனாக இருந்தும் தன்னுடைய நிலையிலிருந்து இறைவன் மாறாமல் ஞானத்தின் வழியாகத் தோன்றிக் கொண்டே இருக்கிறான் எனக் கூறும்.

பொதுநிலையில் அவதாரங்களின் காரணச் சிறப்புகள் மேற்சொன்னவாறு அமைந்திருந்த போதிலும் அமிர்தமதன நாடகத்தில் கூர்மாவதாரம், மோகினி அவதாரம் வாமன அவதாரம் என்ற மூன்று அவதாரங்களின் கூறுகள் பின்னிப் பிணைந்து செல்வதைக் காணலாம்.

பொதுவாக மீனைவிட ஆமை சிறிது உயர் இனமாகக் கருதப்படுகிறது. மீன் நீரில் மட்டும் வாழும் தகைமை பெற்றது. ஆனால் ஆமையானது தண்ணீரை உறைவிட

மாகக் கொண்டாலும் தரையிலும் வந்து கிடக்கும் பண்பினையுடையது. மனித இனமும் இதுபோலத்தான். இல்லறக் கடலில் மூழ்கிக் கிடந்த போதும் சற்று நேரமாவது அதனை மறந்து இறை சிந்தனையிலும், பேரின்பத்தை அடைவதற்கான நெறி முறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது இயல்பு. இஃது ஆமையானது நீரினை விட்டு நிலத்தில் வந்து கிடக்கும் தன்மையை ஒத்தது என வைணவ சம்பிரதாயங்கள் கூறும்.

தவளை, பாம்பு, முதலை முதலிய எத்தனையோ உயிரினங்கள் நீரிலும் நிலத்திலும் வாழும் தகைமையுடைய போது, ஆமையை மட்டும் வலிந்து கூறக் காரணம், புற அபாயங்கள் ஏற்படும்போது ஆமையைத் தவிர ஏனையவை அஞ்சி ஓடும். ஆனால் ஆமை தன் அவயவங்களை உள் இழுத்து தனது கடினமான ஓட்டுக்கு உள்ளே பாதுகாப்பு செய்து கொள்ளும்.

இரண்டாவதாக ஏனைய விலங்குகள் துரித கதியில் இயங்கி, துயரங்களில் போய் சிக்கிக் கொள்ளும். ஆமையானது மிகமிக மெதுவாக தன் அடிகளை அளந்து வைத்து நடக்கும்போது அத்தனை எளிமையில் துன்பச் சூழலில் தன்னை ஆட்படுத்திக் கொள்வதில்லை. அவையடக்கமே இதற்குக் காரணம்.

இந்த உண்மையைக் கருத்தில் கொண்டுதான் வள்ளுவர் பெருந்தகை "ஐந்தடக்கல் ஆற்றின்' ஏழு பிறப்பிற்கும் நன்மை பயக்கும்' என்பதனை

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து - குறள் - 126 '

இப்பாடல் மூலம் தெளிவுபடுத்துவதைக் காணலாம். காஞ்சிப் பெரியவர் இதைப்பற்றிக் கூறும்போது, "வருகின்ற அபாயங்கள் கருதி ஆமை தனது கடினமான முதுகுபுறத்து ஓட்டினைப் பயன்படுத்தி தன்னைக் காத்துக் கொள்வது போல மனிதனும் தன் சிந்தையைப் பயன்படுத்தி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஆமை எண்ணியபோது தன்னுடைய அவயங்களைச் சுருக்கிக் கொள்வது போன்று நிலைபேறு உடையன. நிலைபேறு அற்றன (சத்திய

அசத்தியங்கள்) ஆகியனவற்றைப் பற்றிச் சிந்தித்து அல்லல்படும் பஞ்சேந்திரியங்களையும் கர்மேந்திரியங் களையும் அறிவினைக் கொண்டு இல்லற உறவுகளில் இருந்து விலகக் கற்றுக்கொள்ள வேண்டும்.'' உறுதியான மனம், கர்வமற்ற சிந்தனை, இறைநோக்கு, இறைநேயம் இவையே கூர்மாவதாரம் வெளிப்படுத்துவது. இந்திரனின் பொறுப்பின்மையே துர்வாசரின் சாபத்திற்கு வழிவகுத்தது. பின்னர் அவன் கர்வம் நீங்கி இறைநேயத்துடன் இழந்த செல்வத்தைப் பெற்றான் என்பது இவ்வவதாரத்தின் தத்துவம்'' எனக் கூறுகிறார்.

மேலும் பாற்கடல் கடையும்போது மந்திரமலை மூழ்கும்போது எந்த ஒரு பயனையும் கருதாது திருமால் கூர்மமாக வடிவு எடுத்து அதனைத் தடுத்து நிறுத்திய செயல் அடியவர்க்கு அவர் தொண்டரான சிறப்பினைக் காட்டும்.

இறைநேயனாக விரும்பும் ஒருவன் தொண்டனுக்குத் தொண்டனாக தன்னை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தியே இக்கூர்ம அவதாரத்தை இறைவன் செய்தருளினார் என்பதே ஈண்டு எண்ணத்தக்கது.

அவயங்கள் எனப்படும் புலனடக்கம், தெளிவான சிந்தனை, மனஒருமைப்பாடு ஆகியவற்றை விளக்கும் ஆமையைப் போல தொண்டனாக விரும்புபவன் தன்னைப் பயிற்சிப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை விளக்குவதே கூர்மவாதரத்தின் சிறப்பு.

அமிர்த மதன நாடகத்தில் இரண்டாவதாகப் போற்றப் படும் அவதாரம் மோகினி அவதாரம். அதன் தத்துவச் சிறப்பினை ஈண்டுக் காண்போம்.

பாற்கடல் கடைந்து அமிர்தம் கிடைக்கப் பெற்ற நிலையில் அவ்வமிர்த கலசத்தை அசுரர்கள் தேவர்களிடம் இருந்து வலிந்து கைப்பற்றிச் செல்ல, செய்வதறியாது திகைத்து நின்றனர் தேவர்கள். இறைவன் திருமால் கண்டோரை மயக்கும் திறம் கொண்ட அழகிய பெண் உருவத்தினை எடுத்தார். அவ்வழகின் மொத்த உருவத் தினைக் கண்டு தேவர்களும் அசுரர்களும் மனம் பேதலித்தனர்.

''கருதிய ஒன்றைப் பெறுவதிலே முழுமையான கவனம் செலுத்த வேண்டும்' என்று இறைவன்திருமால் தேவர்களுக்கு முன்னரே கூறிய அறிவுரைப்படி நில்லாது சலனத்திற்குச் சற்று ஆட்பட்டாலும், மீண்டும் சிந்தை தெளிந்து மோகினி வடிவத்தில் கருத்து செலுத்தாமல் இறைவனையே துதித்து நின்றனர்.

காமத்திற்கும் சிற்றின்பத்திற்கும் தன் மனத்தில் முதன்மை தந்த காரணத்தால் அசுரர்கள் சிந்தை தடுமாறினர். ஒருவருக்கு ஒருவர் காமவயப்பட்டு தங்களுக்குள்ளேயே சமர் செய்யத் தொடங்கினர். அவர்களின் அழிவு அவர்களின் மன எண்ணத்தினாலேயே வரையறுக்கப்பட்டது. ஆனால் அசுரகுலத் தோன்றலான பிரகலாதனுக்கு மட்டும் மோகினி வடிவம் அருள் வடிவமாகத் தோன்றியது. இறைவர் எல்லாம் தங்கி நிற்கும் நடமாடும் தெய்வமான காமதேனுவாகப் பிரகலாதன் கண்களுக்குக் காட்சியளித்தது. அதனைக் கூறும்போது 'மோகினியின் பாதங்கள் பிருத்வீ (நிலமாகவும்) கணுக்கால் த்ருதிதேவி, முழங்கால் சாந்திதேவி, தொடைகளில் ஒளி மிகுந்த காந்தி, அல்குல்தனில் ஆதி இலக்குமி, இடையில் சுவாகாதேவி, பின்புறத்தில் பார்வதி தேவி, முகத்தில் அமிர்தம், கொங்கைகளில் ரதி, பிரிதி கழுத்தில் வாணி கரங்களில் ஜயா, விஜயா, புஜங்களில் சோபை, பிரபை, மார்பில் இலக்குமி, முகவாய்க்கட்டை (தாடை)யில் அருந்ததி, நாக்கில் சரஸ்வதி, கன்னங்களில் பூரணச் சந்திரன் ஒளியாகிய நிலா, நெற்றியில் பத்ரகாளி, கண்களில் நித்திரா தேவி என்ற உறக்கத்தின் கடவுள், கார்குழலில் இராத்திரி என்ற இரவு, காதுகளில் திக்தேவதை (திசை தெய்வங்கள்) மூக்கில் இந்திராணி அங்க சந்திகளில் நதிகள், பக்கங்களில் பர்வதங்கள், (மலைகள்) என்ற அமைப்பில் இறைவர்களின் திருவுருவைக் கண்டு இன்புற்றதாகப் புராணச் செய்தி உண்டு.

மாயாவுரு எனக் கூறப்படும் இம்மோகினி வடிவத்தில் அசுர குலத்தவன் என்றபோதும் இறைவனின் பல்வேறு வடிவங்களைக் கண்டு இன்புறும் சிறப்பினைப் பெற்றவன் பிரகலாதன். தன் மனத்தை ஒருமுகப்படுத்தி இறைநேயத் தோடு கருத்துடன் வழிபட்டதால்தான் ஒரு பிரம்ம தினம் ஆயுள் இறைவனால் அருளப் பெற்றான். இத்தனைக்கும் இவன் அமிர்தம் உண்ணவில்லை. ஆனால் அமிர்தம் உண்ட தேவர்கள் கூட இத்தகைய சிறப்பினைப் பெறவில்லை.

ஆகவே புலனடக்கம் என்பது வரையாது தருகின்ற இறைவனின் பூரண அன்பைப் பெற்றுத் தருவதோடு சிற்றின்பத்தை வெல்லும் ஆற்றலையும் தருகிறது. கருத்து இறைவன்பால் சென்றுவிட்டால் வேறு இவ்வுலகமே தெரியாது. இத்தகைய பேறு கிட்டுமாயின் உம்பர் உலகத்து முனிவர்கள் போல மரணபயம் அற்று நற்சிந்தனையுடன் இயங்கலாம்.

ஆகவே கூர்ம, மோகினி அவதாரங்கள் நமக்குத் தெரிவிக்கும் தத்துவார்த்த உண்மைகள் வருமாறு:

மனத்தை ஒருமுகப்படுத்துவது. மனதைத் திடப் படுத்துவது; அதன் பயனாக இறைவனையே சிந்திப்பது; மனத்தை உலகியல் இன்பங்களில் இருந்து விடுவித்து இறைவனோடு இரண்டறக் கலப்பது; பேரின்பமான இறைவன் திருவடியை அடைதற்குத் தொண்டுள்ளமே அடிப்படையாக அமைவது; அனைத்தும் இறைவனின் இயக்கத்தாலேயே நடைபெறுகின்றன; செய்யும் செயல் அனைத்துக்கும் அதனால் ஏற்படும் நன்மை தீமைக்கும் இறைவனே பொறுப்பு; பயனைக் கருதாது செய்யும் சேவையே இறைவனின் மனத்தைக் குளிர்விக்கும் போன்ற உண்மைகள் உய்த்துணரப் படுகின்றன.

மேலும் கூர்மம் என்ற ஆமை, மாயையான அருவுருவம் போன்ற வடிவுகளை இறைவன் எடுத்ததால் மனித குலத்தின் நன்மை கருதி அந்தச் சிறுமையையும் இறைவன் ஏற்றுக் கொள்கிறார் என்பதே அமிர்த மதன நாடகம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

மரணம் என்ற தவிர்க்க முடியாத, மருந்தற்ற நோய்க்கு அமிர்தமே மருந்தாக அமைகிறது; தேவர்களும் அசுரர்களும் நம் உடம்பில் நல்லன தீயன என்ற பண்புகளின் குறியீடே. நல்லன தீயன என்ற பண்புகள் அன்பு எனப்படும். அமிர்தத்தை அடைய முயல்கின்றன. நம் உடம்பே ஒரு பெரிய சமுத்திரமாகும். பாற்கடலில் எப்படி ஆலகாலம், கற்பகத்தரு, காமதேனு போன்ற நற்பொருட்களும் தீய பொருளான நஞ்சும் அமையப் பெற்றுள்ளனவோ அதேபோன்று உலகியல் அவாவின் காரணமாக நம் உடம்பிலும் நற்பொருளும் தீயபொருளும் இடம் பெற்றுள்ளன.

மந்திரமலை, வாசுகி போன்றவற்றின் உதவியுடன் பாற்கடலைக் கடைந்தாலும் இறையருள் என்ற மூலம் இல்லையேல் ஆலகாலம் என்ற விடமே அம்முயற்சியில் நமக்குக் கிடைக்கும் பொருளாக அமையும். அதோடு மந்திரமலை, வாசுகி போன்றனவும் பயனற்றுப் போய்விடும். பொதுவாக மந்தரமலை என்பது படித்துப் பயன்படுத்த வேண்டிய சாத்திரக் கருத்துக்களுக்கான குறியீடே.

வாசுகி என்பது நம்முடைய அறிவைச் சுட்டும். அறிவானது எப்படிச் சுழன்று சுழன்று நன்மை தீமைகளைக் காண்கிறதோ அதேபோன்றுதான் மந்திரமலை என்னும் புத்தி வாசுகியின் சுழற்சிக்கேற்ப சுழல்கின்றது. உலகியல் அநுபவங்களை எல்லாம் பெற்றுவிட வேண்டும். சிற்றின்பங்களை எல்லாம் கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து விட வேண்டும் என்ற அவாவின் குறியீடே வாசுகியை இயக்கப் பயன்படும் சக்தி.

தேவர்களின் அசுரர்களின் குறிக்கோள் அமிர்தம் பெறுவதுதான் என்றபோதும் அது பொதுவான குறிக்கோளே. தேவர்கள் பலம் பெற்று அசுரர்களை அழிக்க வேண்டும். அசுரர்கள் பலம் பெற்றுத் தேவர்களை வீழ்த்த வேண்டும் என்பதே அவ்விருவரின் மனத்துக்கண் இருந்த பெரிய குறிக்கோள்.

ஆகவே, தான் எண்ணிய எண்ணம் நல்லெண்ணம் என்ற அடிப்படையில் அமையாததாலேயே, தேவர்களும் அசுரர்களும் இறையின் துணையின்றி அமிர்தம் அடையக் கூடவில்லை.

எண்ணும் எண்ணம் அதற்கு உரிய செயல், அணுகுமுறை இவை அனைத்தும் நல்லறத்தின்பாற்பட்டதாக அமையுமே ஆனால் இறைவனே எண்ணியதை ஈடு செய்து வைப்பான் எனக் காட்டும் குறியீடே இறைவன் திருமால் எடுத்த கூர்ம அவதாரம் மற்றும் இறைவன் சிவபிரான் நஞ்சுண்ட வரலாறு.

மாசு நீங்கிய மனச்சுத்தமே ஒருவருக்குப் பேரின்பதைக் காட்டி, அதனில் நீங்காச் சுகத்தைப் பெற்றுத் திகழ வழிகாட்டும் என்பதுதான் குறியீட்டு மூலமாக அமிர்த மதன நாடகம் தெளிவு படுத்தும் தத்துவ உண்மைகள்.

அமிர்த மதன நாடகமும் -மோகினி அவதாரமும்

ஆற்றங்கரைகளில் வாழ்க்கையைத் தொடங்கிய மனித சமூகத்திற்கும் தூயவாழ்க்கை வாழ்வதற்கான நெறிமுறை களையும், புலனடக்கத்திற்கு உரிய சரியான வழிமுறை களையும், இறைநேயம், ஒத்த அன்பு, சகிப்புத்தன்மை போன்ற பல்வேறு குணநலன்களைத் தந்து நல்ல பாதையினைக் காட்டுவதாக தோன்றிய சமயங்கள் ஒரு பக்கம் பெருத்த அழிவினையே காட்டின.

தமிழகத்தின் வரலாற்றை ஊன்றிப் பார்த்தோமானால் சமணம், பௌத்தம் சங்க காலம், சங்கம் மருவிய காலத்தில் வேர் ஊன்றியபோது ஒன்றுக்கொன்று நேர்பகை கொண்டே சமூகத்தில் செல்வாக்கைப் பெற முயன்றன. அன்பையும் நிலையாமையையும் தங்கள் தங்கள் கோட்பாடுகளில் நூல் இழைகளாக வடித்துக் கொண்ட மதங்கள் அவற்றை மறந்து ஒன்றையொன்று அழித்துக் கொள்வதிலேயே அதிகம் ஆர்வம் செலுத்தின.

பக்தி இயக்க காலத்தில் தமிழகத்தில் நான்கு மதங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. இதன் காரணமாக தமிழகத்தில் நான்கு முனைப் போரே நடந்தன எனலாம். சமணத்தைச் சைவம் கண்டித்தது; வைணவம் சைவத்தைப் கேலி பேசியது; பௌத்தம் பிற மதங்களைப் போலி கோட்பாடுகள் கொண்ட கூலங்கள் என விமர்சித்தது; சமணம் தன்னையே தலைச்சிறந்த மதமாக எண்ணிக் கொண்டது.

ஞானசம்பந்தர் தன்னுடைய தேவாரப்பாடல்களில் சமணரை மிண்டர், முண்டர் எனக் கடுமையாக சாடுவதற்கென்றே தன்னுடைய ஒவ்வொரு பதிகத்திலும் ஒரு பாடலை ஒதுக்கிக் கொண்டார். சமணம் விட்டு சைவம் தழுவிய நாவுக்கரசரை எந்த அளவிற்குத் துன்பங்கள் தந்து

துயரப்படுத்த இயலுமோ அந்த அளவுக்குச் சமணர்கள் மாந்திரிக முறைகளைக் கொண்டும், மன்னனின் ஆதரவு கொண்டும் துன்பப்படுத்தினார்கள். நாவுக்கரசரை சமண சமயத்தில் இருந்து சைவ சமயத்திற்குக் கொணர அவருடைய தமக்கை மங்கையர்க்கரசியாரே சிவபெருமானை வேண்ட சிவனார் சூலை நோயை நாவுக்கரசர்க்கு அளித்து அவதியுறச் செய்து சைவத்திற்குக் கொணர்ந்தார் என்பது நாவுக்கரசர் வரலாறு கொண்டு அறிய முடிகிறது. பத்தாயிரம் சமணர்கள் ஞானசம்பந்தரால் கழுவேற்றிக் கொல்லப்பட்டனர் என்ற வரலாறும் உண்டு.

காலப்போக்கில் சமணமும் பௌத்தம் தங்கள் செல்வாக்கை சைவ, வைணவ சமயங்களுக்கு முன்னே இழந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்கள் தங்கள் இசை ஞானத்தால் மக்களை ஈர்த்தனர். மூவர் தேவாரம், நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகிய பக்திப் பனுவல்கள் மக்களால் புனித நூல்களாக போற்றப்பட்டன.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் சைவ சமயம், பொற்காலம் போன்ற உயர்நிலையினை எய்தினாலும், கபாலிகம், காளாமுகம், பைரவம், மகாவிரதம் போன்ற மதங்கள் சைவத்தில் இருந்து கோட்பாட்டு வேறுபாடுகளால் தனித்தனி அமைப்புகளா உருவாகின.

உடல் முழுவதும் நீறுபூசி தலையை மழித்துக் கொண்டோ அல்லது குடுமி வைத்துக் கொண்டோ லிங்க வழிபாடு செய்பவர் பாசுபதர் எனப்பட்டனர். காஞ்சி, திருவொற்றியூர், மயிலை ஆகிய இடங்களில் இவர்கள் அதிகமாக இருந்திருக்கின்றனர்.

வைணவ சமயம் இதேபோன்ற ஆழ்வார்களின் முயற்சியால் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றது. மடங்கள் பல சைவ சமயத்தைச் சார்ந்தும், வைணவ சமயத்தைச் சார்ந்தும் தோன்றின. மறைநெறி, பிரம்மசூத்திரம், பகவத் கீதை ஆகிய நூல்களின் மெய்க் கருத்துக்களை இணைத்து வைணவ சமயத்திற்குத் தனித்தன்மை வாய்ந்த விசிட்டாத்துவைதம் என்னும் கொள்கையை இராமானுஜர் அமைத்துக் கொண்டு உபதேசிக்கலானார்.

விசிட்டாத்துவைதம் என்பது மெய்மம், இன்பம், நான்கு உறுதிப்பொருள் (புருடோத்தம்) என்ற நிலையில் உணரலாம் என டாக்டர் ஆ.கிருஷ்ணன் தனது (தமிழர் பண்பாட்டியல் தொகுதி-2 ப.26 மணிவாசகர் பதிப்பகம் சென்னை-1994) என்ற நூலில் கூறுவது ஈண்டு எண்ணத் தக்கது. விசிட்டாத்துவைதம், சேதனம், அசேதனம், ஈசுவரன் என்ற மூன்று உறுதிப் பொருள்களை ஏற்கும். அவற்றுள் சேதனம் என்பது உயிர்களுடைய அறிவின் தொகுதியாகும். அசேதனம் என்பது உயிரற்ற பொருள் களின் தொகுப்பாகும். ஈசுவரன் என்பது திருமாலைக் குறிக்கும். இம்மூன்றும் பிரிக்க முடியாதபடி இணைந்தே யிருக்கும். இப்படி யெல்லாம் மிக ஆழமாக கருத்துச் செறிவாக இருந்தாலும் பரபக்தி என்ற சரணாகதி தத்துவமே மக்களை வைணவத்தின் பக்கம் திரும்பச் செய்தது.

இதேகால கட்டத்தில்தான் சங்கரர் தொடங்கிய அத்வைதம் என்ற தத்துவ நெறியானது இவ்வுலகம் மாயத்தன்மையை உடையது. உயிர் என்றும் கடவுள் என்றும் தனித்தனியே இரு நிலைகள் கிடையாது. மனம் என்ற ஒன்று உயிர் என்ற ஒன்றைப் பற்றுவது அல்ல. ஏனெனில் உயிர் என்ற ஒன்று இல்லாத காரணத்தால் பிரமம் என்பதே இறையாகின்றது.

சைவ சமயத்தில் 'மாயை' என்ற கோட்பாடு மனத்தின் பாற்படுவதாக உள்ளது. உயிரை மும்மலங்கள் என்ற மாயை கடைத்தேற விடுவதில்லை. சைவ சமயத்தில் சிவன் ஐந்து தொழில்களைச் செய்வதாகக் கூறுகிறார்கள். படைத்தல், காத்தல், அருல்ள், மறைத்தல் மற்றும் அழித்தல் என்பவையே அவை.

வைணவ சமயம் ஆனது 'மாயை' என்பதனை வலிந்து கூறாவிட்டாலும் அருளால் மறைபொருளாகக் கூறிவரு வதைக் காணலாம்.

இராமானுஜர் வைணவ சமயத்தில் புதிய கொள்கை ஒன்றை வகுத்தார். பரபக்தி என்பதே அக்கோட்பாடு. இதன்படி செய்யும் காரியங்கள் அத்தனைக்குமே இறைவன் பொறுப்பாகிறான். அவனைக் கருதி செய்யும் காரியத்தில்

'மாயை' என்ற வாதத்திற்கு இடமே இல்லை. இறைவனை பக்கபலமாகக் கொண்டவனுக்கு மோட்சம் உறுதி. இறைவன் முன், சாதி வழக்குகள் என்பதற்கு இடமேயில்லை. இராமானுசர் காலத்திற்குப் பின்னர் தத்துவத்தில் இரண்டு பிரிவுகள் தோன்றின. அவை வடகலை, தென்கலை என்பன.

இறைவன் ஆசான் போன்றவன். உயிர்கள் மாணவர்களைப் போன்றோர். மாணவர் ஆசிரியரை அணுகி அஞ்ஞானம் அகற்றிக் கொண்டு அவர் காட்டிய நல்வழியில் பேரின்பத்தை உணருவதுபோல வைணவர்கள் இறைவனைத் தேடிச் சென்று முக்தி அடைய வேண்டும் என்பர். இதற்கு 'மர்க்கட சாலம்' என்று பெயர் சூட்டினர். அஃதாவது குரங்கு தன் குட்டியைத் தானே அணைத்துக் கொள்வதில்லை. குட்டியே தாயைச் சென்று அணைத்துக் கொள்ளும் என்ற முறையில் உயிரானது இறைவனைத் தேடிச் சென்று அடைய வேண்டும் என வற்புறுத்தும் வாதமே வடகலை எனப்பட்டது. இரமானுஜரை மூலவராகக் கொண்டு எழுந்த இச்சுற்றத்தில் முப்பத்தாராயிரம் படியியற்றிய திருக்குருகைப் பிள்ளான், எங்கள் ஆழ்வான், நடாதூர் அம்மாள் மற்றும் வேதாந்த தேசிகர் போன்ற சான்றோர்கள் அமைவர்.

இறைவன் இறங்கி வந்து உயிர்களிடம் உள்ள மலங்களைப் போக்கி அன்னையைப் போல அருள்பாலித்து ஆட்கொள்வார் என்பது தென்கலை. இவர்கள் பூனை யானது எப்படித் தன் குட்டிகளை இடம் பெயரும் போதெல்லாம் வாயினாற் கவ்வி எடுத்துச் சென்று பாதுகாப்புத் தருகின்றதோ அதேபோன்று இறைவன் உயிர்களை உடன் வந்து இருந்து அவற்றின் மலம் அகற்றி அருள்பாலித்துப் பேரின்பம் நல்குகிறான் என்ற கொள்கையைக் கூறினர். இதற்குப் பூனை வாதம் அல்லது 'மார்ச் சாலம்' என்று பெயர். இக்கொள்கையில் பராசர பட்டர், எம்பார், நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை மற்றும் தென்கலைக்கே சிறப்புத் தந்த மணவாள மாமுனிகள் போன்றோர் இச்சுற்றத்தினர் ஆவர். இவர்களும் இராமானுஜரை மூலவராகப் பூசிப்பவர்களே.

இவ்விரு சுற்றத்தாரும் பரபக்தியை மறுக்கவில்லை. வடகலை காஞ்சிபுரத்தை மையமாகக் கொண்டு வேதாந்த தேசிகரின் தலைமையில், தெற்கே தென்பாண்டி நாடு வரை செல்வாக்கைப் பெற்றது. தென்கலை பெரிய கோயிலான திருவரங்கத்தினை மையமாகக் கொண்டு தென்பாண்டி நாட்டில் வில்லிப்புத்தூர், ஸ்ரீரங்கம், சுசீந்திரம், திருவனந்தபுரம் எனப் பல ஊர்களில் பெருத்த செல்வாக்கினைப் பெற்றது.

பொதுவாகத் தென்கலை மரபுடையோர் நான்கு வேதங்களை உயர்வாகக் கருதிய போதும் தமிழ் மொழியைத் தங்கள் உயிர்போல் கருதினர். தமிழில் எழுந்த திவ்விய பிரபந்தத்தைத் 'தமிழ் வேதம்' என்றே சிறப்பித்தனர். திருமாலைத் தங்களின் தன்னிகர் இல்லா நாயகனாகவே கருதினர். 'மாயை' என்பது திருமாலின் கட்டுக்கு அடங்கியதாகவே இவர்கள் கருதினர். ஆகவே 'மாயவன்' என்ற பெயரால் திருமாலைப் போற்றினர். சிவனை எந்த வகையிலும் திருமாலுக்கு இணையாகப் பேசுவதை இவர்கள் விரும்புவதில்லை. திருமாலைக் காக்கும் தெய்வமாகவும் சிவனை வரம் அளிக்கும் தெய்வமாகவே கருதினர். எப்போதெல்லாம் சிவனுக்குத் துன்பம் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் திருமாலே முன்னின்று துன்பம் களைவார் என்ற கோட்பாட்டினை இவர்கள் நம்பினர்.

வடகலையார் பெரும்பாலும் சமஸ்கிருதப் பிரியர்கள். வேத உபநிடதங்கள் கூறுவனவற்றை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் ஆகவேதான் மோகினி அவதாரத்தின் காரணமாக எழுந்த 'ஹரிஹர புத்திர நிகழ்வை' ஆதரித்தும் இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

ஆனால், தமிழில் காணப்படும் பள்ளு, இலக்கியம், ஏசல், அம்மானை போன்ற இலக்கியங்களை உற்று நோக்கும்போது தென்கலையாரின் தாக்கமே அதிகமாகத் தமிழகத்தில், இருக்கலாம் எனத் தோன்றுகிறது. பாமர மக்களிடையே சைவ வைணவ ஒற்றுமை என்பது அத்தனை எளிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கூறிவிட முடியாது.

மோகினி அவதாரம் பற்றிச் சிந்திக்கும்போது திருமால் இரண்டுமுறை இவ்வதாரத்தை எடுத்துள்ளார். பதுமாசுரன் அழிவிற்காகவும், தேவர்கள் வேண்டிய அமிர்தத்தை அவர்களுக்கு நல்கும் பொருட்டும் என்பதனை யாவரும் அறிவர்.

பதுமாசுரன் கேட்ட வரத்தின் பின் விளைவை அறியாத சிவபிரான் வரத்தை நல்கிவிட, அவ்வசுரனோ வரம் தந்த இறைவனையே சோதிக்க விரும்புகிறான். செய்வது அறியாது திகைத்த சிவன் திருமாலின் உதவியினை நாடுகிறார். திருமாலும் மோகினி அவதாரம் எடுத்துப் பதுமாசுரன் முன் தோன்றி அவனைத் தன் அழகினால் ஈர்த்து, அவன் கையினாலேயே அவன் தலையைத் தொடவைத்து அழிக்கிறார். அவ்வமயம் சிவனார் திருமால் மேற்கொண்டுள்ள மோகினி வடிவில் மோகம் கொண்டு மோகினியுடன் இணைந்து ஐயப்பன் தோன்றியதாக ஒரு வரலாறு உண்டு. இவ்வரலாறு காரணமாகவே அரிகரபுத்திர வழிபாடு தோன்றியதா? அல்லது பாற்கடல் கடைந்தபோது இறுதியில் எடுத்த மோகினி அவதாரத்தின் வாயிலாகத் அரிகரபுத்திர வழிபாடு தோன்றியதா? என்பது முடிந்த முடிபாக வரையறுக்க முடியாதபடியே விளங்குகிறது.

எது எவ்வாறாயினும் 'மாயை' என்ற கொள்கையின் வாயிலாக திருமால் சிவபெருமானுக்கு உபதேசம் நல்கினார் என்பது வெளிப்படை. 'ஓம்' என்ற பிரணவ மந்திரம் முருகப் பெருமானால் சிவபிரானுக்கு உணர்த்தப்பட்டது போல 'மாயை' விளக்கம் திருமாலினால் சிவனுக்கு உணர்த்தப் பட்டது எனக் கொள்ளலாம்.

அவ்வகையில் அமிர்த மதன நாடகம் திருமாலின் சிறப்புக் குணங்களை விளக்கும் தன்மையாலும், நஞ்சுண்டு சிவன் அமிர்தம் பிறக்க வழி வகுத்தமையாலும் குன்று குணிலாமல் கூர்ம அவதாரம் (ஆமை வடிவம்) எடுத்துத் திருமால் குன்றை நிலைநிறுத்தி அமிர்தம் தங்குதடையின்றி வெளிக்கொணரத் துணை நின்றார் என்றமையாலும்; இவ்விரு கடவுளர்களும் தொண்டர்தம் நெஞ்சில் என்றும் நிலைபெற்று நின்று, சைவ வைணவ சமயங்களின் சிறப்புக் களை, கோட்பாடுகளை மோகினி அவதாரம் வாயிலாக விளக்குகிறது எனலாம்.

அரவமும் மக்கள் நம்பிக்கையும்

மண்ணில் பிறந்த மனித சமூகத்தின் உளவியல் கோட்பாட்டை ஆய்வு செய்த உளவியலார் மனிதன் பிறக்கும்போதே பாலுணர்வும் மரணபயமும் கொண்டவனா கவே பிறக்கிறான் எனக் கூறுகின்றனர். மரண பயத்தைக் தவிர்ப்பதற்கும் தன்னைப் புறச் சூழலில் இருந்து காத்துக் கொள்வதற்கும் இறைவழிபாட்டைத் தோற்றுவித்தான் என்பது இதன்கண் தெளிவாகிறது.

விரிந்துபட்ட ஆகாசம்; பறந்துபட்ட நீர்ப்பரப்புதனைக் கொண்ட கடல்; விண்ணைத் தொடும் மலைகள்; வானுயர்ந்த அடர்ந்த மரங்கள்; மண்ணைப் பிளந்து செல்லும் நெடிய பள்ளத்தாக்குகளின் மௌனத் தோற்றம்; அச்சமூட்டும் இடி முழக்கம்; பாய்ந்து பரவும் தீ; ஆர்ப்பரித்து வரும் ஆற்று வெள்ளம்; கண்ணைப் பறிக்கும் மின்னலின் ஒளி; சுழன்று வீசும் சுழற்காற்று; அடைமழை போன்ற இயற்கைக் கூறுகள் எல்லாம் மனிதனுக்கு உள்ளத்தில் ஒருவிதமான அச்சத்தைப் படர விட்டிருக்க வேண்டும். தன் வலிமை யாலோ, ஆயுதத்தின் வலிமையோலோ, வென்றுவிட முடியாத இவ்வியற்கையைக் கண்டும் இவ்வியற்கையை அரணாகக் கொண்டு வாழும் வன விலங்குகள், கொடிய விடங் கொண்ட அரவங்கள் போன்றவற்றைக் கண்டும் அச்சத்தின் காரணமாக மனிதன் வழிபாட்டுப் பொருளாக ஏற்றுக் கொண்டிருக்கிறான்.

வேதகாலத்திற்கு முன்னிருந்தே இவ்வகையான வழிபாடுகள் ஆதிமனிதனிடம் காணப்பட்டன என்பது அறிஞர்கள் கூற்று. அவற்றில் குறிப்பாக 'நாகம்' என்ற அரவு வழிபாடு தொன்மை மிக்கதாக விளங்குகிறது.

நம்முடைய புராண இதிகாசங்களைப் பார்க்கும்போது இறைவர்களுடன் மிகவும் தொடர்பு உடையதாக அரவு வழிபாடு விளங்குவது தெரியவரும்.

அரவத்தை அழகுடைய அணிகலனாகக் கடவுளர் பலர் அணிந்துள்ளனர். சிவபெருமான் தன் கழுத்தில் நாகத்தை ஆரமாகவும், விநாயகன் இடுப்பில் அணியாகவும், தமிழ்க் கடவுள் முருகப்பெருமான் தனது பாதத்திற்கு அருகேயும் வைணவ சமயத்தின் முழுமுதற் கடவுளான விஷ்ணு ஆதிசேடன் என்ற அரவத்தைத் தனது படுக்கையாகவும் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது.

பெண்தெய்வ வழிபாட்டில் நாகமானது மக்களிடத்தில் நெருக்கத்தைப் பெற்றுள்ளது. சமயபுரத்து மாரி, திருவேற்காடு கருமாரி ஆகியோர் அரவத்தைத் தமது தலையில் சூடியுள்ள காட்சியினைக் காணலாம். இன்னும் சில இடங்களில் நாகம் வசிக்கும் புற்று முக்கிய வழிபாட்டுப் பொருளாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. திண்டிவனத்திற்கு அருகே மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயம், சென்னையை அடுத்த பெரியபாளையம் என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள ரேணுகாதேவி என்னும் பெரிய பாளையத்தம்மன் ஆலயம் ஆகியவற்றில் புற்றினைப் பீடமாகக் கொண்டு கடவுளர் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். அதேபோன்று பாண்டி நாட்டில் காளையார் கோயில் என்ற சிவதலத்திற்கு அருகே திருவொற்றியூர் என்ற தலத்தில் புற்றினைப் பீடமாகக் கொண்டு அன்னை பார்வதி 'புற்றிடங் கொண்டாள்' என்ற பெயரில் பாகம் பிரியாளாக விளங்குவதைக் காணலாம்.

பெரும்பாலான சிவன் கோயில்களில் சிவலிங்க வடிவமாக எழுந்தருளியுள்ள சிவபெருமான் நாகப் படத்தின் நிழலில் அமர்ந்து இருப்பது போல சிவலிங்கத்தின் பீடத்தைச் சுற்றி நாகம் வளைய வந்திருக்கும் அமைப்பைக் காணலாம். பஞ்சபூத தலங்களில் காற்றுத் தலமாக விளங்கும் காளத்தியிலும், பிருதிவித் தலமாக விளங்கும் திருஆரூர் தனிலும் சென்னை திருவான்மியூர் மருதீசர் ஆலயத்திலும் தென்பாண்டி நாட்டில் சங்கரன் கோயிலிலும் சேது நாட்டில் நையினார் கோயிலிலும் மதுரை சுந்தரேசர் ஆலயத்திலும் இறைவன் நாகப்படத்தின் நிழலில் காட்சி அளிப்பது காணத்தக்கது.

கோள்களில் சாயாக் கிரகமாக விளங்கும் ராகு கேது என்ற அசுரர் விட்ணுவின் சினத்திற்கு ஆட்பட்டுக் கரும்பாம்பு செம்பாம்பு ஆனதாகப் புராணங்கள் மட்டுமல்லாது இந்நூலும் இயம்புகிறது.

பொதுவாகக் கிராமப்புறங்களில் ஆற்றங்கரை குளத்தங்கரை ஆகிய இடங்களில் எழுந்தருளியுள்ள விநாயகர் அருகே சில நாகதேவதைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சப்த கன்னியர் என்று இத் தேவதைகளைக் கூறுவர். இவர்கள் நாக வடிவத்துடன் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தென்மாவட்டங்களில் இசக்கி கோயில், மாடன் கோயில் ஆகியவற்றில் சப்த கன்னியர் எழுந்தருளி யுள்ளனர். அரவங்கள் வாழும் உலகம் நாகலோகம் என்று புராணங்கள் இயம்புகின்றன.

இவ்வுலகை நாகர்களே தாங்குவதாகவும், பிள்ளைப் பேறு வேண்டுபவர்கள் குறிப்பாக ஆண் குழந்தை வேண்டுபவர்கள் நாகத்திற்கு உரிய பலியுடன் முட்டை (படைப்புப் பொருளுடன்) மலர் மற்றும் கருப்புத்துணி, சந்தனம் ஆகியவற்றைச் சேர்த்து சூரியன் மறைவிற்குப் பிறகு புற்றில் இட, வேண்டிய சந்தானம் கிட்டும் என அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது.

ஒரு கருங்கல்லில் இருபாம்புகள் பின்னிய நிலையில் சிலை வடித்து அச்சிலையை முதல்நாள் நன்னீர், பன்னீர், வாசனாதி திரவியங்கள் கொண்டு அபிடேகம் செய்து அச்சிலை அருகே குழந்தையற்ற தம்பதிகள் ஓர் இரவு முழுவதும் உண்ணா நோன்பு இருந்து மறுநாள் அந்நாக சிலைக்குப் பூசைகள் புரிந்து அரசமரத்தடியில் பிரதிஷ்டை செய்து ஏழை அந்தணர்களுக்கு உணவு படைக்க எண்ணியது போல ஆண்குழந்தை பிறக்குமென விட்ணு புராணம் கூறுகிறது.

ஒவ்வொரு ஆடிமாதமும் வளர் பிறையில் வருகின்ற ஐந்தாவது திதி நாகபஞ்சமி என்று அழைக்கப்படும். விட்ணு, அனந்தன் என்ற நாகமாக இருந்து பூமியைக் காத்தார். அவருக்கு அனந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன்,

பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் ஆகிய அட்டமா நாகர் எண்மரும் பாதாள லோகத்தில் இருந்து துணை செய்கின்றனர்.

கசிபர் என்ற முனிவருக்கும் கத்துரு என்ற நாக இனப் பெண்ணுக்கும் தோன்றியவர் நாகர். தாய் சொல் கேளாததால் தீயில் விழுந்து சாகும்படி தாயே தன்மகன் நாகனைச் சபிக்கிறாள். அந்த சாபத்தால் பல சர்ப்பங்கள் தீயில் மாண்டன. அஸ்திகர் ஜெனமேஜெயனது சர்ப்ப யாகத்தை நிறுத்திக் கத்துருயிட்ட சாபத்தை அகற்றினார். அதுமேற்சொன்ன பஞ்சமி திதியில் நிகழ்ந்தது. ஆகவே நல்ல செல்வத்தை வேண்டுபவர், நாகதோஷத்தில் இருந்து விடுபட விரும்பு பவர்கள் இப்பஞ்சமி அன்று புற்றுக்குப் பாலிட பல நன்மைகளைப் பெறுவதோடு அட்டமா நாகத்தின் தோஷம், தொல்லை ஆகியன நீங்கி நல்ல மக்கட் பேற்றையும் செல்வத்தையும் பெறுவர் எனப் புராணங்கள் கூறுகின்றன.

அவ்வகையில் மேலே கண்ட அட்டமா நாகங்கள் அன்னியில் ஐராவதன், தனஞ்செயன், மணிநாகன், ஆஹூரணன், பிஞ்சாகன், கூச்மாண்டகன், சுரவீரன், பிண்டாரகன், அபராஜிதன், திருதராஷ்டிதன், பில்வகன், பில்வ பாண்டுரன், குமுதன், சாலிபிண்டன், சுபாகு, மகோதரன், குண்டோதரன், தித்திரி போன்ற அரவுகள் புராண இதிகாசங்களில் பயின்று வருவதாக அபிதான சிந்தாமணி தொகுத்துக் காட்டுகிறது.

பாம்பென்றால் படையும் நடுங்கும், கனவில் பாம்பு தீண்டுவதாகக் காணின் சனி பீடிக்கும்; பாம்பு கடித்து உதிரம் வரின் சனி விலகுகிறது; பாம்பு கழுத்தைச் சுற்றினால் மரணம்; உடம்பைத் தொடாமல் பாம்பு வந்து போகுமாயின் மாரியம்மன் எழுந்தருளியதாகவும் இன்றும் நம்புகின்றனர்.

தொன்மையான அரவு வழிபாடு தமிழகத்தில் தொல் பழங்காலத்தோடு தொடர்புடையது என்பதும் இன்றுவரை அரவு வழிபாடும் நம்பிக்கைகளும் நிலைபெற்றுள்ளவற்றைக் காண முடிகிறது. அவ்வகையில் அமிர்த மதன நாடகத்தின் மையக்கருத்தாக விளங்கும் கடல் கடைவதற்கு வாசுகி

நாணாகப் பயன்பட்டதும் அக்கதையின் தொன்மையை சுட்டுவதுடன் தொன்மச் செய்தியாகவும் விளங்குவது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

தமிழ் இலக்கியத்தில் சங்க நூலான பரிபாடலே முதலில் பாம்பு கயிறாகப் பயன்பட்ட செய்தியை இவ்வாறு தெரிவிக்கிறது:

'திகழ்ஒளி முந்நீர் கடைந்த அக்கால் வெற்புத்
திழ்பு எழ வாங்கித் தம்சீர்ச் சிரத்து ஏற்ற
மரக மறிகடல் வைத்து நிறுத்து
புகழ்சால் சிறப்ன் இரு திறத் தோர்க்கும்
அமுதுகடைய இருவயின் நாண் ஆகி
மிகாஅ இருவிடம் ஆழியான் வாங்க
உகாஅ வலியன் ஒர தோழம் காலம்
அறாத அது அணிந்தாகும் தாம்.''
'பாம்பு கயிறாகக் கடல் கடைந்த மாயவன்'

எனச் சிலப்பதிகாரம் கூறுவது காணத்தக்கது. பக்தியிலக் கியத்தில் குறிப்பாக திவ்விய பிரபந்தம் பாற்கடல் கடைந்ததையும் இறைவன் பாம்பணையில் உறங்குவது பற்றியும் கூறியவற்றைத் தொகுத்துப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

தொன்மை மிகுந்த அரவு வழிபாடு தோன்றவும் அரவு பற்றிய தொன்மங்கள், நம்பிக்கைகள் முதலியன இன்றுவரை நின்று நிலவுவதும் சமய வேறுபாடு இன்றி அரவு பற்றிய தொன்மங்கள் ஊடுருவி நிற்பதும் பாற்கடல் கடைவதற்குப் பயன்பட்ட வாசுகி ஆதிசேடனின் தம்பி என்ற தொன்ம வரலாறு போன்றன இவ் வரவு வழிபாடு இன்றளவும் நின்று சிறக்கத் துணை செய்வன அன்றோ!

பதிப்புரை

II. சுவடி வரலாறு:

பண்டை இலக்கியங்கள் யாவுமே சுவடிகளில் பொதிந்து கிடைந்தவையே. காலத்தின் தேவையாலும் பண்டையோர் பெற்ற பட்டறிவைத் துணைக்கோடல் வேண்டும் என்ற அவாவினாலும் அறிவு வேட்கையினாலும் அறிவியல் தந்த அச்சுக்கலையின் வரவாலும் பலசுவடிகள் அச்சு வடிவம் பெற்று நூல்களாயின. இருப்பினும் எண்ணற்ற இலக்கியங்கள் அச்சேறாமல் இன்னும் சுவடிகளாகவே உள்ளன.

அச்சில் வெளிவராது சுவடிகளிலேயே இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கியங்களுள் மருத்துவத்திற்கு அடுத்து மிகுதியாக விளங்குவது சிற்றிலக் கியங்களும் நாட்டுப்புறக் கதைப் பாடல்களும் ஆகும். அமிர்த மதன நாடகம் என்ற இச்சுவடி இதுவரையில் அச்சில் வெளிவராததாக விளங்குவதோடு, நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான கூத்து நாட்டியத்திற்குரிய கதைப் பாடலாக, மண்ணின் மணத்தோடு அமைந்து விளங்குகிறது.

தமிழகத்தின் தலைசிறந்த நூலகங்களில் தொன்மை வாய்ந்த அரசினர்க் கீழ்த்திசைச் சுவடி நூலகம் எனப் பெயரிய நூலகம் சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ளது. அந்நூலகத்தில் ‘அமர்த மதன நாடகம்’ என்ற பெயரில் சுவடி எண் R 1743 மற்றும் R 1744 என இரண்டு சுவடிகள் காணப்பட்டன. அவற்றுள் R 1743 என்ற சுவடியே முழுமை, தெளிவு அதிகச் சிதைவின்மையாக உள்ளது. இச்சுவடியே தெரிவு செய்யப்பட்டுப் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சுவடி எண் 1744 குறைப் பிரதியாக இருந்தபடியால் அது தவிர்க்கப்பட்டது. ஆயினும் இரு சுவடிகளுக்கும் பெருத்த வேறுபாடு காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே தலைப்பில் காகிதப் பிரதி ஒன்றும் இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

ஏடு அருளினார் வரலாறு:

திரு. V.S. துரைராசன் சென்னை, திருவல்லிக்கேணி என்ற பெருமகனார் அமிர்த மதன நாடகச் சுவடிகளை நூலகத்திற்குக் கொடையாகத் தந்தருளினார் என சுவடிக் குறிப்பு மூலம் அறிய முடிகிறது.

சுவடியின் புற அமைப்பு:

சுவடியின் மேலும் கீழுமாகப் பாதுகாப்புக் கருதி மெருகு செய்யப்பட்ட 35 செ.மீ. நீளமும் 2.5 செ.மீ அகலமும் 0.5 செ.மீ. கனமும் கொண்ட நீண்ட தேக்குக் கட்டைகள் இடப்பெற்றுள்ளன. அவற்றில் முறையாகத் துளையும் இடப்பெற்றுள்ளது. ஏட்டின்மேல் நூலகத்தார் குறிப்புக்கோப்பு உள்ளது. ஏடுகளுக்கும் கட்டைகளுக்கும் (Log) பூச்சித் தடுப்பு மருந்துகள் இடப்பெற்று பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளன. புற அமைப்பைக் கொண்டு ஏட்டின் வயதைப் பார்க்கும்போது நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது எனத் தோன்றுகிறது.

சுவடியின் அக அமைப்பு

சுவடியின் தொடக்கத்தில் இரு வெற்று ஓலைகளும் ஏட்டின் இறுதியில் ஒரு வெற்று ஓலையும் இடம் பெற்றுள்ளன. சுவடியின் வலது இடது பகுதிகள் காலத்தின் காரணமாக முனை சிதைந்தும் தெறித்தும் காணப்படு கின்றன. சில இடங்களில் ஏடுகள் கிழிந்தும் உள்ளன. இராமபான பூச்சிகளின் தாக்கம் அங்கொன்றும் இங்கொன்று மாக ஒன்றிரண்டு காணப்படுகின்றன.

முதல் ஏட்டில் சுவாமி நெடுங்குழைகளாதிகளே சரணம் அமிர்த மதன நாடகம் நீடுழி காலம் வாழ்க' என்ற வாசகம் கூறப்படுள்ளது. அதன் அருகே ஜய வருஷம் என்ற குறிப்பும் உள்ளது. அடுத்த சுவடியில் 'ஓம் ஸ்ரீ போர்புரி நாயகி பாதார விந்தமே கதி' என்று எழுதப்பட்டு அதன்கீழே அமிர்த மதன நாடகம் என்ற தலைப்பு உள்ளது.

ஏட்டின் இடது ஓரத்தில் வழக்கம்போல நன்றாக குரு வாழ்க குருவே துணை என எழுதப்பட்டுள்ளது.

இதழ்தோறும் தமிழ் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சுவடியில் நூல் 110 இதழ்களில் முழுமையாகக் கூறப்படுள்ளது. இதழ் ஒன்றுக்கு ஒரு பக்கத்தில் ஏழு முதல் எட்டு வரிகள் இடம் பெற்றுள்ளன.

நூல் ஆசிரியர்:

இந்நூலை எழுதியவர் ஒரு பெண்பாற் புலவர். அவருடைய பெயர் நீலதாட்சியம்மா என்பதாகும். இந்நூல் பாளையங்கோட்டை வேங்கடாசல முதலியார் என்பவரது சபையில் அரங்கேற்றப்பட்டது எனச் சுவடியில் ஒரு குறிப்பு உள்ளது.

நூல்: நூலின்கண் தொடக்கம் முதல் இறுதிவரை 254 பாடல்கள் அமையப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் உரிய ராகம், தாளம் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. விருத்தம், தரு, திபிதை போன்ற வடிவங்களும் சுட்டப் பெற்றுள்ளன. ஆங்காங்கே உரைநடையும் எழுதப் பெற்றுள்ளது. சில பாடல்களில் மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்றும் சில பாடல்கள் புள்ளி பெறாமலும் எழுதப் பெற்றுள்ளன. பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட அமிர்த மதன நாடகத்தின் நூலாசிரியர், இசைக்கு அடிப்படை இராகம், இராகத்திற்கு துணை தாளம், தாளத்திற்குச் சிறப்பு சந்தம் என்ற வகையில் இராக தாளங்களைப் பெரிதும் பயன்படுத்தி இசைக்குச் சிறப்பு செய்துள்ளனார். இராகம், தாளம் மற்றும் அவை பெற்றுள்ள வடிவங்கள் அஃதாவது அப்பாடல்கள் விருத்தம், தரு, திபிதை போன்ற வகைகளில் எந்தவிதம்வகையின என்பவறறைப் பின் இணைப்பில் பட்டியல் இட்டுக் காட்டப்பட்டுள்ளது. இந்நூலில் காணும் பா வகைகள் பின்வருமாறு:

விருத்தப் பாடல்கள்	166
தரு	76
தொடையமங்களம் போன்ற இதர வகைகள்	10
தொடக்கக் கடவுள் வாழ்த்து	2

என்ற வகையில் மொத்தம் 254 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலுக்கு ஓலைச்சுவடி வடிவத்தில் மூன்று சுவடிகள் உள்ளமை அறியப்படுவதால் மூலப்பிரதி எது என அறியக்கூடவில்லை.

எழுத்துக்கள்: இப்பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட சுவடியில் எழுதப் பெற்றுள்ள எழுத்துக்களில் சில எழுத்துக்கள் கூட்டு எழுத்துக்களாக அமைந்துள்ளன. இந்த ஓலைச்சுவடியைப் பிரதி எடுத்தவர் பெயர் எங்கும் குறிப்பிடப் படவில்லை. ஆனால் நூலில் பழக வரும் ல-ள; ள-ழ; ழ-ல; ற-ர; த்த-ற்ற மாற்றங்கள் உள்ளன. பொதுவாக பிரதி செய்பவர் தென்பாண்டி நாட்டுக்காரராக இருந்தால் இவ்வாறான எழுத்து மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. முதல் எழுத்து, இடைஎழுத்து, இறுதி எழுத்து மாற்றங்கள் போன்றவற்றைக் கொண்டு இந்நூலைப் பிரதி செய்தவர் ஒரு தென்பாண்டிக்காரரர் எனக் கருதலாம். மேற்கண்ட சில எழுத்து மாற்றங்கள் பற்றிய சில எடுத்துக்காட்டுகளைப் பின்வருமாறு காணலாம்:

அ < ஐ

அஞ்செழுத்து 100, 170 < ஐந்தெழுத்து
அம்பத்தாறு தேசம் 62 < ஐம்பத்தாறு தேசம்
அம்பொன்முடி 116 < ஐம்பொன் முடி
அய்யன் 42 < ஐயன்
அய்யன்மாவலி 122 < ஐயன்மாவலி
இமயவர் 224 < இமையவர்
வயிணவர் 254 < வைணவர்
இடையெழுத்து (உயிர்) மாற்றம்

இ < அ

சக்கிரபதி 28 < சக்கரபதி
சக்கிரபாணி 117 <சக்கரபாணி
சக்கிரபூபதி 51 < சக்கரபூபதி

சக்கிரம் 78 < சக்கரம்

சக்கிரமாவலி 26, 15 < சக்கரமாவலி

சக்கிரவர்த்தி 5, 119 < சக்கரவர்த்தி

சக்கிராஈசுவரன் 27 < சக்கர ஈசுவரன்

பிரகெதி 23 < பரகதி

நிர்த்தனம் 101 < நர்தனம்

அ < உ

நடக்கி 12 < நடுக்கி

ஆ < இ

நாயம் 250 < நியாயம்

இ < உ

விண்ட 12 < உண்ட

உ < இ

கவித்துவமாமணி 115 < கவுத்துவ மாமணி

வாருதி < வாரிதி

அ < எ

சென்னல் 76 < செந்நெல்

தேவந்திரன் 70 < தேவேந்திரன்

எ < அ

கெங்கை 100 < கங்கை

கெணம் 76 < கணம்

கெதி 117 < கதி

கெதை 84 < கதை

கெந்தருவர் 68 < கந்தருவர்

கெம்பீரம் 14 < கம்பீரம்

கெர்வம் 136 < கர்வம்

கெருடர் 68, 70 < கருடர்

கெர்சித்து < கர்ச்சித்து

செனகர் 111 < சனகர்

செனகர் மகன் 111 < சனகர் மகன்

மத்த கெசம் 68 < மத்தகசம்

பஞ்ச கெவ்வியம் 113 < பஞ்ச கவ்வியம்

தீனசென ரெட்சகா 64 < தீனசன ரட்சகா

துட்ட செனம் 14 < துட்டசனம்

ஓ < உ

பொஸ்தகம் 73 < புஸ்தகம்

எ < இ

ரெண்டாகி 201 < இரண்டாகி

ஐ < அ

கையிலாச வாசன் 169 < கயிலாச வாசன்

பிரையாசம் 109 < பிரயாசம்

ஒ < ஓ

கொட்டி 12 < கோட்டி

உ < ஒ

துடர்ந்து 54 < தொடர்ந்து

துடை 78, 121 < தொடை

இ < ஈ

கனக கிரிடம் 16 < கனக கிரீடம்

நெடில் குறிலாதல்

உறுவசி 183, 253 < ஊர்வசி

தெடா 37 < ஏதடா

இடையெழுத்து (மெய்) மாற்றம்

க < ங

கட்டியக்காரர் 31 < கட்டியங்காரர்

கட்டியக்காரன் 14, 20, 37, 60, 78 < கட்டியங்காரன்

வங்கணம் < வக்கணம்

ப < வ

எரிவாணம் 84 < எரிபாணம்

வ < ப

கோவி 20 < கோபி

ள < ழ

ஒளித்துக் கொள் 37 < ஒழித்துக் கொள்

ஒளிந்திடு 29 < ஒழிந்திடு

கொளிக்கும் 76 < கொழிக்கும்

ன < ந

சென்னல் 76 < செந்நெல்

அனாதி 10 < அநாதி

அன்னியாயம் 107 < அநியாயம்

ன < ண

கவிவானர் 14 < கவிவாணர்

நுன்னிய தனம் 180 < நுண்ணிய தனம்

த் < க்

பத்தி 76 < பக்தி

பத்தரசம் 242 < பக்தரசம்

ர < ற

பரக்கும் < பறக்கும்

புரம் 64 < புறம்

ற < ர

பிறகாசன் 29 < பிரகாசன்

பறகதி 23 < பரகதி

கறீடம் 23 < கிரீடம்

கிறமுடன் 28 < கிரமுடன்

காந்தறுவர் 182 < காந்தருவர்

பிறையாசம் 119 < பிரயாசம்

கற்மங்கள் 76 < கர்மங்கள்

ற்ற < த்த

ரெற்றினம் 72 < ரெத்தினம்

நவரெற்றினம் 17 < நவரெத்தினம்

நவரெற்றினமணி 16 < நவரெத்தினமணி

எழுத்து மிகுதல்

அறிவில்லர் 70 < அறிவிலர்

இரண்ணியன் 111 < இரணியன்

தூய்யன் 42 < தூயன்

வயிணவர் 254 < வைணவர்

நாயம் 250 < நியாயம்

எழுத்து விடுபடல்

மகதேவா *104* < மகாதேவா

உன்மதம் *14* < உன்மத்தம்

யாபாரம் *76* < வியாபாரம்

பிரமசாரி *10* < பிரமச்சாரி

பிரமா *120* < பிரம்மா

காச்சிய பால் *239* < காய்ச்சிய பால்

கானப் புலித்தோல் *35* < கானகப் புலித்தோல்

கற்பதரு *179* < கற்பகத்தரு

கிட்டிணாவதாரம் *168* < கிருட்டிணாவதாரம்

கூடுறார் *17* < கூடுகிறார்

கெந்தவர் *29* < கந்தருவர்

கைபிரம்பு *14* < கைப்பிரம்பு

இப்பிரதியில் கண்டதுபோல பிரதிசெய்வார் கைக் கொண்ட எழுத்து மாற்றங்கள் அவரின் மொழிநடையை அறிந்து கொள்ளப் பயன்படுவதைக் காணலாம்.

இப்பதிப்பில் தேவையின்றிக் கூடுதலாக இடம் பெறும் ஒற்றெழுத்துக்கள் அல்லது பிற எழுத்துக்கள் போன்றவைகள் நீக்கப்பட்டு விடாது அவற்றைப் பிறை வடிவக் குறிக்குள் இடம் பெறுமாறு அமைக்கப்பட்டுள்ளது. விடுபட்ட ஒற்றெழுத்து அல்லது பிற எழுத்துக்கள் பகர அடைப்பில் இட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. பாடல்களில் பயின்று வரும் அரிய சொற்களுக்கு மட்டுமே அருஞ்சொற் பொருள் விளக்கம் தரப்பட்டுப் பின்னிணைப்புப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. அருஞ்சொல் பொருள் விளக்கம் எளிதிற் அறிந்து தெளிதற்கு ஏற்ப வரி எண்கள் தரப்பட்டுள்ளன. ஏனையவற்றிற்கெல்லாம் பாடல் எண்ணே தரவுக் குறிப்பு எண்ணாகத் தரப்பட்டுள்ளது.

'முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும்
பொன்னே போற் போற்றுவர்'

என்ற நன்னூல் காட்டும் கோட்பாட்டிற்கேற்ப சொற்களின் திரிந்த வடிவங்களுக்குரிய நேரான வடிவம் தருவிக்கப் பெற்றுக் காட்டப் பெற்றுள்ளன. ஆயின் வட்டார வழக்குகள் பேச்சுமொழி சொற்கள் அவற்றின் பண்டைய சொல்லாட்சி ஆகிய சிறப்புக் கருதி நூலில் எப்படி எழுதப்பெற்றுள்ளதோ அப்படியே கையாளப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 'கிரீடம்' என வரின் இவ்விரு வடிவமும் உள்ளது. உள்ளவாறே கையாளப்பட்டு அதற்குரிய நேர் வடிவம் அருஞ்சொல் பதவுரையில் தரப்பட்டுள்ளது.

இக்கதைப் பாடலில் நாட்டுப்புற வியல் கூறுகள் மிகுந்திருப்பதால் கூடியவரையில் அவை சிதையாதவாறு பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

ஆய்விற்குப் பயன்படும் நோக்கில் விரிவான சொல்லகராதி தயாரிக்கப்பட்டு இறுதியில் இடம் பெறுகிறது. விரிவான இவ்வகராதியிலிருந்தே இந்நூல் பெற்றுள்ள சொல் வளத்தைத் தெரிந்து கொள்ள முடியும்.

பதிப்பின்போது சீர்திருத்த எழுத்துமுறை பின்பற்றப் பட்டுள்ளது.

பின்இணைப்பின் வாயிலாக நூலுக்குத் தொடர்புடைய பல செய்திகள் திரட்டித் தரப்பட்டுள்ளன.

பாற்கடல் கடைந்த வரலாறு என்பது வைணவ சமயத்திற்கு உரியது என்ற உண்மைக்கேற்ப தமிழ் வேதமான நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இவ் வரலாறு பெற்றுள்ள செல்வாக்கினைத் தொகுத்து கூறப்பட்டுள்ளது. கூத்து பற்றித் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் குறிப்புகள், அரவு வழிபாட்டிற்குக் கிடைக்கும் குறிப்புகள் முதலியன பின் இணைப்பில் இடம் பெறுகின்றன.

இலக்கியச் சான்றாகத் திகழும் பாகவத மூலம் எட்டாம் கந்தம் இக்கதைக்குச் சார்படையது என்ற வகையில் அதுவும் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

அறிவாளர் அன்னப் பறவை போல் குறை மறந்து நிறை ஏற்று மகிழ்வாராக. முன்னோர் செய்த பல்வேறு நூல்களைத் தன் அணிகலனாக ஏற்று மகிழும் தமிழ் தெய்வம் இதனை யும் ஏற்று அருள் பாலிக்கட்டும்.

அமிர்த மதன நாடகம் என்ற இதுவரைப் பதிப்பிக்கப் படாத சுவடிநிலையில் உள்ள இந்நூலை உருவாக்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் உதவியும் நல்கிய உலகத் தமிழாராய்ச்சி இயக்குநர் பேராசிரியர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ D.Litt., அவர்களுக்கு எஸ். உளங்கனிந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் ஆக்கத்தின்போது எனக்குப் பலவகையிலும் துணைநின்ற அரசினர்க் கீழ்த்திசைச் சுவடிக் காப்பாளர் முனைவர். S. சௌந்தர பாண்டியன் அவர்களுக்கும் அந்நூலகத்திற் பணிபுரியும் அனைவர்க்கும் என் நன்றியே காணிக்கை.

இந்நூல் தடையின்றி எவ்வாறேனும் வெளிவர வேண்டும் என்று பலவகையிலும் எனக்குத் தோன்றாத் துணையாக இருந்து உதவி செய்துவரும் சுவடித்துறைப் பொறுப்பாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முனைவர் டி. மகாலெக்ஷ்மி அவர்களுக்கும் இலக்கியத் துறைத் தலைவர் முனைவர் ச. சிவகாமி அவர்கட்கும், கேட்டபொழுது வேண்டிய தரவு நூல்களைத் தந்து உதவிய நூலகக் காப்பாளர் திருமதி பார்வதி அவர்கள், திரு வெங்கடாசலம் அவர்கள் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அலுவலகப் பணியாளர் அனைவர்க்கும் என் நன்றியும் வணக்கமும் என்றும் உரியது.

த. பூமிநாகநாதன்

சுவாமி மகரநெடுங் குழைகளாதிகளே சரணம்
அமிர்த மதன நாடகம் நீடூழி காலம் வாழ்க
ஓம் ஸ்ரீபோர்புரி நாயகி பாதார விந்தமே கதி

அமிர்த மதன நாடகம்

1 விண்ணவர் துயரந்தீர விரைந்து பாற்கடல் கடைந்து
பெண்ணின் மோகினியாய் வந்து பெருகு நல்லமுத பானம்
பண்ணிடச் செய்து தன்பேர் பாரினில் விளங்க நாட்டுங்
கண்ண நாரணனார் திவ்விய கழலிணை சீர்மேற் கொள்வாம்

2 தந்திமுகத் தோனே சங்கரனார் தன்மகனே
சிந்தை தனிலேயுனைச் - செவித்தேன்
முந்து வமுதந் தனைக்கடைந் தண்டருண்ட
சீரை யேமது நாவுக் குதவி.

3. விருத்தம் ***ராகம் - சாவேரி***

செய்யவளை மார்பினிலே யணிந்த தேவன்
தெரிந்து திருப்பாற் கடலைக் கடைந்து
விண்ணோர்க் குயும்வழி யாகவேநல் லமுதமிய
இந்தவுசி தநாடகத் தமிழை யுரைசெய் முன்னே
துய்யதொரு வேணகலை யுந்தரித்து நாலு
தொழிணையிற் பணிதுலங்கத் துதிகை யோடு
மையனெனும் மானை முக்கடவுளை பாராட்டு
வாய்கதைக்கு வழிகாட்டு வாயே.

4. தொடைய மங்களம் ***ராகம் - நாட்டை***

செகமுழு வதினிலு நிறைசோதி
தீரமுடன் கேசமுறைக் கருளாதி
பகவனு தவமுத நாடகத்தைப்
பாங்குடனே சொல்ல - செய செய

சரவண நடுவனில் வளர்பாலன்
சங்கரர்க் கொருமொழி பகர்வேலன்
துரகமெனவே மியல்மிசை யேறும்
சுப்பிர மணியந் துணையே - செய செய

குலவரை யெனுமந்தரந் தன்னைக்
கொணர்ந்த சுரருடனே சுரர்முன்னை
நலமிகு பாற்கடல் தனைகடைந்த
நாடகத்தை சொல்லவே - செய செய

மகமது செய்திடும் வேளை கண்டு
மாவலியிட மூன்றடி கொண்டு
அகில மதனை யளந்திடு மாயன்
அடியிணைகள் துணையே - செய செய

மாலொரு கூர்ம மதாக வந்து
மலையினை முதுகினிலே சுமந்து
சீலமுடவே பெருங்கடல் கடைந்த
செய்கைதனை சொல்லவே - செய செய

விக்கிரமுட னிலங்கையிற் சென்று
மேவலா விடுசேனை வென்று
அக்கணமரா மர்க்கு மங்களஞ் சொல்
அனுமானுந் துணையே - செய செய

5. *தரு:* *காம்போதி* *ஆதி தாளம்*

வைகுண்ட வாசனுக்குச் செயமங்களந் - துய்ய
வானவர்ச் சகாயனுக்குச் சுபமங்களம் - (ஸ்ரீவை)
செய்யவன் தன்னாதனுக்கு செங்கமல பாதனுக்கு
கையுறை சாரங்கனுக்குக் கருதுமேகங் கனுக்கு
(ஸ்ரீவை)

ஆதிமூல நாதனுக்கு வேதனுக்கு - மங்களம்
ஆதிபவ பங்கனுக்குத் துங்கனுக்கு - மங்களம்
சோதி மாயா காரனு(க்கு) சொற்றுளப ஆரனுக்கு
போதரச பானனுக்கு நித்தனுக்குப்
புண்ணய செகான னுக்கு - (ஸ்ரீவை)
அண்டமுண்ட கத்தனுக்கு மங்கள மாயிர
நாமனுக்குப் பூமனுக்கு மங்களங்
கண்ட காதன் வீரனுக்குக் கவித்து வலங்காரனுக்கு
வண்டரும் பிரதாப னுக்கு வளர்பற்பனுக்கு
வைகுண்ட வாசனுக்குச் செயமங்களம்
முனிசென் பாலனுக்குச் சீலனுக்கும் மங்களம்
முத்திப் பிரதாயனுக்கு மாயனுக்கு மங்களம்
தனிவனா மெய்யனுக்குச் சங்குரை மெய்யனுக்கு
தொனிதருஞ் சங்கனுக்குச் சோதிநர சிங்கனுக்கு

(ஸ்ரீவை)

மண்டல முழுது மகிழ்ந்திடுஞ் செங்கோல்
கொண்டர சாளுங் குலையத்திதிபன் - மாபலி
வந்தி சக்கிர வர்த்தி யென்றோதுங்
காவலன் மெச்சுங் கணபீ டத்தில்
இருந்திடு நாளி லிறைவன் றன்னைக்
கருதிதிற னமைச்சர் கண்டடி பணியும்

மந்திரி மார்ம கிழ்ந்துநீர் கேளு
மிந்திரன் றன்னை யிக்கணம் வென்று
பொன்னகர் மீது பொருவோ மென்ன
வன்னகரிற் சென்றி டித்தனர சுரரை
அசுரனார் பயந்து அமர்க ளோடித்

திசைமுக னடியிற் திருமுடி பதிக்க
பங்கயத் தோனும் பண்புட னீங்கள்
இங்ஙனம் வந்ததி யம்பு வீரென்ன
பாகத னென்னும் பலியினால் பட்ட
வேதனை யெல்லாம் விரபமாய்க் கூற

விண்ணவ ருடனே வேதியன் யன்றாள்
முக்கண்ண னைப்போற்றிக் கவலை யுரைக்க
சீலமாய் யரனுந் தேவர் களுடனே
மாலினை நோக்கி வருந்திடும் போது
மாயவன் றானு மகிழ்ந்து நீர்சென்று

பாய தாகப் பலியிடஞ் சேர்ந்தால்
மந்தர கிரியால் மகிழ்ந்து பாற்கடலை
யந்த மாக கடைந்தமது நீருண்டு
அழிவிலாப் பதத்தை அடைந்தனர் பின்பு
பழுது செய்யசுரர் பகையினை வெல்வீர்

யென்று மாலுரைக்க யிணையடி போற்றி
நன்றெனத் தேவ நகரினிற் சென்று
மாவலி தன்னை வணங்கியே யிந்திரன்
சேவக மாகி சிறிதுநாளிருந்து
தான வர்தன் றன்னிட சொல்வான்

நானுனக் கன்பாய் நவில்வதோர் மொழியை
யிறைவனேகேளா யிருகுலத் தோர்க்குங்
குறையில்லா மருந்து குறித்தன னான்று
ஏதமி லமுத மென்பதை யுண்டாலத்
தீதெனுஞ் சென்மத் தீவினை தீரும்

என்பதைக் கேட்டு இதுநல மென்று
தன்பலத் தோடு தாங்கினான் மலையைத்
தான வருடனே தாமொரு புறத்தில்
வானவர் கூட வன்மையாய் கொண்டு
நேசமாய் கடலில் நிறுத்தின ரப்போ

வாசுகி தன்னை வரையினிற் சுற்றிக்
கடைந்திடும் போது கண்டமு தத்தை
தடையிலா வசுரர் தன்கையிற் கொண்டு
போவதைப் பார்த்து(ப்) புலம்பிய விண்ணோர்
(க)வலை(த்) தீர்க அரியெ திரவந்து

அஞ்சிட வேண்டாம் அமுதமா குடத்தை
வஞ்சனை யாக வாங்கித் தருவோம்
என்ற வக்கணத்திலெ டுத்தனன் யாரு(ம்)
நன்றென மயங்கும் நங்கை மோகினியாய்
வந்த ரூபத்தை மதியிலாத சுரர்

சொந்தமா யெண்ணிச் சூதறி யாமற்
றேவியே நீதான் தெரிந்திரு பேர்க்கு
மாவியா மிந்த வமுதனி யென்ன
கையினில் வாங்கிக் கபடமாய்த் தேவர்
உய்யவே யமுதீய்ந் துகந்தனன் பின்பு

மாயவன் செய்த வஞ்சனை தனைக் கண்ட
பாயமே செய்தவ மரரை யிப்போ
கொல்லுவோ மென்று குறித்து மாவலியும்
வல்லமை யாக வலியபோர் செய்தான்
அந்த நேரத்தி லறிந்துசுக் கிதரனும்

வந்துபோர் தன்னை மறித்து மாவலிதன்
கோபத்தை நீக்கிக் குவடிமயம் சேர்த்து
னாபத்தி லாமல மரரின் புற்றார்
இக்கதை எல்லா மீசனா ரிடத்தில்
முக்கிய நாரதனும் மொழிந்திடக் கேட்டு

இடப வாகனனு மிமைய வளுடனே
வடவரை யுறையும் மாலிடம் வந்து
செகமெலா மயங்கச் செய்த பெண்ணுருவைப்
பகவே யானும் பார்த்திட வேணும்
ன்றா னுரைக்க வெடுத்த மோகினிபின்

சென்று மோகத்தால் சிவனுடல் மறந்து
போகமே சிந்த பூமி யிலாச
மனதாகவே மாயன் மகிழ்ந்திட்ட விந்தை
நாடகத்தை விபரமாய் கேட்போர் சிந்தை
தான்மகிழ்ச் செயம்பெறு வாரே.

6. விருத்தம் *ராகம் : சாவேரி*

பாராளும் பரிட்சித்து மன்ன னானோன்
பத்தியுடன் சுகமுனியைப் பணிந்து முன்னாள்
வாரி தனைத்தேவர் கடைந்த வாறு
தாராள மாயறியச் சொல்வீ ரென்ன
சாற்றிய தோர்வட மொழியைத் தமிழினாலே

சீரான நாடக மாய்ச்செய தென்னராய்
தெரிந்தோர்கள் பிழைபொறுத் துதிரஞ் செய்வீரே

7. தரு: *ராகம் : சங்கராபரணம்* *ஆதி தாளம்*

பொறுக்க வேணும் பெரியோரே - யென்
  புன்கவி பூவோடு கூடியநாரே
குறிப்புள்ள காரிகை நன்னூல் படிக்கவில்லை
  குதலைகள் போலவே நான் சொன்ன சொல்லை (பொறு)
குற்ற மிருந்தால் திருத்திக் கொள்வீரே
  குறையிதிற் சொல்வோர்கள் மொழியைத் தள்வீரே

தத்துவ மான பயனை விழைவீரே
  சார மறிந்து கொண்டாடித் துழவீரே (பொறு)
இலக்கண வழியொன்று மறியாத நானே
  இகபர சாதக மாகச்சொன் னேனே
துலக்க மாயீ தறா கின்றது தேனே
  சுத்தமாய் தேவர்களுண் டாப்போலத் தானே (பொறு)
ஒன்றுந் தெரியாம லுளறிய வென்னை
  உகந்து பின்னை யுரைக்கு மழலையை யென்னி
நன்றெனக் கொள்வது போலமுன் னைப்பின்னை
  நாலுந் தெரிந்தவர் நீங்களென் பிழைதன்னை (பொறு)

8. விருத்தம்: *ராகம் - சாவேரி*

ஆபரணத் தினுச்சியிலே நின்றும் பச்சை
  ஆலிலையிற் பள்ளிகொள்ளு ராதி மால்தன்
பேரணிந்த பாகவத காதை தன்னிற்

பேசு மெட்டாங் கந்தமதிற் பெருமை கூர்ந்த
காரணத்தை நாடகமா யுரைக்கக் கேட்போர்
கருதிநிதம் படித்திடுவோர் கனிபோற் பாரிற்
சீரணித்து செல்வ மதைப் பெறு வார் பார்
சிந்திப்பார் பரகதியைச் சிந்திப் பாரே

9. கணபதி விருத்தம் ராகம் : மத்தியமாவதி

வான வர்கள் மனமகிழ்ந் துதித்தார்கள்)
வாருதியைக் கடைந்தெடுத் தன்றமுத முண்ட

ஞான மொழி தனைப் புவி யிற்றமிழி னாலே
நாடகமாய் நடம்புரியுஞ் சபையின் முன்னே
யானை முகந்தா னிலங்கத் துதிகை
யாதி ஐங்கரமு மங்சுகமு மழகாய் மின்ன
கான முனிவோரி தையக மலமேவுங்
கணபதியு மெதிரிவந்து களிக்கின் றானே

10. தரு. ராகம் : சுருட்டி ஆதி தாளம்

விநாயகர் வந்தார் செயந்தரும் வினாயகர் - வந்தார்
அனாதி யாகிய பரஞ்சோதி - எங்கள்
ஆறுமுகவர்க்கு முன்வந்த ஆதி (வினாய)

தொந்தி யசைந் தன்ன - அதன்மிசை
துதிக்கை தனதா னென்ன
அந்த மிகுந்த கன்னக் குண்டலத் தசையு
மணியில னொளிதிசை யெங்கு மின்ன (வினாய)
சகல்சித்த காரியிவ னெனத் தருவென - மலர்மாரி
கனவரிறை வாரி சொரிந்திடக் களித்து
குதித்து நடம்புரி பிரம்மசாரி (வினாய)
உமையவள் தருபாலன் - நாகத்தை
உகந்தணிந்திடும் லோலன்

யிமைவர் பணி - சீலன்
அமுதங் கடைந்திடும் - நாடகத்து
முன்னருளனு(னு) கூலன் (வினாய)

11. அகசியக் காரன் விருத்தம் ராகம் : காம்போதி

பகைசெயு மவர்கன்(ண்) கூட பண்புடன் முகமலர்ந்து
நகைசெய வுரைகன்செய் துரற்குணவி கடத்தாலே
வகைசெயுந் சபையுளோர்தன் வல்லமை யறிய வேண்டி
யகசியக் காரனு வந்தன்புடன் விளங்கி னானே.

12. தரு ராகம் : காம்போதி

அகசிய கார னென்றுரை செய்திடுங் கொட்டி
ஆண் பிள்ளை நானே - பகலிற் றெருநடு விலகமுடன்
வரும்போதோர் - பால னழக் கண்டிடு காலை
நடுக்கிக் கொண்ட (அக)

சண்டை யென்றொரு யோசனை வருகையி
லாக கடைதனைப் பார்ப்பேன் - ஆகும்
விண்ட கட்டி(டி) லென்னுட லதனை மச்சு
வீட்டுக் குள்ளுடன் சேர்ப்பேன்
பெண்டுகள் சிலர் மெய்த்துக் கொள்வர் சவுரியத்தில்

மண்டலத்தி லென்னைப்போற் கண்டது முண்டோ (அக)
அரமனை வாசலி லொரு பட்டாணி
கையி லறுக்குங் கத்தி கண்டேன்
அதுமுத லொருமாதமதாய் கனவினில்
நினைந்துகொண்டு உலறியலறிக் கொண்டே(ன்)
வருபகைஞர் சண்டையி லென்னை யனுப்பி
வியயுந் திரும்பாம லோடி
காசி கண்டபினென்னை... (அக)

பின்வைத்த காலதனை முன்வையா - என்
றொடுபேர் பெற்றவனென் தகப்பன் - பூனை
கண்ணைக் கண்டு மிரண்டு புலியெனத் - திடுக்கிட்டு
தயங்கிப் பானைக்குள் ளொளிப்பன் - அன்னவன் மகன்
என்ன சொல்வேன் வல்லமைக் கிசைந்திடுமென் சமத்தை (அக)

13. பலிவாசல்: கட்டியங்காரன் ராகம்: காம்போதி

வட்டமாங் கடலேழ் சூழு மண்டல முழுதுஞ் செங்கோல்
திட்டமாய் செலுத்து கின்ற செயமுனை கீர்த்தி பெற்ற
அட்ட லெட்சுமி சம்பன்ன னான்மா வலியின் வாசல்
கட்டியங்காரன் வந்து களறியிற் றோன்றி னானே

14. தரு: ராகம் : சுருட்டி திரிபுடை தாளம்

கட்டியக்காரன் வந்தான் - வெகு
திட்ட கட்டியக்காரன் வந்தான் - தட்டிச்
சல்லடங் கட்டிச் சபையை மிக தட்டித்

துட்ட செனத்தை நீக்கி சுமுகந்தனை - யுண்டாக்கி
சிட்ட செனபரிபால நேசரிட்ட முதவு மாவலி வாசல்

கட்டி சரிகை பாகை துலங்க
மார்பிலணிந்த சரப்பணி மிகயிலங்க
திருமுக மதிலிட்ட திலத முமுடல் முட்ட

வரிசையங் கிடந்தொட்டு வட்டக் கடுக்கனிட்டு
ஒருவ ரிணையில் லாத வீர
உன்மதங் கொண்ட கெம்பீரக்
கட்டி திசையெட்டுங் கிடுகிடென
பகைவர் கண்டு சிரசுநடுங்கி யொடுங்க

அசையா மணியைப் போலே
ஆர்ப்பரித் தொருக் காலே
இசையு மங்களங் கூறி
யெதிர்த்த வர்மேற் கூறி
யுசித மான கை பிரம்பை யாட்டி

யுக்கிரபலி புகழை நாட்டி
எட்டிச் சிங்கம்போலே குதித்து
வானவரை திரண மாகவே மதித்து
வங்கணமா கப்பேசி வல்லவாட்டை வீசி
எங்குந் தெரியா தாவியேச் சரிகைகூவி

தங்குகவி வானராலே துதிபெற்ற சக்ரபதி
மனமகிழ்ந்து மிகமெச்ச (கட்டிய)

வசனம்

பராக்கு! பராக்கு!! சுவாமி பராக்கு!! வெகு பராக்கு!! எச்சரிக்கை!

அகோ தெப்படி யென்றால் ஈரேழு பதினாலுலகங் களுக்குமே சக்கிரேசுவரனாகிய இரண்ணிய தேவ குமாரனாகிய பிரகலாத புத்திரோத்தமனான மாவலி சக்கர வர்த்தி நவறெற்றின சிம்மாசனக் கொலு மண்டபத்துக் கெழுந்தருளி வருகிறார்!

பூலோக, புவர்லோக, சுவர்லோக, செனலோக, தவலோக, மகாலோக, சத்தியலோக. அதல, விதல, சுதல், நிதல, தார்தல, மகாதல பாதாலங்களிலுண்டாகிய தேவ கின்னர், கிம்புருடர், கெருட, காந்தருவ, சித்தி, வித்தியார்த்திக்குப்

பாலக அசுர சமூக நாகமூக முதலாகிய அனைவோர்களும் அதிக பயபக்தியுடனே எச்சரிக்கையாய் இருங்கோ!

பராக்கு! பராக்கு!! சுவாமி பராக்கு! எச்சரிக்கை

15. பலி கொலு விருத்தம்: காம்போதி ராகம்

இத்தல மீரேழு மோர்கொடையிற் கொண்டு
இசைந்த செங்கோலின் முறைமை கொண்டு
சத்துருவின் மனமுருக சலங்கை கொண்டு
சார்ந்தபெரி யோரிடத்திற் தன்மை கொண்டு
கத்தரொரு மூவரிடஞ் சென்று மிகக்கனங்
கொண்ட வரத்தின திகாரங் கொண்டு

வைத்த பொருளே வேதியரால் வாழ்த்தக் கண்டு
வலுக்கொண்டான் மாவலிமனக் கொலுகொண் டானே

16. தரு. ராகம் காம்போதி தாளம் ஆதி

செக்ச்சக்கிர பதிவீர செயவிக்கிர மாவலி
தீரன் கொலுவிருந்தான்
மிகவுக்கிர வொளிதரு விரிகதிரென
வருபுகழ்பொற் பீடத்தின் மேலே
புருஷமேருவைப் போலே (செக)
நவரெற்றின மணிவைத்த கனகக்
கிரீடமது நாலுதிசையு மின்னவே

இந்த புவனத்தை விலைபெற்றவ
இரத்தினத்தி லிழைத்த புசகீர்த்தி யிதுவெனவே
சொல்லட வுவமைக் கரிய மார்பி லுயர்ந்த
மூபுரிநூலு முசித வெண்கவரி களோங்கவே
இருபாலுந் தவனச் (ெ)சங்கொலி தனக்கு
மார்நடு நடுங்கத்தியர் வெருவிச்
சரணங்கொடு கொடெனச் - செக
கனத்திலொலி தங்கு மாணதுந்துமியிழை
கடல்போலே முழங்கிடவே - நாடி
இகமுற்று வருவிப்பிர செனமகிழ்ந்திடச் செம்பொன்

எங்கெங்கும் வழங்கிடவே - சுற்றும்
வெகுமுத்துச் சரம்வைத்த வெண்குடை யெதிர் தாங்க
வேதியன் முதல் மூவர் கொடுத்த - நல்வர
மோங்கத் தகு மதனமத்துரை யிவனென்றிட வேநாளும்

தன்னுயிர்போல் மன்னுயிரை கொண்டர சாளும் (செக)
பாதத்தின் முறைகற்ற அரிவைய
ரொருபுறம் பாங்குடடை மாட
குலகுரு சுக்கிராச் சாரியர் குணமது கைகூடச்
செந்திரு நித்திய மிவர்மனை யிற்குடி கொள்ளவே

தேவ ருலகை செயிக்க மனந்துள்ளவே
யொருமித்த சுரர் படைத் தலைவர் பரிமளிக்க
உலகி லாறிலொரு கடமை கொண்டு களிக்க (செக)

17. கட்டியம்: ஆசிரிய விருத்தம் ராகம்: மத்திமாவதி

மண்டலமும் விண்டமு மெண்டிசையும்
  மரசுபுரி மன்னவர் வெகு பராக்கு
மனுவளரு நீதியினி வனுவளவு தவறாத
  மகிபனே வெகுபராக்கு

தொண்டரென வுனதடியில் மறுமன்னர் யாவருந்
  தொழுகிறார் வெகுபராக்கு
சொல்லரிய தானபொரு ளொடு நிறை
  வேதகுல துங்கனே வெகு பராக்கு
கொண்டலை நிகர்த்த காமண்டலம்
  திறபுலவர் கூடுரா(ர்) வெகுபராக்கு
கோணமிரு நான்கிலுள்ளோர் களுநின்
  பெருமை கூறுரார் வெகு (பராக்கு)
ராசாதி ராசர் ராச கம்பீரர்
  ராசவுந் தண்டர் வேத குலோத்தமர்

வேத வேதாந்தச் சிரவணர் வேத பாராயண
  நிபுண வேதமார்கப் பிரசங்கா
சர்வசீவ தயாபர சர்வதேவப் பிரசாதா
  சர்வ மங்கள குணாலயா சர்வலோக விசையா
அகண்ட பரிபூரண அசுரர் பணிபாதா
  அகிலாண்ட நாயகா அற்புத சிரிதரா
நவரெற்றின கசிதா லங்காரா
  நன்மார்க்க செனசீலா
நவமோகன சேர் ரூபா - நானாவித பாண்டி
  தாயிந்திராதி தேவ பயங்கரா

எக்கிஞ பரிபாலனா - யீசுவரப் பிரியானந்தா
  இரணிய புரவாசா மேகாங்காச் சுவரூபா
மேதினி பாலனா - மேருபுயபே லாட்டியா
  மின்னனையார் மோகா

வசனம்

மகா மந்திரானு ஷான மகா பராக்கிரம தீரா! மகா லெட்சுமி நிவாசா! மாவலி சக்கிரேசுவரா! பராக்கு சுவாமி! பராக்கு!! வெகுபராக்கு!! எச்சரிக்கை!

பலிவசனம்:

அகோ வாரும் பிள்ளாய்! கட்டியக்காரா! இப்பவும் நம்முடைய கொலுக்கு நாடகசாலைப் பெண்களை அதிசீக்கிரமாக அழைப்பிவியும் பிள்ளாய், கட்டியக்காரா!

கட்டியம் வசனம்:

அப்படியே மகாபாக்கிய மாச்சுதையா! செக சக்கிரேசுவரா!

கட்டியம் வசனம்:

அகோ! வாருங்கோ! நாடக சாலைப் பெண்களே! இப்பவும் நம்முடைய செகச் சக்கிரேசுவனாகிய மகாபலி சக்கிரவர்த்தியானவர் நவரெற்றின சிம்மாசனக் கொலு மண்டபத்திலே யெழுந்தருளியிருக்கிறார். உங்களை யதிவேகமாக அழைத்து வரச்சொல்லி கற்பனை செய்திருக்கிற படியினாலே, நீங்கள் சீக்கிரமாக வாருங்கோ! நாடகசாலைப் பெண்களே!

நாடகசாலைப் பெண்கள் வசனம்:

அப்படியே வருகிறோ மய்யா, கட்டியக்காரரே!

18. விருத்தம் **ராகம் : காம்போதி**

ஆடகப் பணிகள் பூண்டு அற்புத மலர்கள் சூடி
கோடிணைத் தனங்கள் துள்ள கோமள முகங்கள் மின்ன
பாடக ருரைக்குந் திவ்விய பாத சாத்திரங்கள் கற்ற 230
நாடக சாலைப் பெண்கள் நாதன்முன் வருகின் றாரே

19. தரு. ராகம் : கேதார கெவுளி.தாளம் அடதாளம் - சாப்பு

வஞ்சியர் வந்தார் - நடனஞ் செய்ய வஞ்சியர் வந்தார்
கிஞ்சுகம் போலே கொஞ்சி யன்பாலே (வஞ்சி)
மாவலி நாதன் மனம்மிக்க வருத்தவே வமுத
மேவு தனங்குலுங்க விழியில் கனியிலங்க (வஞ்சி)
அரம்பையோ வென்ன - காமுகர் கண்டவர் மனம் பின்ன
கருங்குழல் சோருக்காட - கைதான் இறைபோட (வஞ்சி)
பணிமிகப் பூட்டி - நவரசமும் - பாங்குடன் காட்டி
அணிசிலம் படிவைக்க அனைவருங் கண்டு மெய்க்க
(வஞ்சி) 235

கட்டியம் வசனம்:

அடியேங்கள் சரணஞ் சரணமையா! சுவாமி செகச் சக்கிரேசுவரா! அகோ! வாரும் பிள்ளாய் கட்டியக்காரா! இப்பவும் நாடகசாலைப் பெண்களுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்கள் வஸ்திர முதலானதுகளெல்லாம் வாங்கி வெகுமானஞ் செய்தனுப்பிவிய்யும் பிள்ளாய்! கட்டியக் காரா!!

கட்டியம் வசனம்:

அப்படியே! மகாபாக்கியமையா சுவாமி! செகச் சக்கிரேசுவரா!

20. பலி விருத்தம். ராகம்: காம்போதி

கடலென முழக்கு கின்ற கட்டிய கற கேளாய்
திடமு டன்மது முன்னே தீர்க யோசனைகள் சொல்லும்
படை யினிற் றலை வனசம்பு பாணன் மாரீசன் மற்ற
வீடிநிக ரமைச்சர் தம்மை இக்கண மழைப்பிப் பாயே.

பலி வசனம்:

அகோ! வாரும் பிள்ளாய்! கட்டியக் காரா! நம்முடைய சமுகத்திற் றீர்க்காலோசனைகள் செய்யும் படியான சம்புவென்ன, பாணாசுரனென்ன, மாரீசனென்ன, யிவர்கள் முதலாகிய மந்திரிமார்களைக் கொலுமண்டபத்துக்கு அதிசீக்கிரமாக அழைத்துக்கொண்டு வாரும் பிள்ளாய்! கட்டியக்காரா!

கட்டியம் வசனம்: சுவாமி! யிப்படியே தேவரீராக்கினைப் படிக்கு அழைத்துக் கொண்டு வருகிறேனய்யா சுவாமி! சுக்கிரேசுவரா!

அடியேன் சரணஞ் சரணமையா சுவாமி! மந்திரிமார்களே

மந்திரிமார் வசனம்

அகோ! வாரும் பிள்ளாய் கட்டியக்காரா! நீயதி வேகமாய் வந்த காரியத்தை யின்னதென்று சொல்லும் பிள்ளாய்! கட்டியக்காரா!

21. கட்டியக்காரான் விருத்தம் ராகம் : காம்போதி

வெற்பனத் திரண்ட தோளும் வீரமும் பெலமு முள்ள
உற்பனத் திறங்கள் செய்யு முயர்மந்திரி மாரே கேளீர்
பொற்புறு கொலுவுக் கும்மைப் புகழ்ந்தனை யென்ன மன்னன்
கற்பனை செய்தானீங்கள் கணத்தினில் வருகு வீரே.

கட்டியக்காரன் வசனம்:

அகோ கேளுங்கய்யா சுவாமி! மந்திரமார்களே! செகச் சக்கிரோசுவரனாகிய மாவலி சக்கிரவர்த்தி யானவர் நவரெத்தின சிம்மாசனக் கொலு மண்டபத்திலே எழுந்தருளி யிருக்கிறார்கள் அதிவேகமாக அழைத்துக் கொண்டு வரச்சொல்லி கற்பனை செய்திருக்கிற படியினாலே நீங்கள் சீக்கிரமாக வரவேணுமையா சுவாமி ! மந்திரி மார்களே!

மந்திரிமார் வசனம்:

அப்படியே வருகிறோம் பிள்ளாய் கட்டியக்காரா.

22. விருத்தம். ராகம் : காம்போதி

அந்தர புவனமெங்கு அளவிலா கீர்த்தி கொண்ட
மந்தா புயத்தான் வீர மாவலி யழைத்தா னென்று
தத்தமிற் களிப்புமீறித் தலைவன் பொற்கொலுவின் முன்னே
வந்தனை செய்ய கூடி மந்திரி மார்வந் தாரே.

23. தரு. ராகம் : பந்துவராளி ஆதிதாளம்.

மந்திரி மார்கள் கூடி
வருகிறார் மகராசன் கொலுவில் (மந்திரி)
தந்திரசீலா யந்திர சாலா
ரந்திர யுகியந்திர மாகி (மந்திரி)
சம்புபாணன் சகுனி மாலி
தாருகன் மயனுட னேயெதி

கும்பினி கும்பன்மா ரீசன்பிற
கெதிகூறு மரிட்ட நேமி முதலான (மந்திரி)

மன்னனழைத் துரியங் கண்டு
மனதி லெண்ணா தெண்ணிக் கொண்டு
மின்னுந் தழ லென்னவே விழித்தீ கொட்ட
வினையோசனை களதனையே பாராட்ட (மந்திரி)

இணக்க முடைய கிரீடந் துன்ன
ரெற்றின வொளிக ளெங்கு மின்ன
வணங்கியொரு வற்கொருவர் தேற்றிட
மன்னன்மா வலிதன்னைப் போற்றிட (மந்திரி)

24. விருத்தம். ராகம் : காம்போதி

நாதனே சரணந் துய்ய ஞானனே சரண நாலு
வேதனே சரணஞ் சித்த விமலனே சரணம்
ராஜ நிதனே சரணம் தீர்க்க நித்தனே சரணம்
திவ்விய பாதனே சரணம் சுக்கிரபதியே நின் சரணமையா

வசனம்

வேத குலோத்தமா! வேதவேதாந்தச் சிரவணா! ஈரேழு பதினாலுலகுக்குமே கச்சக்கிரேசுவரனாகிய நாதனே! சரணஞ் சரணமையா சுவாமி!

வசனம்:

பராக்! பராக்!! சுவாமி பராக்! வெகு பராக்!! எச்சரிக்கை! மகா புசபெல பராக்கிரம சாலிகளாகிய பாணாசுரன், சம்பு முதலான மந்திரிமார்கள் சரணாகதி செய்யுகிறார்களையா! சுவாமி! செகச் சர்வேசுவரா! பராக்! வெகு பராக்!!

25. பலி விருத்தம். ராகம் : காம்போதி

சுந்தர பாணா சம்பு துலங்கிய மாலீ வாரீர்
தந்திர மயனே கும்பர் தாருகா சகுனி வாரீரே
எந்தன் மாரி சாவிப் பிராகெ திர்கெதி யென்னும்
மந்திர மாரே நீங்கள் மகிழ்ந்திங்கு வாரீர் வாரீர்

பலி வசனம்

பலி: அகோ வாருங்கோ பாணாசுரன் முதலாகிய மந்திரி மார்களே நீங்களெப் போதும் அவரவர்களிருக்கும் படியான ஸ்தானங்களிலே யிருங்கோ! பாணாசுர முதலாகிய மந்திரி மார்களே!

மந்திரிமார்: அப்படியே! மகாபாக்கியமாச்சுதையா சுவாமி! செகச் சக்கிரேசுவரா!

26. விருத்தம்: ராகம் : காம்போதி

மங்கள மான சக்கிர மாவலி மன்னா போற்றி
திங்கள் மும்மாரி பெய்யச் செகமதை யளித்தாய் போற்றி
பொங்கிய கடலை யொத்த புகழ்பெறு முத்தி(ப்) போற்றி
தெங்களை யழைத்த செய்தி யின்ன தென்றுஅருள் செய்வீரே

மந்திரிமார் வசனம்:

அகோ! கேளுங்களைய்யா சுவாமி! செகச் சக்கிரேசுவரா! யிப்போதடியேங்களை யதிசீக்கிரமாக அழைப்பிவித்த காரிய மின்ன தென்று திருவுள முகந்தருள வேணுமையா சுவாமி! செகச் சக்கிரேசுவரா!

27. பலி விருத்தம்; ராகம் : காம்போதி

தண்ணு வாகுகடல் சூழ்பூவின்
சக்கிர யீசுவரனேன் றென்னை
எண்ணினீர் சொல்வ தெல்லா
எதிர்நின்று புகழ்தலை பொட்டைக்
கண்ணனை பார்த்து புறன்
களையுணர் னென்றாய் போலாம்
விண்ணவ ருலகை வென்றான்
வீர மாவலி மன்ன னானே

பலி: வசனம்

அகோ! வாருங்கோ மந்திரிமார்களே! இந்த சமுத்திரம் சூழும்படியான பூமியாளப்பட்ட யென்னைச் செகச் சக்கிரேசுவரனென்று நீங்கள் புகழும்படியான தெப்படி யிருக்கு தென்றா லொரு பொட்டைக் கண்ணினைப் பொருந்தியவனை செந்தாமரைக் கண்ணனென்று சொல்வது போல யாச்சுது. ஆனால் நான் தேவலோகத்தை வென்று தேவ சிம்மாசனத்திலிருக்கும்போது நீங்கள் செகச் சக்கிரேசுவரனென்று சொல்லத் தகுமேயல்லாது இப்போ தெனக்கு தகாதல்லவோ மந்திரிமார்களே!

28. விருத்தம். ***ராகம் காம்போதி***

சக்கிர பதியான பலியிவ்வா றெகச்
சகலபுவ னங்களு முளதை கொண்டு
கிறமுட னதிகாரா நடத்திவந்தா னொப்பிலா
விரணிய பூப திக்கிப் பாலேதிக
லொருவரிலை யெனவேவிண் ணாடெல்லாந் தேவர்
குமிஞ்சிய யிறை செலுத்திக் கொண்டார்
வக்கிர றெனு மிமைய(வர்) வாயடிப்போ மென்று
வாதித்த ராமை ரெதிர போதித்தாரே

29. விருத்தம். ***ராகம் : சங்கராபரணம்*** ***தாளம் : சாப்பு***

மன்னனுரைத்த மொழிதனைக் கேட்டு
மதித்தானே கும்பனி கும்பனீ
தென்ன வொரு பெருங்காரியமா என்றெழுந்
தானே யுக்கிர செம்பன்
நம்மைக் கண்டோடி யொளித்திடு தேவர்க்கு
நாடாளுங் காலமுண்டாச் சேயவர்
தம்மை வேரோடே யடிக்கிறேனா னென்று
சாற்றினான் பாணனோர் பேச்சே.
அடரும் போரி லந்த விண்ணுலக
ஆண்டிடு மாயிரங் கண்ணனார் னாவி
உடன்குடலைப் பிடுங்கி வருகிறே னென்று
குதித்தானே தாருகன் கோவி
உந்தன் சிறுமைதன் சிரமீதிற் கொண்டு
நானோங் கிறேன்விடை கொடேன் சாமி

பந்தியிற் சூரியர் சந்திரரி ரெண்டுமென்
  பங்கென்றான் ரிட்ட நேமி
மாயவித் ததிலெனக் கிணையா ரிந்த
  மண்டலத்தில் நான்பிற காசனு
பாய மதாகத் திருகிறேனிந் திந்திரப்
  பட்ட மென்றானே மாரீசன்

பசிதீரும் படிக்கந்தக் கெந்தவ வர்தனைத் தூக்கிப்
  பருத்த தேங்காய் போலோமோ தினானிப்போ
நீசமாகத் தின்றுவிடுகிறே னென்றமோ
  நேரு மயனேதி ரோதினான்
உற்றசண்டை செய்ய நானிருக்க யிப்போது
  உங்களுக் கேணிந்த சோலி
இனிச்சற்றே பாரு மண்டப் பித்துவரை
  இனிற்சாடு றென்றானே மாலி
சத்த முனிவ ரோடக்கினி தேவனைச்
  சுடுமென் சூலத்தாற் கோதித் தூக்கியே

தந்து விடுகிறேன் வீழும் படியென்
  யென்றா னேயெ திபிறகெதி.
ஒடுநரிக் குப்பயந்திடு சிங்கம்போ
  லுற்றோமே நாமிங்கு தானே விண்ணாடு
நமதல்லால் வேறில்லை யென்று
  தன்னா தன்முன் சகுனி சொன்னானே
சுவாமி யின்னும் போசித் திடுமெங்கள்
  சமத்தை ரணத்தினிற் பாருமினி
தாமத மெனழுந்த சன்னாகஞ் செய்வதே
  சாரமென்றா ரேயெல் லாரும்

30. விருத்தம் ராகம் : காம்போதி

ஐயனே யுலகுக் கெல்லா மதிபதி நீயே யீயை
நையவே நசுக்க வெறிராச காரி யங்க ளென்ன
செய்யு முன்கிருபை யினாலே திறமுடன் சென்று நாங்கள்
நொய்யெனும் மரர்தம் மைநொ டியினிற் செயஞ்செய் வோமே

வசனம்

அகோ! கேளுங்களையா சுவாமி செகச் சக்கிரேசுவரா! இந்த யீரேழு பதினாலுலகமுந் தேவரீர் பிதாமகனாகிய யிரண்ணியேசுரனாண்டு வந்ததே யல்லாது வேறில்லை.

யிப்பவும் சகல புவனங்களுந் தேவரீருடைய ஆதினமே யல்லாது வேறில்லை ஆனால் ஒரு ஈப் பிரமாணமான இந்திரனை வெல்லுகிறதற்கு இராசகாரியங்கள் செய்தாக வேண்டிய தாயில்லையே! ஆகையால் தேவரீருடைய ஆக்கினாச் சக்கிர கிருபையாலே யந்தத் தேவ லோகத்தை யிமைப் பொழுதுக் குள்ளாக அடியேங்கள் செயம் பண்ணி வருகிறோமய்யா சுவாமி! செகச் சக்கிரேசுரா.!

31. பலி - விருத்தம். ***ராகம் : காம்போதி***

வீர முடனமைச் சரிந்த வாறு சொல்ல
  மெய்த்ததொரு மாவலியும் பாணன் றன்னைச்
சீரு டனோக்கிப் படைகள் செய்வதற்குச்
  செயமுளதோர் தினமதையாம் பார்ப்போ மிந்த
நேரு மதிலே மதுகுல குருவாம் ஞான
  நீதிபெறு தவசுக்கிர பகவான் தன்னை
காருலவு நமது நகர்வாச செயயென்று
  கற்பித்தான் பலராசன் சேற்பெற் றானே

வசனம்:

அகோ! வாரும்! பிள்ளாய் பாணாசுரனே! நாந்தேவ லோகத்தின் மேலே யுத்த சன்னாகஞ் செய்வதற்கு ஒரு விசையமுள்ள தினம் பார்க்க வேண்டியிருப்பதால் நம்முடைய குலகுருவாகிய சுக்கிர பகவானை யதி சீக்கிரமாக அழைப்பிவிய்யும் பிள்ளாய் பாணா சுரனே.

பாணாசுரன் வசனம்:

அப்படியே மகா பாக்கிய மாச்சுதைய்யா சுவாமி! செகச் சக்கிரேசுவரா!

32. விருத்தம். ***ராகம் : காம்போதி***

வனசமா மகளு லாவும் மன்னன் மாவலியின் வாசலக்
கனமிகு கீர்த்தி நாட்டுங் கட்டியக் காரா கேளாய்
தினம கிழ்ந்து செய்யுந் தெளிவுள முனிவ ரால்வந்
தனைசெய் நமது சுக்கிரா சாரியை ழைப்பிப் பாயே.

வசனம்:

அகோ! கேளும் பிள்ளாய் கட்டியக்காரா! யிப்பவும் நம்முடைய குலகுருவாகிய சுக்கிர பகவானை மாவலிச் சக்கிரவர்த்தி அழைத்து வரச்சொல்லிக் கற்பனை செய்தா ரென்று விண்ணப்பஞ் செய்து, அழைத்து வாரும் பிள்ளாய்க் கட்டியக்காரா.

கட்டியம் வசனம்:

அப்டியே மகா பாக்கிய மாச்சதையா சுவாமி பாணாசுரனே!

வசனம்:

அடியேன் சரணஞ் சரணமைய்யா சுவாமி சுக்ர பகவானே!

33. விருத்தம் ராகம் : காம்போதி

திண்ண மாமணி யிழைத்த சீர்கோ புரங்கள் சூழ
மெண்ணருங் கீர்த்தி கொண்ட வீரணிய புரத்து மன்னன்
நண்ணியுன் பாத சேவை நாடி னனதனால் வந்தே
எண்ணலே கருணையே கொண்டங்கெழுந் தருளு வீரே.

வசனம்:

அகோ! கேளுங்களையா சுவாமி! சுக்கிர பகவானே! இப்பவும் நம்முடைய மாவலி சக்கிரவர்த்தியானவர் தேவரீருடைய திவ்விய ஸ்ரீபாத சேவை செய்ய வேணுமென்று அடியனைப் போயழைத்து வரும்படியாக ஆக்கினாப் பித்தாரான படியினாலே கிருபை செய்து சீக்கிரமாக எழுந்தருள வேணுமையா சுவாமி சுக்கிர பகவானே!

சுக்கிரன் வசனம்:

ஆ! அப்படியே வருகிறோம்! பிள்ளாய் கட்டியக்காரா!

34. விருத்தம் - **ராகம் : காம்போதி**

உவப்புட னழைத்து விட்ட உயர்பலி கொலுவின் முன்னே
சிவத்திரு நீறு பூண்டு செபமணி கையி லேந்தி
பவக்கட லதனை நீக்கிப் பரமன் மெய்யருளைப் பெற்ற
தவத்தினில் மிகுந்த சுக்கிரச் சாரியர்தான் வந்தாரே

35. ஆனந்தக் களிப்பு ராகம் : மங்கள கவுசிகை அடதாளம் : சாப்பு

சுக்கிர பகவானும் வந்தார் - அதி
யுக்கிரம மாஞ்சிவனுக் கிரகம் பெற்ற
தண்டு கமண்டலங் கொண்டு - சிவ
சச்சிதா னந்தசொரு பத்தைக் கண்டு
குண்டலி யின்ன முதுண்டு - ஞான
குணமறிந் துமகா மந்திரம் விண்டு
இரவுபகல்செய் மாதிக் - கால
இரண்டுட னென்று மறிந்த விவேகி
அரிய தவமிரும் யோகி - பலி
அழைத்தா னென்று மனதினிகி ருபையாகி

தத்துவ நெறியறி யீசன் - பெருந்
தானவரான குலத்துப தேசன்
பத்தரிடத் தினில்நேச னிந்தப் - பார்
முதல யீரேழு லோகப் பிரகாசன்
வாமனா வதார மீது - ஓங்கு
மகமதில் மூன்றடி கேட்டிடும் போது
தாமதஞ் செய்தீ தாகாது - என்று
தான்தடுத் தேபலி ராசனுக் கோது
கானப் புலித்தோ லுடுத்து - ஐயன்
கையினில் மாத்திரைக் கொலுமெ டுத்து

வானச் சடைவி டுத்து - பலி
வாழு மிரணிய புரத்தை யடுத்து
பாங்குடன் படைகொண்டு செல்ல - வுரு
பரணி கிருத்திகை யென்பது குணமல்ல
ஓங்கி வளர்ந்திடு நல்ல - செய
உத்தம வச்சுவனி என்றுநாட் சொல்ல

36. விருத்தம் **ராகம் : காம்போதி**

சண்டப் பிரசண்டர் வேந்தன் சாத்திர பாடி நீங்கள்
கண்ட காவுண ரான கட்டியக் காரர் தன்பால்
வீணறு நாம வந்தோமென்று விசைய மாவலி முன்பாக
கொண்டுரை செய்யச் சொல்லிக் கூறியே வருகு வீரே.

வசனம்:

அட சீஷா சண்ட பிரசண்டா! சாத்திரப்படி இப்பவும் நாம் வந்திருக்கிறோ மென்றதாக வாசல் கட்டியக்கார ரிடத்திற் சொல்லிப் பலிச்சக்கரவர்த்தி கொலு முன்பாக அறிக்கை செய்து வாருங்கோ பிள்ளாய் சண்ட பிரசண்டா!

சண்ட பிரசண்டர் வசனம்: அப்படியே சொல்லி வருகிறோமையா சுவாமி!

37. தரு. **ராகம் : தோடி** **அடதாளம் : சாப்பு**

எப்படி சொல்வோம் வழி கண்டு
எவ்விதஞ் சொல்வோம்
தப்புரை சொன்னாலச் சிவப்பிணவன் பாவி
சண்டாள ரென்னும் சுரர்முன் போய்க் கூவி (எப்படி)
இவனுட வந்ததே மோசமந்த
யீனருக் கேது விசுவாசங்

கவலைநாங் கொண்டிட லாச்சு திப்போதிங்கே
காணாம லோடி யொளித்துக் கொள்வே மங்கே (எப்படி)
குருடனை நம்பி வந்தோமே - மனங்
குலைந்து வுலைந்து வெகு நொந்தோமே
யருங்கான கத்திலிருப் போமென்ற போது
அண்ணேநான் சொன்னேனே யறியாம லிப்போது (எப்படி)
ஏதடா யிப்பெருங் கூட்டம் - பகார்க்கிலே
எங்கெங்கு மாககா கொண்டாட்டம்
ஓதினார்க் கட்டிய காரனிடிப் பானே
உரையாவி டிலந்தமறை யோனடிப் பானே. (எப்படி)

வசனம்: அட அண்ணா! சண்டப் பிரசண்டா! யிதென்னடா கருமேகம் போலே யிருக்கு கூட்டங் கூட்டமாக நிற்குதே யீதென்னடா அண்ணா சண்டப் பிரசண்டா!

வசனம்: அட தம்பி! சாத்திரப்பாடி யிது கருமேக மல்லடா! நம்முடைய வெள்ளிக்கண் சாமியார் தவசு பண்ணுவாரே யந்த மலையது போலே யிருக்குதடா தம்பி சாத்திரபாடி.

வசனம்: அடே தம்பி! சாத்திரபாடி யாமடே! யிதுகளைப் பார்த்தால் பூத பிசாசுகளென்று சொல்லுவார்களேயதுபோலே, தானிருக்கிதடே இந்த வெள்ளிக்கண் சாமியார் நம்மைக் கொல்ல வல்லே நினைத்தாரடே இங்கே நம்மிலே போகப் போமா? நல்லது. நாஞ் சாமியாரிடத்தில் போய் சொல்லிப் போடலாம். வாடா தம்பி சாத்திரப்பாடி.

வசனம்: அடியெங்கள் சரணஞ் சரணமைய்யா! சுவாமி!

சுக்கிரன் வசனம்: அட சீஷா! சண்டப் பிரசண்டா சாத்திரப்பாடி நாம் வந்திருக்கிறோமென்று பலிச் சக்கரவர்த்தி யினிடத்திற் சொல்லச் சொன்னீர்களா! அட சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி!

சிஷ்யாள் வசனம்: சாமி வுங்களுக்கு அந்த புத்தி வரும் சாமி! அட அண்ணா சண்டப்ரசண்டா! சாமியா ரென்ன நமக்கெல்லா வித்தையுஞ் சொல்லிக் கொடுத்திருக்கிறார் சொல்லடா அண்ணா சண்டப் பிரசண்டா.

வசனம்: அட தம்பி! சாத்திரப்பாடி! சாமியாரெனக்குச் சொன்ன வித்தையா கேட்கறாய் எனக்குக் கவச விதி சொல்லிக் கொடுத்திருக்றார். உனகென்ன வித்தை சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதைச் சொல்லடா தம்பீ!

சாத்திரப்பாடி வசனம்: அட அண்ணா! சண்டப் பிரசண்டா! இதுக்கர்த்தம் சொல்லுகிறேன் கேளடா. மாதா வென்பது தாயாரென்ன பிதாவென்பது தகப்பனென்ன குருவென்பது ஆசாரியனென்ன தெய்வமென்ன இவர் களையே எவ்வேளையு மடித்துக் கொண்டே இருக்க வேணும். வேத சாத்திரங்களை சுத்தப்பொய் என்று நினைக்க வேணும். லோகத்துக்கெல்லாம் விரோதமாய் நடக்க வேணுமிது தானெனக்குச் சாமியார் சொல்லிக் கொடுத்த தர்ம சாத்திர விதியடா அண்ணா! சண்டப் பிரசண்டா!

சுக்கிரன் வசனம்: அட சிஷ்யா! சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி! அட துட்டப் பயகாள்! நாஞ் சொல்லிக்கொடுத்த வித்தை எல்லாங் கெடுத்து துர்வித்தை ஊறி கொண்டிருக்கிறீர்களாடா! சண்டப் பிரசண்டா!

சாத்திரப்பாடி சிஷ்யாள் வசனம்: சாமி இது! நீங்கள் சொல்லிக் கொடுத்த வித்தையே யல்லாது வேறே எங்களுக் கென்ன தெரியு மய்யா சாமி!

சுக்கிரன் வசனம்: அட சண்ட பிரசண்டா! சாத்திரப்பாடி! அட துட்டப் பயகளா! உங்களை கல்லாய் சபித்துப் போடுகிறேனடா, சண்டப் பிரசண்டா, சாத்திரப்பாடி!

சிஷ்யாள் வசனம்: சுவாமி நீங்கள் கல்லாய் சமைத்துப் போட்டால் நாங்கள் நல்லாய் பிறக்கிப் போட்டு சாப்பிட்டுப் போடுவேமைய்யா சுவாமி

சுக்கிரன் வசனம்: அட சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி! இனிமேலுங்களை நெருப்பா எரித்துப் போடுகிறேனடா! சண்டப்பிரசண்டா சாத்திரப்பாடி!

சாத்திரப்பாடி: சாமி நீங்கள் நெருப்பா எரிச்சுப் போட்டால் நாங்கள் ஒண்ணுக்கு இருந்து அவிச்சுப் போடுவோமையா சுவாமி!

சுக்கிரன் வசனம்: அட சிஷ்யா! சண்டப் பிரசண்டா சாத்திரப்பாடி! இனிமேல் நம்மிடத்தி லெதிர்த்து பேசாமல் நாம் வந்த சமாசாரத்தைக் கட்டியக்காரரைக் கொண்டு பலிச் சக்கரவர்த்தி இடத்தில் தெரியப்படுத்தச் சொல்லி வாரும் பிள்ளாய், சண்டப் பிரசண்டா! சாத்திரப்பாடி!

38. விருத்தம். **ராகம் : காம்போதி**

கன வீதியி லென்னாலுங் கண வக்கிர
கத்துக் கெல்லாமிக வதிகாரம் பெற்ற
மெய்பொருளான சுக்கிர பகவனு மேக
சுக்கிர பகனு மேகசக்கி பதிதனைக்
காணவே தன்கை மகிழ்ந்திங்கு
வந்த ராசனுக் குறைசெய் வீரே.

வசனம்: அகோ! வாருங்கோ கட்டியக்காரரே! யிப்பவம் நவக்கிரகச் சீரேட்ட ராகிய சுக்கிர பகவானானவர் பலிச் சக்கரவர்த்தியைக் காணும் பொருட்டாக எழுந்தருளி யிருக்கிறாரிது சமாச்சாரத்தை யுங்கள் இராசா கொலு முன்பாக அறிக்கை செய்யுங்கோ பிள்ளாய்! கட்டியக்காரரே!

கட்டியம் வசனம்: அப்படியே நாங்கள் போயறிக்கை செய்யுகிறோமைய்யா சிட்சாகளே!

39. விருத்தம் ராகம் : காம்போதி

வறுமை யிற்சிறந் தாய கீர்த்தி
மனுநெறி வழியாய்
நாளு மிலகிய புயத்தா யெங்கள்
இறைவனே யியம்பக் 345

கேளிர் பலமிகு தவத்தில் மெய்த்த
பார்கவன வாசல்
வந்துன் கொலுவில் முன்னறிக்கை செய்ய
கூறினார் சரணமையா.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி! செகச் சக்கிரேசுரா! இப்பவும் நம்முடைய குலகுருவாகிய சுக்கிர பகவானான வாசாரியர் வாசலிலே எழுந்தருளியிருக்கிறார்களா கையாலடியேங்களை யனுப்பி அறிக்கை பண்ணி வரச் சொன்னார்களய்யா சுவாமி செகச் சக்கிரேசுவரா!

40. பலி விருத்தம். ராகம் : காம்போதி.

வளமை கலதிக முள்ள மந்திரி மாரேகேளீர்
மாமணி யினாலே யிசைந்திடும் வாசம் தன்னில்
குலகுருவான ஞான சுக்கிர பகவான் வந்தார்
பலனுற்ற வரை போற்றி பாங்குடன் வருகிறோம்

வசனம்: அகோ! வாருங்கோ மந்திரிமார்களே! இப்பவும் குலகுருவாகிய சுக்கிர பகவானான வாசாரியர் வாசலிலே யெழுந்தருளி யிருக்கிறாரான படியினாலே நாம் யெல்லாருமாய்ப் போய் சரணஞ் செய்தழைத்துக் கொண்டு வருவோம் வாருங்கோ! மந்திரிமார்களே!

மந்திரிமார் வசனம்: அப்படியே மகாபாக்கிய மாச்சுதையா சுவாமி செகச் சக்கிரேசுவரா!

41. தரு. ராகம் : கெவுளி பந்து தாளம் : ஆதி

எங்கள் குலகுரு நாதா
உன்னிணை யடிசரணம்

தங்கும் பொருளுணர் ஞானியர்
தலைவா தவசரணம்
ஞான நந்தக்கடல் மூழ்கிய
நாதா தவசரணம்
தானா யுலகெங் கெங்கு
நிறைசாமி தவசரணம்
சென்னமொரு மரணப்பிணி
தீர்ப்பாய் தவசரணம்
முனைநம்பி னனெனை யான்தவ
முடையாய் தவசரணம்

கனத்தி னிலொளி மீறிய
கருணர் தவசரணம்
இகமுற் றிடுமென யாண்ட
இருளிறைவர் தவசரணம்
தத்துவத்தின் பொருளாகிய
தருவே தவசரணம்
அட்டாவிதயோகத்தினில்
அதிகா தவசரணம்
சிட்டபரிபாலன குரு
தேவா தவசரணம்

42. விருத்தம். ராகம் : காம்போதி

துய்யனே சரணம் ஞானச்
சோதியே சரண மாக்கு
மெய்யனே சரணம் வேத
வேதியர் சரண மாய்கைய்
பொய்யெனும் வழியை நீக்கி
பூரண பதத்தில் மேவு
அய்யனே சரணஞ் சுக்கிர
ஆச்சாரியே சரணஞ் சாமி

வசனம் (பொது): அடியேங்கள் சரணஞ் சரணமய்யா சுவாமி சுக்கிர பகவானே!

43. சுக்கிரன் விருத்தம். **ராகம் : காம்போதி**

செகதல வாழ்க வாழ்கச்
 சிறந்த செங்கோலும் வாழ்க

தகுகுவ புத்திரன் வாலா (வாழ்க)
 கத்தனம் பத்தினியும் வாழ்க
மிகுசெய வசுரர் வாழ்க
 மீறியுன் செல்வம் வாழ்க
பகவனின் னருளால் சக்கிர
 பதியென் மாவலி நீடு வாழ்க

வசனம்: அட்ட மங்களரத் தோடே தீர்க்காயு சாயரும் பிள்ளாய் செகச் சக்கிரேசுவரா!

பலிவசனம்: அகோ, கேளுங்களய்யா சுவாமி, சுக்கிர பகவானே! இப்பவும் தேவரீரடியென்னுடைய சிம்மாசனத்து கெழுந்தருள வேணுமைய்யா சுவாமி சுக்கிர பகவானே!

சுக்கிரன் வசனம்: ஆனாலப் படியே வருகிறோம் பிள்ளாய் செகச் சக்கிரேசுவரா!

44. விருத்தம். **ராகம் : காம்போதி**

நீதி சேர்மனு விக்கிஞான நெறித வறாம லெங்கும்
தீதிலா வரசு செய்யுஞ் செகச்சக்கிற பதியே கேளாய்

ஓதியுன் மனித ராலே உலகந் தனைவே கமாக
எதினா லனைத் தாயப்பா இன்ன தென்றுரை செய்வயே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் செகச்சக்கிறேசுவரா! இப்பவும் நம்மை இவ்வளவு வேகமாக அழைப்பித்த காரிய மின்னதென்று சொல்ல வேணும் பிள்ளாய் செகச் சக்கிரேசுவரா!

45. பலி விருத்தம் **ராகம் : காம்போதி**

பூவுங்கன முறுள மூதாதை யொத்த திகராச செங்கோல்
ஓங்கவே நடத்தி வந்தா னத்தை யின்னாள் வரைக்கு
மறிந்தி லேன றிந்தே னீப்போத் தெளிர் லோகந் தன்னில்
போர்செய்ய நினைத்தே னய்யா.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி! சுக்கிர பகவானே! முற்காலத்தில் என்பிதா மகனாகிய இரணியே சுரன் ஆன வர்திரி லோகங்களு மாண்டு வந்திருகுக யிப்போ தறிந்தே னாகையால் தேவரீரனுக் கிரகிக்க வேணுமைய்யா சுவாமி! சுக்கிர பகவானே!

46. சுக்கிரன் விருத்தம். **ராகம் : காம்போதி**

என்னதான் சொல்வேன் சிங்க மீன்றிடுங் குட்டியே நீ
சொன்னதை மெய்த்துக் கொண்டேன் சுரர்பதி தன்னை யிப்போ
பன்னக மீதிற் சீறி பாய்ந்திடுங் கருடன் போலே
சின்னா பின்னங்களாகச் செயிப்பதே வீரிய மன்னா.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய்! செகச் சக்கிரேசுவரா! ஆகா! உன்னுடைய சவுரிய பராக்கிரமத்தைக் குறித்து நானென்ன சொல்லப் போகிறேன். சிங்கக் குட்டிக்கு யானை வேட்டை சொல்லிக் கொடுக்க வேண்டியதாயில்லை. இப்படிப் போலே நீ தேவலோகத்தைச் செயம் பண்ணி இந்திரனை வெல்லுவதே சர்வ உத்தமமாக இருக்கிறது. ஆனால் அந்த இந்திராதி தேவர்களுன்னைக் கண்ட மாத்திரமே கருடனைக் கண்ட சர்ப்பம் யொடுங்கி போவார்களே யல்லாமல் வேறில்லை. ஆனபடியினாலே இதுவே சவுரியம் புருட லெட்சணம் பிள்ளாய்! செகச் சக்கிரேசுவரா!

47. பலி விருத்தம். **ராகம் : காம்போதி**

துங்கமாம் சுரர்க்கெல்லாந் துலகுப தேசஞ் செய்யு
எங்குல குருவே யுந்தனி ணையடி சிரமேற் கொண்டு
பொங்கிய இந்திரன்மீது போர்செய் துவெல் வதற்கு
மங்கள தினமொன் றிப்போ வகையுட னருள்செய் வீரே.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி சுக்கிர பகவானே! தேவரீருடைய பாதார விந்தத்தை அடியேனு டைய சிரசிலே வைத்துக் கொண்டு அந்தத் தேவேந்திரனை வெல்லுகிறதற்கு யுத்த சன்னாகஞ் செய்ய வேண்டி யிருப்பதால் ஒரு விசேஷய முள்ள தினம் பார்த்துச் சொல்ல வேணுமைய்யா சுவாமி சுக்கிர பகவானே!

சுக்கிரன் வசனம்: ஆனாலப்படியே பார்த்துச் சொல்லுகிறோம் பிள்ளாய்! செகச் சக்கிரேசுவரா!

பலிவசனம்: அப்படியே மகா பாக்கிய மாச்சுதையா சுவாமி! தேவரீர் ஆசிரமத்துக் கெழுந்தருளலாமைய்யா சுக்கிர பகவானே!

சுக்கிரன் வசனம்: அப்படியே! போய் வருகிறோம் பிள்ளாய் செகச் சக்கிரேசுவரா!

48. பலி விருத்தம். ராகம் : காம்போதி

முக்கிய தினமீ தென்று முனிவர் சொல்ல அந்த 385
சுக்கிர பகவான் றன்னை தொழுதுரை கொண்ட மன்னன்
அக்கண மருகி ருந்த வமச சாகன தம்மை
நோக்கி திக்குள தளங்க ளெல்லாம் சென்றான்பா ரென்றானே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் கட்டியக்காரா! இப்பவும் நம்முடைய தேசங்களுக் கெல்லாம் பிரதான மாயிருக்கப்பட்ட ராயசக்காரனை அதிசீக்கிரமாக அழைப் பிவியும் பிள்ளாய்! கட்டியக்காரா!

கட்டியன் வசனம்: அப்படியே! மகா பாக்கியமையா சுவாமி!

பாணாசுரன் வசனம்: அகோ! கேளுமையா ராயசக்காரரே! யிப்பவும் நம்முடைய மாவலிச் சக்கிரவர்த்தியினுடைய மகாசபைக்கு பாணாசுரன் முதலாகிய மந்திரிமார்கள் அழைத்துவரச் சொன்னார்களான படியினாலே அதி சீக்கிரமாக வாருமைய்யா ராயச் வல்லவரே!

வசனம்: அப்படியே வருகிறோம் பிள்ளாய் கட்டியக்காரா!

49. விருத்தம். **ராகம் : காம்போதி**

வட்ட வண்ணுடுவும் பூவும்
வாருதி மணலுங் கண்ணுக்
கெட்டிலா வனத்தில் மேவு
மாபெருமரமும் பொல்லா

துட்டர் கன்மனமுங் காட்டித்
தோகை வகையுடனே செய்யும்
மட்ட வதானந் தன்னிலதி
காரயசன்வந் தானே

50. தரு **ராகம் : சகானா** **அடதாளம் : சாப்பு**

கொங்கணர் திராவிடர் பப்பார் சாலுவர்
கூர்சர் நிசாதரக் கெழுது வேனே
சிங்களர் கேகையர் பாண்டியர் நதிரர்
சிந்தூர் சோழருக் கெழுதுவேனே
வங்களர் போசர் கரோசர் விதேகர்
மருடர் விராடருக் கெழுது வேனே

டங்கணர் மச்சர் கலிங்கர் புலிங்கர்
அடங்க லுமவர் நானெழுது வேனே
பலிவா சலில ராயச் நானே
மாவாசலின் ராயச நானே
சலியா மலட்டாவ தானங்கள்
செய்வேன் நான் (பலி)
செகத்திலுற்றி திறத்தில் மெய்த்த மிக
சமத்த வித்தை கற்ற (பலி)
இந்திரன் மேலே யெதிர்ப்பதாலே வந்தன
நோலை வகுப்ப தாலே (பலி)

எந்தனைக் கண்டு எவரும் விண்டு
வந்தனங்கொண்டு வருமென மிண்டு (பலி)

51. விருத்தம்: **ராகம் : காம்போதி**

இப்பதி னாலு லோகத் திறைவனே போற்றி போற்றி
செப்பருங் கீர்த்தி பெற்ற தீரனே போற்றி போற்றி
ஒப்பிலா மகிழ்ச்சி கொண்டே ஓங்கு தானவருக் கெல்லாந்
தப்பிலா வாசுசெய்யுஞ் சக்கர பூபதியே போற்றி போற்றி

வசனம்: அடியேன் சரணஞ் சரணமய்யா! சுவாமி செகச் சக்கிரேசுவரா!

52. பலி விருத்தம்: ராகம் : காம்போதி

கணக்க திகார மெல்லாங்
 கடைந்து தன்மனதிற் கொண்டு
வணக்கமும் பண்பு முள்ள
 வலிய ராய்ச நீ கேளாய்
மணக்கும் பொன்னகரில் வாழு
 மன்ன னிந்திரனை வெல்ல
இணக்கமாய் நமது சேக் கெழுதி
 இங்க ழைப்பிப் பாயே.

பலி வசனம்: அகோ வாரும் பிள்ளாய் ராயசக்காரா! இப்பவும் நான் தேவ லோகத்தின் பேரிலே யுத்த சன்னாகம் செய்ய வேண்டி இருப்பதாலந்த அன்பத்தாறு தேசங்களிலே யுள்ளராச சேனாதிபதிகளையு மட்ட திக்குகளிலே யுள்ள அசுர சேனாதிபதிகளையு மதி சீக்கிரத்துக்கு வரும்படியாக எழுதி அழைப்பிவியுங்கள் பிள்ளாய்!

ராயச வல்லபர் வசனம்: அப்படியே! மகா பாக்கிய மைய்யா சுவாமி! செகச் சக்கிரேசுவரா! அகோ! கேளுங்ளையா சுவாமி! செகச் சக்கிரேசுரா! இப்பவுந் தேவரீருடைய ஆக்கினாச் சக்கிரப்படிக்கு அன்பத்தினாறு தேசத்து ராச சேனாதிபதிகளையு மட்ட திக்குகளிலே யுள்ள அசுர சேனாதிபதிகளையும் வரும்படியாக நிருபமெழுதி முகிந்திருக்குதையா! சுவாமி செகச் சக்கிரேசுவரா!

பலி வசனம்: அகோ வாரும் பிள்ளாய்! ராயச வல்லபா! யிந்த நிருபத்தை அந்தந்தத் தேசங்களிலே சேர்ப்பிவிக்கும் படியாக நம்முடைய அஞ்சல் சேர்வை காரனாகிய மனோ வேகனிடத்தில் கொடுத்து அதிவேகமா யனுப்பிவிய்யும் பிள்ளாய்!

ராயச வல்லபர் வசனம்: அப்படியே மகா பாக்கிய மாச்சுதய்யா சுவாமி! செகச் சக்கிரேசுவரா!

வசனம்: அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா! யிப்பவு நம்முடைய செகச் சக்கிரேசுவரனாகிய மகாபலிச்

சக்கிரவர்த்தி யாக்கினாபித்த திவ்விய மங்கள மகா பிரசாத நிருபத்தை யன்பத்தாறு தேசங்களிலே யுள்ள ராச சேனாதிபதிகளுக்கு மட்டதிக்குக் களிலே யுள்ள சேனாதிபதிகளுக்கு அனுப்பி விக்க வேணும் ப யினாலே நம்முடைய அஞ்சல் சேர்வை காரனாகிய மனோ வேகனை அதிசீக்கிரமாக அழைப்பிவிய யும் பிள்ளாய் கட்டியக் காரர்களே.

வசனம்: அப்படியே அழைத்து வருகிறேனைய்யா ராயச வல்லபரே. அகோ வாரும் பிள்ளாய் அஞ்சல் சேர்வை காரனாகிய மனோவேகா. இப்பவும் நம்முடைய ராயச வல்லபரானவர் சீக்கிரமாக அழைத்து வரச் சொன்னார் பிள்ளாய்! அஞ்சல் சேர்வை காரனாகிய மனோ வேகா!

53. விருத்தம்: *ராகம் : காம்போதி.*

குஞ்சமுங் கிலுக்குஞ் சேர்த்த கோலொன்று கையி லேந்தி
வஞ்சிய ராசை கொள்ளு மன்னர் மாவலிதன் துய்ய
நெஞ்சினில் நினைத்த தெல்லா நிமிஷத்தி லுரைத்து மீளும்
மிஞ்சிய வஞ்சல்க் கார வேகனுந் தான்வந் தானே.

54. தரு: *ராகம் : புன்னாக வராளி.* *அடதாளம்.*

வேகனிதோ வந்தனஞ் சலமனோ வேகனிதோ வந்தான்
வாகுடனே பலிராச னிருபந் தன்னை

லோகத் தசுரர்க்கு மராசற் குந்தெரி விக்கவே
சருகை யுமா லதுலங்க மார்பிலணிந்த சரப்பணி தானிலங்க
இருகாதிலு மிட்ட வொட்டுத் தலித தென்ன
வருகை யிலஞ்சல் கொலத்த ளுக்குப் பளப ளென்ன
காலில் சிலம் பொலிக்க நடை விசைக் காற்றுந்துடர்ந்து சலிக்க
ஞால முழுது நொடிநொந் தனிலே செல்ல
சீலமுடனே பலிராசனோ லையைச் சொன்ன

வசனம்: அடியேன் சரணஞ் சரண மைய்யா! சுவாமி! அடே! வாடா! அஞ்சல் சேர்வைக் காரனாகிய மனோவேகா! இந்த நிருபத்தை யன்பத்தாறு தேசங்களிலே யுள்ளாரச் சேனாதிபதிகளுக்கு மட்டதிக்குக் களிலே யுள்ள தான சேனாதிபதிகளுக்கு மொரு நிமிஷத்திலே கொண்டு போய்

கொடுத்து விட்டு வரும்படியாக அனுப்பி வைய்யும் பிள்ளாய் அஞ்சல் சேர்வைக் காரனாகிய மனோ வேகா!

55. விருத்தம். *ராகம் : காம்போதி*

மண்டலாதி பனாஞ் சக்கிர
மாவலி நிருபந் தன்னை
கண்டுடன் திக்கிலுள்ள
கருந்திரன் சுரர் சென்னி
கொண்டுதன தளங்க ளோடு
கொடுங்கனல் விழிகள் பாய

அண்டர்கோன் பதி வெல்வோ
மென்றரசன் முன் வருகின்றாரே.

56. தரு. *ராகம் : மோகனம், அட தாளம் சாப்பு*

தானவ ரெல்லோருங் கூடினர்
பலிச்சக்கிர பூபதி முன்னே நாடினார்
இனமாய் மரைப்பேசி னாரதி கெட்டு
நடுங்கக் கத்தி வீசினார்
சூலங் கதைவில் லுத்தூக்கி னார்வெகு
சூரத் தனத்தையுண் டாக்கினார்
ஆலகால மென சீறினார்
ஆகையடங் காம யெங்குகங்கு மீறினார்

கருமலை போலவே தாவினார் பெருங்
கடலொலி யோயவே கூவினார்
நிருதாத மமீசை துடிக்கின்றார் தங்கள்
நீண்ட இதழை மடிக்கின்றார்
கோரமான பல்லைக் காட்டினா ரண்ட
கொள்மட்டுங் கையை நீட்டினார்
பாரடங் கலுங்வந்து முட்டினார்
சக்கிரபதிதனைத் தொழுதிடக் கிட்டினார்.

57. விருத்தம். *ராகம் : காம்போதி*

தாரணி புயத்தாய் போற்றி சந்திரவதனா போற்றி
காரணி நிறத்தாய் போற்றி கருணையில் மிகுத்தாய் போற்றி
போரணி திறத்தாய் போற்றி புகழின்ற பெருத்தாய் போற்றி
சீரணி தனத்தாய் போற்றி செக்சக்கிர பதியே போற்றி

வசனம்: அகில செனனாதா! அமரர் குலபேதா! அமரர் பொரு பிரதாபா! அசுரகுல தீபா! அடியேங்கள் சரணஞ் சரணமைய்யா சுவாமி செகச் சக்கிரேசுவரா!

58. பலி விருத்தம். **ராகம் : காம்போதி**

அலைகடல் போலு நீண்ட ஆற்றி நுண்மணலைப் போலு
நிலைசொல வரிய தான நிருத்தறே விளம்ப கேளீர்

சிலையில் சூலங் கொண்டு தேவரை நொடிக்கு ளிப்போ
கொலை செய்ய வேணும் நீங்கள் குதித்தெதிர் பாய்க்கு வீரே.

வசனம்: அகோ! வாருங்கோ மகாபுசபெல பராக்கிரம சாலிகளான அசுர சேனாதிபதிகளே! இப்பவு நாந் தேவலோகத்தின் பேரிலே யுத்த சன்னாகஞ் செய்ய வேண்டி இருப்பதால் நீங்க ளெல்லோரு நம்முடைய பாணாசுரனுத் தரவுப் பிரகார நடந்து கொண்டு அதிவேகமாக அவரவர் களாயுத மொளிதப்புடனே இந்த நிமிஷத்துக்கு தண்டு தயார் செய்யுங்கோ! அசுரர் சேனாதிபதிகளே!

வசனம்: அப்படியே! ஆக்கினாச் சக்கிரப் பிரகாரம் நடந்து கொள்கிறோமைய்யா சுவாமி! செகச் சக்கிரேசுவரா!

59. ராசர்கள் விருத்தம். **ராகம் : காம்போதி**

மன்னன் மாவலி யினோலை வந்ததைச் சகல தேசந்
தன்னிலே யுள்ள ராசா தஞ்சிரமேற் கொண்டு
உன்னிதப் பரிகள் யானை ஓங்கு மாதளங் களோடு
மின்னிரை மடவார் சூழ விரணியபுரம் வந்தாரே.

60. தரு: **ராகம் : சாவேரி.** **ஆதிதாளம்**

மகிமன்னர் கள்திரண்டு வந்தார் மாவலி
யோலையை வணங்கிச் சிரமேற் கொண்டு (மகி)
கனவருல கினிலசுரர் போதனை யெண்ண
கத்தன்மா வலியைவலஞ் சுத்தயேவந் தணைபண்ண
(மகி)

மச்சர் மானர் விராடர் கொச்சி
கொங்கண கன்ன ரீழர் அச்சிசோர்
போசர் அதீட்ச ணர்பாஞ் சாலர்
குச்சார்... பபார்.... குரு

கச்சி விதற்ப விதேகர் உச்சி
சோழ பண்டிய சுரோச்சனர் முதலாக (மகி)
சிங்களர் மகதர் ஆந்திரர் வங்கணர்க்கு
குதாமார் டாடங்கண வ[illegible]
கொங்கு கேட விராடர் குடகர்
பொங்கு நிடதர் ராரியர்
கலிங்கர் செகிபர் வளுவர் மங்கள
கேகயர் புலிங்கர் கோசலர் முதல் (மகி)
வந்தி காயர் பாணர்கள் யுகந்தார் நேபாளர்கள்
குந்தளர் கோளர் பெருஞ்சிந்து திராவிடர் துளுவ
ரந்த மாம் புவுண்டர் சோணர் தந்திர சீனர் காசிரர்
சுந்தர சால்வர் திருசுந்தர சந்தி சவுராட்டா

61. விருத்தம். *ராகம் : காம்போதி*

மண்டல முழுதுங் காக்கு மாவலி மன்னா போற்றி
கண்ட காவலி யொடுங்குங் கனக மாபுரத்தாய் போற்றி
தண்டமிழ் வாணர்க் கெல்லாந் தருவெனத் தழைத்தாய் போற்றி
திண்டரு புயத்தா யெங்கள் செகசக்கிர பதியே போற்றி.

வசனம்: *சகல தர்மப் பிரதாபா! அடியெங்கள் சரணஞ் சரணமைய்யா சுவாமி! செக்கிரேசுவரா!*

62. பலி விருத்தம். *ராகம் : காம்போதி*

செப்பிய வன்பத் தாறு தேச மன்னவரே
கேளீர் இப்பொழுத மரர்தம் மோடிந் திரனை
வெல்வ தற்கு வொப்பிலா வசுர ரெல்லா
மொருமித்துத் திரண்டார் நீங்கள் துப்புடனவ
ரோடே இத்துரியத்திற் படைசெய் வீரே.

வசனம்: அகோ! வாருங்கோ! மகா புசபெல பராக்கிரம சாலிகளான அம்பத்தாறு தேசத்து ராசாக்களே! இப்பவு நாந் தேவலோகத்தின் பேரிலே யுத்த சன்னாகஞ் செய்வதற்காக அசுர சேனாதிபதிகளை எல்லா மழைப்பித்திருந்தால் நீங்களு முங்களுடைய ரத, கெச, துரக பதாதிகளுடனே நம்முடைய சேனாதிபதி யாகிய பாணா சுரனிடத்திலே போயவனுடைய உத்திரவுப் பிரகாரம் நடந்து கொண்டு அதிவேகமாக

அவரவர்களாயுத மொளிப்புடனே யிந்த நிமிஷத்துக்கு தண்டு தயார் செய்யுங்கோ! அன்பத்தாறு தேசத்து ராசாக்களே!

வசனம்: அப்படியே ஆக்கினாச சக்கிரம் பிரகாரம் நடந்து கொள்கிறோ மைய்யா சக்கிரேசுவரா!

63. விருத்தம். **ராகம் : காம்போதி**

மேருவை நிகர்த்த வீர விசைய பாணா கேளாய்
தாருகன் முதலா யுள்ள தலைவரும் படையுங் கூட்டி
வாருதி திரண்டாய் போலே வகுத்தணி பிரித்துப் போது
பாரினிற் நம்முடைய கொடியும் போட்டு பாளையஞ் செய்குவீரே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் பாணாசுரனே! தாருகாசுரன் முதலாகிய படைத்தலைவோரையுஞ் சேனை களையு மணிபிரித்து வடக்குக் கோட்டை வாசலுக்கு வெளியிலே பாளையஞ் செய்து செயக்கொடியும் போட்டு தண்டு தயார் செய்யும் பிள்ளாய் பாணாசுரனே.

வசனம்: அப்படியே! மகா பாக்கியமய்யா சுவாமி செகச் சக்கிரேசுவரா!

64. விருத்தம். **ராகம் : காம்போதி** **ஆதிதாளம்**

தந்தையெனு மாவலி யிவ்வாறு கூறத்
  தாழ்ந்து விடைகொண்ட தொருபாணன் றானும்
வந்த பெருமசுரர் படைத்தலைவர் தம்மை
  வருந்தியவர் வாதமது தளங்க ளெல்லாம்
பந்திபந்தி யாக வணிவகுத்துமேலும்
  பாருநடு நடுங்கிடவே யானை மீது
துந்துமெனச் செயபேரிகை முழங்கி யெங்கு
  துலக் கென்றான் வானவரைக் கலக்கென் றானே.

65. தரு. **ராகம் : மோகனம்.** **அடதாளம் : சாப்பு**

செயபேரிகை அடிப்பீரே - வெகு
  திறமுள்ள படைத்தலை வோரே
பயத்தினா லமரர்க ளொடுங்கி நடுநடுங்கப்
  பதினாறு கோணமும் விளைந்து கிடுகிடெனச் (செய)

பரித்திர னொரு புரந்துள்ள - அதன்
பக்கத்திற் சேனை யிலுள்ள
கரிக்குல மடங்கலுந் துள்ள - வைத்து
காலாழு மாதங்களுக் கடுகிவெற்றி கொள்ள (செய)
வீரராயிரம் வெள்ளங் கூடக் - கொண்டு
விசைய மாரீசர் நீபோடா

நெருங்கொசு நமக்கொ ரீடா - யிந்த
நிமிஷத்தி லிந்திரன் மிரண்டு பயந்தோட (செய)
தோகையியசுரர் வெள்ளங் கொடி- யுடன்
சூழ்ந்து கொள்ளுவோம் விண்ணை நாடிப்
பகையான தேவர்கள் வாடித் - தங்கள்
பதிவிட் டிடவே நீங்க ளனைவருங் கூடி (செய)

66. தரு. பொதுஆசிரிய விருத்தம் ராகம் : காம்போதி

இப்படியே செயபேரி கையடி யெனஇறை
யவனுரை தாலால்
இரொரு புவனமு மீறிய புசபெல
இராட்சத ரனைவர்களும்
வெப்புடனே பெருமிரணி யபுரமதை மேவி
னந்தப் பொழுது
மேதினியோர் புகழ்மாவலி நாதனை
விரைவுடனடி தொழவே
மைப்பொரு மேனியன் கணமே எதிர
வருபடை யதிபர்களை
மகிழ்வுடனே செயவுரை தரவ
வரவர் வரிசை
கொள்நா ளையினில் கற்பக
நாடுறை யமரர்
களதி பதிகளை மிகு சிறப்புடை
நற்கொலு வதனிற்
காதலியுடன் வரு சோபித விதமிது
கண்டுரை செய்குவேனே.

67. இந்திரன் கட்டியம் விருத்தம். ராகம் : ஆனந்தபயிரவி

அட்ட மாதிக் குள்ளோரும் மாருமே தொழுது போற்றத்
திட்ட மாயத் தருணங் கண்டு செயமுறை யுரைப்ப தற்கு
சிட்டனாந் தேவ ராசன் றிருக்கொலு வதுமுன் பாகக்
கட்டியக் காரன் வந்து களரியை விளக்கின் றானே.

68. தரு: ராகம் : மத்திமாமதி ஆதிதாளம்

கட்டியக் காரன் வந்தான் தேவேந்திரன் வாசல்
கட்டியக் காரன் வந்தான்
மட்டிலா லமரர் கிட்டிக் கற்பகமலர்
கொட்ட மகபதி யினிட்ட மறிந்துரைக்குங் (கட்டி)

சித்திர முனிவர் முதல் சப்த ரிஷிகள் தம்மை
மெத்த வந்தனை செய்து பெற்ற வரத்தி னாலே

மத்த கெசத்தைப் போலே எத்திசையி லுந்தாவி
கத்தன் கொலுமுன்பா கச்சத்தோ சத்தென்று கூவி (கட்டி)
தங்கப் பதைக்க மதிற்பொங் குமணி யினொளி
எங்குந் தளத ளென்றி லங்கு மணியுடனே
சிங்க மெனவே கெற்சித் தங்கம் புகைமிட

மங்கள வோசை தரங்க மென்மு ழக்குங் (கட்டி)
கின்னரர் கெருடர்திசை மன்னவர் தும்பு ருயிசெ
பன்னு நாரதர் கெந்தருவ ரென்னுமிவர் தமை யெல்லாம்
பொன்ன கரக்கிறைவன் சபை தன்னிலே யவர்க்கு
இன்னை யிடமிரு யென்றுன் னியேதாம் வகுக்குங்
(கட்டி)

வசனம்: எச்சரிக்கை சுவாமி! பராக்கு! சுவாமி வெகு பராக்கு! எச்சரிக்கை! அகோ! தெப்படி யென்றால் தேவாதிதேவன் தேவராசேந்திரன் தேவகுலோத்தமன் தேவதா சர்வபூமன் பொன்னுலகத்தை யாளப் படானென்ற தேவேந்திர மகாராசர் வானவர் நவரெற்றணை சிம்மாசன கொலு மண்டபத்துக்குள் எழுந்தருளிகறபடியினாலே தேவமுனிவ கெருட கந்தருவ சித்த வித்தியாதர் கின்னர கிம்புருஷாதி சமஸ்தானமான தேவர்களனைவோரும் வெகு வணக்கத்துடனே யவர் வாஸ்தானங்களிலேயே எச்சரிக்கை யாயிருங்கோ! பராக்கு! பராக்கு! சுவாமி பராக்கு! வெகு பராக்கு எச்சரிக்கை!

69. இந்திரன் விருத்தம். ராகம் : ஆனந்த பயிரவி

தன்னி கரிணை யில்லாத தருமலர் தூவ தேவ
கன்னி யராட ரூப காந்தருவா கீதம் பாட
பொன்னணி மகுட மின்ன் புனித யிந்திராணி கூட
இன்னுரை யமரர் சூழ இந்திரன் வருகின் றானே

70. தரு. ராகம் : காம்போதி அடதாளம் : சாப்பு

விண்ணுல காளுந் தேவந்திர மகராசன்
விளங்கினான் கொலுவில்

புண்ணிய முனிவர் மகஞ்செய் துய்யப்
பூரண குடங்கொண்டு
தேவர்களை வந்தனை செய்ய (விண்ணு)

சித்தர் முனிவர் கெருட காந்தருவர்
சேவை செய்தொரு புறத்தினில் நிற்க
உத்தமியான இந்திராணி யுடனே
உகந்து சிம்மாசன மீதிருந்து மிக்க (விண்ணு)

எச்சரிக்கை நீங்களிமை யரே
என்று யடிபோலவே பெருங் கட்டியங் கூவ
பட்ச மிகுந்த அரம்பை முதலான
பாவையர் கற்பக மாமலர் தூவ (விண்ணு)

வருணனிரு கரங் கூட்டி யெதிர் நின்று
வருஷித்தென் பூமி செழித்து தென்று சொல்ல
கருணையுடனே வச்சிராயுத மேந்திக்
கண்டக ராகிய மிண்டதனை வெல்ல (விண்ணு)

71. தரு. கட்டியம் ஆசிரிய விருத்தம். ராகம் : காம்போதி

தருமருவு பொன்னகரில் நிருபனென
வந்துதவு தலைவனே வெகுபராக்

தானவர்கள் குலகாலனான்செய
தீரானஞ் சாமியே வெகு பராக்
சித்தர் முனிவோர்மார் சத்தரிஷியோர்
துதிசெய் சிங்கமே வெகு பராக்
மருமரா(வு) தேவியுடன் ஒருகுடை யிலாளு
மாமகிபனே வெகு பராக்
வள்ளலென வோர்பெரும் வெள்ளானை மீதில்
வருவாசவா வெகு பராக்
கருமருவு மேகபதி பெருமையுள லோகபதி
காண்கிறார் வெகுபராக்
ககனவர்கள் குலதிலக மகமதி யெனதுதிசெய்
காமனே வெகுபராக்

வசனம்: பாரக்கு! பராக்கு! சுவாமி பராக்கு! எச்சரிக்கை. அகோ! தெப்படி யென்றால் தேவதேவர் தேவநாயகா! தேவசிகாமணி ! தேவரர் செந்திரா! கனகாபரண பூஷிதா! கற்பகத் தருக்காரா! புங்கவர் பணிபாதா! புத்தெளிர் லோகாதிபர் போத்தும் புரந்தரா! புகழுமிந்திராணி லோலா! திருவருள் சிறந்த வதனா! செங்கண் மாலான பொருளே! செய்ய வானிளவரசே! தேவ தேவந்திர துரையே பராக்கு! பராக்கு! சுவாமி பராக்கு! வெகு பராக்கு! எச்சரிக்கை!

72. வியாழ பகவான் விருத்தம். ராகம் : ஆனந்த பயிரவி

ஆதியா மறையோர் நான்கு படர்ந்தி டுங்கால் மூன்று
கோதிலாத் தத்துவ மற்ற குணம்பொருள் நெறிக ளெல்லா
நீதியா யறிந்து தேவர் நிலைபெற வுபதே சிக்கும்
வேதிய ரெற்றின மான வியாழனுந் தான்வந் தானே

73. தரு. ராகம் : சுருட்டி தாளம் ஆதி

வியாழ பகவான் வந்தான் சபைதனில்
வியாழ பகவான் வந்தான்
தியானஞ் செய்து பிரமானந்த
திவ்விய ஞான மூலந் தெரிந்த (வியாழ)
யோக வேட்டி விரித்துச் சிரசினி லுகந்து
குள்ளத் தேகத்திற் கோவி பூசிப்
பகவதி திவ்விய நாமம் பேசி (வியாழ)
கரத்தில் பொஸ்தகங் கொண்டு
தினசுத்திக் கருத்துடன் எதிர் விண்டு
வரத்தில் மிகுந்த நாதன் நவக்கிரக
வல்லமை யுள்ள வேதன் (வியாழ)
வாசவன் பணிநேசன் நல்ல
வான வர்க்கும் தேசன்
மாசறு திடசித்தன் - வெகு
மகிமை யுள்ள கர்த்தன் (வியாழ)

74. இந்திரன் விருத்தம். **ராகம் : ஆனந்த பயிரவி**

தத்துவப் பொருளே போற்றி சற்குண நிதியே போற்றி
நித்திய தருவே போற்றி நிமலனே குருவே போற்றி

முத்தியின் வழியாய் போற்றி மொழிந்திடு முதலாய் போற்றி
வித்தக முடையா போற்றி வியாழனே போற்றி போற்றி.

75. தரு. **ராகம் : மங்கள கவுசிகை** **அடதாளம் : சாப்பு**

திருவடி வந்தன மையா தேவ குருவே
வந்தருள் மெய்ஞான மெய்யா (திருவடி)
முப்ப துடனே முக்கோடி தேவர்
முழுவதும் பணிகிறோம் முன்பதங் கூடி
செப்பும் பவபயந் தொழவி டுந்திருக் கண்ணருள்
சற்றே பார்த்திடு னாடி (திருவடி)

கருணைக் கடலெனு மெய்யா வுன்னைக்
கண்டபோ துன்பம் பக்குமே மெய்ய
தருணமிது கிருபை செய்ய நாங்கள்
சாட்டாங்க மாகப் பணிகிறோந் துய்ய (திருவடி)

நெறியி லுயர்ந்திடு சுத் தரவனர் நேம
நெறித வறாமல் செயகர்தா
அறிவி னுளறிவான் நித்தர் வுன்னை
அறிபவ ரார் நாங்கள் சிறியவர் முத்தா (திருவடி)

76. இந்திரன் வியாழன் - ஆசிரிய விருத்தம். ராகம் : மத்திமாவதி

தேவகுரு வாகிய வளர்வியாழ பகவானே
வுன்செம் பொன்னடி சரண மையா

திங்களு மும்மாரியே பொழிய வாசு
புரிதேவர் செந்திர வாழி
சித்த ரோடு முனிவோர் செய்ய
செய்யாகா திகற்மங்கள திறமுடவடந்து வருதா
தீரனே யுனது வச்சி ராயுத மகிமையாற்
சீரு டடைக்கு தையா
மூவருடனே சகல தேவகெண பூசையது
முறைமையில் நடந்து வருதா
முக்கிய முடவே வுனது பத்தியது போல
மறைமொழிப்படி நடக்கு தையா

முகிலேழுமே முறைமை தவறாமலே புவியில்
மூன்று மழைபெய்து வருதா
மோதுநெடுவரு ஷங்கள் தவறாது
சென்னல் முத்துகள் கொளிக்கு தையா
பாவலர்கள் முதல்வேத வேதியர்கள் தம்மகிமை
பாங்கு டடைந்து வருதா
பால தருகோ விப்பிரா பூசையே
பெரிதிற் பழுதொன்று மில்லை யையா
பாராளு மன்னர் கள்நீ திதவ றாமலே
பண்புட னடக்குரார்

பக்தி யிறையாறி லொரு கடமையது
கொண்டுகுடி பாலனஞ் செய்யு றார்கள்
காவல்மிகு வணிகர் பலயா பார நேர்மைகள்
கணக்கு டனந்து வருதா
களவில்லை கொண்டதிற் காணி யரைமா
காணி கண்டுவிலை செய்கி றார்கள்
காராளர் செய்கின்ற விபசாய பலமேனி
கைகொண்டு கூடி வருதா
கருணைதரு பூமி யதுவொன் றுபல
கோடியாய் கனகமே விளையு தையா

77. **விருத்தம்,** *ராகம் : சாவேரி*

அண்டர் கோனிந்த வண்ண
மாசு கொண்டிருக்கும் நாளில்
பண்டு துறவாச யோகி
பகர்ந்திடுஞ் சாபம் வந்து
கண்ட காவுணர் நாதன்
கருத்தினிற் புகுந்து விண்மேற்
சண்டை நாஞ்செய்வோ மென்று
தளங்களை விடுவிக்கின் றானே.

78. **தரு.** *நொண்டி ராகம் : குறிஞ்சி.* *ஆதிதாளம்*

செயபேரி தன்னை அடித்தார் - வானவர்
பயந்து நடுநடுங்க யெக்காளம் பிடித்தார்

கத்திகள் தனையே எடுத்தார் - நடவென்று
மெத்தப் படைத்தலைவர் கடுகடுத்தார்
பணிமிக வணிவாரும் மாவலி - இணையடி
மிசை வந்து பணிவாரும்

சூலங்கதைகள் தூக்கினார் - விண்மிசையால
காலம்போலே கண்ணோக்கினார்
சபதங்கள் மெத்த பேசினார் - கோர
மாந்தபன் னெனவே யிருவிழி வீசினார்
வெண்குடை தனை விரித்தார் - துடை தட்டிக்
கண்பொறிதனை கொட்டிக் கொக்கரித்தார்

ரதங்களிலடி பதித்தார் கேச - துரதங்களின்
மிசையவர் வர குதித்தார்
மகிமிசை நடப்பார் சிலரடங்காமல் - ககனத்தின்
வழிகொண்டு கடப்பர் சிலர்
இடம்வலம் வருவர் சிலர் திசை யெங்குங்
கிடுகி டெனவே யுரைதரு வர்சிலர்
தவிலொடு பம்பை சின்னம் வீரரணங்கு
வலைய மதுகிழிபட வின்னம்
ஐந்துவிதப் பெரிதான மடக்கை யில்மென
அதிர்ந்து தேயண்ட கோளம்

வல்லுலக்கை தண்டு சூலஞ் சக்கிரம்
வல்லையம் பரிசனத்து வருகோலம்
சொல்ல யிறபயந் தோணும் இவர்க்கினி
எல்லை யிலெதிர் சொல்வ தேவர் காணும்
இப்படியார் பாராஞ் செய்து கொண்டப்
புரமுடன் வந்தார் வெகுதூரம்
அன்னவர் களொன்று கூடி யெல்லோரும்
பொன்னகர் தனைவளைந் தாரே நாடி

79. இந்திரன் வாசல் காவலர் - விருத்தம். ராகம் : ஆனந்த பயிரவி

சீலமாய விண்ணை யாளுந் தேவர் தன்னரசே கேளாய்

கோல மாமாட கூடங் குலவு நன்னகரை சுற்றி
ஆலமோ வல்லால் நேரும் அசுரர் தன்படையோ வென்ன
காலமோ பார்க்கும்போது கண்களி லடங்கா தையா

வசனம்: அகோ! கேளுங்களைய்யா சுவாமி தேவேந்திர மகராசனே! நவரெற்றின சகிதமாகிய மாடகூட கோபுரங்கள் சூழும் படியான நம்முடைய பொன்னகரை சுற்றி யாலகால விஷத்துக்குச் சமதையாகிய அசுர சேனைகள் வந்து சூழ்ந்திருக்குதைய்யா சுவாமி தேவேந்திர மகாராசனே!

80. விருத்தம். *ராகம் : சாவேரி*

வந்துரைக்குங் காவலர்தன் மொழியைக் கேட்டால்
மாவலியின் சேனை களதாரு மிங்கே
எந்தவித நாடினர் காணிங்க ளெல்லா
மிருக்கையிலே என்றவர்மேல் கோபஞ் செய்தான்

சுந்தரமா மதலியின் முகத்தை நோக்கி
துரிய மதிலாத மதனைக் கொணர் வாயென்ன
முந்துமணி ரதம் வருகக் கண்டான் வேரரில்
முனைசெய்வான் குருவுடன் யோசனை செய்வானே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய்! மாதலியே! இந்த நிமிஷத்தில் நம்முடைய ரதத்தை யலங்காரம் பண்ணிக் கொண்டு வாரும் பிள்ளாய் மாதலியே!

மாதலி வசனம்: அப்படியே கொண்டு வருகிறேனய்யா சுவாமி தேவேந்திர மகராசனே!

81. தரு. *ராகம் : மத்திமாவதி அடதாளம் : சாப்பு*

இந்த யுத்தந்தனைப் பெரிதாக எண்ணவேணு
மிமையவரே இதுவரை போலல்லக் காணும் (யிந்த)

தொந்தமாய் நாங்களிரு பேருநேரும் போது
துடுக்காக நீங்கள்முந் திமுந்திவர வெண்ணாது
எங்கெங்குங் கடற்போற்சே னைபொங்கி வந்துதென்றா
இருக்கட்டுங் கிருபை கொண்டு தக்காக்கின் றேனே

மங்களக ரமாகவர் சீர்வாதஞ் சொல்லும்
வருத்தும் பேரில்நீங்க ளனைத்துந் தூரநில்லும் (யிந்த)
செயமெனது பங்கானாற் பயமற்ற ருகில்நிலனும்
தேறிய வனமிஞ்சிடி லொருமிததொ ரிடஞ்செல்லு
துயங்கட்டி யசுரரை துலைக்க வென்றுநானே
துலங்கும் வச்சிராயுதம் பெலங்கொண்டு பிடித்தே (யிந்த)
அவர்செய்வார் போரினில் வெகுவெகு மாயம்
அரிநாமம் துதித்திடில் நமக்கேத பாயம்
புவனம் விட்டது கட்டவந்த தைப்பாரும்
புருடோத்த மனுன்டென்றே முந்திடும் வாரும்வாரும்
(யிந்த)

82. விருத்தம். ராகம் : சாவேரி

இவ்வித மாயமரர்க் கேயுறுதி சொன்னானி
இந்திரனும் பிரகப்பதி பகவான் றன்னை
பவ்விய முடனிறஞ்சி யவர்வாழ்த்தக் கொண்டான்
பரிகளாயிரம் பூண்சுடதேர்மேற் கொண்டான்
திவ்வியமெனுஞ் சரங்க ளெல்லாங் காதிற் கொண்டான்
தெளிந்துஅட் டாட்சரம் தனையுள்ளங் கொண்டான்
கவ்விவரும் சுரர்பெரும் படையின் முன்னே
கதித்திட்டான் சூரியனே போலுதித் திட்டானே
துதித்து வானவர் கிளைத்து மருகிலர் மதித்து
படைக்கலங்க ளொடுத்து வருண னாதா 615

ரதமணிமய வொளிதரு மகுடமொன்றை தரித்து
மகாகுண்டல மிருகதிரென விரித்து
பணிமய மாகவே யுடலெங்குங் காட்டி
படைகள் நடுங்கவீரர் சத்தைப் பாராட்டி (ரத)
சூதுசெய்ய சுரர்கள் படையினில் தாக்கிறேன்
சூரியனத னைக்கண்ட பனிப்போலே நீக்கிறேன்
மோதும்யுத் தத்திற்செய் யந்திறத்தைப் பாரென
சீறி மூன்றுவலஞ் செயதரி நாம் முண்டெனத் தெறி
(ரத)

மேக மண்டலம் வரை கருடக் கொடி பறக்க
விளங்கும் ரதத்தின் மணியோசை எங்கும் சிறக்க 620
வாகுடன் கருடர் கின்னரர் மலர்மாரி பெய்ய
மாதலியொரு பெருந்தவளச் சங்கோசை செய்ய (ரத)

வசனம்: அகோ! கேளுங்களைய்யா தேவதைகளே! இப்போது பலி முதலாகிய பேர்கள் யுத்தத்துக்கு வந்திருக்கிற ஆருடத்தைப் பார்த்தாலிது வரையும் நமக்கு மவர்களுக்கு நடந்திருக்கிற யுத்தம்போலே காணப்படவில்லை யவர் களுக்கு கொஞ்சம் செய்காலத்தை யுத்தேசித்து வந்திருக்கிற படியினாலே நாம் ஸ்ரீமான் நாராயணனுடைய பாதார விந்தத்தைச் சிரசிலே வைத்துக் கொண்டு நம்மாலே இயன்றமட்டும் ஒருகை பார்க்க வேணுமேயல்லாது வேறில்லை யானாலிந்த யுத்தத்தில் நீங்களெல்லோருமே ரதத்துக்கு முந்தாமலப் பின்னாலே யிருந்து என்னுடைய செயா செயத்தைத் தெரிந்து கொண்டு நீங்க ளெல்லோரு மொருமித்துக் கொண்டொரு விடத்திலிருங்கோ தேவர்களே!

83. விருத்தம். *ராகம் : காம்போதி*

விண்ணவர்க் கரச னானோன் விடுமணி ரதத்தினைக் கண்டு
திண்ணமாம் புயத்தான் பாணன் சீறியே ரதமேற் கொண்டு
கண்ணினைப் பொறிகள் சிந்தக் கருங்கடல் சேனை யோடு
மண்ணும் விண்ணும் அதிரவந்து வளைத்துப் போர்விளைத்
திட்டாவே.

84. தரு. *ராகம் : சங்கராபரணம் அடதாளம் சாப்பு*

பொங்கு கடலென வந்த அசுரர்தன்
போரினில் வாசவன் னாடினான் பெறான்
சிங்க மாயிரம் பூதண்டர் தங்கொண்டு
பாணனுந் திடமுடனே திரவந்து கூடினான்
சூலங்கதை வில் லுநெழு லக்கை
அசுர னெடுத் தெங்குந் தாக்கினா னப்போ
மேல தைக்கா ணாமல் வாசவ னோர்க
னைமீட் டிப்பொடி யாக்கினான்
நேரான பீரங்கி துப்பாக்கி கொண்டு
நெருங்கி முழங்கி னான்களத் தில்தரு

காராரு மாவரு ணாத்திரம் விட்டுக்
கலக்கி னானிந் திரன்க ணத்தில்
எரிவாணம் பொரிவாணம் வெகுவெகு விதமான
இறைவான மாரியாய் பெரித்தா னப்போ
வரியம்பு அரியம்பு சூரிய முடனிந்திரன்
வாரிச் சொரிந்து பரிக ரித்தான்
வானமும் பூமியும் ஒன்றாய் நடுநடுங்க
வகுத்தானே யொருபெருஞ் சூல மந்தத்
தானவன்விடு சூலம்ஞா லமதனில் விழச்சாந்
தொட்டா னதுவனு கூலம்.
ஒன்றாலு மசைகிலனே னறந்த பாதகன்
ஓங்கி யேகெதை கொண்டிக் தானிந்து
நன்றாச்சு தென்றப்போ வான வர்கோன்
வளருங் கொடித னையொ டித்தான்
விட்டகணைகள் பழுதாச்சு தென்றெண்ணி
மீறினான் பாணனுங் கோப மந்த
துட்ட னுடனே பொருகையில் வந்து
தேதுற் வாச மாமுனி சாபம்
நூறு கணையை யொருமிக்கத் தாக்கி
யேநொடிக் குள்ளடித் தானே பரியைத்

தானேறு ரதம்நட வாமலே மாதலி
எண்ணியே துதித் தானே யரியை
கொக்க ரித்துத் துடைதட்டி எதிர்நின்று
குலிச மொன்றேய தானமை வண்ணனது
பக்கத்திற் சாடவே கீழே குதித்தங்கு
பாய்ந்தானே ஆயிரங் கண்ணன்
வாசவ னோடவே நீசனது கண்டு
மாட்டி னான்றே வர்மேற் பாணம்
பெருங் கூச்ச லெழும்ப முறையிட்ட
வோசை குலுங்குப் தேமா பிரம்ம கோணம்

85. விருத்தம். *ராகம் : சாவேரி*

எதிரவந்த வானவர்க் ளோடக் கண்டானிடி
யெனவே செயபேரி முழங்கச் சொன்னான்
கதிர மதியு முழுநிரையுங் கிடுகிடு டென்னக்
கலங்கிடவே ரதம்தனைத் திருப்பிக் கொண்டு
சதிர்பெருகு மாவலியை வணங்கி நின்றான்
தானவர்க ளனைவர்களு மொன்றாய் கூடி
நதிரத றாகப் பிலியுமிந்தி ரர்சனத்தின் மீது
நாடினான் தேவமுடி சூடி னானே.

86. தரு. *ராகம் : சாவேரி* *அட தாளம்*

தேவ மாமுடி சூடி னான்பலி
செகச்சக் கிரபதி யினோன்

மூவர் பதியிலு மேன்மைதர
மெனனு மாவுறையும் மார்பதில் மின்னும் (தேவ)
பாணன் முதலான மந்திரி மாரும்
படைத்தலை வோரு முன்னிற்கச்
சேனுலகில் வளர்கற்ப கமலர்தன்னைச்
சிலபேர் கொணர்ந்து முன்வைக்கப்
பூனுமா பரணங்கள் மண்மிசை படவீழ்ந்து
பூமன்னர் முடியடி பதிக்கக்
கானு மிடங்க ளெல்லாம் சுரப்படை பயந்து
கைகட்டி வாய்பொதித் துதிக்க

அந்தமிகு முறுவசிதிந் திமென்றாட
முந்தியிரு பாலும்வெ குசுந் தரக்கரிபோடத் (தேவ)
ஆதியில் தேவரீர் சொன்ன சபதப்படி
ஆச்சுதி தென்சொல் வோமுன்

விவேகங் காத லுடனேப் போது
  காண்போ மென்றிருந் தோமே
கற்பக நாடாளும் போகமோதிய தானவர்
  குலத்துக் கெல்லா மினியு
உச்சிதமா குமேயோகம் சூதான மந்திரி
  மார்களே எல்லோருஞ் சொன்னாரே

இவ்வித பாகமே எச்சரிக்கை பராக்கென்று
  மெச்சு கட்டியங்கள் சொல்ல
விச்சையுடன் விசுவ கர்மா
  வுச்சிதமாய் செய்த நல்ல (தேவ)

குலவரை யெனும் பெரு முடலெங்கும் பணிபூண்டு
  குண்டலி மிரண்டு காதிற் றரித்து
தலைமுறை யாடியு பதேசஞ் செய்யுஞ்
  சுக்கிர சாரிசொல் லானை யுச்ச ரித்துப்
பெலநிறை யுமிரு தோளி லம்புகீர்த்தி
  பேரு மொழியது தரவி ரத்து

நிலைபெறவே யிந்த பொன்னகர் நமக்கென்று
  நிசங் கொண்டு தன்மனக் கரித்து
மூவுலகு நடுங்கிடத் தேவவாத்தி யமுழுங்க
  ஆவலுடன் மந்திரிகள் மேவுசர்க்கரைவழங்க (தேவ)

87. பொதுவிருத்தம். *ராகம் : சாவேரி*

சிறந்த இந்திரன் மணிமகுடம் பலியணிந்தான்
  செகச்சக்கிர பதியெனவே பேருங் கொண்டான்
துறந்துதங்கள் நாடி ழந்த
  துயரத் தாலே சொரியுமழை தனக்கேங்கும்
பயிரைப்போலுங் கறந்தபின்பு பாலில்லாக் கன்று
  போலும் கடன் கொண்டார் தங்கள்மனக் கவலைபோலும்

மறந்து ருகுந்தேவர்க் காதரவாய் நல்ல
  வலுச்சொல வெனபிரம்மா வின்கொலு சொல்வேனே.

88. *பிரமன் கொலு விருத்தம்* *ராகம் : ஆனந்த பயிரவி*

இத்தலம் வானஞ்சேர்க பதிலுள்ள சராசரங்கள்
தத்துவ ஞான வேத சாஸ்திரஞ் சாதிபேத நித்தியா
நித்திய பாப நிசம்பொய் புண்ணி யங்க ளெல்லாம்
பெற்றிடும் பிதாவ ராதி பிரம்ம தேவனும் வந்தானே

89. தரு : ராகம் : அடாணா திரிபுடை தாளம்

கொலுவி னிலிருந் தானே பிரமதேவனுங்
கொலுவி லிருந்தானே
இலகு நவமணி மயமதாய் மின்ன
இழைத்த சிம்மா சமைதிற் நுன்ன
சலச லெனவே பொற்புரி நூலுமாட
சாரதாம் பாளுடனே கூட (கொலு)
தேவரிஷிகள் வேத பாஷியந்தனை
தெளிந்துபயந்தோத
மேவுமுனிவர் போத ஞான விதிமுறையுடன்

விந்துநாத வகைகள் தனை விரித்துரைகள் செய்ய
மிகழ்ந்ததனைக் கேட்டு உயிர்கள் உய்ய
பகவநாம ருசியை நாட
பங்கயனே தெய்வமெனக் கொண்டாட (கொலு)

ராதசத்த குணசீலன் நாரணன் திரு
நாபியில் வருபாலன்
பூசுரர் பணி லோலன் மகம் வளர்க்கும்
புங்கவர்க் கனுகூலன்
சத்தியலோகத்தில் வளரு மிறையோன்
சதுர்வேதங்களு முணர்ந்த மறையோன்

தத்துவ முற்றுங் கடந்த யோகி
சகலமுந் தெரிந்திடும் விவேகி (கொலு)

உயிர்கள் செய்கின்ற கர்மபலனைப் போலே
உதிக்கும் மல்லிசெய் தர்ம பயிர்
தெரிந்திடும் வரம்நிலை யறிந்து பகர்ந்திடு
சிரிட்டிநேர் வுலகளந்தவன் பாத
சேவை நிலமையுடன் புகழ்ந்தென்னாற்
சொல்ல நேருமோ சிறியேனிது நல்ல (கொலு)

90. தேவர்கள் விருத்தம். ராகம் : சாவேரி

திசைமுகனு மிவ்விதமாய்க் கொலு விருந்தான்

தெறிபட்ட தேவரெல்லா மொன்று கூடிய
சுரர்தங்கள் கையடி யால்வதை பட்டப்
புண்களாறி மனந்தேறுவ தெக்கால மென்று
நீச வறிவில்லர் பித்தர் போல
நெஞ்சகத்தி லெண்ணாது மெண்ணிக் கொண்டு

விசையமதை யடைந்திலமே யென்று வாயை
மெல்லுவார துயரமதைச் சொல்லு வாரே.

91. தரு: *ராகம் : முகாரி* *அடதாளம்*

என்ன செய்வோம் பிரம்ம தேவர் வெமை
இந்த வேலையினிற் காவா
பொன்னகர் மீதினிற் றாவிப் பலி போரில்
நைந்தா ளைய்யோ பாவி
இப்படி யுண்டோ வன்னி யாயஞ் சாமி
என்சொல்வோம் சுரர்மாயம்

செப்பு முப்பது முக்கோடி யான
தேவர் வந்தோ முடல்வாடி
கண்டக ராகிய தானவர் தங்கள்
கையடி பட்டோமே வானவர்
மிண்டர் போரி லகப்பட்டு நாங்கள்
மெத்தவுமே வுடல் கெட்டு
உன்னைக் கெதியென்று நாடினோந் தேவ
உத்தமனே வந்து கூடினோம்
பின்னைத் துணையா றென்றெண்ணு வோமே
பிதாமகனே என்ன பண்ணுவோம்

திக்குத்திசை யொன்று யில்லை எங்கள்
தெய்வமே யீதென்ன தொல்லை
அக்கிரமஞ் செயபலி கால
முன்னா லாக வேணு மனுகூலம்
எவ்விதங் கொண்டுயாம் வெல்வோமிப் போதே
எத்தனை என்றுதான் சொல்லுவோம்
பவ்விய மாகுமெங்கள் தன்மேலே
பலிவகை செய்தானே யொருக்காலே.
பதறுதே எங்கள் தன்னெஞ்சம் வேறே
பத்திரமில் லையுன் பதஞ்தஞ்சம்

இதுவு செய் வாயிந்த நேர மிப்போ
எங்களைக் காப்பதுன் பாரம்.

92. விருத்தம். *ராகம் : ஆனந்த பயிரவி*

அண்ட காரணங்க ளெல்லா அளித்திடுந் தேவர் போற்றி
புண்ட ரீகத்தில் வாழும் புராதனப் பொருளே போற்றி

தண்டமிழ் வாணி மாது தலைவனே போற்றி நாங்கள்
கொண்டமா துயரைத் தீர்த்த குணஞ்செய நான்முகனே
போற்றி

வசனம்: *சகல புவன சராசர* **நித்தியா நித்திய கிருத்தியா** *குணாகுண சிரிஷி கர்த்தா* **வாகிய சதுமுகப்** *பிரம்ம* **தேவரே!** *சரணஞ் சரணமைய்யா சுவாமி!*

93. பிரம்மதேவன் - விருத்தம் ராகம் : ஆனந்த பயிரவி

வான வர்க்கிறை வுந்தன் வலிமையும் பதியும் விட்டு
யேனருந் துயரங் கொண்டு இப்படி மெலிந்து வந்தாய்
தானவர் பகையே வல்லாலத்த போதனர் முறைமை தப்போ
நான தையறிய நன்றாய் நடந்ததை யுரைசெய் வாயே.

வசனம்: அகோ! வாருங்கோ தேவேந்திரன் முதலாகிய தேவர்களே! இப்பவு நீங்களுங்களுடைய இந்திர லோகத்தை விட்டு வெகு விதனமாக இவ்வளவு தீனமாய் வர வேண்டிய காரணமென்ன? விசுவாமித்திரப் பிரபோபதிகளாகிய ரிஷிகளுடைய தவமுறைமைத் தப்பினதாலே வந்தீர்களா வல்லது அசுராதிகளுபத்திரபத்தினாலே வந்தீர்களா? அதை எனக்கு விபரமாகத் தெரியும்படி சொல்லுங்கோ தேவேந்திரன் முதலாகிய தேவர்களே!

தேவர்கள் வசனம் : அப்படியே மகா பாக்கிய மைய்யா சுவாமி பிரம்மதேவரே.

94. விருத்தம். ராகம் : ஆனந்த பயிரவி

ஆதியாம் வேத நான்கு மடர்ந்தி டுங்கால் மூன்றுநட
கோதிலா தத்துவ யோக குணப்பொருள் யாவுங் கற்று
நீதியாய் வளரு முந்த னிட்டையில்த் தெரியா துண்டோ
பாதகன் பலி யாற்பட்ட பாடெல்லாம் மிப்போ பகர்வோ னமய்யா.

95. தரு. ராகம் : ஆனந்த பயிரவி

பாவி மாவலி யாலே பட்ட பாடெல்லாம் பகர நீ கேளாய்
பூவி லுறைவோ னேயென் னென்று சொல்வோம் விண்டு

ஆவி பிழைத்து வந்தோம் அசுரர் கையடி கொண்டு (பாவி)

தேவ ரென்னும் மகிமை தேவ ராலுண் டாச்சு
சின்ன வசுர ராலே தெறிப்பட்ட தல்லோ போச்சு
மேவு லகெங்கும் பலிவெற்றி கொண்டானே விச்சு
மிஞ்சி னான வனிங்கும் வருவானினி யென பேச்சு
(பாவி)

தர்ம மேசெய மென்று சொல்லிய வேத மொழி
தப்பி னாலினி வேறே எங்க ளுக்கென் னவழி
வர்ம மிஞ்சி யேபலி செய்கிறான் வீண் பழி
வருத்து மசுரர் தம்மை மாற்றி துன்பத்தை யொழி (பாவி)
எங்கே தான் கற்றா ரந்த அசுரர் யுத்தத்தில் வீரம்

மிரையுமேம் தெண்டமு மெதிரில்லை அவர் கோரம்
பொங்குங் கடல் வடவைய் போறியவர் கண்ணெனனே
கிலாத்துயரமாகும்
போதும் போதும் பட்டதினி உனது பாரம் (பாவி)

96. விருத்தம் ராகம் : காம்போதி

ஐயனே சொல்லி வென்றா லடங்காத துயர மாகும்
வையகம் போதா தென்று வானமும் பலிகை கொண்டான்

செய்யு மாறேது நாங்கள் செயமதை அடைவ தெப்போ
பையறா யணையோன் பெற்ற பாலனே வகை சொல்வாயே.

வசனம்: அகோ! கேளுங்களய்யா சுவாமி சிரிஷிகர்த்தா வாகிய சதுர்முக பிரம்மதேவரே. இப்பவும் நாங்கள் மாவலி முதலான வசுரர்களாலே பட்ட துன்பங்களைச் சொல்லும் போது சரீரங்களெல்லாம் நடு நடுங்கிப் பதறுது. இனிமே லெங்கள் தேவலோகத்தை யடைந்து சுகம் பெறுவ தெக்காலம். இப்படி கஷ்டதிசை யனுபவிக்கும் படியான எங்களுக்கு ஒரு சவுக்கிய மடையும் படியான வழிசொல்ல வேணுமையா சுவாமி சதுர்முக பிரம்மதேவரே!

97. தரு. ராகம்: குறிஞ்சி. அடதாளம் - சாப்பு

ஒருவ ராலம் வெல்லக் கூடா தந்தப்பலி உரத்தை
முப்புர மதனை வென்ற யீசன் கையினில் வாங்கினான் வரத்தை
ஆதியிலத்திரு மாலு நரர்சிங்க மாய வதாரஞ் செய்து

கொதித்தானே இரணியன் குடலை ய்ன்னேரம்

சரணஞ்செய் பிரகலாதன் தனைவாங்கோ ளென்று விண்டான்
ஆதிபரனே என்குலமதை வதையா தெனவே வரங் கொண்டான்
அப்படியே வரந்தந்தோ மென்று மாலுஞ் சொல்லப்
பெற்ற மெய்ப்பொருளாம் பிரகலாத மகனிவனை வெல்ல

அன்னவனோ டெதிர் செய்ய கூடாதென்று பாரும்
இப்போ மின்னுங் கயிலை யானிடம் சொல்லுவோம் வாரும்

98. விருத்தம். *ராகம் : ஆனந்த பயிரவி*

கலங்கியதுயாஞ் சொல்லுங் கற்பக மன்னா கேளாய்
சலங்களை நீக்கு மாதி சம்புவி னிடத்திற் சென்று
துலங்க யிவ்வகை களான துயரத்தைச் சொன்னோ மாகில்

வலங்கை தனதருளி செய்வானம் மயங்கிட வேண்டாம் வாரீர்.

வசனம்: அகோ கேளுங்கோ தேவேந்திரன் முதலாகிய தேவர்களே! இப்போது நீங்களொன்றுக்கு மயங்க வேண்டியதில்லை. சகல துரிதங்களையு நிவாரணம் பண்ணும் படியான கயிலாச வாசனாகிய மகாதேவரிடத்திற் போய் இத்தியாதி துயரங்களெல்லாம் விண்ணப்பஞ் செய்தோ மாகிவந்த சாம்பமூர்த்தியான வரும் வலக்கை தந்தருளிச் செய்வாரானபடியினாலே நாமெல்லாருமாக கயிலாச பதியனிடத்துக்குப் போகலாம் வாருங்கோ தேவேந்திரன் முதலாகிய தேவர்களே!

99. பொது விருத்தம். *ராகம் : சாவேரி*

முன்னடந்த கதைக ளெல்லாம் வேத னாலே
மொழிந்திடவே யமரரெல்லாம் மெய்தா னென்று
தன்னினவில் நினைந்தவர் களிருக்கும் போது
சதிரான கயிலைமலை யுச்சி தன்னில்
கின்னரருஞ் சித்திர வித்தியாதரர் கலெல்லாங்
கீத முறையே வழுத்தி செயசே
என்னமின்னு நவமணி யிழைத்த பீடமதில்
வீற்றிருக்கு மானகொலு வைச்சாறு வேனே.

100. சிவன் கொலு விருத்தம். ராகம் சாவேரி.

ஓருருவாய் பலவாகி யுலக மெல்லா
முணர்கின்ற அஞ்செழுத்தி னுண்மை யாகிச்
சீரணிந்த யோகியுமா யக்கெங்கை தன்னை
சிரசுதன்னி லணிந்திடு மாமூர்த்தி யாகிப்
பேரணிந்த பூதகெண நாத னாகி
பிரம்ம வித்தாய் போதாந்த ஞானனாகிக்
கார்குழ லாலுமை யவளோர் பாகனானோன்
கதிக்கின் றான்கொலு முகத்திலுதி கின்றானே

101. தரு ராகம் : மங்கள கவுசிகை. அடதாளம் சாப்பு

கொலுமுகங் கொண்டதைப் பாரு - மாருங்
கொண்டாடத் தில்லையின் நின்றாடு நாதன்

இலகு வெண்கவரிகள் வீசப் பணி
இட்டவொளி கண்டு சூரியன்
நலமிகு கயிலை வொளிவீச வென்று
நந்தியுஞ் செயசெய வென்றே திரபேச (கொலு)
அரகர சிவசிவ ஐயாவெனவே
அன்பர்களெல் லோருமான் மழுக்கையா
கருணை செய்யென மலர்பெய்ய பூத
கணமெல்லா மெதிர்நின்று நிர்தனஞ் செய்ய
களங்க மில்லாத துய்ய வண்ணன் - என்றுங்
காணாத ரூபனென்னு நெற்றிக் கண்ணன்

விளங்கும் பிறையணி திண்ணன் ஓதும்
வேத நான்கிலச் சாம வேதத்தின் பண்ணான் (கொலு)
படிகமா நிறணி சுத்தன் நாளும்
பாங்கு டன்ரி ஷிபத்தி லேறிய
கூத்தன் கடிபுகழ் கடம்பணி நித்தன்
தன்னைக் களிப்புடனே பெற்ற லோகப் பிரசித்தன்
(கொலு)

102. தரு. ராகம் : கெவுளி பந்து, ஆதிதாளம்

கயிலங் கிரிதனில் மேவிய தற்தா எச்சரிக்கே
மயில் வீரனை யருள்கின்ற எம்மானே எச்சரிக்கே

திரிபுராதிகள் தனைவென்று.... தேவர் எச்சரிக்கே
கருணையுட என்னை யாளு முக்கண்ணா எச்சரிக்கே

தருகெங்கை யைச்சிர மீதணி சாமியே எச்சரிக்கே
அடியார் வினைபொடி செய்திடு மானே எச்சரிக்கை
வடிவார் மழுமா னேந்திய வாதா எச்சரிக்கை

103. விருத்தம். ராகம் : சாவேரி

இந்த விதமாயீ சன்கொலு விருந்தான்
இமைய வர்கள் புடைசூழப் பிரம்மதேவன்
முந்திவர வெள்ளிமலை தன்னை நோக்கி
முக்கண்ணன் கொலுவருகிற சென்று மிக்க
அந்தமிகு வேத மொழிப்படியே பூவால்
அர்ச்சனை செய்யுமையவள் தன்பாகா காகா
சந்தமு முனை மற வோமென் றெல்லோரும்
சந்தித்தார் கைகூப்பி வந்தித் தாரே.

104. தரு. ராகம் : மத்திமாவதி. ஆதிதாளம்

அரகரமக தேவாநமோ நமசிவ
அற்புத ரூபா நமோ நமோ

பரம தயாநிதியே நமோ நமோ
எங்கள் பார்பதி லோலா நமோ நமோ
கயிலை யங்கிரீச நமோ நமோ
ஆதிகங் காள நாதா நமோ நமோ
பயபவ பங்கா நமோ நமோ
நாளும் பத்த செனப் பிரியா நமோ நமோ
சந்திர சேகர நமோ நமோ
பெருந்தாரு காவனசா நமோமோ
கந்தனைத் தந்தவா நமோ நமோ
மிகுங் கருணை யங்கடலே நமோ நமோ

தீனசென ரெட்சக நமோ நமோ
வளர்தேவாதி தேவா நமோ நமோ
தானவர் வந்திதா நமோ நமோ
பூதசர்வ தயாபர நமோ நமோ

105. விருத்தம். ராகம் : ஆனந்த பயிரவி

ஆதியே சரண மாகரா சரணம்
சோதியே சரணஞ் சுந்தரா சரணம்
வேதியே சரணம் விமலனே சரணம்
நீதிசேர் கயிலை நித்தனே சரணம்

வசனம்: தேவாதி தேவர்! தேவ மகேசுவரா! கயிலாச வாசா! கங்கை பணி நாதா! பணியணி மார்பா! பார்வதி லோலா! சரணஞ் சரணமையா! சுவாமி! மகாதேவா!

106. சிவன் - விருத்தம். *ராகம் : சாவேரி*

வந்தனை செய்பரம மாதிய மார் தம்மை
மகாதேவன் மனங்குளிர்ந்த தன்னை நோக்கி
சுந்தர மாமுங்கள் முகம்வாடித் தேவ
சொர்க்கம் விட்டுத் துயருடனே வந்தகாரியங்
கந்தமுறு மலர்வனே சொல்வா யென்னக்
கற்பகத் தினிறையோ ளனைத் திரும்பி நோக்கி

யுந்தன்.... கவலை யெல்லாம் சாமி முன்னே
யோதென் றானிக் கவலையே தென்றானே

வசனம்: அகோ! வாருங்கோ சதுர்முக பிரம்ம தேவரே! இப்படித் தேவேந்திரன் முதலாகிய தேவர்க ளெல்லாம் மகத்தாகிய துயரத்துடனே கூடித் தேவ லோகத்தையும் விட்டு இவ்விடத்துக்கு வந்த காரிய மின்னதென்று தெரிய சொல்ல வேணு மைய்யா சதுர்முக பிரம்ம தேவரே.

வசனம்: அப்படியே மகாபாக்கிய மைய்யா மகாதேவா!

வசனம்: அகோ! வாருங்கோ தேவேந்திரன் முதலாகிய தேவர்களே! மகிவலி முதலாகிய அசுரர்களா லேற்பட்ட துன்பங்க ளெல்லாம் மகாதேவர் முன்பாக விண்ணப்பஞ் செய்யுங்கோ தேவேந்திரன் முதலாகிய தேவர்களே.

வசனம்: இப்படியே மகா பாக்கிய மைய்யா பிரம்ம தேவரே!

107. தரு. *ராகம் : நீலாம்பரி* *தாளம் : செம்பை*

என்னென்று சொல்வோமந் தயீனராம சுரராலே
இடழிந்து வந்தோம் நாங்கள் மகாதேவா
பொன்னகரந் தன்னிற்பலி புகுந்தெங்கள் தமையெல்லாம்
போரிணி லடித்து விட்டான் மகதேவா
மகமுந் தவங்களுஞ் சுத்த மனமுடைய
வெம்மை வதை செய்யவந் தானையா மகதேவா
அகமோ அவன்மனதி லடிமோ வுரந்தானோ
அறிகிலோ மன்னியாய மிது மகதேவே

சொல்லையில் பதறு தந்த தீதுட்ட ராம்சுரர் கோரிந்
துலைப்ப துந்தன் பாரமையா மகாதேவா
வல்லடி வழக்கினுக்கு வகைவிபர மில்லை யென்று
மாபா விபலி செய்தான் மகதேவா
வேறேயொரு கெதியு மில்லை விதிதானு மயங்க லுற்றார்
மெய்பொரு ளேயினி யுன்தஞ்ச மகாதேவா
தேறும்படி கிருபை செய்வாய் திக்குதிசை யொன்றுமில்லை
தெய்வமே நீதுணைச் செய்வாய் மகாதேவா.

108. விருத்தம். *ராகம் : ஆனந்த பயிரவி*

சொல்லவோ தோன்றுதில்லை துயரமாங் கடலில் வீழந்தோங்
கல்லெறி பட்டாலு மகன் மலைவிழுந்த புண்போலே
எல்லையும் பதியு நீங்கி யீசனேயுனை யடைந்தோ
நல்லருள் புரிந்து தேவ நாட்டினிற் தருகு வாயே.

வசனம்: அகோ கேளுங்களையா சுவாமி மகாதேவர் இப்போ தெங்களுக்கானால் நாங்கள் பட்ட துயரங்களை சொல்லுகிற தொன்றுந் தோற்ற வில்லை யதேனென்றால் லொரு கல்லடிப்பட்ட புண்தனை யாற்றிக் கொள்ளலாம். பெருமலை விழுந்த புண்ணை எப்படி யாற்றலாம். படிபோலே நாங்கள் சவுரியமு நாடு நகரமு மிழந்து உன்னைத் தஞ்ச மென்றடைந்த எங்களுக்கு முன்போலத் தேவலோகத்தை அடையும் படியாக கிருபை செய்ய வேணுமைய்யா சுவாமி மகாதேவரே.

109. சிவன் விருத்தம் ராகம். ஆனந்த பயிரவி

அஞ்சிட வேண்டா நீங்கள் அனைவர்கு மூலமான
கஞ்சநற் பாதன் வேதங்காண்கிலா மூர்த்தி யானோன்
மிஞ்சுபாற் கடலில் யோமே விருத்தி திரை செய மாயன்
தஞ்ச மென்று டைவோ மேருச் சார்பினில் வருகு வீரே.

வசனம்: அகோ! வாருங்கோ பிரம்மாதி தேவர்களே! நீங்களொன்றுக்கு மஞ்ச வேண்டியதில்லை. செகக்காரண மூர்த்தியாகி வேதத்தினாலுங் காண அரிதாகிய சர்வ சீவ தயாசக்தி பணாபணியோடுங் கூடின ஆதிசேடன் மீதிலே ஸ்ரீ பூமிருளாசமேதராய் யோக நித்திரை செய்கிற மூர்த்தியை

நோக்கி நாம் யெல்லோருமாக தோத்திரம் பண்ணினோமாகில் சகல துரிதங்க நிவாரணமாய் விடுமதின்மேலே சுபத்தை அடையலா மானபடியினாலே நாமெல்லோருமாக மகா மேருவின்று முறையிடுவோம். வாருங்கோ பிரமாதி தேவர்களே!

வசனம்: அப்படியே! மகாபாக்கிய மய்யா சுவாமி மகாதேவா!

110. **விருத்தம்.** ***ராகம் : ஆனந்த பயிரவி***

பிறையணி யிறையும் பூவுறையனும்
  பேசு பொன்னகரி லுள்ளோரும்
மறை மொழிப் படியே மனதி லெட்டெழுத்தா
  மந்திரமதனை யுச்சரித்துத்
திறமுடன் க்ஷிரக் கடலினை நோக்கி
  தெளிந்திடு முற்ற யோகியராய்

குறையதைக் கூற்றுங் குணநிதி யெனவே
  கூவியே முறையிடத் துணிந்தார்.

111. **அகவல்.** ***ராகம் : ஆனந்த பயிரவி***

சிரிட்டி யுந்திதியுஞ் தெரிந்து நீக்கிதலுங்
கெட்டியாய்ப் புரியுங் கேசவா அபையம்
பலபல விதமாய்ப் பகர்ந்திடுந் தேவாய்
நலமிக வருளு நாரணா அபையம்
அனைத்துயிர தோறு மந்திரி யாமியாய்
மனத்தினில் நிறையு மாதவா அபையம்
அண்ணலே முன்பு ஆயர் தன்னூரில்
விண்ண மழை காத்த கோவிந்தனே அபையம்

ஆரணத்தாலு மறிந்திட வரிய
வீரணாமெங்கள் விட்டுணுவே யபையம்
ஆதியா யணுவாயகில் காரண னாயச்
சோதியாய் வளர்மது சூதனா அபையம்
அதனொ மிரண்ணிய னடர்ந்தி டும்பேரி
விசைய மேருபெறு திருவிக்கிரமா அபையம்
நிலைபெறு மன்பர் நெஞ்ச முறையும்
மலபதை நீக்கும் வாமனா அபையம்
கானகத் தானை கதறிடும் போது
தீனமதகற்றும் சீதரா வபையம்

துங்கமா முனது துணையடி மலரிற்
கங்கை யைத்தரும் ரிஷிகேசவா வபையம்
கோல மாயிரவுங் கொடுத்துப் பின்னிந்த
ஞால முண்டுமிழ் பத்தும நாபனே வபையம்
மதளாய்ச் செனகன் மகன்தனை வெட்டுமுனி
செனகர் குதவு தாமோத ராவ பையம்

112. விருத்தம். ராகம் : மத்தியமாவதி

கூவியே தேவரெல்லா முறையோ வென்று
குல்லிட்ட வோசை யதுவுலகுக் கெல்லாம்
மாவியினு ளாவியாய் வரும்மாதி யச்சுதன்
திருச் செவியிற் கேட்டுப் பளளி 835

மேவியவப் பாம்பணையை விட்டு நீங்கி
மன்னையாள்சீதேவியு டனேகூடத்
தாவியொரு கருடன் மிசையேறிச் சேவை
தருகின்றா னஞ்சலென வருகின் றானே.

113. தரு. ராகம் : ஆனந்த பயிரவி அட தாளம் - சாப்பு

நமஸ்தே நமஸ்தே நமஸ்தே நமஸ்தே
நமஸ்தே நமஸ்தே
கமல முகமுங் கருணை யகமு மிமையவர்
நாதனிதோ வரனே வேதன் (நமஸ்)
நீள்கருடன் நீலமலை போலே மேலே
தான்மலரை வைத்து தானவாறா பாராற்று 804 (நமஸ்)

அசுரர்கள் கலங்க ஐயாயுத மிலங்க
நிச்சேவை தந்தானே ரெயிதோ வந்தான் (நமஸ்)

114. விருத்தம். ராகம் : மத்திமாவதி

கோடி சூரியர்க ளொன்றாய் குவட்டினி லுதித்தாய் போலே
நீடிய கருடன் மேலே நேமியுஞ் சங்கு மேந்தி யாடகந் தரித்து
சீரிட மதினொளி ததை னென்ன
வாடிய தேவர் முன்னை வாசுதேவனும் வந்தானே

115. தரு. ராகம் : சவுராகம் ஆதிதாளம்

வாசு தேவனும் வந்தானே - பர
வாசு தேவனும் - வந்தானே 845

நேசமுடனே தேவரிரு முறைகண்டு
நெருங் கருடவாக மேற்கொண்டு (வாசு)
ஆரகடக கெயூர குண்டலமு மற்புதமா
மவன்மாலிகை வரித்துக்
தாரெனனுங் கவுத்துவ மாமணியுடனே
சங்குசக்கர மிருகையி னிற்றரித்து (வாசு)
அரையினி லணிந்த பீதாம்பரமு மிருஅருகிலும்
பூமங்கை மலர்மங்கை துள்ள
கரைந்துருகிய வமராதிகள் முன்னேக்
கன்றைப் பிரிந்து வருகாம தேனுவென்ன (வாசு)

ஐயனாடு கையில் மார்தி களுடனண்டம்
யாவையுந் தானாடச் செய்யுங்
கானமுறை கின்னரர் கிம்பு ருடர்தொந்து
கற்பகத்தின் மாமலர் போட (வாசு)

116. **விருத்தம்.** ***ராகம் : ஆனந்த பயிரவி***

பரமதயா பரனே பங்கயமுக நிதியே
யிருநிறை துளவணிந்த மாதவர் பாத சாரணம்
பூதேவி ஸ்ரீதேவியுடன் புணரும் செகன்னாதா
ஆதரவாய் எங்களுக் குன்னபய மருள்சரணம்

வேறு :

பண்டொரு துருவனுக்கு
பதவியளித்த நாதா

சண்டையினிற் பலி
செய்த சங்கடந் தீர்ப்பாய் சரணம்
அன்புள பிரக லாதற்கு
அரியென தூணி லுதித்தாய்
துன்ப மிக்க கொண்ட வெங்கள்
துயரைத் தீர்ப்பாய் சரணம்
ஆவியுறு தயவாசி யென்ற
அரிவை துரோபதையைக் காத்தாய்
சோகமே அடைந்தோ மிப்போ
துன்பமதைத் தீர்ப்பாய் சரணம்

மூல மென்ற சொல்லா னைக்கு
முந்தி யருளும் பொருளே

ஞாலம் விட்டெமது
   உலகுநாடி னான்பலி சரணம்
அஞ்சலென் வீடணர்க்கு
   அம்பொன் முடித்தவர்
தஞ்சம் வே றில்லை எங்கள்
   குணதாரக நீயே சரணம்
நாடுமிடமை லாந்தானாய்
   நாம்ரூப பேதமாகிக்

கூடும் வேதத்தில் வளருங்
   கோவிந்தா பாத சரணம்

வசனம்: *சர்வசீவ தயாபர சகல குணாதிகரா அகிலசெக நாயகா! ஆதியாம் பொருளே! அடி எங்கள் சரணம்! சரணமையா சுவாமி செகனாயகா!*

117. தரு. *ராகம் : காம்போதி* *அடதாளம் சாப்பு*

அண்ட பின்னண்ட காரண
   அனைத்தினு நிறைந்தவர் சக்கிரபாணி
எள்ளுக்குள் ளெண்ணெய் போலே
   எங்கு நிறைந்தாய் நீசக்கர பாணி
ஐந்துமூன்று மொன்று மான
   சொரூபனீ சக்கிர பாணி
நாங்கள் நொந்து வந்துன்னை யடைந்தோங்
   கிருபை செய்யுஞ் சக்கிரபாணி

யோரானைக் கிரங்கின மூலகாரண
   நீசக் கிரபாணி
மானை வளர்த்துப் புலிகையில்
   யீவரோ சக்கிரபாணி
தன்னைப் பணிவாரைத்
   தான்பணிய லாமே சக்கிரபாணி
யினிஉன்னை யல்லால் வேறே
   பின்னைக்கெதி யாரையா சக்கிரபாணி
திருமுகங் கண்டான் நீவினை
   நீங்கு டென்பாரே சக்கிரபாணி

எங்களருடை யறிந்து பொருள்
   நீயல்லவோ சாமி சக்கிரபாணி

முட்ட நினைந்து குளிர்விட் டோடி
　வந்தோமே சக்கிரபாணி
வந்தன திஷ்ட்ட சத்து
　உண்டானா லஷ்ட ஐசுவரிய
முண்டாமே சக்கிர பாணி.

118. மாயன் -விருத்தம் ராகம் : மத்திமாவதி

தேவரே கேளு முங்கள்
　சிந்தையி லிருக்கும் துன்பம்

யாவையு மறிவோம் நீங்கள்
　அஞ்சிட வேண்டா மிப்போ
மேவு பொன்னுலகிற் சென்று
　மித்திரராய் பலியைச் சேர்ந்து
ஆவல் கொண்டி ருந்தாள்
　பின்னாலமுதந் தந்தருளு வேனே

119. தரு. ராகம் : மோகனம் அடதாளம் - சாப்பு

இந்திர லோகத்துச் சென்று
　நீங்களிதழ் செய்து கொள்வதே நன்று
தந்திர வித்தையால் சாதிப்போ மவர்மேலே
　சண்டை செய்து முடியா மிரண்டார் கையினாலே

இரவிற் பகை வெல்லுமோ
　காக மானா லேவரை விட்டது
அனுபோகந் தருணங் காண்ப தெந்த விவேக
　முந்தனக்கேவரு முன்போலந் திரயோகம் (இந்திர)
வீரியஞ் செய்கு வேனோ நீங்கள்
　விரைந்துண்பீர் முத்தென
காரிய மாவது தானே வேணுங்
　கபடஞ் செய்வதே நலமப்பாதே வர்கோனே
தாமதஞ்செய் யாமற்செல் லுப்பிளச்
　சக்கிர வர்த்திக்கு நயச் சொல்லு

பூமியில் வாழ் கின்ற மந்தாக்கில்லு
　புகழும் பாற் கடலிலிட்ட முதுண்டவரை வெல்லு
(இந்திர)

வசனம்: அகோ! வாருங்கோ தேவேந்திரன் முதலாகிய தேவர்களே! இப்பவும் நீங்கள் வந்த காரியங்க ளெல்லா நமக்குத் தெரியுமானால் காலாகாலம் பலாபலஞ் செயா செயந் தெரிந்து நடக்க வேணுமே யல்லாது வேறில்லை யானபடியினாலே அந்த அசுரனாகிய மாவலிக்குச் செயகாலமும் உங்களுக்கு கொஞ்சங் கஷ்டகாலமு மிகுந்த படியினாலே யவனாலபம் செய்யப்படலாச்சு. ஆகிலும் பொறுத்தாரரசாண்டார் பொங்கினார் காடுறைந்தார் என்ற ஞாயம் போல நீங்கள் எல்லோரும் பொறுமையைப் பெரிதாக யெண்ணி யேற்றமானது கிணத்தின் சலத்துக்கு வணங்கினது போலந் சமுத்திரமானது கரை கடவாம லாக்கினைக்குள் அடங்கினது போலும் நீங்கள் மாவலியிடத்திற் போய் யவனைச் சக்கியஞ் செய்து கொண்டு தானே மந்திரிகிர பருவதத்தைத் தூக்கும் படியாகச் செய்து திருப்பாற்கடலில் கொண்டுவந்து நிறுத்தி சந்திரன் காணி சஞ்சிவி காணி சவுவல்லிய காணி விசவ வலிய காணி, என்று சொல்லும்படியான நாலுவகை மகா சஞ்சீவிகளையுந் திருப்பாற்கடலிலே பிழிந்து கடையும்படியாய் செய்தாயாகில் பொது அமிர்தம் பிறக்கும். அந்த அமிர்தத்தை பானம் பண்ணுவீர்களாகில் மகாபலசாலிகளாய் நீங்களெல்லோரு நித்திய தத்துவத்தை அடைவீர்களப்போது இந்த மாவலி முதலாகிய வசுரர்களை எல்லாஞ் செயஞ் செய்து உங்கள் தேவலோகத்தை அடைந்து சுகமாக இருக்கலாமான படியினாலே மாவலியிடத்துக்குத் தானே சீக்கிரமாகப் போங்கோ தேவேந்திரன் முதலாய தேவர்களே.

வசனம்: அப்படியே! தேவரீர் திருவுள நேமனப் பிரகாரம் மாவலியிடத்துக்குப்போய் வருகிறோஞ் சரண சரணமைய்யா சுவாமி செகநாயகா!

120. விருத்தம் **ராகம் : சாவேரி**

மாய வனிவ்வா றெல்லாம் வ்குத்தவுடன்
  மறைந்தா னப்பால்
ஆய ருமான பிரமா வுமவர்
  அவர் பகுதிக்குச் சென்றார்

தாயினைப் பிரிந்த கன்று போலத்
 தவித்துளந் தேற்றி கொண்டு
பாயமாயத் தேவ ரெல்லாம்
 பலியிடம் வருகின்றாரே.

121. விருத்தம் **ராகம் : சாவேரி**

வந்தபெருந் தேவரோடு வாசவனை யங்கே
கந்த முறுமலர் பெருகு கற்பக நன்னாட்டில்
சொந்த முடனந் தவுணர் சொற்படி நடக்கு
முந்துவணி காவலர் முனிந்து தடை செய்தார்

ஆரடா வருவ திங்கே
 அத்துகள் மிஞ்சி யிப்போ

பாரடா வடிப்போ மென்று
 பல்லுடன தனிச் சேர்த்துப் போரிட
வாடா வென்று புயமுடன்
 துடையுந் தட்டி கோரமாய்
....
 காவலோர்கள் சோக்கத்துரை செய்வீரே.

வசனம்: அட ஆரடா நீங்கள் வேற்றுக் குரலோடும் வெற்று முகத்தோடும் கூடி இவ்வளவு தைரியமாக எங்கள் சக்கிரபதி ராசா வாசலை நோக்கி வரவேண்டியதென்ன? நீங்களார்? எவர் இவ்விடத்தில் என்ன காரியமாக வந்தீர்கள். அதைத் தெரியப்படச் சொல்லுக கோளடா வரப்பட்ட பேர்களே!

122. தேவர் விருத்தம் **ராகம் ஆனந்த பயிரவி**

அய்யன் மாவலியின் வாசல் ஆக்கினை காரா கேளாய்
வையக முழுவதுங் காக்கு மன்னர் மன்னவனைக் கண்டு

செய்யு மெங்குறை ளெல்லாஞ் செப்பியே யாற்ற வந்தோம்
பைய வங்குரைத்து நீங்கள் பதில்மொழி சொல்லு வீரே.

வசனம்: அகோ! வாருங்கோ! வாசற் காவரே! இந்த ஈரேழு பதினாறுலகுக்குங் கற்தனாகிய மாவலிச் சக்கிர வர்த்தியைக் கண்டு தெரிசனஞ் செய்து தங்களடைய

குறைகளெல்லாஞ் சொல்லி யாற்ற வேணு மென்பதாயிந்திரன் முதலான தேவதைகளெல்லாமா சார வாசலிற் காத்திருக்கிறார்ளென்று அறிக்கை செய்து பதிலச் சமாசாரம் வந்து செல்லவேணும் பிள்ளாய்! வாசற்காவரே! ஆன படியினாலே அறிக்கை பண்ணுகிறோந் தேவேந்திரனே!

123. விருத்தம். **ராகம் காம்போதி**

திறமுட னுலகை யாளுஞ் செகச்சக்கிர வர்த்தியே கேளாய்
மருமலர் வணங்கு நந்தம் வாசலில் முகப்பின் முன்னே
தருதுயர மிஞ்சித் தேவர் தன்னுட னிந்திரன் கூட
ஒருமொழி யரிக்கை என்று வரைத்தி டத்தான் சரணமையா

வசனம்: அகோ! கேளுங்களய்யா சுவாமி. செகச்சக்கிரேசுவரா! நம்முடைய ஆசார வாசல் முகப்பிலே இந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் நிராயுதராய் வெகுவிசனத்தோடுங் கூடிக் கொண்டு தேவரீரைக் கண்டு தரிசனஞ் செய்துவர சொன்னார்களையா. சுவாமி செகச் சக்கிரேசுவரா!

124. பலி விருத்தம். **ராகம் : காம்போதி**

ஆகா வென்ன சொல்வேன் அமைச்சரே சே ந மெந்தன்
தேகம் யாவையும் தானிப்போ திடுக்கெனப் றுறு திந்த
லோகமே யாண்ட மன்னன் நொந்து வந்த டந்தா னீங்கள்
பகை மாயுரைகள் செய்து பரிவுடன் அழை பிப் பீரே.

வசனம்: அகோ வாருங்கோ மந்திரிமார்களே. இந்த வமரர் பதி பட்டணத்தை யாளும் படியான தேவேந்திரனானவன் நம்முடைய யுத்தத்திலே தோற்கப்பட்டு வேறே ஆதரவு மில்லாமல் நம்மை, தானே சரணமென்றடைந்தவனை ரெட்சிக்க வேணுமாகையால் நீங்கள் போயாதரவு சொல்லி நம்முடைய சமூகத்துக்கழைத்து வாருங்கோ மந்திரிமார்களே!

125. மந்திரிகள் : விருத்தம் **ராகம் : காம்போதி**

போட்டியாய் நம்மோ டென்றும் போரினை விளைத்திப் போது
கூட்டினுட் புலியைப் போலக் குறுகியே வந்தா ரென்று
தாட்டிக மாக நாமுஞ் சரணமே கொடுத்தோ மாகில்
காட்டினிற் கோட்டான் கூட்டைக் காகங் காத்தது போலாமே.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி செகச் சக்கிரேசுவரா! நெடுநாளாய் நம்முடன் பகை செய்யும்படியான இந்திரன் முதலாகிய தேவர்களிப்போது நம்முடைய யுத்தத்தினாலே நொந்து உன் வஞ்சனையாகக் கூட்டினிலடைபட்ட புலி போலிப்போது நொந்து உன் வஞ்சனையாகக் கூட்டினிலடைப்பட்ட புலிபோலிப் போதுசரண மென்று வந்த தேவதை களுக்கு, நாமிடங் கொடுத்தோமாகில் முன்பு ஒரு கோட்டானுக்குக் காகங்களுக்கும் வனத்திலே யுத்தம் வந்து அந்த யுத்தத்தினாலே காகங்க ளெல்லா மிறந்து போயதில் மிஞ்சிய வொரு காகத்துக்குக் கோட்டானிரங்கிச் சத்துருவுக் கிடங் கொடுத்த படியினாலே அப்போது அந்தக் காகமானது பகலிற் கண்தெரியாத கோட்டான் கூட்டங்களெல்லாங் கொன்று போட்ட கதைபோல வந்து நேரிடுமான படியினாலே சத்துரு செடமான செடமதுகளை வைக்கக் கூடாது. அப்பால் தேவரீர் திருவுளப்படி நடந்து கொள்கிறோமையா செகச் சக்கிரேசுவரா!

126. பலி விருத்தம். **ராகம் : காம்போதி**

படைக்கல முழுதுங் கொண்டு பகைத்தவன் தம்பி யானோன் 920
அடைக்கல மென்றபோது அபயமே கொடுத்தானி ராமன்
திடத்துடனது போல யானுஞ் சிந்தையில் நினைத்தே னிப்போ
தடுத்துரை செய்ய வேண்டாஞ் சத்திரிய தர்ம மீதே.

வசனம்: அகோ! வாருங்கோ மந்திரி மார்களே! சத்துருவினுடைய தம்பியாகிய விபீஷணன் சகலாயுத பாணியாய் சரணடைந்தபோது ராமன் அபையங் கொடுத்து ரட்சிக்கவில்லை யிப்போது நிராயுதராய் நம்மையே சரணமென்றடைந்த தேவர்களை ரெட்சிப்பதே க்ஷத்திரிய தர்மமேயல்லாது வேறில்லை யானபடியினாலே நீங்களி தற்கு யாதொரு தடையுஞ் சொல்லாமலவர்களைச் சீக்கிரமாக நம்முடைய சமூகத்துக்கு அழைத்து வாருங்கோ மந்திரிமார்களே!

வசனம்: அப்படியே மகா பாக்கிய மைய்யா சுவாமி! செகச் சக்கிரேசுவரா!

127. விருத்தம். ***ராகம் : காம்போதி***

அகமதில் துயரங் கொண்ட அமரரே சொல்லக் கேளீர்
தகமையாய்ப் புவன மூன்றுந் தாங்கிய வெங்கள் மன்னன்
சுகமதாய் வரலா மென்று சொல்லியே அழைக்கச் சொன்னார்
பகையினை நினைக்க வேண்டாம் பாங்குடன் வருகு வீரே.

வசனம்: அகோ! கேளுங்கோ இந்திராதி முதலாகிய தேவர்களே! நீங்கள் வெகு துயரத் தோடுங் கூடி வந்திருக்கிறதைத் தெரிந்து மகாபலிச் சக்கிரவர்த்தியான வருங்களைக் கொலு முகத்துக்கு வரும்படியான யாக்கினை பித்திருக்கிறரான தாலுங்கள் மனதுகளில் யாதொரு கல்மிஷங்களு நினைக்க வேண்டியதில்லை. முன்னிருந்த பகையினை எல்லா நீங்கிச் சினேவாச சல்லிய மாயிருக்கலாம் வாருங்கோ இந்திராதி முதலிய தேவர்களே!

தேவர்கள் வசனம்: அப்படியே வருகிறோ மையா.

128. விருத்தம். ***ராகம் : ஆனந்த பயிரவி***

தஞ்ச முன்பாதம் நாங்கள் சரண டைந்தோ மிப்போ
நெஞ்சக மதனிற் கோப நினைத்திடக் கூடா தெங்கள்
கொஞ்ச மாநினை வினாலே கொடுமையே செய்தோ நன்மை
புஞ்சிமாங் கடலிலே நீயும் பொறுத்தே மனமாறு வாயே.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி பூர்வ தேவராகிய மகாபலிச் சக்கிரவர்த்தியே! எங்களுடைய கட்ட காலத்தினாலேயும் புத்தியீனத்தினாலேயுந் தேவரீரை பகைசெய்து கொண்டேமேயல்லாது தேவீர ரெங்களுக் கெல்லாம் சர்வ சிரேட்டரான படியினாலேயுஞ் சர்வ சீவதயாபரனான படியினாலேயுந் தர்மசுரூபியான படியினாலேயும் புறன்ஞான வந்தனான படியினாலேயு சிறியோர்கள் நாங்கள் செய்த அபராதத்தை க்ஷமை பண்ணி ரெட்சிக்க வேணும் எங்கள் சரணஞ் சரணமை முதலாகிய தேவர்களனைவரும் சரணாகதி செய்யுகிறார் களையா சுவாமி செகச் சக்கிரேசுவரா! பராக்கு! பராக்கு! சுவாமி பராக்கு!

129. விருத்தம். **ராகம் : காம்போதி**

கோபமே சற்று மில்லைக் குறைந்திட வேண்டா முங்கள்
தாபமே தீர்த்திப் போதுந் தன்னை மந்திரிதானஞ்
சோபித வசுரர்வேறே தொந்தர வொன்றுஞ் செய்யார்
தீபமே யறியப் பாலுந் தேனும் போலிருப்போம் வாரீர்

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் தேவேந்திரனே. இப்பவும் என் மனது இனிமேலுங் களிடத்திலொரு போதுங் கோப வைக்கிரதாயிருக்க மாட்டாது. இது முதலென்னுடைய மந்திரிகளில் முதல் மந்திரிதான முனைக்கே கொடுத்தே னாகையாலினி மேல சுரர்களுக்குந் தேவதைகளுக்குந் வொருகாலமும் வியர சந்தேவை யில்லைத் தீபசாட்சியாக பாலுந் தேனும் போலே இருந்து நாமெல்லோருமாக ராச்சிய பரிபாலனம் பண்ணலாம் பிள்ளாய்! தேவேந்தரனே!

தேவேந்திரன் வசனம்: அப்படியே மகாபாக்கியமையா சுவாமி மகாபலி சக்கிரவர்த்தியே!

130. பொதுவிருத்தம் **ராகம் : சாவேரி**

வெற்றிபெரு இந்திரனும் பலியுங் கூடி
மேவிடும் பொன்னகர மதிலிருக்கும்
நானிநுற்றிமை யான மொழி இந்திரன் சொல்ல
உண்மையதாய் மாவலியு முள்ளங் கொண்டு
பெற்றிருக்கப்போ பெரிய மந்திரிமாரும்
பிரியமது செய்திணங்கி யிருந்தார்ப் பால்
முற்றமு தந்தனைப் பெறுக நினைந்து வேறே
மொழி சொல்வேன் கடல்கடையும் வழிசொல் வேனே.

131. தேவர் விருத்தம். **இராகம் : சாவேரி.**

வாசவனு நேசமிகு மந்திரிய தாகிப்

பூசபசு வின்தோல் பொதிந்த புலிபோலுங்
காசிலை யுடன்பலி கதித்த கொலு முன்பா
ஓசையை நிறுத்தி யொரு யோசனை சொல்வானே.

132. **ராகம் : ஆனந்த பயிரவி**

அண்ணல் மாவலி யேயுன் போலரசினை ஆண்டா ரில்லை
புண்ணிய பாத நாலும் பொருந்தியே நடக்கு திப்போ

மண்ணிலார் வாதுள்ள மருந்தொன்று நினைத்தெனத்தை
நண்ணி நீமுடித் தாயாகில் நடன்வினை யொழிக்க லாமே.

வசனம்: அகோ! கேளுங்களைய்யா! சுவாமி மகாபலி சக்கர வர்த்தியே இப்போது நீர் செய்யுகிற ராச்சிய பரிபாலன மெப்படி இருக்கிற தென்றால் தர்மம் நாலு பாதமுங் சரியாயும் மன்னுயிரரெல்லாந் தன்னுயிர் போலவும் புலியும் பசுவு மோர் துறையில் தண்ணீர் அருந்தும் படியாய் தேவீர் ராக்கினாசக்கிரத்திலே நடந்து வருகிறது. அதுவுமல்லாமல் நாங்க ளெல்லோருங் கணிட்டாளாயிருந்து பணிவிடை செய்யவுந் தேவரீர் சர்வ சிரேட்டராய் இருந்து ராச்சிய பரிபாலனம் பண்ணுகிறதைப் பார்க்கும்போது இந்தப்படியே எந்தக் காலமும் அழிவில்லாமல் நித்தியராயிருக்க வேணுமென்று மனது மெத்தவும் அபிலாஷை யாயிருக்கிற படியினாலே அதற்கொரு மகா அவிஷதம் நினைத்திருக்கிறேன் அதைத் தேவரீர் திருவுளங் கொண்டு அடியேன் சொன்னபடி செய்வித்தால் நாமெல்லாரு நித்தியராயிருந்து கற்பகோடி காலமிப்படியே ராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டிருக்க லாமையா சுவாமி மகாபலி சக்கிரவர்த்தியே.

133. **பலி - விருத்தம்.** **ராகம் : காம்போதி**

காதலா யுரைக் கின்ற கற்பக மன்னா கேளாய்
பேதாக மில்லை என்றாப் பிறந்தவ ரொளிப்ப ரோதர்
ஆதலால் மனதி லெண்ணும் மரும மருந்தனைச் சொன்னால்
வேத னால்முடி யாதெனு மீறியான் முடிப்பன் நானே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் தேவேந்திரனே! இப்பவு நாமிரு பேருமொரு தகப்பன் வயிற்றுப் பிள்ளை யானதுனாலே என்னுடைய சிரேயசு விருத்தியடைய வேணு மென்பதாயுன் மனதில் தோற்றப்பட்டு தாகையினாலே நீ நினைத்த சஞ்சீவியானதை இன்ன வழி என்று சொன்னாயாகி லரிகர பிரமாதிகளாலே யகாதாதாயிருந்த போதைக்கு நானதை யாகும்படியாக செய்வித்துப் போடுகிறேனதை இன்னவென்று சொல்லும் பிள்ளாய் தேவேந்திரனே!

வசனம்: அப்படியே தெரியும்படியாய்ச் சமூகத்திலறியப் பண்ணுகிறேனையா மகாபலிச் சக்கிரவர்த்தியே!

134. **விருத்தம்.** **ராகம் : ஆனந்த பயிரவி**

சித்தி யாயுரை நல்குந் சிறந்த சஞ்சீவிநான் குண்டத்தை
நாம்பிடுங்கி வந்து அழகு பாற்கட லிட்டு மத்தாய்
மந்திர மென்னும் வரையினாற் கடையும் போது
நித்திர தாயிருக்கும் வண்ண சேர்ந்திடு அமுதந்தானே.

955

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி மகாபலி சக்கரவர்த்தியே! இப்பவுஞ் சந்தான காணி சஞ்சீவிகாணி சவுல்லியகாணி விசல்லிகாணி என்று நாலுவகை மருந் துண்டு. நாமதுகளைக் கொண்டுவந்து திருப்பாற் கடலிலே பிழிந்தாலப்போது கடலுறையுமதிலே மந்திரகிரி பருவதத்தை மத்தாக நாட்டிக் கடைந்தோமாகில் அதில் அமுதமுண்டாகும். அந்த வமுதத்தை நாமெல்லோருமாகப் பானம் பண்ணி யொரு நாளு மழியாத சிரஞ்சீவியா யிருந்து ராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டிருக்க லாமைய்யா மகாபலிச் சக்கரவர்த்தியே!

135. **விருத்தம்** **ராகம் : காம்போதி**

மெய்யிதா மந்திரி மாரே வேகமா யிந்தக் காரியஞ்
செய்யவே வேணு நந்தஞ் சேனைகள் முழுதுங் கொண்டு
வைய்யகந் தன்னில் மேவு மந்தர கிரியைத் தூக்கி
உய்யவே கடலிலே யிட்டு உறுதியாய்க் கடைவோம் வாரீர்

வசனம்: அகோ! வாருங்கோ மந்திரிமார்களே! இப்பவு நம்முடைய தேவேந்திரன் சொல்லும்படியான யோசனை சர்வ உத்தமமே யல்லாது வேறில்லை யாகையால் நம்முடைய சேனை களெல்லாஞ் சேகரித்துக் கொண்டு பூமியின் கண்ணே விழும்படியான மந்திரகிரி பருவதத்தை தூக்கிப் பிடுங்கித் திருப்பாற் கடலிலே கொண்டுபோய் நிறுத்தி நாமெல்லாருமாகக் கடையலாம் வாருங்கோ மந்திரிமார்களே!

வசனம்: அப்படியே மகா பாக்கியமையா சுவாமி செகச் சக்கிரேசுவரா!

136. **விருத்தம்** *ராகம் : காவேரி*

மன்னவனா மாவலி யிவ்வாறு சொல்லி
மகிழ்ந்த சுரர் சுரர்படைக ளொன்றுகூடி

மின்று கடப்பா ரைகூந்தல் தால்நேர்
மண்வெட்டி கோடரியுடன் கூடை கொண்டு
என்ன இந்தமலை எடுப்ப தரிதா
என்றே எண்ணியவரவர் மனதில் திரணமாக
தன்னுயிர் வலுவதினாள் கெர்வம் பேசி
சதிர் கொண்டார் மலையதனை யெதிரே கண்டாரே.

137. **தரு.** *ராகம் : நாத நாமக்கிரிகை.* *அட தாளம்*

பலியுரைத்த மொழியதனைப் பவ்வியசுரர் சுரருந்
தலைமீதில் கொண்டு வெளிதான் வந்தான் பலரும்
அண்ணே யுந்தன் கூந்தால மருவாழுங் தூக்கு
கூடை களிமண் வெட்டி யொரு கோடி

கொண்டு வாரு நாடுகின்ற மந்திர
கிரிநாலு சுறறும் பாரும்
செவ்வ லுடன் மணல்க் கண்டந்
தெரிந்து நில்ல வாக்கு
எவ்வித முநாந் தானமே
எடுக்க வேணுந் தாக்கு

138. **விருத்தம்.** *ராகம் : சாவேரி*

மேல்திசையிர் கொடுமுடியும்
மலைவேரும் வலுக்கொண்டு மிகுந்து காணுஞ்
சீலமுடனவ வருகிற
சென்றுநா நொடிக்குளே சிதைப்போ(ம்) நீங்களே

லேலோவென் றொருசத்தங்
கொடுத் திருந்தா அதுவெங்களி ழைப்பை யாற்றுங்
கோலமுறுந் தேவர்களே
என்றசுரர் சொல்லி வெட்டக் குனிந்திட்டாரே

139. **தரு.** *ராகம் : மோகனம். அடதாளம் - சாப்பு*

மந்திர கிரியதனைச் சுத்தினார் சுற்றும்
வகுத்து கொடுமுடியை எத்தினார்

தந்திரோ பாய மாக வெட்டி னாதவர்
  தந்தந்த னைகளால் முட்டினார்
சன்னைத் தடிகள் வைத்து மிதித்தார்
  கொஞ்சஞ் சந்துகாண வேரின்று குதித்தார்

சின்ன வேர்ளை எல்லாந் தளித்தாரே
  எங்குஞ் சின்னா பின்னங்களாக முறித்தார்
படைவிட் டவர்சன போலாக் கினார்
  கீழேபாதாளம் வரைக்கும்போய் நோக்கினார்
அடிவோ தினைக் கண்டு பேதித்தார் - வெகு
  அசாத்திய மானதைச் சாதித்தார்
இருபக்கமு நின்றே யணைத்தார் - நன்றாய்
  இசையுஞ் சங்கிலி கொண்டு பிணைத்தார்
ஒருவர்க் கொருவாகை கொடுத்தார் ஆதி
  ஓங்கவே மலைதனை எடுத்தார்

140. விருத்தம். *ராகம் : சாவேரி.*

சேஷன் முடிகிடு கிடெனவே ரோடந்தச்
  செழித்த மந்திர கிரியதனைத் தூக்கிதங்கள்
னாசை யினார் சுரர்சுரர்தந் தலையின்மேல் கொண்டஞ்
  லெட்சம் யோசனை ஓர்வடக்கே சென்றார்
மீசுரமாய் வந்ததொரு நடையி னாலே
  மெய்மறந்து கையலுத்துச் சுமைதாங் காமற்
கூச்சலிட்டு மலைவீழ்க நெகிழ்ந்தார் கீழே
  குனிந்திட்டார் தெய்வ மென்றே கனிந்திட்டாரே.

141. பலி விருத்தம். *ராகம் : காம்போதி*

வாசவா நீதான் சொன்ன வதுமை யோசனையைக் கேட்டு

நேச மாஞ்சேனை எல்லா நிமிஷத்தில் மடிந்தா ரிப்போ
வீசிய விரதமும் நீதிமேன்மைசேர் சுகமு மன்றி
யேசலுக் கிடமாய்ச்சிந்த யிளப்பதித்துக் கென்செய்வோமே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் தேவேந்திரனே! யிப்பவும் நீ சொல்லும்படியான யோசனையைக் கேட்டு மலையைப் பிடுங்கியதனாலே நம்முடைய சேனைகளெல்லாம் மடிந்து விரதமுங் கெட்டுச் சுகமுங் கெட்டுப் பார்க்கும்படியான பேர்களுக்கு மூன்று லோகங்களுக்கு பேச்சுக்கிடமாக மகாயிளப்பம் வந்து நேரிட்டதல்லவா. ஆனதாலிதற்கினிமேல் யென்ன வழி சொல்லும் பிள்ளாய் தேவேந்திரனே!

142. விருத்தம். **ராகம் ஆனந்த பயிரவி**

மன்னவர் நீதான் சற்று மயங்கிட வேண்டா முன்பு
சொன்ன வென்குருவை யிப்போத் தோத்திரஞ் செய்தோ
மாகில்

பின்னங் களியாது மின்றிப் பலம்வர வருளிச் செய்வார்
நின்ன யமிதுவே யிப்போ நிமிஷத்தில் பாரு மையா.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி மகாபலி சக்கரவர்த்தியே! யிப்பவும் தேவீர் ஒன்றுக்கும் மயங்க வேண்டியதில்லை முன்னாலே யடியேனுக்குப தேசம் பண்ணின மகா குருவாகிய தெய்வ மொன்றுண்டு. அவரை யிப்போது தோத்திரம் பண்ணினோ மாகில் நம்முடைய சேனைகளுக் கெல்லாம் பின்னங்களில்லாமலும் பலம் வரும் படியாகவுமிந்த மந்தரகிரிப் பருவதந் திருபாற் கடலிலே போய்ச் சேரும் படியாகவும் கிருபை பண்ணி ரெட்சிப் பாரிதற்கு வேறே சந்தேகமில்லை யானபடியினாலே யிப் போது ஒரு நிமிஷத்திலே அந்த மகாகுருவானர் வருகிற கண்காட்சியைப் பாருமைய்யா மகாபலிச் சக்கரவர்த்தியே!

143. விருத்தம். ***ராகம் : சாவேரி.***

இந்திரனு மாபலி யிடத்திணி லுரைத்து
பந்தமுறு கேடன்மிசை பாற்கடலின் மேவுஞ்
செந்திரு பொலிந்திலகு சீதரா வென்றே
நொந்துடல் மெலிந்து திசைநோக்கி முறையிட்டான்

144. தரு. ***ராகம் : உசானி*** ***திரிபுடை தாளம்***

என்ன செய்குவே நானே - ரெட்சித்
  தருளு மெம்பிரா னீதானே (என்ன)
முன்ன மேயடி யேற்குச் சொன்ன வுறுதி கொண்டு
  மின்னுமலையெ டுத்தோம் பின்னம் வந்தனைக் கண்டு
(என்ன)
என்னயிது சோதனையோ - அல்லாமலே
  யெண்ணுட வூழ்வி னையோ
உன்னை யல்லாமல் வேறே வொருவரா ரிந்த நாட்டில்
  ஓங்குந் துயரை டைந்தோ முதவி செயயிந்தக் காட்டில்
(என்ன)

பட்ட காலிலே படுமோ ஆனாலும் மிந்தப்
    பாவி துன்பந்தான் விடுமோ
கட்டப் படுமெனக்குக் கருணை செய்கின்றதனிக்
    காரணா ஆதிநாராணா நானினி (என்ன)
பிடித்த காரிய மிப்போ - முடிக்கவேணும்
    பெம்மானே யுனக் கொப்பா
அடித்த புண்ணு மனமு மையனேயா றத்தானே
    யமுதங் கடைந் தாலல்லோ வடைவேன் சௌக்கியம் நானே
தருமனை னிந்த வண்ணந் துயரங் கொள்ள
    சக்கரமுங் சங்குமிகு கையிலேந்தித்

துரியமுடன் பாற்கடலின் சயன நீங்கிச்
    சோபிதமாய் கீரிட கவுத்துவ மிலங்கப்
பெருமலைநேர் கெருடனுட புயத்திலேறி
    பெற்றவள் தன்பிள்ளை களுக்குதவி னாப்போல்
திரமுடனே வந்தே னிதோ வந்தே னென்று
    செப்பினான் பலியு மிப்போ தொம்பினானே

145. விருத்தம். *ராகம் : மத்திமாவதி*

கருடன் மேலெழுந்த ருளும்நாதன் றன்னைக்
    கண்டுபலி யந்திரனும் வணங்கி நின்றார்
மருளு கின்ற வன்னவர்தம் முகத்தை நோக்கி
    மாயவனும் நீங்களஞ்ச வேண்டா மென்று

பருமலையை யிரண்டு திருக்கை யினாலே
    பிரித்தெடுத்துக் கருடனுட புயமேல் வைக்க
விருளுமலை யடியதனில் வீழ்ந்தோ ரெல்லாமே
    சோபித்துயிர்கள் பிழைத்தெழும் பினாரே

146. சுவாமி - விருத்தம் *ராகம் : மத்திமாவதி*

இந்தமந்தர கிரியதனை யானே தூக்கி
    யிப்போதே பாற்கடலில் வைப்போம் நீங்கள்
முந்தி மனவேக மதாய்விடம் வந்தால்
    முனைந்துகடல் கடைந்திடவே துரியஞ் செய்வோ
மந்தமுறு மிந்திரனே பலியே யென்று
    ஐயனுரை செய்திட வக்கணமே நாங்கள்

வந்தோமி தோவென்று சுரரசுர ரெல்லோரும்
    வணங்கினார் பின்துடர்ந் திணங்கி னாரே.

வசனம்: அகோ! வாருங்கோ யிந்திராதி முதலாகிய பலிச் சக்கரவர்த்தியே! யிப்பவும் மிந்த மந்தரகிரி பருவதத்தை யொரு நிமிஷத்துக்குள்ளே நாமெடுத்துக் கொண்டு போய் திருபாற் கரையிலே வைக்கிறோ மானாதால் நீங்களும் வாயுவேக மனோவேகத்துடனே கூடியதி சாக்கிரதையா யவ்விடம் வந்து சேர்த்தலைவதற்கு மேல் கடல் கடையும் படியான வழிகளெல்லாஞ் செய்விப்போமான படியினாலே நீங்க லொன்றுக்கும் சஞ்சலப்படாமற் சீக்கிரமாக வாருங்கோ, யிந்திராதி முதலாகிய பலிச் சக்கிரவர்த்தியே!

இந்திரன் பலி வசனம்: சுவாமி! யடியோங்களிதோ வொரு நிமிஷத்துக் குள்ளாக வந்து சேருகிறோமையா சுவாமி! செகன்னாயகா!

147. தரு. ராகம் : சங்கராபரணம் அடதாளம் - சாப்பு

மந்தரகிரி யதனை மாயவன் றூக்கி
வாயு வேக மாகப் போயபின்
அந்த தானவர் யாவரும் நடந்தாரே
யிந்திரன் முதற்றே வரும்
ஐயன் மாய வனைக்கொண் டாடினார் - தங்க
ளங்கை தட்டியே முன்னா லோடினால் - செய்யுங்
கிருபையை யென்சொல் வேனே - மற்றத்
தெய்வோத் தமனிவன் றானே

தலைச்சுமை நீக்கினான் பாரு - மிவன்றான்
பொருளென் றாரெல் லோரும்
மலைக்கும் நம்மனதில் நின்றானோ - வேதம்
வகுக்கும் பொருளிவன் றானோ
உயிர்க்கு யிராகிய ஐயனோ - நாளு
மோங்கு சங்கு சக்கரக் கையனோ
பயிர்க்கு தவிய மழைபோலே - நம்
பயந்தீர் தோமே யிவனாலே - நம்
சுபமடையலா மென்றே யெண்ணினர் - அச்
சுரரசுரர் தோத்திரம் பண்ணினார்

அபராத கடிமை யென்று துதிதா ரப்போ
தையன்முன் பாகப்போய் குதித்தார்

எல்லோருமே வலம் வந்தார் - சுவாமியிது
கண்டுடனே வுளமகிழ்ந்தார்
நல்ல தொன்று சொல்வேன் காணு - மிப்போ
நாணாகக் கயிரொன்று வேணும்

148. சுவாமி விருத்தம். *ராகம் : மத்திமாவதி*

மலைதனைக் கொணர்ந்த வாறும் மற்றதும் பெரிதே யல்ல
நிலைபெறக் கடலில் நாட்டி நின்று நாமிழுப் பதற்குச்

சிலபொருள் வேணும் யானுஞ் செப்பு வேனது வேதென்னிற்
பலமிகுங் கயிரொன்றிப்போ பாங்குடன் கொணர்கு வீரே.

வசனம்: அகோ! வாருங்கோ இந்திராதி முதலாகிய பலிச் சக்கரவர்த்தியே யிப்போது நாமிந்த மந்தரகிரிதனைக் கொண்டு வந்து தானே பெரிதல்ல. ஆகையாலொரு பெரிதான காரியமிருக்கிறது. அதே தென்னிற் திருப்பாற் கடலிலே யிந்த மலையை நிலைபெறும்படியாக நாட்டி நாமெல்லோருமாகக் கடைய வேணுமல்லவா யிந்த மலையிலே சுற்றியிழுக்கும் படியான மகாபலமான கயிறொன்று வேணு மாகையால் சீக்கிரமாகக் கொண்டு வாருங்கோ! யிந்திராதி முதலாகிய பலிச் சக்கரவர்த்தியே!

149. இந்திரன் : பலி : விருத்தம். *ராகம் : ஆனந்த பயிரவி*

முனைகொண்டு தொடுத்த காரிய முற்றிலுங் காக்க வேணும்
நினைவதி லுன்னை யல்லால் நேர்ந்திடும் பொருள்வே றில்லை
மனமதில் நினைத்தா யாகில் வருகிலா வத்து வுண்டோ
உனைநம்பி வந்தோ மிதே உண்மை..... மானரயா.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமிசெயநாயகா உன்னுடைய கிருபை கொண்டு ஆரம்பித்து காரிய முன்னாலேயாக வேணுமே யல்லாது யெங்களுக்கு வேறே தாரக மென்னயிருக்கிறது. உன் மனதில் நினைத்தாயாகில் கிடையாத வத்து வொன்று வுண்டோ வானதால் யிந்தமலையிற் சுற்றியிழுக்கும் படியான கயிறாகட்டு மற்று மெந்தக் காரிய மாகட்டு முன் கிருபையினாலே யாக வேணுமே யல்லாது யெங்களாலே யாகிற காரியமில்லை யானதால் தேவரீ ரெப்படி யாக்கினாபித்தோ வப்படி நடந்து கொள்ளுகிறோ மையா செக நாயகா!

150. சுவாமி - விருத்தம். *ராகம் : மத்திமாவதி*

பொறுப்புன தேயென்று சுராசுரருஞ் சொல்லப்
புன்சிரிப்புக் கொண்டு தலை யசைத்து மாயன்
உரைத்த கயி றேதெனக்கே தென்று சற்றே
யோசித்து உயிருளதாய் வேணு மென்று
குறித்தறிந்து நாந்துயிலுந் சேடனு னுக்குக்
கூட வருந் தம்பியருள் சிலபேர்க் குள்ளே
மறுத்தொ ருவரொப் பிலாநீ வாவென்று
மருந்தினான் வாசுகியை வருந்தினானே 1040

151. தரு. *ராகம் : புன்னாக வராளி* *அட தாளம்*

வாவா வாசுகியே நீ - யிந்த வேளையில்
வா வா வாசுகியே நீ (வாவா)
தேவாதிகள் செயதொனி - மேவுதே யெங்கு நாடி
யாவலுடனே வோடி (வாவா)
நல்ல தருணமிது வந்துத வினால்
நம்பிக்கைதான் பொய்யாது
யெல்லோர்க்கு முபகாரம்
மீடில்லா துன்றன் வீரம்
சொல்லமு தீவதுன் பாரம்
சுருக்காக வின்னேரம் 1045 (வாவா)

நீண்டவுடல் தானாட - யிப்போது
நினைத்த காரியங் கூட
ஆண்டவன் வருந்துறா வென்றெண்ணி
யருமைத் தமைய னுடனா லோசனை பண்ணி
(வாவா)
அமரர்துயர் தீரவேணு மப்போதுனக் கடையும் வெகு கீர்த்தி
காணுங்

கமக மென்றிடுந் தாழைக் காமலர் வாச மடையக்
கயிறாக வேபூட் டிக்களித் துக்கடல் கடைய (வாவா)

152. விருத்தம். *ராகம் : மத்திமாவதி*

செகனாத னிந்த வண்ணம் வருந்தும் போது
திருவருளும் நாக லோகத்தை விட்டு 1050

அகமதனில் சத்திய வாக்கியத்தை எண்ணி
ஐயன் முன்னேயிப் பொழுதே செல்வேனெனத்

தகதகெனவே மேனிகாந்தி மின்னச்
சகலர் களுங்கண்டு மனம் பதறியோட
மகிமையுடன் வேகமாதா யாடி யாடி
வாசுகியும் நேசமுடன் வருகின் றானே.

153. தரு. ராகம் : புன்னாக வராளி. ஆதி தாளம்

ஆடிவா பாம்பே ஐயன் முன்பாக ஆடிவா பாம்பே
தேடி யுலகளந் தோனை நாடியே நாக வராளி
பாடியே யானந்தமாய் கொண்டாடியே குதித்தசைக்க (ஆடி)
நாதனைப் பாராய் - வாசுகியே - செக நாதனைப் பாராய்
நாதனை யனுரைக்கும் வேதனைச் செழுங்கமலப்
பாதனை யுயிர்க்குயிராம் ஸ்ரீதரனை யலர்மேல்மங்கை (நாத)
வந்தணை செய்வாய் மாயவன்தனை வந்தணை செய்வாய்

பந்தவளை நீக்கிடுங் கந்த மலரடி தன்னைச்
சிந்தையில்ச் சுமரனை செய்து கந்த மலையை வணங்கி
(வர்தணி)

அருகினில் செவ்வாய் ஸ்ரீ ஹரியினுடைய வருகினிற் செல்வாய்
பரவச மாகுதே தேகங் திருவுறையு மவனாக
நரகரி யா மவதாரன் மருநிறை துளப கரன் (அருகினில்)

154. விருத்தம். ராகம் : காம்போதி

ஆண்டவர் சரணம் அரிகரீ சரணம்
நீண்டுல களந்த நித்தனே சரணம்
பாண்டவர்க் குதவும் பண்ணவா சரணம்
பூண்டு செந்திருவாள் புண்ணியனே சரணம்

155. விருத்தம். ராகம் : மத்திமாவதி.

வணங்கிநின்ற வாசுகியே சொல்லக் கேளாய்
மகத்தான வேலையுன் னாலாக வேணும்
யிணங்கு கின்ற யமரபதி துயரந்தீர
யின்றமுதம் யான்டைய நினைத்தேன் நீயும்
பிணைந்திருக்குங் கயிறாக மலையைச் சுற்றிப்
பலத்துடன் நீயிருந்திடு வென்றுரைக்கு முன்னே
பணைந்தயைங் கெழுப்பிக் கொண்டய்யன் சொல்லப்
பத்தினான் பெருமலையைச் சுற்றி னானே.

வசனம்: அகோ! வாராய் வாசுகியே யிப்பவுந் தேவேந்திரன் முதலாகிய தேவர்களுடைய துன்பந் தீரும்படியாய் யிந்தத் திருபாற்கடலிலே யிந்த மந்திரகிரி பருவதத்தை நாட்டி அமுதங் கடைந்து அந்த அமுத பானம் பண்ணி வைக்க வேணு மென்பதாய் நினைத்திருக்கிறோ மாகையால் நம்முடைய கோரிக்கை நிறைவேறும்படி யாயும் அந்த யிந்திராதி தேவதைகள் சவுக்கியத்தை யடையும் படியாயும் நீ செய்விக்க வேணும். அதே தென்னில் யிந்த மந்தரகிரி பருவதத்தை நீபோய்ச் சுற்றிக் கொண்டால் உன்னைக் கயிறாக வைத்துக் கடையலா மானபடியினாலே நீ போய் யிந்த மந்தரகிரி பருவதத்தைச் சுற்றிக் கொள்ள வேணும் பிள்ளாய் வாசுகியே!

வாசுகி வசனம் : அப்படியே மகா பாக்கிய மாச்சுதையா சுவாமி செகன் னாயகா!

156. விருத்தம் **ராகம் : மத்திமாவதி**

ஐயன் மொழிப்படியே வாசுகியுஞ் சென்றா
னதன் பிறகு வமராபதி முகத்தை நோக்கி
மைநிறத்தின் சஞ்சீவி மலையில் வாழும்
மருந்தொரு நான்கினையு மிப்போ ணெர்வீ ரென்ன 1075

செய்யு முந்தன் கிருபையினால் வந்து தென்று
செப்பியுடன் வாயு பகவானை யேவ
உய்யும் வகைப் பொருள் நான்குங் கணத்திலே கொண்
டுதித்திட்டான் சுவாமி முன்னே குதித்திட்டானே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் தேவேந்திரனே! யிப்பவு மிந்தத் திருப்பாற் கடலைக் கடைகிறதற்கு மருந்து மாமலையிலே வாழும்படியான நாலுவகைச் சஞ்சீவியையும் பிழிய வேண்டியிருப்பதால் யிந்த நிமிஷத்திலே மருந்துவந்து சேர வேணுமான படியினாலே அதிசாக்கிரதை செய்து சீக்கிரமாக வருவியும் பிள்ளாய்! தேவேந்திரனே!

வசனம்: அப்படியே ஒரு நிமிஷத்துக்குள்ளே வருவிக்கிறேனையா சுவாமி செகன்னாயகரே!

இந்திரன் வசனம்: அகோ! வாரும் வாயு பகவானே யிப்பவுஞ் சுவாமி நேமனப் பிரகாரத்துக்கு மருந்து மாமலையில் போய் நாலுவகை சஞ்சீவிகளையும் ஒரு நிமிஷத்துக்குள்ளாகக் கொண்டு வந்து சேரவேணும் வாயுபகவானே!

வாயு பகவான் வசனம்: அப்படியே ஒரு நிமிஷத்துக் குள்ளாகப் போய்க் கொண்டு வந்து சேருகிறேனையா தேவேந்திர மகாராசனே!

வாயு வசனம்: அகோ! கேளுங்களையா தேவேந்திர மகா ராசனே! யிப்பவும் நாலுவகைச் சஞ்சிவி மருந்துங் கொண்டு வந்திருக்கிறேனையா தேவேந்திர மகாராசனே!

இந்திரன் வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி! செகன்னாயகா! தேவரீர் நேமனப் படியே நாலுவகை சஞ்சீவியும் வந்திருக்கிறதையா சுவாமி செகன்னாயகா!

154. விருத்தம். **ராகம் : காம்போதி**

விண்ணவர்க் கிறைவா நீதான் விரைந்திந்த மருந்து நான்குந்
திண்ண மாங்கட லிலிட்டுத் திரமுட னுறைந்த பின்பு
யெண்ணிய படியே நீங்கள் யிசைந்த நல்மலை நாட்டி 1080
வண்ணமையே கொண்டெல் லோரும் வகையுடன் கடைகு வீரே.

வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் தேவேந்திரனே! அகோ! வாரும் பிள்ளாய் மகாபலி சக்கரவர்த்தியே! யிப்பவு மிந்த நாலுவகைச் சஞ்சீவி மருந்தையுங் கொண்டுபோய் திருப்பாற் கடலிலே பிழிந்தால் உடனே கடலுறையும். அப்போது மந்தரகிரி பருவதத்தைநாட்டி வாசுகி யென்னும் ப்டியான கயிற்றினாலே தேவதைகளான நீங்கள் தலைப் புறத்திலும் அசுரரான பேர்கள் வால்புறத்திலுமாக நின்று கொண்டிந்தப்படி உறுதியாய் நின்று மனதிடங் கொண்டு நின்று கடையுங்கோ பிள்ளாய் தேவேந்திரனே, மகாபலி சக்கரவர்த்தியே!

பலி வசனம்: அகோ! கேளுங்கோ சுவாமி செகன்நாயகா! பளபள கெட்டி கெட்டி வெகு சட்டமாச்சுது. கனிஷ்ட வங்கிஷனாகவும் பலவீனன னாகவு மிருக்கப்பட்ட யிந்திரன்

முதலாகிய தேவர்களைச் சிலாக்கிய மாகிய தலைப்புறம் பிடிக்கும் படியாய்ச் செய்து சிரேஷ்ட வங்கிஷமான மகா பலசாலிகளாயிருக்கிற யெங்களை நிகலுட்டான வால்புறத்தைப் பிடிக்கும் படியாக தேவீர் நேமனஞ் செய்தது மகா ஆச்சரியமாக யிருக்கிறது. உம்மைப்போலே பட்ச வாதியை யிதுவரையும் யெங்கும் கண்டதில்லை. சிவலிங்கத்தின் மேலேலி போலே யிந்த யிந்திரனும் உம்முடனே கூட வந்து தலைப்புறத்தைப் பிடித் தானல்லவா? நல்லது! உம்முடைய ஞாயத்தை நிறுத்தும். தலைப்புறத்தை நாங்கள் பிடிக்கும் படியாகவும் முறைமைப் படிக்கு யிந்திரன் முதலான பேர்கள் வால்புறத்தைப் பிடிக்கும் படியாகவும் செய்வீக்கிறீரா அல்லது யுத்தத்துக்கு ஆரம்பிவிக்கிறீரா? சொல்லுமையா சுவாமி செகன்னாயகா!

சுவாமி வசனம்: அகோ! வாரும் பிள்ளாய் மகாபலி சக்கிர வர்த்தியே! கோட்டைக் குள்ளே படைவேட்டு நேர்ந்தது போலே நீ யிவ்வளவு கோபஞ் செய்ய வேண்டிய தாயில்லை. யிப்போதுநீ சொல்லும் படியான ஞாயஞ் சர்வ உத்தமமான தாகத் தோன்றுகிற படியினாலே உன்மனோ அபிஷ்டப் பிரகாரத்துக்கு நீதானே தலைப்புறத்தைப் பிடித்துக் கடையலாம் பிள்ளாய்! மகாபலி சக்கரவர்த்தியே!

158. **சுவாமி விருத்தம்.** காம்போதி

சீலமுட னய்யா சீர்மேற் கொண்டார்
சிறந்திடுஞ் சஞ்சிவீதனைக் கடலி லிட்டா
மேலவனாம் பலிமுத லாமசுர ரெல்லா
மீண்டுதலைப் புறமதினிற் கவித்தார் தேவர்
கோல முளவால் புறத்தில் நிறைந்தார் திவ்விய
குலவரை யைக்கடல் நாட்டி நின்று
மாலுதவி செய்வா னென்றுரைக் தெல்லோரும்
வடந்தொட்டார் கடலதனைக் கடைந் திட்டாரே. 1085

159. தரு. ராகம் மோகனம். ஆதிதாளம்

கடைந்தாரே யமுதந் தேவரசுரர்
கடைந்தாரே யமுதம்
கிடுகிடெனவே கடலொடு மலையதிரக்
கிறகமுடனே வானூடு நிரையுதிர

வடவரை யுடனே பூமண்டலஞ் சாய
வளர்ந்த துளிகளும் விண்ணுலகினிற் பாயக் (கடைந்)
சேஷனுடன் பிறந்த வாசுகி தனையுந்த
செழிக்கும் மலையிற் சத்தி யவரவர் பாசை மிகுந்து - வெகு
ரோஷமுடனே பணிதனைக் கையிற் பத்திக் கடலினில்
ஆசுவெனவே பிறையாச மின்றியே கொஞ்ச 1090

மழுந்திடமே லேத்தி சிலுசிலென்றோ சையெப்ப
மன்தாசை மிகுந்து கடலருகினி லொத்தியொத்தி
வலுவுட னொருவர்க் கொருவர் தோறாமல் கைகளைநீட்டி
யுலையம லிருகாலும் முத்திநெருக்கிக் கட்டி
வருமிதல முதமென்றொரு கை பாராட்டி
மந்திரகிரிதனைப் பாற்கடலினில் நாட்டி (கடைந்த)
மிஞ்சிய வுயிர்தரு சஞ்சீவி நான்கையு
மீறிப் பிழிந்து விட்டுத் திருமாலின்
தஞ்சு மலரடியை நெஞ்சகமதி லெண்ணிக்கை
கூப்பிக் கும்பிட்டு விசைகொண்டு
செஞ்சா மிருதம் போலே வஞ்சக மில்லாமல்
தெரிந்தசை யாமல் நாட்டு மெல்ல மெல்லச்
சிஞ்சிலென வேவெகு நஞ்சித வொலிதரத்
தெரிக்குந் திவலைப் போட்டு அவ்வேளையி
அண்டயிட மில்லாமல் மீனினங்கள் சிதற
தெண்டிரைச் சமுத்திர ராசனும் பதறத்
திசை யெங்குங் கிடுகி டென்று
உழைந்து கொண்டு கதற (கடைந்)
இந்திரன் முதல்தேவர் பந்தியொரு புறத்தி
லசைந்தி முத்திடு வேகமது கண்டு 1100

அந்த அசுரர் களுமுந்தி யிருக்கையிலே
அதிர்ந்துதே பிரம்ம லோக பரியந்தஞ்
சந்ததமும் விடாமல் இந்திநிறைந் திதம்போ
தளும்புந் தயிர்ப்பிரவாக வெள்ள மதில்வந்து
மனமது குளிர்ந்து பானஞ் செய்திடும்
வகைகொண்ட சத்தவேக மிகுந்தவண்ணம்
அமரர் சுரர்கள் கையடங் காமல்
மேவ வந்த விசையைச் சொல்ல
வாயிர நாவதி மிதிமு மெனுநுரை
யண்டச் சிவரைத் தாவத் தேக
நொந்து பெரும் வாசுகி கூவன்
கூவக் கடைந்தாரே.

160. விருத்தம். **ராகம் : சாவேரி**

இனங்கொண்ட சுரசுரர் களிந்த வண்ண
மழுத்திழுத்து விசைகொண்டு கடையும் போது
சினங்கொண்ட வாசுகியும் வலிதாங் காமல்
சிறுத்துஉடல் சுருங்கிமிகத் தளன்றா னப்போ
சினங்கொண்ட மந்தரகிரிக் கடியில் வேறே
சதிரான வாதாரம் வொன்றிலாலாத தாலே
கனங்கொண்ட மலைகடலில் முழுக்கக் கண்டு
கைவிட்டார் கரைமீதில் மெய்தொட் டாரே. 1110

161. விருத்தம் **ராகம் : சாவேரி**

இழுத்திழுத்து நமது கையினாலே சலித்து தங்கே
யிசையுகின்ற வாசுகியுஞ் சுருக்கிக் கொண்டான்
கொழுத்துநுரை வரும்வேளை தன்னி லப்போ
குலவரையுங் கடலதனில் முழுகித் திப்பால்
அழுத்திநிற்க நமக்கீதா ராதரவோ காணோ
மட்டட்ட யென்ன காரண மீதென்று
பழுத்த பழமெனச் சுரரசுர குலைந்து
பதறினார் கடற்கரையிற் சிதறி னாரே.

162. விருத்தம் **ராகம் : மத்திமாவதி**

கைசலித்து மெய்மறந்து அமர ராதி
கண்டகரு மனங்கலங்கி கதறும் போது
வையகத் தினுயியர்க் குயிராய் வளருகின்ற
மாதவனு மிந்த நிமிஷத்தில் நானே
மெய்யுறுதி கொண்டிவர்கள் துயரந் தீர
மீண்டுமலை தனையுயர வெடுப்பே னென்று
மையவொரு மகா கூர்ம மாக வங்கே
பரின்ற பரிதாம் புரிகின்றானே

163. தரு. **ராகம் : மோகனம்** **அடதாளம் சாப்பு**

அவதாரஞ்செய் தான்மகா கூர்ம அவதாரஞ் செய்தான்
புவனமுண்டு மகிழ்வாயன் போதக் கடலா மாயன்
(அவதாரம்) 1120

மலை கீழே தாழ விழுந்த பேர்கள் மண்மிசை வீழக்
கடற்பிற வாகநிலை மிஞ்சிச்சூழ வருகுமுன்னே நினைந்திற்
திறன்வாழ வேணுமென்று யிமையவர் துயர்போக
லெட்சம்யோசனையாய (அவதாரம்)

வேதங்கள் நாலுந் திறங்கொண்டு விளங்கிய காலும்பல மிகுந்து
மோதிய தோலு மறிந்துசெல்ல முடியா தாராலு நாளும்
வணங்கி யண்டர்கள் பணிபாத னயனைப் பெற்றிடு நாதன்
(அவதாரம்)

அசைந்திடு நடைமடித்து வைத்த அழகான துடையு
மண்டலங்கள் யாவு மிசைந்து கொண்டடையு
பெருவயிறு மோவையா மிடையு
மிக விளங்க வாய்த்த சேவைதந்து மாலுமனமுவந்து
(அவதாரம்) 1130

164. விருத்தம் **ராகம் : மத்திமாவதி**

இந்தவண்ணம் அவதாரங் கொண்ட மாயன்
யேற்றமிகு பாற்கடலி னுள்ளே சென்று
மந்தரமா கிரியை வாசுகி தன்னோட
வலுமிகுந்த முதுகதினால் தூக்கும் போது
கந்தருவர் சித்தர் வித்தியாதரர் ரெல்லோருங்
கனங்கொண்டே துந்துமி வாத்திய முழங்க
முந்துபலி யிந்திரன் முதல் தேவர் தோத்திர
மொழிகின்றார் மலர்மாரி பொழிகின் றாரே.

165. விருத்தம் **ஆனந்த பயிரவி**

மன்னன் மாவலியே பாராய் மாயவன் கிருபை தன்னை 1135
யென்னதான் சொல்வே னம்மா லெடுத்தனன் கூர்ம ரூபம்
அன்னவன் வலிமை யன்றி யாரினால் முடியு மாப்போ
தின்னுரைக் கடலில் வீழ்ந்த தினமலை தூக்கத் தானே.

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி! மகாபலிச் சக்கிரவர்த்தியே! யிப்பவு மிந்த நாராயணனுடைய கிருபையைப் பார்த்தீரா யென்ன வென்று சொல்ல! நம்முடைய நிமித்தத்தாலே மகா கூர்மாவதாரம் பண்ணக் கடலிலே யமிழ்ந்து போன மந்திரகிரி பருவதத்தை வாசுகியோடே கூட மேலே யெழுப்பி விட்டது. மகா அதிசயமாக விருக்கிறது. ஆனாலிந்த ஸ்ரீமந் நாராயணனுடைய வலிமை யொன்றில்லாதே போனால் யிந்தத் திருப்பாற் கடலிலமிழ்ந்து போன மலையைத் தூக்கி யெழுப்பு கிறதற்கு யெவராலே தானாகுமையா சுவாமி! மகாபலிச் சக்கிரவர்த்தி!

166. பலி விருத்தம் **ராகம் : சாவேரி**

தைய லிந்திராணி சேருந் திருநிழல் மன்னா கேளாய்
மெய்யென நினைந்த பேர்க்கு மேன்மைசெய் தெய்வ முண்டு 1140

ஐயனா மாதி மூலர் தரும்பொரு ளாகை யாலே
செய்யருள் புரிந்த மாயன் செய்கை யாரறிவார் தானே.

வசனம்: அகோ! கேளும் பிள்ளாய் தேவேந்திரனே! யிப்பவும் நீ சொல்லும்படியான வார்த்தை மகா வுசித்தமாயிருக்கிருக்கிறது. ஆனால், யீசுவரனை நினைத்த பேருக்கு மேன்மையான காரியங்களைச் செய்வான். மேலும் யிவன் ஆதிமூல பராபர வஸ்து வானதினாலே நம்முடைய யிடுக்கண்களை யெல்லாந் தீர்க்க வேணுமென்று திருப்பாற் கடலிலே முழுகிப்போன மந்திரகிரி பருவதத்தை மகா கூர்மாவதாரம் பண்ணி மேலே யெழுப்பி நம்மை யெல்லாம் இந்த வேளை ரட்சித்தாராகையா யிந்த பராக்கிரமங்கள் செய்கிறதற்கு யெவராலே தானாகும் பிள்ளாய்! தேவேந்திரனே!

பொது வசனம்: அகோதெப்படி யென்றால்! ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் மகா கூர்மாவதாரஞ் செய்து திருப்பாற் கடலிலே முழுகிப் போன மந்திரகிரி பருவதத்தைத் தூக்கி யந்தமலையுந் தானாகி யிந்தமலைக் காதாரமான கூர்மமுந் தானாகி வாசுகியாகிய கயிறுந் தானாகி தாளியாகிற திருப்பாற் கடலுந் தானாகி யிழுக்கிற தேவர்களும் சுரர்களுந் தானாகி நின்று மறுபடியும் அமிர்தங் கடைகிறதற்கு ஆரம்பஞ் செய்கிற விதங் காண்க.

167. விருத்தம் **ராகம் : சாவேரி**

பரவாசு தேவனுமே யிந்த வண்ணம்
  பருத்த மந்திர கிரியதனைக் கடலின் மேலே
வொரு நொடியில் கூர்ம வுருவாகித் தூக்க
  வுலைந்தசுரர் சுரர்கலெல்லா மொன்று கூடிக்
கரையருகில் நின்று துடைதட்டித் தங்கள்
  கையதினா லிடை யிறுக்கிக் கட்டிக் கொண்டு 1145

வரையதில் வாசுகியை மறுபடியுஞ் சுத்தி
  மடங்கினார் கடல் கடையத் துவங்கி னாரே.

***168.* தரு.** **ஸ்ரீராகம்** **அட தாளம் - சாப்பு**

கடைவோம் வாரீர் - கடலை யின்னங்
கடைகுவோம் வாரீர்
திடமுடன் வெகுவாக வரையிர் பணிபடாமல்
தீர்க்கமாய் நின்றுகொண்டு முன்போல் விட்டுவிடாமல்
(கடை)
ஆய்ப்பாடி தன்னில் கிட்டிணா வதாரஞ் தன்னிற் பண்டு
ஆயர்கடைந்தாப் போலுபாயமாய்த் திடங்கொண்டு
(கடை)
மீறுமமுதம் வருமென்றே யோசனை பண்ணி
மெய்வருந்தக் கூலி தெய்வந் தரு மென் றெண்ணி
(கடை)
சபாசென்று பலியு மிந்திரனுமே போகச்
சதிராகவே யின்னேர மமுதம் பெருகிவர (கடை)
கருணையுடன் மறுபடியு மசுரர் தேவர்
கனமிகுந்த கடலதனைக் கடையும் போது
தருவெனவே யாவருக்கு முதவு கின்ற
தயாநிதியை யீயாதே யென்று சொன்ன
ஒருபா வியவன் போல வுலகுக் கெல்லாம்
முபத்திரவஞ் செய்கின்ற கொடியோன் போலும்
எரிபரவும் வடவைதனை யெரிக்கும் வண்ண
மெழும்பிவிடம் வரக்கண்டு நடுங்கி னாரே.

***169.* விருத்தம்** **ராகம் சாவேரி**

கிடுகிடென அண்ட பகிரண்ட மெல்லாம்
கெதி கலங்கி மருண்டுவிசை கொண்டே (யோடத்)
திடமிருந்த குலவரைகள் பொடிய தாகத்
திசைநான்கு நிலைபிசகிச் சுழலே கொள்ள
விடம்வருகச் சுராசு ரர்கள் கைவிட்டு
மெய்பதறி யிதற்கென்ன செய்வோ மென்று
நடுநடுங்கிக் கைலாச வாசன் முன்னே
நாடினா ரபைய மென்றே கூடினாரே.

***170.* தரு.** **ராகம் : காம்போதி** **அடதாளம் - சாப்பு**

அபயமய் யாமகா தேவா யெங்க
ளாபத் தைத்தீர்த்த திப்போ காவா

உபைய குலத்தோரு முய்யும் படியாயிந்த
வுலகத்துரோ கியாநஞ்சை யுகந்துரட்சிப் பாயுந்தன் (அபைய)
அம்பரமே யாமை யாய்த்த ரித்தாய் - பெரு
மான்தோ லைப்போர் வையாய் விரித்தாய்
பம்பரமென வுலகெல்லா மாட்டிய நாதா
பராபரனே யேழைபங் காளனான நாதா (அபைய)
கிணறுவெட்டவே பெரும்பூதம் வந்த கெடுதி
போல விடஞ்செய்த பேத முணரயிற்
பதறுதே யுகந் துன் கிருபை பார்ப்பாயொ ருவர்துணை
வேறில்லை யுன்னை யடைந்தோங் காப்பாய் (அபய) 1165

காலனைமுன் காலே லேமுன் கடிந்தா - யொரு
பாலனாலே யிந்த ஆலந்தனை - இப்போ
தடுப்ப தென்ன பெரிதா ஐயனே - நீ
நினைந்தா லாகா துண்டோ வரிதோ

உய்யுமஞ் செழுத்தி னுயிர்ப் பொருளாகி
செய்கிருபை புரிமகா தேவனே யபயம்
சத்தியமாய்ச் சிவமாய்ச் சராச ரமாகி
முத்தியின் பொருளா முக்கணா வபையம்
மகியொரு தோலும் வரையெலா மெலும்பு
மகமது கட்லு மானவா வபையம் (அபைய) 1170

சசிரவி கண்ணாய்ச் சாமமே நாவாய்
நீவருள் புரியும் நித்தனே வபையம் (அபைய)
ஓம் நம சிவாவென் றோதிய பேர்க்குப்
பரமா னிக்கும் பகவானே யபையம் (அபைய)
மான்மழு கையாம் வரிசை வெண்ணீறு
தானணி மெங்கள் சங்கரா பையம் (அபைய)
துத்தியர் செய்யுந் தொண்டர்கள் தமக்குத்
தத்துவ மிகுமீசானனே யபையம் (அபைய)
கண்ணினுன் மணியாங் கந்தனைப் பெற்ற
புண்ணியனா மெங்கள் தற்புருடனே யபையம்
(அபைய) 1175

இணக்கமா யெங்க ளீசுவரி புணருங்
குணக்க டலாகும் கோவே யபையம் (அபைய)
தன்மய மான தபோதன ருளத்திற்
சின்மய மென்னும் வாமதேவவே வபையம் (அபைய)
அருமை யாயுன்னை யடைந்திடும் பேர்க்குத்
தருவெனுஞ் சத்தியோ சாதனே யபையம் (அபைய)

171. **விருத்தம்** **ராகம் : ஆனந்த பயிரவி**

சங்கரா சரணம் சம்புவே சரணம்
எங்கள் பங்காள யீசனே சரணம் 1180

திங்கள் சேர் சடையாய் தேசிகா சரணம்
பொங்குமிவ் விடத்தைப் போக்குவாய் சரணம்

வசனம்: தேவ தேவா! தேவ மகேசுவரா! சின்மயானந்த ரூபா! செகக் காரண மூத்தியாகிய மகாதேவா! யிப்பவும் நாங்கள் அமுதங் கடைகிறபோது மகா கொடுமையோடுங் கூடிய ஆலகால விஷமானது பிறந்து சமஸ்தான லோகங்களை யெல்லாமரிந்து கொண்டு வருகிறது. அந்த லோகதுரோகியாகிய ஆலகால விஷத்தினுடைய கெருவந் தேவரீராலே பங்கப்படவேணுமே யல்லாது மற்றொரு வாற்றாலு நிறுவகிக்கக் கூடாது. தேவரீர் சருவசிவ தயாபரனான பிரம்மசொருபியான படியினாலே யெங்கள் துயரத்தையுந் தீர்த்து சகல லோகத்தையும் ரெட்சிக்க வேணுமய்யா மகாதேவா!

சிவன் வசனம்: அப்படியே தீர்த்து வைக்கிறோம். நீங்கலொன்றுக்கும் அஞ்ச வேண்டாம் தேவர்களே!

172. **விருத்தம்.** **ராகம் : காம்போதி**

இமைய மாமலையோன் பெற்ற யேந்திழையாளே கேளாய்
யமையு நல்லமுத வேண்ட வரும் விஷம் வருதல் கண்டு
நமையிங்கு சரணமென்று நாடிய சுரரைக் கார்த்துன் 1185
தமையன்தன் மனமு மீந்தத் தரணியுட் புகழச் செய்வேன்.

173. **தரு.** **ராகம் : சுருட்டி** **அடதாளம் சாப்பு**

செய்குவேன் நாவே
லோகோப காரஞ் செய்குவேன்
வையக மது சூழ
வருகும் விடமே தாழ
செய்யுமதின் வேகம் வீழ
தேவர் யாவரும் வாழ (செய்)
நஞ்சினம் பயந்தோட
நாடும் முதங்கூட

தஞ்சமென்றவர் நீடத்
    தரணியுள்ளோர் கொண்டாட (செய்)
அரகர நுதல் கண்ண
    அருள்செய் படிக வண்ணா
பெருந்தேவர் துதிபண்ணப்
    பிரம்மா வகனன் றென்னச் (செய்)

அந்த யிந்திரன் துதிக்க
    அமுதமது வுதிக்க
நந்தம் புகழ் துதிக்க
    நாரணனு பதிக்க (செய்)

174. விருத்தம். **ராகம் ஆனந்த பயிரவி**

கண்ணினுன் மணியா மெந்தன் காதலியாளே கேளா
யெண்ணிய பரோ பகார மெவர்கள் செய்தாலு முந்தன்
அண்ணனா மாதி மூலத்தரும் பொருளுவுய்ய னென்று
பண்ணுறை வேதம் யாவும் பரிந்துரை செய்யுந்தானே

வசனம்: அகோ வாரும் பெண்ணே! யென் காதலியாகிய பார்ப்பதியே யாதார மொருவர் பூததயவு பச்சாதாபத் துடனே பரோப காரங்கள் செய்கிறார் களோ அதுகளெல்லா முன்தமையனாகிய ஆதிமூல பராபர வஸ்துவான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை யடையு மதனாலேயிப்போது யிந்த விடத்தினாலே சஞ்சலப்படும் படியான தேவதைகளையும் உலகங் களையும் ரெட்சித்து உன் தமையன் மனது சந்தோஷமடையும் படியாகச் செய்கிறேன் பாரும் பெண்ணே பார்ப்பதியே!

175. விருத்தம். **ராகம் : ஆனந்த பயிரவி**

தங்கிய துயரங் கொண்டு தயங்கிய பேர்களுக்கு
யிங்கித வுரைகள் செய்யு மேழை பங்காளானான
மங்கள குணஞ் சேருங்கள் மனங் கொண்டபடிக் கேளாயிப்போ
பொங்கிய விடத்தைத் தீர்த்தால் புருட லெட்சணமாஞ்சாமி

வசனம்: அகோ! கேளுமையா சுவாமி யென் பிராண நாயகா! யிப்பவுமிந்த ஆலகால விடத்தினாலே மகத்தாகிய துயரங்கொண்டு வந்த தேவாதி தேவதைகளை தேவரீரேழை பங்காள னானதாலு மங்கள குணஞ் சேரும்படியான

திருவுள்ளத்தை யுடைத்தான வராலும் யிங்கித வுரைகளான அபையப் பிரதானங் கொடுத்து ரெட்சிக்க வேணுமென்கிற திருவுள்ளப்படிக்கு யிப்போதவர்களை ரெட்சித்தாலால துவே புருட லட்சணமையா சுவாமி யென் பிராணநாதா!

176. விருத்தம். ராகம் : சாவேரி

சரசமுடன் பார்ப்பதி தன்னுரை கொண்டந்தட்
சணத்தினிலே கயிலை மலை விட்டிறங்கி

விரசலுடன் முலகத் துரோகியே நீ
மிஞ்சாதே மிஞ்சாதே யென்று சொல்லித்
தூரியமுட னெதிரெதிரே சென்று நின்று
துலங்கிடு தேவா வமுத மீதே யென்று
அரிய நாவல்க்கனி போல் கண்டந் தன்னில்
அடக்கினான் விஷமதனை யொடுக்கி னானே

வசனம்: அகோதெப்படி யென்றால் சமஸ்தமான லோகத்தையு மெரித்துக் கொண்டு வரும்படியான ஆலகால விஷத்தை சர்வ சீவதயாபரனான மகதேவரான வரொரு நாவலங்கனி போலே தன் கையிலே திரட்டி கண்டத்திலே யடக்கி யொடுக்கி நீலகண்டனென் கிற நாமத்தை யுடைத்தாகி யெழுந்தருளி யிருக்கும்படியான மகாதேவரைப் பார்த்து சித்தர் வித்தியாதர கின்னற கிம்புருட தேவாசுரர் முதலாகிய பேர்களெல்லாந் தோத்திரம் பண்ணி தேவ வாத்தியங்களை முழக்கிப் புஷ்பமாரிப் பொழிந்து வாழ்த்தும்படியான விதங் காண்க.

177. தேவர்கள் விருத்தம் ராகம். சாவேரி

ஸ்ரீகண்டன் செய்கின்ற விசித்திரந் தன்னைத்
தேவர் முதலனை வோருங் கண்டப் போது
அகண்ட பரிபூரண சித்தானந்த வரும்
பொருளை மையனிவ னாகு மென்றே

மேகண்ட வருணன் துந்துபி முழங்க
மின்னார் களொன்றும் நின்திருநடனஞ் செய்யப்
பூகொண்டு அவனடியில் வணங்கி யாதும்
போற்றினார் மலர்மார தூற்றினாரே.

178. தரு. இராகம் : மங்களகாசிகை அடதாளம் சாப்பு

இவனே நித்தியானந்த ரூபன் செக மெங்கும்
நிரைந்து வளரும் பிரதாபன் (இவவே)
நிட்டைகள் சேரும் பிரம்மா திமுதல்
நிலையறியாத் தனிப்பரஞ் சோதி
யிட்ட மாயிவன் தனையோதி யெவ
ரடைவாரவர் பெறுவர் பிரக்கியாதி (இவவே) 1210

அனைவநமையன் முன்வாநம் (யிவன்)

வசனம்: அகோ! தெப்படி யென்றால் மறுபடியும் திருபாற்கடலை தேவாசுர ரெல்லாங் கூடி கடைகிறபோது லெட்சுமி பொருந்திய முகமும் நீண்டு திரண்ட கையும் கூர்மையாகிய நாலு கொம்பும் பாவமாகிய நாலு காலும் ஸ்திரிகளுக்கு சமானமாகிய நடையும் வெண்மையான நிறமும் இந்திரனுக்குவப்பாகும் படியான தாயுமுள்ள அயிராவதமென்கிற யானை பிறந்தது. அந்த யானையைத் தெய்வேந்திரனானவன் தனக்கு வேணுமென்கிற தாயெடுத்துக் கொண்டா னென்ற வாறு

179. விருத்தம். ராகம் : மத்திமாவதி

பொங்கிய கடலைப் பின்னும் பொருந்திய கடையும் போது
மங்களகர மாயரும் மகிழ்ந்து கொண்டாடுகின்ற
வெங்கடாசல பூபாலன் மிகுந்தருள் கொடைபோல் நாளுந்
தங்கிய புகழ் சேர்கற்ப தருவது பிறக்கக் கண்டார் 1215

வசனம்: அகோதெப்படி யென்றால் மறுபடியும் தேவரசுர ரெல்லாங் கூடி கடைகிறபோது மங்கள குணனென்று உலகங்களெல்லாங் கொண்டாடுகின்ற மகாராசயோகனான யென்பிரான் நாயகன் கொடுக்கும் படியான கொடைக்கு நிகராகிய அழகுங் கேட்டதெல்லாம் கொடுக்கும்படியாயும் இந்திரனுடைய பூந்தோட்டத்துக்கு கலங்காரமுமாகிய கற்பகத்தரு வென்கின்ற விருட்சம் பிறந்தது. அந்த விருட்சத்தைத் தெய்வேந்திரனானவன் தன்னுடைய பூந்தோட்டத்துக் கலங்காரமாயிருக்கு மென்பதாயெடுத்துக் கொண்டான் என்றவாறு.

180. விருத்தம். **ராகம் : மத்திமாவதி**

அந்த நற்கயலைப் பின்னு மருமையாயக் கடையும் போது
சுந்தர முகமுங் கண்ணுங் கன்னிய தனமும் நல்ல
தந்து நேரிடையு மன்னர் னஞ்சு நடையுங் கொண்டு
வந்திரு மின்போற் தேவமாதர்கள் பிடிக்கக் கண்டார்

வசனம்: அகோ தெப்படியென்றால் மறுபடியும் திருப்பாற்கடலைத் தேவ சுரரெல்லாங் கூடி கடைகிறபோது சுந்தரமான வதனமும் வேல் போன்ற கண்ணும் நிர்ந்தெழுந்த தனமும் தந்தி போன்றிடையும் அன்னங்கள் அஞ்சும்படியான நடையும் மின்போல மேனியு மித்தியாதியான லெட்சணத்தோடுங் கூடிய வருணீகமான தேவமாதர்கள் பிறந்தார்க ளென்றவாறு.

181. விருத்தம். **ராகம் : மத்திமாவதி**

சத்திய கடலைப் பின்னுஞ் சுரரசுரர் கடையும் போது

வைத்த யென்னுருவு மண்டம் வகுத்திடும் வயிறு மார்பு
மெய்த்திடுங் குணமுங் கோடி மின்னிலை வடிவங் கொண்டு
யெத்திசை புகழ்மால் கொள்ள விலட்சுமி பிறக்கக் கண்டார்.

182. விருத்தம். **ராகம் : மத்திமாவதி**

ககனவா மலர்கள் பெய்யக் காந்தறுவர் கீதம் பாட
அகமகிழ்ந் திந்திரன் மற்ற வனைவரு முபச ரிக்கத்

தகதகென் றொளிகள் வீசத் தரும ரியாச னத்தில்
செகதலம் புரக்க வந்த செந்திரு கொலுக்கொண்டேனே.

183. தரு. **ராகம் : சபாஷ்டகம்** **தாளம் - ஆதி**

கொலுமுகங் கொண்டு விளங்கிய
அழகினைப் பாரு மகாலெட்சுமி (கொலு)
இலகு மிந்திரன்தரு பீடத்தின்மேலே
யிசைந்து வளருமொரு கொடி மின்போலே (கொலு)
வேதரசமோ தர்மமான வுருவோ
வென்று மெய்க்கத் தந்தையாகிய (கொலு)

மோது சமுத்திர ராசனும் பசும்பட்டு வைக்க - அணிந்த பின்பு
ஓதும் விசுவ கர்மா பரணங்கள் சமர்ப்பிக்க - சரஸ்வதியுங்

கோதிலா முத்து சரமா னதை மார்பி லிசைக்க - ஆதிசேசனுங்
குண்ட லங்கொண் டிருகா தினிலடுக்கக் - குளிர்ந்த பொற்
றாமரைம லரயன் கொடுக்க - அண்டர் மாதரும்
பூரண கும்பங் கொடுக்க - அறிந்து
வேதங்கள் பாராயணந் தொடுக்க (கொலு)

பூமிதேவியா மகிவையு மாந்தளிர் கொண்டு - வைத்திடும்போது
காமதேனுவும் பஞ்சகெவ்வியந்தனை மொண்டு -
கொணர்கையினில்
மாமுனிவர் புண்ணிய வாசன மந்திரம் விண்டு - கும்பஞ் சேவிக்க
1235

ஆமதகெசந்திரு மஞ்சன மாடிக் கண்டு - மேகங்களெல்லா
மதிர்ந்திடு துந்துமி வாத்திய மாக்க
அரம்பைய ருறுவசி மேனகை நடிக்கச்
சதிர்பெறு காந்தருவர் யாழிசை படிக்கத்
தாமோதரற்கு மணமாலை யிடத் துடிக்க (கொலு)
வசந்தனும் பரிமள மாகிய தாம்பூல முன்னைச் சமர்ப்பிக்கையி
லிசையும் வருணனொரு தாமரை மாலையை யன்ன கையிற்
கொடுக்கத்
திசையுள தேவர்கள் சுரர்கள் யாவர்கள் தன்னைப் பார்த்திவ
ரெல்லா
மசகமசகமரி பொருந்துன் மனம் புரிந்தென்னை
யென்றெண்ணிக் கொண்டு
புவனமீ ரேழையுந் சிறுவீடாய் மதித்துப் புகழ்ந்துமரப் 1240

பாவை யென்று யிர்களைப் பதிப்பித்து - சிவை
சரஸ்வதியைத் தன் சகியெனக் கதித்துச்
செழிக்கும் திருப்பாற்கடல் தனிலிருந் துதித்து
(கொலு)

184. விருத்தம் ராகம் : மத்திமாவதி

முந்துநவ மணியி ழைத்த பீடமதில்
மூவுலகும் பெற்ற மலர்மாது கொண்ட
சுந்தரமாங் கொலுவிதனைக் கண்டிப் போது
சொல்ல வென்றால் கூடாதென் றெண்ணி யேப்போ
தந்தமுறு முனிவோரு மசுரர் மற்ற
வமரர்களு மலர்மாரி பொழிந்து கையால் 1245

வந்தனைசெய் தம்மம்மா தாயே யென்று
வரஞ்செய்தார் வணங்கித் தோத்திரஞ் செய்தாரே.

185. தரு. **ராகம் : மத்திமாவதி** **ஆதிதாளம்**

லோகமாதா வுமிவள் தானே - சமஸ்தான
லோக மாதாவுமிவள் தானே
பாகு மொழியு மொத்த நேர்கெமன முற்ற
பைங்கொடி யெனச்
சுத்தப் பங்கயன் தனைப் பெற்ற (லோக)
சரிசொலப் போமோ யிந்தத் தாய்க்கி
தரணி யிலடி யேனுஞ் - சேய்க்கு
வரிசிலை யோபுருவம் வயதோ மங்கைப் பருவம்

தரும் 'பசும்' பொன்னுருவம் சகல குணத்திருவம்
(லோக)
குளிர்ந்த கடைக் கண்ணின் கடாட்சம் பெற்றிடும் பேர்க்குக்
கூடும் சாம்பிராச்சி யமும் பின்மோட்சம் விளர்ந்த குழல்
சொருகுக்கு மலர்முகத்தின் திருக்கு நளினமனப்
பெருக்கு நாரணன் மார்பி லிருக்கும் (லோக)
செழிக்குஞ் செங்கமலத்தின் வாசஞ் - செய்யுமிவளே
திருமாலிடத்திற் கொண்டாள் நேசம்
மொழிக்கு முத் தொளி சிந்த முகுந்தன் தனக்குகந்த
பொழிக்கு மன்பு மிகுந்த பூரண கிருபை யைத் தந்த
(லோக)

186. விருத்தம். **ராகம் : மத்திமாவதி**

விமலரா யழியா தவத்து வாகி
மீறயதோர் செல்வகுண னாகுமிந்த
நிமலனெனு மூலகாரண னைச்சேர்ந்தால்
நித்தியசுமங் கிலியாகியென் றென்றைக்கும்
மிமல ...... வாதில்லாம லிருக்கலா
மென்றேன் தன்மனதி லெண்ணிக்
கமலிமுகந்த தனை மாயன் முன்னே நின்று
காட்டினாள் திருமாலை சூட்டினாளே.

187. தரு. **ராகம் : மத்திமாவதி** **ஆதிதாளம்**

மாலையிடு மழகைப் பாரு - செகநாதற்கு -
மாலையிடுமழகைப் பாரும்

சீல மிகுந்த பத்தியாலே - மனது நத்தி
யோலஞ்செய் திருமத்தி மூலனை வலஞ் சுத்தி
(மாலையிடு)

நானே யிவன்றன் பெண்டு தானே யென்றுளங் கொண்டு
சேனைத் தோத்திரம் விண்டு வான வழகைக் கண்டு
(மாலை)
அன்னையழகு தன்னை யென் னென்னு ரைப்பேன் கன்னை
மின்னுங் கொடியாந் தன்னை நன்னயஞ் செய்சுவாமி
முன்னை (மாலை)
விசையாய் நடை கொண்டோங்கி யசையா மலடி தாங்கி
யிசைய வருகும் பாங்கி நிசமாய்த் தருக வாங்கி
(மாலை)

188.* விருத்தம்.** ***ராகம் : மத்திமாவதி

கங்கை மேவிய கடவுளுங் கணவனாக இறையும்

பங்க யாசன மீதுறை பானுவும் பரவு
மெங்க ணாதனை நாரண மூர்த்தியை யின்று
செங்கை யாற்றிரு மாலையும் புனைந்தனை தேவி

189.* விருத்தம்** ***ராகம் : சாவேரி

அந்தமிகு மய்யனுக்கே மாலை யிட்டா
ளமரர்க்களு மலர்மாரி பொழிந்தா ரிப்பால்
யிந்த வுலகீரே முந்தானே கொண்டு
யிசைந்துபால னஞ்செய்வோன் கடமை கொண்டேன்

சுந்தரமாஞ் சீதேவி தன்னோ டொன்றாய்
சொர்ண மணி மயமான பீட மீதிற்
பந்தவளை நீக்கிடு மெட்டெழுத்தோன் னானென்
மீதுகொண்ட அழகு மணக்கோலம் பாரீர்

190.* தரு.** ***ராகம் : மெதுகுல காம்போதி

ஆதிமூல நாதன் கொண்ட ழகு மணக்கோலம் பாரீர்
சோதியாஞ் சீதேவியுடன் சொர்ணப் பீட மதலிப்போ (ஆதி)
இந்திரன் கவரிவீச யெங்கள் சேனையர் கோன்பேச
சந்திரன் சந்தனம் பூச சாமிசுன் ரவிகண் கூச
தைய்யான் செய்யாலிட நேச (ஆதி)
தேவ மாதர் களாலத்தி செங்கை கொண்டு வலஞ்சுத்தி
யாவ லுடன்வரும் பத்தியது கண்ட வர்க்கே வெற்றி (ஆதி)

சங்கொடு சக்கரக் கையா தாசனென்ற பேர்களுய்ய
பொங்கி வானோர்மலர் பெய்ய பூமகன் தோத்திரஞ் செய்ய

191. நலுங்கு

ஸ்ரீ நாதா செய செயா செந்-திருமார்பா செயசெயா
பூ நாதா செய செயா ஆதி-பொருளோனே செய செயா
யிலகு பரிமள கெந்தன் தன்னை யிலக்குமி யுந்தா னெடுத்து
நலமுடன் னாரணன் மார்பிலப்போ நாடிமிகத் த ணணிந்தார்
கெந்த பொடிதனை யள்ளியம்மன் - கேசவன் மேல் வீசையிலே
மந்தகாசங் கொண்டையன் மறுபடியுந் தானிறைந்தார்
கற்பூரந்தான் பொதிந்த கடைக் காயும்ப்போ தேவிதர
நற்பொருளுங் கிருபை கொண்டு கொஞ்ச நகைத்துச் சுருள்
தான் கொடுத்தார் 1280

அமரர் கரமது கண்டு மனதானந்த மீறியப்போ
தயிதிமென நடனஞ் செய்து தங்கள் தேகபரவச மானார்

192. தரு. ராகம் : சைந்தவி ஆதிதாளம்

செய செயமாம் பாஹி செகந்னாயகா - செயசெயமாம் பாஹி
கயமுறைக் கிறங்கி முன்காத்த நாதனே - செயசெயமாம் பாஹி
முனிசென சம்ரட்ச மோகன சொரூபா
கனிவாய்ப்பூமங்கைசேர் காருண்ணியப் பிரதாபா (செய)
அகிலாண்ட முழுது மாண்ட நாயகா
ககனவார்க்கு மெம்மைக் காக்குந் தாயகா (செயசெய)
ஆரணத்தின் மீதுறையு மாதி காரணா
பூரணமா யெங்குநிறை புண்ணிய நாரணா (செய) 1285

193. விருத்தம் ராகம் : சாவேரி

ஐயன் மாயவனைத் தேவ ரனைவரும் வணங்கி யெங்கள்
செய்யவள் நாதா வென்று தெளிந்து தோத்திரங்கள் செய்து
பைய வாசுகிதன் னோடு பருமலை தன்னைச் சுத்தி
வையகஞ் சுழல மீறி மறுபடி கடைய லுற்றார்.

194. விருத்தம். ராகம் : காம்போதி

வேதமோர் நான்கும் வாழ்க மிஞ்சிய மகங்கள் வாழ்க 129-
கோதிலா முனிவோர் வாழ்க குவலயத் தோர்கள் வாழ்க
நீதி சேரிந்திரன் வாழ்க நிலைகொண்டு தேவர் வாழ்க
ஆதிமால் கிறுபை யாலே யமுதம் பிறக்கக் கண்டார்

195. தரு. ராகம் : ஆனந்த பயிரவி ஆதிதாளம் - சாப்பு

அமுதம் பிறந்தைப் பாரும் பாரும் - வெகு
ஆனந்தமாகக் கொண்டாடி யெல்லோரும் - (அமுதம்)
யிமையவர்க் குதவிய நாரண னாலே
யென்பிராண நாயகன் தன்குணம் போலே (அமுதம்)

மருவுந் திருமாலுருக் கொண்டு - தன்மந்திரி
வருவதைக் கண்டு
யிரையும் பாற்கடல் தனைக் கடையத் - தேவேந்திரன்
துயர் நீங்கிச் சவுக்கிய மடைய (அமுதம்)
ஆதியில் மால்சொன்ன வாக்கு - யிப்படி
யாச்சுதே யிதுதனை நோக்கு - என்று
கோதிலா வியாழனு நல்லுரை விள்ளக்
குதித் தந்த வாசவ னானந்தங் கொள்ள (அமுதம்)
மங்களமொழி யெங்குஞ் சொல்ல - அந்த
வானவரசுரரை வெல்ல - நாளும்
பொங்குங் கடல் மலையுமாகக் - கூடிப்
பொருந்தக் கடையும்போது புங்கவ யோக (அமுதம்)

196. விருத்தம். ராகம் சாவேரி

தன்மந்திரியின் கையுறை சதிர்நேர் கடமதனில்
மன்னு முயர்தலை யெல்லாந் தருமதுரம் பொழியமுதைச்
சின்னஞ் சிறுமதி யேயுள தெரியா மாவலிர,ன்
முன்னோர் படை யவுணாதிகள் முனிந்தே கட்டிப் பறித்தார்

வசனம்: அகோ! தெப்படி யென்றால் மறுபடியுந் திருப்பாற்கடலிலேயிருந்து மகா யெவ்வன புருஷனாகவும் கோதண்ட பாணியாகவும் சுந்தரமான வலம்புரிச்சங்கம் போலே கழுத்துஞ் செந்தாமரை போன்ற கண்ணும் வெண்மையான வத்திரமும் சகலாபரண பூஜிதமுஞ் சிங்கம் போன்ற பராக்கிரமமும் மகாவிஷ்ணு அம்பிகையோடுங் கூடியாயுந் வேதியான தேவ வயித்திய தன் மந்திரியான வன்கையிலே யமுதகலசங் கொண்டு பிறக்க அந்த அமுதக் கலசத்தை யசுரர்கள் பார்த்துத் தேவதை களெல்லாம் பிரம்மிக்கும்படியாகப் பிடிங்கிக் கொண்டு சாவில்லாம லிருக்கும் படியான மருந்து நமக்குக் கிடைத்த தென்று ஓடிப்போனார்களென்ற வாறு.

197. **விருத்தம்.** **ராகம் : ஆனந்த பயிரவி**

பலமிகுந் தசுர ரெல்லாம் பரித்துக் கொண்டமுதந் தன்னை
நலமி குமிமயச் சார்வை நாடியே போகும் போது
யிலவினைக் காத்த கிள்ளை யெனயிந்திரன் மனது நொந்து
அலைக டற்றுயில் நாதா வென்றலறியே முறையிட் டானே.

198. *தரு.* *ராகம் : குறிஞ்சி* *தாளம் - ஆதிதாளம் - சாப்பு*

என்ன செய்குவோ மினியெதினாலே தேறுவோஞ் சாமி
இந்த அநியாயந் தனைச் சகிக்குமோ யிப்பூமி 1310

பட்டபாடெல்லாஞ் சாம்பலிட்ட நெய்யாச்சுதே - யிப்போதந்த
துட்டர முதங் கொண்டால் நாங்கள் கடைத்தேறுவதெப்போ
ஐயனே யுன்வலுக் கொண்டல்லோ நாங்களும் வந்தோம் யிந்த
மைவண்ணர் காட்டங்குடிக்கு மென்றெண்ணியே நைந்தோம்
பாத்திர மறிந்து பிச்சையிட வேணுமென்ற சொற்பொய்யோ யிவர்
மாத்திர மமுத முண்டா லுலகமே முழுகிப் போமையோ
சதிசெய்யும் போர்களுக் கெவரிடங் கொடுப்பார்கள் தானே நாலு
மதியுந் தெரிந்த தேவரீர்க் கென் சொல்லுவேனடியேனே
யிலவினைக் காத்த கிளிக் கூட்டம் போலே யாச்சுதே யந்தம்
புலையருக் கடிமையே யானோ மினிமே லென்ன பேச்சே.
1315

வசனம்: அகோ! கேளுங்களையா! செகன்னாயகா யிப்பவுஞ் திருப்பாற் கடலிலே பிறந்த தேவாமுதத்தை மகாபலி முதலாகிய வசுராள் யெங்களை யதிக்கிர மித்துப் பிடிங்கிக் கொண்டு போய்விட்ட படியினாலே யினி மேலெங் களுக்கு வேறெயொரு கெதியு மில்லை யான படியினாலே தேவரீர் கிருபை செய்து அந்த அசுராள் கொண்டு போகும் படியான தேவாமுதத்தை யெங்களுக்குக் கிடைக்கும் படியாகக் கிருபை செய்தருளுமையா சுவாமி, செகன்னாயகா!

சுவாமி வசனம்: அப்படியே! யந்த அசுராள் பிடிங்கிக் கொண்டு போகும்படியான தேவாமுதத்தை யுங்களுக்குக் கிடைக்கும்படி கிருபை செய்தருளுகிறோ மிந்திராதி முதலாகிய தேவர்களே!

199. விருத்தம். ராகம் : மத்திமாவதி

மனம்பதறி யிந்திரன் முதல்தேவ ரெல்லா
மாயவன் முன்வாடியே மயங்கும் போது
அனந்தசய னத்தானும் நீங்க ளிப்போ
தஞ்சாம லிரு மமுதஞ் தருவே னென்று
கனங்கொளும் ஆதரவவர்க் குச்சொல்லி முன்னே
கனகமணி மயவாடை யணிந்து திவ்விய
தனந்திரளப் பெண்ணுருவாய் நின்று சேவை
தருகிறான் மோகினியாய் வருகின் றானே.

200. தரு. ராகம் : மோகனம் ஆதிதாளம்

செகன்மோ கினியிதோ வாராள் - பாரும் (செகன்)
மகாதவசி களும்மனங் கலங்க
சகலாபரணமுஞ் சரிந்திலங்க (செகன்)

கலீர்கலீரென்றிடுஞ் சிலம்போசை - யிதை
கண்டு சகிக்கவெகு பிரயாசை
பலிமுதல் சுரர் யெல்லாம் மயங்க
பாவையே நீ யெங்களாவி யெனத் தயங்க (செகன்)
மின்னல் கொடியோ யிவள் மேனகையோ
மேக மண்டலமோ யிவள்சிகையோ
சொர்ணக் குடமாமிரு தனங் கண்டவர் வாடத்
தோகையே நீயிப்போ காவெடன்ற சுரர்கட்ட (செகன்)
சந்திர வியமெனு முகநடுவே சாந்துத் திலக மிட்டதது படவே
யிந்திராணி முதலான நங்கையர் கண்டு கூச

யிங்கதமா யணிந்த வாடை வாசங்கள் வீச (செகன்)

வசனம்: அகோ! தெப்படி யென்றால் இந்தவித மாகத் தன் மந்திரி யானவன் கையிலே கொண்டு வரும்படியான அமுத கடகத்தை அசுராள் பிடுங்கிக் கொண்டு போகும்போது யிந்திரன் முதலாகிய தேவர்க ளெல்லாம் பயப்பட்டு மகாவிஷ்ணுவைப் பார்த்துத் தோத்திரம் பண்ணி அமுதக் கலசத்தை அசுராள் பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்களே யென்று (கூற) ஸ்ரீமந் நாராயணமூர்த்தி யாகறவர் வந்த தேவதைகளைப் பார்த்து நீங்க ளொன்றுக்கும் பயப்பட வேண்டிய தில்லை யென்னுடைய மாயா விசித்ர பலத்தினோலே அந்த அமுத கலசத்தை யுங்கள் யிஷ்டப் படிக்கு வரும்படியாகச் செய்கிறே னென்று தேறுதல் சொல்லி யுடனே அந்த நாராயணனானவனும் அந்த

அசுரர்களெல்லாரும் மயங்கிப் பிரமிக்கும் படியாக மகா திவ்விய மங்கள சொரூபத்துடனே செகன் மோகனியாக வதாரஞ் செய்தானென்றவாறு.

201. **விருத்தம்.** **ராகம் : மத்திமாவதி**

பகலவனோ டுமின்னினமோ பதுமத் தானோ
பதினாறு கலைசேர்ந்த நிலவோ வென்று
முகவடி வைக்கக் கண்டுணரத் தேவர் மற்ற
முனிவர்களு மறியாமல் மலைக்கும் போது
அகமலர்ந்த வசுரரெல்லா மறிவு நீங்கி
யமுதங்கடந் தனையவள்தன் முன்னே வைத்துத்
தகைமையுடன் நீதருவாய் மானே யென்று
தயங்கினார்மோ கினிமுன் மயங்கி னாரே.

202. **தரு.** **ராகம் : ஸ்ரீராகம்** **தாளம் சாப்பு**

நீதருவாயோ யமுதந்தனை - நீ தருவாயோ
நீ தருவா யெங்கள் காதல்தீர - யிப்போது
மாதர்மணியே யுந்தன் பாதந்தனிலே வைத்தோம் (நீதரு)

பேதக மென்னோ - முன்றனை மிஞ்சிப் பலவந்தம் பண்ணோம்
நீதியுடனே நிதநினைப்போ நாங்க ளுன்னை
காதலுடனே னெங்களுக்குக் களித்தே யமுதம் தன்னை (நீ)
செய்தவத்தாலே முன்புதயஞ் செய்யு முன்னாலே
யுய்யும் வழி யெங்களுக்குந் டாச்சு சுதிதுக்கப்போ
வையகந் தன்னில் வந்த மானே மதனே தேனே யிப்போ
(நீ)
கலசத்தை வாங்கி மலர்க்கையினாற் - கனங்கொண்டு தாங்கி

நிலை கொண்ட சிலம்பொலி நெருங்கி நிலத்தில் மொய்த்துச்
சிலுசிலுவென வேயிரு வகுப்பாய் பந்தி(ன) வைத்து (நீதரு)

வசனம்: அகோ! வாருமம்மா, செகன்மோகினியே! உம்மைப் பார்த்தால் மகா தர்ம தேவதை போலேயிருக்கிறது ஆகையா லிந்த வமுதத்தையு முடைய கையிலே வாங்கி யெங்களிரு குலத்தோருக்கும் நீரே கொடுத்தால் நாங்கள் செய்த அவிழ்த பலனெங்களுக்குச் சித்திக்கு மென்பதாய் தோணுகிற படியினாலே யிந்த வமுதத்தை நீரே கொடுக்க வேண்டுமம்மா, செகன் மோகினியே!

மோகினி வசனம்: அகோ! வாருங்கோ யிந்திராதி முதலாகிய தேவர்களே பலி முதலாகிய அசுர சேனாதி பதிகளே யிப்பவும் நீங்கள் யிருவகைப் பேரும் என்னை மத்தியத்தமாக யென்னிடத்தில் அமுதத்தைக் கொடுத்த படியினாலே யினிமேல் நீங்கள் ஒன்றுக்கு மசம்பாதப் பட வேண்டியதில்லை. யானபடியினாலே தேவ கூட்டங்க ளெல்லாவொருபுறமு மசுர கூட்டங்களெல்லா மொரு புறமுமாக யிருவகைப் பேர்களும் இரண்டு பந்தியாக யிருந்தீர்களாகில் நாம் பட்சஞ் செய்யாமல் சமமாக வமுதங் கொடுத்து வருகிறோ மாகையினாலே தெர்பாசனம் போட்டு யிரண்டு பந்தியாக யிருங்கோ, யிந்திராதி முதலாகிய தேவர்களே! பலி முதலாகிய யசுர சேனாதி பதிகளே!

இந்திரன் வசனம், பலி வசனம்: அப்படியே யிருக்கிறோமம்மா செகன் மோகினியே!

203. அகவல். **ராகம் : யதுகுல காம்போதி**

புதுமையாய் நின்ற புருட மோகினியைச்
சதமென வசுரர் தகைமையாய் நம்பி
மோக மாய்க்கை யினால முதத்தை
பாகமாய் யீயெனப் பரிந்தவர்க் கொடுக்க
வஞ்சனை யாக வாங்கியவ் வமுதத்தை
மிஞ்சியே தேவர் மீறிட வளித்து
மாய்க்கையா லசுரர் மயங்கிடு வண்ணஞ்
தோகைத் தன்கண்ணால் சுழற்றிடும் போது

மெய்மறந்த தந்த வீம்புரை யவுணர்
தையல் மோகினியாற் றயங்கியே நிற்க
பண்ணிய லீலைப் பாவனை தன்னை
யெண்ணி யாராலே யியம்பிடக் கூடும்
முல்லை நேர்நகைக்கே முப்பது வினையாஞ்
சொல்லுரை தகைக்குச் சுகனுள மயங்கும்
அசைந்திடு நடைக்கண் டஞ்சிடு மன்ன
மிசைய நுண்ணிடைக்கிணை யேற்றவையோ மின்னும்
அற்புத வுந்தி அழகுநிர்ச் சுழியும்
பொற்புறு கொங்கை பூரணண் குடமும்

சங்குநேர்க் கழுத்துத் சரிந்திடுங் குலையும்
வங்கனை நங்கை செய்வரிசை முத்தழகும்

கோவையின் கனிபோல் கொஞ்சிய யிதழந்
தேவிதன் மலர்முக திவ்வியசே வையையும்
கண்டவர் எல்லாம் கரைந்திவள் வசமாய்
விண்டுமாயக் கையினில் வீற்றிருந் தனரே

204. விருத்தம். *ராகம் : மத்திமாவதி*

மனமயங்கி யிந்தவண்ண மசுர ரெல்லா
மாமோகங் கொண்ட முதக்கலசந் தன்னைக்
கனநிறைந்த மோகினிமுன் வைத்து நீயே
கலித்தெங்க லிருகுலமு முய்யும் வண்ண

மினமுடனே பந்திவைத்துத் தருவா யென்ன
விமையவர்களிட மதனில் பட்சங் கொண்டு
புனிதமுட னமுதகடங் கையில் கொண்ட
பொருளினா லமுதமிய்ந் தருளி னானே.

205. தரு. *ராகம் : முகாரி* *ஆதி தாளம்*

ஆனந்தமா யமுத பானமே செய்தார்
தானந்த மாய்மரரே ரெல்லோருமே யுய்தார் (ஆ)
அண்டம் யாவையும் பெற்ற மாதவுந் தாங்கி
அன்புடன் தருகையி லமரர் கையினில் வாங்கி (ஆ)
அன்னநடையு கிள்ளைமா மொழியும் விண்டு
அள்ளியளிக் கக்கண்டுதுள் ளிக்கொண்டாடிக் கொண்டு
(ஆ)

அகராதி பயந்தீர்ந்தோ டென்றுளம் மதித்து
ஆரணத்தி லுறைகின்ற நாரணனை யேதுதித்து (ஆ)

206. விருத்தம். *ராகம் : மத்திமாவதி*

நம்பிய யசுரர்க் கெல்லாம் நல்லமு தளிக்கும் போது
வம்பனா மசுரன் ராகு புதிகதி ருருகில் வந்து
தெம்புடன் கையை நீட்டத் தெரிந்தவர் சாடை செய்ய
யெம்பிரான் திகிரி யாலே யிருவுட லாக்கி னானே.

207. விருத்தம். *ராகம் : மத்திமாவதி*

மதிக்கதி ரருகில் வந்த வஞ்சக வசுரன் றன்னைக்
கெதிபெற வடிக்கும் போது கேதுடன் ராகு வாகிப்
பதிபெறும் கிரகமே ழோடே பரிந்து ரெண்டாகிச் சேர்ந்தாண்
னதின்பிற கையின் முன்போல ரியெனத் தோன்றி னானே

லகிதப்பட்டுப் போயிருக்கிறபடியினாலே யுன்னை விட்டு வேறே சிந்திக்க மாட்டாது. ஆகையால் கிறுவை செய்து யென்னை ரெட்சிக்க வேணுமம்மா செகன் மோகினியே!

247 . விருத்தம் ***ராகம் : சாவேரி***

நீலகண்ட னிவ்விதமாய் மோகங் கொண்டு
  நின்ற செகன் மோகினிகை தன்னைப்பற்றி
சீலமுடன் மதிமயங்கிக் கலகமாகி
  தெளிந்து யீதென்ன மகாமாய்கை யென்றே
வேலவன் றன்றந்தையருந் தலைகுனிந்து
  வெட்கியங்கு மருங்குடனே நிற்கும் போது
கோலமுடன் பெண்ணுருவாய் நின்ற மாயன்
  கூட்டினான் பரியாசங் காட்டினானே.

248. தரு ***ராகம் : குறிஞ்சி தானம்*** ***தாளம் : சாப்பு***

ஏங்காணுமோய்மகா தவசியாரே யுங்கள்
இதய திட மெங்கே தவசியரே
வாங்காமல் பிரமநிட்டை புரிந்தவரே - யிப்போ
மயங்கி யெந்தன் பின்னே திரிந்தவரே

பெண் மாய்கை யொழித்தவருண்டோ காணுந் - சித்த
பித்த னென் றாச்சினி யென்ன வேணும்
கண்மனி போலுமையை யருகில் வைத்தீ றென்னைக்
கண்டு பெண்ணென்றே மிகமைய லுற்றீர்

எவர்மாமறிவார் விஷ்ணு மாய்கைதன்னை - யாவு
மென்வச மென்னறீயிரோ முன்னை
தவசியர் தாருகா வனம்நாடிக் - தவந்
தனையழித்தல்லோ யேன்பெண்மோடி

திடசித்தர் போல் சொல்லிக் கொண்டீரே - யென்னை
ஸ்திரியென்றே நினைந்துரை விண்டிரே
அடங்காத மோகத்தாற் சென்றீரோ - யிப்போ
தாடெடுத்த கள்ளன்போல் நின்றீரே.

வசனம்: அகோ! வாருமையா கயிலாச பதியாகிய மகாதேவரே யிப்பவும் நான் செகன் மோகினியாயவதாரஞ் செய்தால் நீர் சகிக்க மாட்டீரென்று முன்னாலே சொன்னதற்கு மகாதிட சித்தர்போலும் மகா கெளபீன சித்தர்போலும் வெகுவல்லமை சொல்லிக் கொண்டீரேயிப் போது உம்முடைய அறிவெல்லாம் நீங்கி மோகாகிருந்தாராய்

யென் பின்னோட நீரலைந்து திரிந்து பார்த்த போதெல்லாம் பரிகாசம் பண்ணும் படியாக வெகுமானங் குலைந்து நீர்பட்டபாடு சொல்லமுடியாது. உம்முடைய சென்ம சென்மத்துக்கும் போதுங் காணும் நீர் சுத்தப் பயித்தியக்கார னென்பது நன்றாய் வெளியாச்சுது யிப்படி நீரலைந்து பட்டபாட்டைப் பார்வதி கேட்டால் உம்மை வொருபோதும் ஒப்புக்கொள்ளு கிறதாயிருக்க மாட்டாது. உம்முடைய சித்த சாபல்வியத்தை நினைத்துப் பார்த்தால் எனக்கே மகா லாஞ்சனையாயிருக்கிறது. காணுமோய்! பண்டாரமான மகாதேவரே!

249. **விருத்தம்** **ராகம் : காம்போதி**

மரமொடு கல்லும் புல்லும் வானமு நகைக்க வேதன்
னருமை மைத்துனனைப் பார்த்து ஆதிமால் பரியா சித்தான்
ஒருபுறம் வளருகின்ற வுமையன் தானு மப்போ
திருமுகங் கோபங் கொண்டு சிவ மனுரை செய்வாளே. 1625

250 . **விருத்தம்** **ராகம் : ஆனந்த பயிரவி**

கண்டனன் நான்நாதா வுந்தன் கருத்தினில் வஞ்சகத்தை
கொண்டவள் நானிருக்க குறித்தொரு மாதர் தன்னை
அண்டியே யாசை கொண்டு அவள் பிறகலைந் தரந்த
மண்டல மறிய யென்முன் வருவது நாயமல்ல.

251. **ஏசல்-தரு** **ராகம்:கேதாள கவுளை தாளம்-ஆதி-சாப்பு**

ஆசை கொண்டவர் போலே
யெனக்குச் சொன்ன அன்பா யிதுவெல்லாம்
வேசையர் சொல்மொழி போலே
யாச்சு தல்லாமல் விசுவாசங் காணேனே
காணுமடமயிலே யெந்தனுட
கண்ணே மலையன் பெண்ணே

வீண் மாய்கை யீதெல்லா மல்லாது
யென்மனம் விரும்புமோ மறுயிதான
மருகின்ற தங்கை தன்னை
தலைமீதில் வைத்தீர நானிருக்கப்
பருவங் கண்டுரை செய்து பகட்டு
நீரிவ் வித்தை படித்திருக்கிறேன் காணும்
நானுன்னை யல்லாது மனந்தனில்
நாடே னொரு மாதை

தேனே திருமாலுக் கிளையவளாகுந்
 திருவே பொறுத்துக் கொள்வாய்
பொறுமை கொண்ட ளென்றே
 யறிந்தென்னைப் போக வாக்கிட்டீர்
சிறுமை கொண்டவர் மனம்பெருமை
 கொண்டா வல்லது தேறுவரோசாமி!
சாமிக்குங் சாமியென்ன
 வந்தருள் தயாநிதியே கேளாய்
பூமிக்குள் வேறொரு மாதரை
 நானினிப் புணரேன் பிரமாணமிதே
தெய்வமா நீர்தானே யத்து
 மிஞ்சி செய்தாலு லகிலுள்ளோர்
மெய்யென வேத மொழியைப் பிடித்து
 விதிகள் செய்வாரோ ஐயா
ஐயாயுதம் பிடித்த வுன்றனுட
 அண்ணன்றன் மாய்கை யல்லாற்
செய்யவேணு மென்று நானாக
 இவ்வேலை செய்தேனோ கண்மணி

வசனம்: அகோ! வாரும் பெண்ணே! என் கண்மணியாகிய பார்வதியே! யிப்பவும் பல்லாயிரங் கோடி யண்டங் களுஞ் சிருட்டித்திற் சங்கார கர்த்தனான சருவே சுவரனான ஆதிமூல பாஸர வஸ்துவான உன்னுடைய தமையனான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியான வருடைய விசித்திர மாய்கையினாலே யென்மனது சஞ்சலப் பட்டதே யல்லாமற் றொன்றினாலு மில்லை. மேலுமவருடைய மாய்கை லோகங்களெல்லாம் வியாபித்திருக்கிற தென்பது வுனக்குத் தெரியாததல்லவே யானபடியினாலே நான் செய்யும் படியான குற்றத்தை உன் மனதில் கோபமா யெண்ணாமல் பொறுத்துக் கொள்வாய் பெண்ணே! யென் கண்மணியாகிய பார்வதியே!

வசனம்: அகோ! கேளுங்களைய்யா சுவாமி! யென் பிராண நாயகா! தேவரீருடைய திருவுள்ள யிவ்வளவு கபட வஞ்சனை யோடுங் கூடி யிருக்குமென்று அடியாளுக்குத் தெரியாமல் போச்சுது. யிப்போது ஒரு புருடன் பெண் வேஷமானதைக் கண்டு நீர் மனது தைரியங் கெட்டு வீணில் மோகாக்கிற ரானவர் நிசமான பெண்களைக் கண்டால் லென்ன வென்று உம்முடைய மனது சஞ்சலிக்க மாட்டாது. ஆகையால் தேவரீருடைய வன்பு நன்றாய் தெரிந்தது.

ஆனபடியினாலே கொஞ்சம்) நாளைக்கு என் பிறந்தகத்திலிருந்து அப்பால் வருகிறேன். நீர் கெங்கா தேவியுடனே சுகமாயிருந்தனுபவிக்க லாமையா சுவாமி யென் .பிராண! நாயகா!

வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி யென்னுயிர்த் துணை யாகிய செகன்னாயகா! யிப்பவு மென்னை கயிலை பதி கை பிடித்த நாள் முதல் யிதுவரையில் ஒரு நாளாவது யென்மனது சந்துட்டி யடைந்திருக்க வில்லை. யாகையால் கொஞ்ச, நாளைக்கு யிவ்விடத்தில் தானேயிருந்து யென் மனக்குறை யெல்லாம் மாற்றிக் கொள்ள வேணுமையா யென்னுயிர்த் துணையாகிய ஆதி செகன்னாயகா!

மாயன் வசனம்: அகோ! வாராய் யிமோற் பருவத ராசன் பெற்ற யேந்திகையே! நீ யிவ்வளவு தூரம் மனதிலாயாசஞ் செய்ய வேண்டியதில்லை. நான் சாட்டையில்லாமல் பம்பரமாட்டி விக்கும் படியாகி கபட நாடக சூத்திரதாரியான செகன்மோகன மாய விசித்திர சொரூபத்தைக் கண்டு அந்தமக தேவனுடைய சித்தங் கலங்கினதேயல்லாது மற்றபடியவர் சித்தங்கலங்க மாட்டாது. மேலுமவருக் கென்னிடத்தில் மிகுந்த பக்தி செய்யப்பட்ட பரீதி வாச்சல்லியத்தை நீ யறியாமல் கோபஞ் செய்வது நாயமல்ல. ஆகையால் நீ யவரை விட்டுப் பிரியாமலிருக்கும் படியான வுமையவ ளென்று பேர் பெற்ற படிக்கு மகாதேவரிடத்தில் போய்ச் சுகமாயிருந்து வசிக்கலாம் பெண்ணே! பார்வதி!

பார்வதி வசனம்: அப்படியே! மகா பாக்கியமையா சுவாமி செகன்னாயகா!

சிவன் வசனம்: அகோ! கேளுங்களையா சுவாமி செகன்னாயகா யிப்பவும் தேவருடைய விசித்திர மாய்கை யாகிய சொரூபத்தைக் கண்டு யென்மனது சஞ்சலப் பட்டதே யல்லாமல் வேறில்லை. மேலுந் தேவரீருடைய மாய்கையை யறிகிறதற்கு யெவராலே தானாகுமான படியினாலே அடியேன் கயிலாசத்துக்குப் போகும் படியாக கிறுவை செய்து அனுப்பிவைக்க வேணுமையா சுவாமி செகன்னாயகா.

வசனம்: ஆனாலப்படியே! போய்வாருமையா மகாதேவா.

வசனம்: அடியேங்கள் விடை கொள்ளுகிறோமையாய! செகன்னாயகா

252. விருத்தம் ராகம் : சாவேரி

மனம் பொருந்தி யுமையவளு மரனுங் கூடி
மகிமை பெறுங் கயிலாச மலைக்குச் சென்றார்
கனம் பொருந்தும் வைகுந்தை வாசனானோன்
களி கூர்ந்து செய்யவனோடிருந் தானப்பால்
தனம் யொருந்துங் கற்பக நன்னாட்டை யாளத்
தகும் வியாழன் வைத்த சுபஞ் சார்ந்த நானி
கனம் பொருந்து மிமையவர்கள் வாழ்த்தவே கொண்
டாடினான் யிந்திரன் முடி சூட்டினானே.

253. தரு. ராகம்:சவுராட்டிரம் தாளம் - ஆதிதாளம்

தேவமுடி புனைந்து விளங்கிய அழகினைப் பாருந்
-தேவேந்திர ராசன்
தேவமுடி புனைந்து விளங்கிய அழகினைப் பாரும்
மூவரகுளும் பரிபூரணமாய் கொண்டு
மொழியு மிந்திரானி தன்னழகு குவினைக் கண்டு (தேவ)
யிசையொரு தும்புரு நாரதர் கானங்கள் படிக்க
-சத்த மேகமும்
விசையுடன் துந்துமி வாத்தியமானதை யடிக்க
-தனதடங்கள்
அசையவே யுறுவசிடி மேனகை யரம்பையர் நடிக்க
-வச்சரஸ்திரிகள்

விசுவாச முளதுரை வந்தா னென்றே மலர் முடிக்க
-திசைக ளெங்கும் (தேவ)
விருது மிகுந்த பெருங் கட்டியம்) நீட
விளங்கும் வெண்சாமரை யிருபுறம் போட
திருமகளருள் பரிபூரணமாய்க் கூட
சித்தர் கின்னரர் முனிவேந்தர்கள் கொண்டாட (தேவ)
சுரர்குரு வானவிக் பூரண கும்பங்கள் வகை விதிக்க
- கெந்தருவ ரெல்லாம்
புரவசமாகியே திமிதி மெனவே நின்று குதிக்க
- சப்தரிஷிகள்
அருகினிலே யிருந்தாசீர் வாதஞ் சொல்லித் துதிக்க
- யிந்திராணியும்
வரமுள நாயகம் வந்தா னென்று மனம் கதிக்க
- முனிவரெல்லாம்
மகம் வளர்ந்திடு மினியென்றவர் சொல்ல
வரிசை கொளமரர்பதி தன்னப் புல்லச்

சகல வரங்களையும் பெற்றிடும் வல்ல
சரணமென் றனைவரு மேற்றிட நல்ல (தேவ)
மண்ணும் விண்ணும் வெகுவானந் கொண்டு மனஞ்செழிக்க
- புறந்தரன் தன்
வண்ண மாளிகையில் நிரந்தரமுஞ் செல்வங் கொழிக்கத்
- திருவடியின்
திண்ணமாமணி யினொளியது பருதியைப் பழிக்கத்
- மேனியிலுரை
கண்ணாயிரங் களுமிடை யடியாமலே விழிக்க
- வொரு காலமும்
அழிவிலா அமுதத்தை ஐயன் யளிக்கக் கண்டு
அதிநாராயணன் புகழ்தனை யடிக்கடி விண்டு
விழியுடன் வருமொன்ற சொல்லுதியிர் பண்டு
மாயனுடைரத்த படிவருத்தி மகிழ்ச்சி கொண்டு
முடிபுனைந்து விளங்கிய அடியினைப் பாடும் கூடியங
தருயெனை (தேவ)

254. வாழி தரு ராகம் : சுருட்டி ஆதிதாளம் - சாப்பு

மங்களம் மங்களம் - நித்திய செய மங்களம் மங்களம்
சீரான லெட்சுமியும் நாரணனும் வாழி
தேவியுமையவளும் மகாதேவனுமே வாழி
காரர் குழல் வாணியு நான்முகனும் வாழி
கன்னியிருவருடன் கந்தனும் வாழி (மங்களம்)
வேதந் தமிழ்செய்த நாவீரனும் வாழி
வேதியர் பணி ராமனுடன் வாழி
யோது புராண நால்வேதமு வாழி
யுற்ற மணவாள முனி வயிணவர்வாழி (மங்களம்)
மண்டவிகள் வாழி மனுநீதி வாழி
மன்னவர்கள் செங்கோலும் வான்புவியும் வாழி
கொண்டல் தவழ் மங்கை நகர் கோயிலன் வாழி
கோதண்டராமன் திரிபுராந்தீசர் வாழி (மங்களம்)
இந்திரன் வாழி யிமையோர்களும் வாழி
யிசையுடன் தும்புரு நாரதரும் வாழி
சந்திர சூரிய ணெண்டிசையும் வாழி
சத்த ரிஷியொரு முனிமற்றவரு வாழி (மங்களம்)
மகிமை பெரும் மிக்கதையைக் கேட்போரும் வாழி
மனமகிழ்ந்து படிப்போரும் நடிப்போரும் வாழி
சகலருங் கொண்டாடியே மனம் மகிழ்ந்திடச்
சாற்றுமிக் கவிநீடு தாரணியில் வாழி (மங்களம்)
பாற்கடல் வாழி தருமந்திர கிரிவாழி
சதுர்வேதமும் வாழி தந்திமுகன் வாழி
வெங்கடாசல தீரன் தங்குபுகழ் வாழி
வேலவன் றன்னடியான் வாழ வாழியே (மங்களம்)
மங்களம் நித்திய சுப மங்களம்.

அமிர்த மதன நாடகம்

அரும்பத விளக்கம்

1. விண்ணவர் - வானவர்

1. துயரம் - துன்பம்

1. பாற்கடல் - உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்று கூறப்படும் எழுவகைக் கடல்களில் இதுவும் ஒன்று. திருமால் ஆலிலை மீதும் அனந்தாழ்வான் மீதும் எழுந்தருளி காட்சி தருவதாகக் கூறப்படும் இடம்.

1. மோகினி - திருமால் உலக நன்மைக்காக எடுத்த பத்து அவதாரங்களில் இதுவும் ஒன்று. இதனை ஜகன்மோகினி அவதாரம் என்பர்.

2. பெருகு நல்லதே பானம் - நன்மை பெருக்கும் தேவருணவு

4. கண்ணநாரணனார் - கண்ணன், நாராயணன் என அழைக்கப்படும் திருமால்

4. திவ்விய கழல் - தெய்வத்தன்மை பொருந்திய திருவடி

5. தந்திமுகத்தோன் - யானை முகம் கொண்ட விநாயகன்

5. சங்கரனார் - சிவபெருமான்

6. சிந்தை - புத்தி அல்லது அறிவு

6. செவித்தேன் - செபித்தேன் - வணங்கினேன்

7. அண்டர் - தேவர்

8. சீரை - சீர் - சிறப்பு

9. செய்யவள் - இலக்குமி

11. உயும் வழி - உய்யும் வழி கடைத்தேறும் வழி

12. உசித நாடகம் - தகுதி வாய்ந்த நாடகம்

13. வேணகலை - ஆண்மான்

14. நாலு தொழினை - நான்கு வேதம் கூறும் தொழில்

14. பணி துவங்க - செயல் விளங்க

14. துதிகை - வணக்கத்தோடு

15. முக்கடவுள் - பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான்

17. செகம் - உலகம்

17. நிறைசோதி - நிறைந்த ஒளி

18. பகவன் - திருமால்

19. சரவணை நடுவில் வளர் பாலன் - சரவணப் பொய்கையில் பிறந்து கார்த்திகைப் பெண் களால் வளர்க்கப்பட்ட திருமுருகன்.

19. வளர்பாலன் - வினைத்தொகை. முருகன்

சங்கரர்க்கு ஒருமொழி பகர்வோன் - 'ஓம்' என்ற பிறணவ மந்திரத்தின் பொருளைசிவ பிரானுக்கு விளக்கிய முருகன்.

20. துரகம் - குதிரை

20. சுப்பிரமணியன் - முருகன்

21. குலவரை - உன்னதமான மலை

21. மந்தரம் - இமயம், மந்தரம், கயிலாசம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம் கந்தமாம் என்ற எண்வகை மாமலைகளில் ஒன்று.

23. மூன்றடி கொண்டு - மூன்று காலடி கொண்டு

24. மாயன் - திருமால்

25. கூர்மம் - ஆமை

27. விக்கிரமம் - வீதம்

27. இலங்கை - மால்ய வசந்தன் முதலாவதாகவும், குபேரன் இரண்டாவதாகவும், இராவணன் மூன்றாவதாகவும் ஆண்ட தீவு. இறுதியில் இராமபிரானால் விபீடணன் ஆட்சிபெற்றான் என்பது புராணம் கூறும் வரலாறு இது இந்தியாவிற்குத் தெற்கே உள்ள தீவு.

28. ராமர் - சூரியகுலத்தோன்றல்

28. அனுமான் - இராமபக்தன், வாயுபுத்திரன்

29. வைகுண்ட வாசன் - திருமால்

29. வானவர் சகாயன் - தேவர்களுக்குத் துணைசெய்பவன்.

30. செய்யவன் - சிவந்த மேனியை உடையவன்

30. செங்கமல பாதன் - தாமரை மலர்போன்ற அழகிய பாதத்தை உடையவன்

30. சாரங்கன் - வில் சாரங்கம் ஏந்திய விஷ்ணு

30. மேகங்கன் - மேகம் போன்ற கார்மேக நிறத்தோன்.

31. ஆதிமூலநாதன் - திருமால்

31. வேதன் - வேதங்களுக்குத் தலைவன்

31. ஆதிபவபங்கன் - பிறவித் தீவினைகள் அகற்றுபவன்

31. துங்கன் - பெருமைக்குரியவன்

32. சொற்றுளப ஆரன் - துளசிமாலை அணிந்தோன்.

32. போதரசபானன் - ஞானம் விரும்புவோன்.

32. நித்தன் - அழிவற்றவன்.

33. புண்ணிய செகானன் - புண்ணிய தலங்களில் உறைபவன்.

33. மங்களமாயிரநாமன் - சிறப்புடைய நற்பெயர் ஆயிரம் பெற்றவன்.

36. முனிசெனபாலன் - முனிவர்கள் போற்றும் திருவாளன்

36. முத்தி பிரதாபன் - வீடுபேற்றைத் தரவல்லோன்.

37. சங்குறைமெய்யன் - சங்குதனை கையில் தாங்கிய திருமால்

37. தொனிதரும் சங்கான் - பாஞ்ச சன்னியம் என்ற பெருவொலிச் சங்கைப் பெற்ற திருமால்.

37. நரசிங்கன் - இரணியனை மாய்க்க சிங்கத்தலையும் மனித உடலும் பெற்ற நரசிங்க வடிவு எடுத்த திருமால்.

38. குவலயத்ததிபன் - உலக நாயகன்.

39. மெச்சுங்கணபீடம் - உயர்ந்த இருக்கையைப் பெற்றவன்.

41. மந்திரிமார் - அரசு செய்வதற்குரிய மந்தர ஆலோசனை தரும் அலுவலர்.

43. பொன்னகர் - இந்திரன் ஆட்சி செய்யும் திருநாடு

46. திசைமுகன் - பிரமன்

47. பங்கயத்தோன் - பிரமன்

49. பாதகன் என்னும் பலி - பாவத்தைச் செய்யும் மாபலி

51. வேதியன் - பிரமன்

52. முக்கண்ணன் - சிவன்

52. கவலை - துன்பம்

53. அரன் -சிவபெருமான்

54. மால் - திருமால்

57. மந்தரகிரி - பெருமலைகளில் ஒன்று

58. அந்தமாக - முடிவாக

59. அழிவிலாப்பதம் - இறையடி

62. தேவநகர் - தேவர்தம் திருநாடு

67. இருகுலத்தோர் - அசுரர், தேவர்

68. குறையில்லா மருந்து - நிலைபேற்றைத் தரும் மருந்து

70. தீதெனுஞ் செமத் தீவினை - முன்வினை (பிறப்போடு வருவது)

76. வாசுகி - அட்டமா நாகங்களில் ஒன்று; ஆதிசேஷன் தம்பி.

81. அமுதமாகுடம் - அமிர்தம் நிறைந்த குடம்.

82. வஞ்சனையாக - ஏமாறும்படியாக

85. மோகினியாய் வந்த ரூபம் - அழகிய பெண் வடிவு எடுத்த திருமாலின் வடிவம்

89. கபடமாய் - வஞ்சகமாய்

90. அமுது ஈய்ந்து உகந்தனன் - அமிர்தம் தந்து மகிழ்ந்தனன்.

95. சுக்கிதரன் - அசுரர்களின் குலகுரு, நவகோள்களில் ஒன்று.

97. குவடிமயம் - இமயமலை (மந்த்ரமலை)

100. நாரதன் - தேவமுனிவன்; திரிஉலக சஞ்சாரி; பிரமச்சாரி

101. இடபவாகனன் - சிவபெருமான்

101. இமையவள் - உமையவள்

102. வடவரை - இமயமலை

103. பெண்ணுரு - பெண்மகள் வேடம்

110. செயம் - வெற்றி

111. பாராலும் பரிட்சித்து - பரிட்சித்து மன்னர்

112. சுகமுனி - சுகர்முனிவர்

118. பொறுக்கவேணும் - பொறுமையாக இருக்கவேண்டும்.

119. காரிகை - பெண்

119. நன்னூல் - இலக்கணநூல்களுள் ஒன்று

119. குதலைகள் போலவே நான் சொன் சொல் - மழலை மொழி

121. தத்துவமான பொருள் - உண்மையான பொருள்

121. சாரம் - கருத்துச்சுருக்கம்

122. இலக்கணவழி - இலக்கண விதிகளுக்கு ஒப்ப

122. இகபரசாதகம் - இம்மை மறுமை நீங்குவதற்கான பயிற்சி

124. ஒன்றுந் தெரியாமல் உலரிய என்னை - அறியாது பேசிய என்னை

125. முன்னைப் பின்னை நாளுந்தெரிந்தவர் - கல்வி, கேள்வி மற்றும் ஞானப் பயிற்சி பெற்றவர்.

126. ஆபரணம் - அணிகலன்

126. பச்சை ஆலிலையிற் பள்ளி கொள்ளும் ஆதிமால் - ஆலிலையில் உறங்கும் திருமால்

127. பாகவதக்காதை - பாகவதம்

127. எட்டாம் கந்தம் - எட்டாம் பகுதி

129. பரகதி - முக்தி

134. விநாயகர் - கணபதி

135. ஆறுமுகவர் - முருகன்

137. கன்னகுண்டலம் - காதில் அணியும் ஓர் அணிவகை

138. சகலசித்தி - அனைத்து அற்புத வன்மை

139. பிரம்மச்சாரி - திருமணமாகாதவன்.

140. உமையவள் தருபாலன் - உமையவள் பெற்றெடுத்த மைந்தன் (முருகன்)

141. நாகத்தை உரைந்து அணிந்திடும் லோகன் - சிவபெருமான்

142. அனுகூலன் > அனுகூலன் - அருள்புரிபவன்;

143. அவர்கன்>அவர்கண் - அவர்பால்

144. விகடம் - வேடிக்கை

146. அகசியக்காரன் - நகைச்சுவையாளன் (விதூடகன்)

156. பெண்டுகள் - பெண்கள்

156. பட்டாணி - இசுலாமியரில் ஓர் இனத்தவர் (உருது மொழியைத் தாய்மொழியாகக்கொண்டவர்)

160. காசி - புனித தலம் ; கங்கையாற்றங்கரையில் அமைந்த நகர்; சிவபெருமான் இங்கு விஸ்வநாதராகவும் அம்பாள் விசாலாட்சியாகவும் எழுத்தருளியுள்ள இடம்.

161. பின்வைத்த காலதனை முன்வையா - அச்சத்தால் பின்னே பின்னே செல்பவன்

162. பூனைக்கண்ணைக் கண்டு மிரண்டு புலியென - பூனையின் கண்ணைப் பார்த்துப் புலியெனப் பேதலித்து.

163. சமத்து - திறமை மிக்க

164. செங்கோல் - அரசர் கையில் இருக்கும் அரசுச் சின்னம்

165. திட்டமாய் - உறுதியாய்

165. கீர்த்தி - புகழ்

166. அட்டலெட்சுமி - தனலெக்ஷ்மி, தான்ய லெக்ஷ்மி, தயிரிய லெக்ஷ்மி, விஜயலெக்ஷ்மி, வீரலெக்ஷ்மி, சந்தானலெக்ஷ்மி, கஜலெக்ஷ்மி, வித்தியாலெக்ஷ்மி,

167. கட்டியங்காரன் - கூத்து நாடகத்தில் வரும் விகடன்.

164. கழறி > களரி - கூத்து நடைபெறும் இடம்.

170. சல்லடங்கட்டி - குறுங்காற்சட்டை அணிந்து

171. துட்ட செனம் - தீயோர்

172. சிட்ட செனபரிபாலநேசர் - மக்களுக்கு நன்மை செய்ய விழைபவன்.

173. சரிகை பாகை - தலைப்பாகை

174. சரப்பணி - ஆபரணம்

175. திலகம் - பொட்டு

176. வட்டக்கடுக்கன் - காதில் அணியும் அணிவகை

178. உன்மதங்கொண்ட - உன்மத்தங் கொண்ட - மனமயக்கங்கொண்ட

180. சிரசு - தலை

181. அசையாமணி - பெரிய மணி

185. கைப்பிரம்பு - கையில் பிடித்திருக்கும் சிறுகோல்

188. திரணமாக மதித்து - துரும்பாக மதித்து

191. சர்கரபதி - அரசர்க்கு அரசன்

193. தலம் ஈரேழ் - பதினான்கு லோகம்

194. சத்துரு - எதிரி, பகைவன்

198. விரிகதிரென - கதிரோன் என

199. புருஷமேரு - இமயமலை

200. நவரெற்றின மணிவைத்த கனகக் கிரீடம் - ஒன்பது வகை கற்களால செய்யப்பட்ட தங்கக்கீரிடம்.

201. புவனம் - உலகம்

201. இரத்தினத்திலிழைத்த புசகீர்த்தி - இரத்தினக் கற்கள்கொண்டு செய்யப்பட்ட அழகிய தோளில் அணியும் அணி

202. முபுரிநூல் - பூணூல்

202. வெண்கவரி - கவரி

204. துந்துபி > துந்துமி - பேரிகை

206. வெகு முத்துச்சரம் வைத்த வெண்குடை - முத்துக்களால் அழகு செய்யப்பட்ட வெண்கொற்றக்குடை

207. வேதியன் முதல் மூவர் - பிரம்மா, விஷ்ணு, சிவன்

208. பாதத்தின் முறைகற்ற அரிவையர் - நடன மகளிர்

209. குலகுரு சுக்கிராச் சாரியர் - அசுர குலகுரு

212. பரிமளிக்க - மணக்க

212. ஆறிலொரு கடமை - விளைபொருளில் அரசுக்குச் செலுத்த வேண்டிய திரை

215. மனுவளரு நீதி - மனுதர்மம்

215. மகிபன் - அரசன்

218. கொண்டலை நிகர்த்தகா - குளிர்தரு சோலை

219. கோணமிரு நான்குள்ளார் - எண்திசையில் உள்ளோர்

220. ராச உத்தண்டர் - ஆட்சி இறுமாப்பு உடையவர்

221. வேதவேதாந்த சிரவணர் - அத்வைதத்தில் சிறந்த அறிவு பெற்றவர்

221. வேத பாராயண நிபுணர் - நான்கு வேதங்களை மனனம் செய்யும் ஆற்றல் படைத்தவர்

221. வேதமார்க்கப் பிரசங்கா - வேதம் கூறுவனவற்றைப் பறைசாற்றுபவர்

222. சர்வசீவதயாபரா - அருளாளர்

222. சர்வதேவப் பிரசாதா - இறைநேயர்

222. சர்வமங்கள குணாலயா - நற்குணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவர்

222. சர்வலோக விசையா - உலகம் முழுதும் வென்றவர்

223. அசுரர் பணி பாதா - அசுரர் பணியும்படியான புகழைப் பெற்றவர்

224. நன்மார்க்க சென சீலா - நன்மார்க்கத்தையே விரும்புபவர்

225. நவமோகன சொரூபா - அழகிய திருவைப் பெற்றவர்

226. எக்கிஞ பரிபாலனா - வேள்வி செய்வதில் வல்லவர்

226. ஈசுவரப் பிரியானந்தா - சீவனிடத்து அன்புடையவர்

226. இரணிய புரவாசா - இரணியபுரத்தில் வாழ்பவர்

228. ஆடகப் பணிகள் - ஆபரணங்கள்

229. கோடிணை தனங்கள் - மலைக்குவடுகள் போன்ற முலைகள்

231. நாடகசாலைப் பெண்கள் - நடன மகளிர்

232. கிஞ்சுகம் - கிளி

234. அரம்பை - தேவ நடனமகளிரில் ஒருத்தி

234. காமுகர் - பெண் ஆசை கொண்டோர்

235. அணிசிலம்படி - அழகிய காற்சிலம்பினை அணிந்த பாதத்தை உடையவள்

238. சம்பு - மாபலியின் தளபதில் ஒருவன்

238. பாணன் - மாபலியின் தளபதியில் ஒருவன்

238. மாரீசன் - மாபலியின் தளபதியில் ஒருவன்

240. வெற்பு எனத் திரண்ட தோள் - மலைபோல் உயர்ந்த தோள்கள்

பொற்புறு கொலு - அழகிய கொலு

248. மகராசன் - நிறைந்த செல்வங்களை உடையவன்

249. தந்திரசீலா - தந்திரக் கலையில் சிறந்தவன்

249. யந்திரசாலா - மந்திரச் சக்கரங்கள் கற்றவர்

250. சம்புபாணன் - மாபலியின் மந்தராலோசனை மந்திரிகிளல் ஒருவர்

250. சகுனி - ''

250. மாலி - ''

250. தாருகன் - ''

250. மயன் - ''

251. கும்பினி -''

251. கும்பன் - ''

251. மாரீசன் - ''

253. விழித்தீ கொட்ட - கண்களில் கோபக் கனல் வீச

259. திவ்வியபாதன் - தெய்வீகமான திருவடிகள்

265. திங்கள் மும்மாரி - மாதம் மும்மாரி - மாதமாதம் மழை பெய்தல்

266. புகழ்பெறு முத்தி - புகழைத் தருகின்ற வீடுபேற்று இன்பம்

267. தண்ணு வாகு கடல் - குளிர்ச்சி பொருந்திய அழகிய கடல்

270. பொட்டைக் கண்ணன் - பார்வை அற்றவன்

273. இரணியபூபதி - பிரகலாதனின் தந்தை இரணியகசிபு

278. ஒளிந்திடு > ஒழிந்திடு - மறைந்திடு

280. அடரும்போர் - பொருதும் போர்

287. சோலி - காரியம்

295. ரணத்திற் - போர்க்களத்தில்

295. சாரம் - பொருட் சுருக்கம்

296. நைய்யவே நசுக்க - மிகவும் துன்புறும்படியாக அழுத்த

297. கிருபை - அருள்

299. நொய் - குருணை

303. காருலவு நமது நகர் - மேகங்கள் நெருங்கிச் செல்லும்படியான வளம் சூழ்ந்த நகர்

303. பலராசன் - வலிமை மிகுந்தவன்

308. திண்ணமாமணி யிழைத்த சீர் கோபுரங்கள் - உயர்ந்த மணிகள் பதிக்கப்பெற்ற அழகிய கோபுரங்கள்

311. சிவத்திரு நீறு - இறைச்சின்னம்

314. பவக்கடல் - பவக்கடல் அல்லது துன்பக்கடல்

315. சுக்கிரச்சாரியர் - அசுரர் குல குரு; நவகோள்களில் ஒன்று; மழைக்குரிய கோள்.

316. அதியுக்கிரமாம் சிவன் - மிகுந்த கோபத்தை உடைய சிவபிரான்

317. சச்சிதானந்த சொருபம் - உண்மை அறிவு ஆனந்தம் ஆகிய முப்பொருளும் ஒன்றை ஒன்று இயைந்து அதன் பயனாக பேரின்பப் பொருளாக விளங்கும் பரம் பொருள்.

318. குண்டலி - நாபித்தானம் அல்லது சுத்தமாயை

319. விவேகி - அறிவுடையவன்

321. தத்துவ நெறியறி யீசன் - இறை தத்துவத்தை அடையும் வழிமுறைகளை அறிவிக்கும் கடவுள்

322. பத்தரிடத்தினில் நேசன் - இறை அன்பர்களிடத்து அன்புடைய அருளாளன்

323. வாமனாவதாரம் - குறளவன் அவதாரம்

326. இரணிய புரம் - மாபலியின் தலைநகரம்

327. பரணி கிருத்திகை - நட்சத்திர நாட்கள்

329. சண்டப் பிரசண்டர் - விதூசகர்

334. சண்டாளர் - கொடும்பாதகன்

335. ஈனர் - கீழோர்

340. ஓதினார் - கற்றார்

341. கனவீதி - நட்சத்திர சுற்றுப்பாதை

346. பலமிகு தவத்தில் மெய்த்த பார்கவன வாசல் - கடுமையான தவத்தால் சிறப்புதனைப் பெற்ற சுக்கிர பகவான் வாசல்

354. மரணப்பிணி - இறப்பு

359. அட்டாவித யோகம் - அணிமா, மகிமா, லரிமா, கரிமா, பிரார்த்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்

360. சிட்ட பரிபாலன குருதேவா - நீதி நேர்மையுடன் பரிபாலிக்கும் குருமகான்

363. பொய்யெனும் வழியை நீக்கி - பேரின்பத்திற்குத் தடையான பொய் எனும் குணத்தை அகற்றி

363. பூரண பதத்தில் மேவு அய்யனே - பேரின்பத்தில் திழைக்கும் இறைவனே

369. நீதிசேர் மனு - மனுதர்மம்

379. பன்னக மீதிற் சீறி பாய்ந்திடுங் கருடன் - பாம்பின் மீது சீறிப் பாய்ந்திடும் கருடன்

380. சின்னா பின்னங்கள் - சிதைவுகள்

385. முக்கிய தினம் - சிறப்பான நாள்

388. திக்குள தலங்கள் - எண்திசைகளில் உள்ள அருட்தலங்கள்

390. மாபெருமரம் - மிகப்பெரிய மரம்

391. துட்டர் - தீயவர்

392. ராயசன் - அரசு ஆணைகளை எழுதும் அலுவலன்

393. கொங்கணர் - கொங்கநாட்டினர் (கொங்கநாடு - சேரநாடு என்பர்)

393. திராவிடர் - திராவிட நாட்டினர்

393. பப்பார் - பார்ப்பனர்

393. சாலுவர் - சாலவ நாட்டினர்

393. கூர்சர் - கூர்சர நாட்டினர்

393. நிசாதரர் - நிசாத நாட்டினர்

394. சிங்களர் - சிங்கள நாட்டினர்

394. கேகையர் - கேகைய நாட்டினர்

394. பாண்டியர் - பாண்டிய நாட்டினர்

394. நதிரர் - நதிர நாட்டினர்

394. சிந்துரர் - சிந்து நாட்டினர்

394. சோழர் - சோழ நாட்டினர்

395. வங்காளர் - வங்க நாட்டினர்

395. போசர் - போச நாட்டினர்

395. கரோசர் - கரோச நாட்டினர்

395. விதேகர் - விதேக நாட்டினர்

395. மருடர் - மருட நாட்டினர்

395. விராடர் - விராட நாட்டிரன்

396. டங்கணர் - அங்க நாட்டினர்

396. மச்சர் - மச்ச நாட்டினர்

396. கலிங்கர் - கலிங்க நாட்டினர்

396. புலிங்கர் - புலிங்க நாட்டினர்

398. அட்டாவதானம் - ஒரே சமயத்தில் எண்வகைக் காரியங்கள் ஆற்றும் வல்லமை

400. ஓலை - எழுதப் பயன்படும் பொருள்

402. பதினாலுலோகம் - மேல், கீழ் என பதினான்கு பிரிவாக அடங்கிய அண்டம்

406 .கணக்கதிகாரம் - கணிதம்

408. மணக்கும் பொன்னகர் - நிறைந்த மலர்ச்சோலைகளை உடைய தேவர்தம் நகர்

410. குஞ்சமுங் கிலுக்குஞ் சேர்த்த கோல் - ஓட்டக்காரனின் ஆயுதம்

412. நிமிஷம் - கால அளவு

413. வேகன் - அஞ்சல்காரன்

415. நிருபம் - கடிதம்

417. சருகை உருமா - தங்க இழைகள் மூலம் வேலைப்பாடு செய்யப்பட்ட தலைப்பாகை

424. சென்னி > சன்னீ - சுரதோஷம்

126. அண்டர்கோன்பதி - தேவர்களின் தலைவன் - இந்திரன்

129. சூலம் கதை வில் தூக்கி - சூலம், கதை, வில் என்ற ஆயுதங்கள் தூக்கி

129. சூரத்தனம் - வீரம் தெரியும் படியாக வெளிப்படுத்தும் தன்மை

130. ஆலகாலம் - பாற்கடல் கடையும்போது வாசுகி உமிழ்ந்த நஞ்சு

132. மீசை - ஆண்மையின் சின்னம்

134. கிட்டினார் - கிடைத்தார்

135. தாரணி புயத்தாய் - கோவர்த்தனகிரி மலையைக் குடையாய் கையில் பிடித்தவன்

136. காரணி நிறத்தாய் - கரிய நிறத்தைப் பெற்றவன்

137. போரணி திறத்தாய் - போரில் வெற்றியையே உடையவன்

140. நிருத்தர் - நடனமாதர்

142. கொளல் - உயிர் பலி

445. உன்னிதபரிகள் > உன்னத பரிகள் - உயர்தரமான குதிரைகள்

446. மின்னிரை மடவார் > மின்மிறை மடவார் - வளைந்த மின்னல் போன்ற இடையுடைய மகளிர்

447. மகிமன்னர் - அரசர்க்கு அரசன்

449. மச்சர் - மச்சநாட்டினர்

449. மானர் - மான நாட்டினர்

449. விராடர் - விராட நாட்டினர்

449. கொச்சி - கொச்சி எனும் இடத்தில் வாழுநர்

449. கொங்கணர் - கொங்கு நாட்டினர்

449. கன்னர் - கன்னட நாட்டினர்

449. ஈழர் - ஈழ தேசத்தவர்

450. போசர் - போச நாட்டினர்

450. அதிட்சனர் - அதிட்ட நாட்டினர்

450. பாஞ்சாலர் - பாஞ்சால நாட்டினர்

451. கச்சி - காஞ்சி நாட்டினர்

451. விதர்ப்பர் - விதற்ப நாட்டினர்

451. விதேகர் - விதேக நாட்டினர்

451. உச்சி - உச்சினி நாட்டினர்

451. சோழர் - சோழ நாட்டினர்

451. பாண்டியன் - பாண்டிய நாட்டினர்

451. சுரோச்சனர் - சுரோச்சன நாட்டினர்

452. சிங்களர் - சிங்கள நாட்டினர்

452, மகதர் - மகத நாட்டினர்

452. ஆந்திரர் - ஆந்திர நாட்டினர்

452. வங்கணர் - வங்கள நாட்டினர்

452. குதாமார் - முகமதியர்

452. லாடர் - இலாட நாட்டினர்

453. கொங்கு - கொங்கு நாட்டினர்

453. மலைகள் அடுத்துள்ள் ஊர் வாழ்மக்கள்

453. விராடர் - விராட நாட்டினர்

453. குடகர் - குடகு நாட்டினர்

453. நிடதர் - நிடத நாட்டினர்

453. ஆரியன் - ஆரிய நாட்டினர்

454. கலிங்கர் - கலிங்க நாட்டினர்

454 செகிபர் - உலகாள்வோர்

454. கேகமார் - கேகய நாட்டினர்

454. புலிங்கர் - புலிங்க நாட்டினர்

454 கோசலர் - கோசல நாட்டினர்

455. அவந்தி - அவந்தி என்னும் ஓர் நாடு

455. காயர் - காயற்பட்டினத்துக்காரர்

455. பாணர் - இசைக்கலைஞர்

455. நேபாளர் - நேபாள நாட்டினர்

456. குந்தளர் - குந்தள நாட்டினர்

456. கோளர் - கைக்கோளர்

456. சிந்து - சிந்து நாட்டினர்

456. திராவிடர் - திராவிட நாட்டினர்

457. துளுவர் - துளுவ நாட்டினர்

457. பவுண்டர் - பவுண்ட நாட்டினர்

457. சோணர் - சோணாட்டினர்

457. தந்திரசீனர் - சீனதேசத்துக்காரர்

457. காசிரர் - காசி வாழ்நர்

457. சால்வர் - சாலவ நாட்டினர்

458. சவுரராட்டா - சௌராட்டிர மொழி பேசுவோர்

460. கனகமாபரம் - பொன்நகரம் எனப்படும் தேவேந்திரப் பட்டணம்

461. தண்டமிழ் வாணர்க்கெல்லாம் தரு - தமிழ் அறிந்தாரைக் காக்கும் வள்ளல்

463. அம்பத்தாறு தேசம் - ஐம்பத்தாறு வகையான நாடுகள்

467. துலியம் - தன்மயமாய் நிற்பது

468. மேரு - இமயம்

471. பாளையம் - கூடாரம் அல்லது சேனைகள் தங்கும் இடம்

474. பந்தி பந்தியாக - குழுகுழுவாக

475. ஜெயபேரிகை - வெற்றி முரசு

479. பதினாறு கோணம் - ஒருவகை எந்திரம்

479. கரிக்குலமடங்கள் - யானை கட்டும் இடங்கள்

481. கொசு - நீர்வாழ் உயிரினம்

483. பதி - இறைவன்

485. இராட்சதர் - அசுரர்

490. கற்பக நாடு - தேவேந்திரன் ஆளுகைக்கு உட்பட்டது

492. சோபிதம் - அழகு

493. அட்டமாதிக்கு - எண்திசை

496. களரி - ஆடுகளம்

498. கற்பக மலர் - தேவர் உலகத்து மரத்தின் மலர்

499. சித்திரமுனிவர் - முனிவரில் ஒருவர்

500. வரம் - தெய்வப் பேறு

501. மத்தகத்தைப் போலே - யானையைப் போலே

503. தங்கப் பதைக்கம் - தங்கத்தால் ஆன ஆபரணம்

503. பொங்குமணியி னொளி - நவரத்தினத்தின் மிளிரும் ஒளி

504. இலங்கு மணியுடனே - நல்ல நவரத்தினம்

505. சிங்கமென கெற்சித்து - சிங்கம்போலே முழங்கி

507. கின்னரர் - யாழிசை வல்ல தேவ சாதியினர்

507. கெருடர் - கருடர்

507. திசை மன்னவர் - அட்டதிக்கு பாலர்

507. தும்புரு - இசைஞானியர்

508. இசைபண்ணு நாரதர் - இசை அறிந்த நாரதமுனி

508. கெந்தருவர் - இசை வல்லவர்

509. பொன்னகர்க் கிறைவன் சபை - இந்திரன் சபை

511. தருமலர் - கற்பக மலர்

513. பொன்னணி மகுடம் மின்ன - பொன்னால் செய்யப்பட்ட திருமுடி

513. புனித இந்திராணி - கற்புடை நாயகி, இந்திரனின் மனைவி

514. இன்னுரையமரர் - இனியமொழி பேசும் தேவர்

516. பூரண குடம் - நிறைந்த குடம்

518. சித்தர் - அறிவாளர்

518. முனிவர் - இருடி

518. கெருடர் > கருடர் - கருடாழ்வார், விஷ்ணுவின் வாகனம்

518. காந்தருவர் - பார்க்க 508

519. உத்தமி இந்திராணி - பார்க்க 513

521. சிம்மாசனம் - அரியணை

525. அரம்பை முதலான பாவையர் - தேவர் உலக நடன மகளிர்

526. வருணன் - மழைக்கடவுள்

528. வச்சிராயுதம் - இந்திரன் கையில் உள்ள ஒரு ஆயுதம்

530. தருமருவு பொன்னகர் - தேவேந்திர நகரம்

532. சித்தர் - பார்க்க 518

532. முனிவோர் - பார்க்க 518

532. சத்தரிஷி - 7 முனிவர்கள்

540. வேதிய ரெற்றினம்என வியாழன் - வேதி பர்க்கு எல்லாம் தலைவனான குருபகவான்.

542. தியானம் - மனதை ஒருநிலைப்படுத்தும் ட பிற்சி

542. பிரமானந்த திவ்விய ஞான மூலம் - பேரின்பத்தை நல்கும் மூல அறிவு

543. யோகவேட்டி - மேன்மை பொருந்திய ஆடை

543. குள்ள தேகம் - உயரமற்ற குறள் - வடிவம்

543. கோவிபூசி - நெற்றியிலிடும் திருமண் அணிந்து

544. பகவத் திவ்விய நாமம் - நன்மையான இறைப் பெயர்

545. கரத்தில் பொஸ்தகம் - கையல் பார்க்கும் ஏடு

546. வரத்தில் மிகுந்த நாதன் - தெய்வப்பேறு மிகுந்தவர்

546. நவகககிரக வல்லமையுள்ள தேவன் - நவ கிரகத்தில் வல்லமையுள்ள குரு பகவான்

547. வாசவன் பணிநேசன் - இந்திரன் பணிந்து வணங்கிடும் பெருமையுடைய வியாழ பகவான்

548. மாசறு திட சித்தன் - உறுதியான எண்ணம் உடையவர்

548. மகிமையுள்ள கர்த்தன் - திறமையுள்ள முதல்வர்

549. சற்குணன் - நற்குணங்கள் நிறைந்தவன்

550. குரு - ஆசான்

555. பவபயம் - பிறவி பயம்

557. சாட்டாங்கமாக - முகம் மண்பார்க்க மார்புற வீழ்ந்து பணிதல்

560. தேவகுரு - வியாழன்

560. செம்பொன்னடி - அழகிய திருமுடி

561. வாசுபுரி தேவர் - ய ாகங்கள் செய்யும் தேவர்

565. மறைமொழிப்படி - வேதமொழிப்படி

566. முகில் - மேகம்

567. செந்நெல் முத்துக்கள் - நல்ல விளைந்த நெல்மணி

568. பாவலர்கள் - கவிஞர்

568. வேதவேதியர்கள் - வேதம் கற்ற பார்ப்பனர்

571. பக்தியிறை - இறை நேயம்

574. காராளர் – உழவுத் தொழில் செய்வோர்

574. விபசாயம் > விவசாயம் - பயிர்த் தொழில்

575. கனகம் - தங்கம்

576. அண்டர்கோன் - அமரர் தலைவன்

577. துறைவாசர் > துர்வாசர் - முனிவர்களில் ஒருவர்

578. காவுணர்நாதன் - தீமை ஒழித்து உலகு புறக்கும் இறைவன்

580. எக்காளம் - ஓர் இசைக்கருவி

582. பணிமிக அணிவார் - ஆபரணம் மிக அணிவர்

583. சூலங்கதை - சூலம், கதை போன்ற ஆயுதம்

583. சபதம் - சூளுரை

585. துடை > தொடை தட்டி - போருக்கு அழைக்கும் முறையில் ஒருவகை

585. கண்பொறி கொட்டி - கண்ணில் சினத் தீ கொட்ட

587. ககனத்தின் வழி - வாயுமண்டலத்தின் வழி

589. தவிலொடு பம்பை - தவில் பம்பை என்ற தோற்கருவிகள் முழங்க

589. சின்னம் - இசைக்கருவி

589. வலையம் - ஓர் வகை இசைக்கருவி

589. வின்னம் - இசைக்கருவி

590. ஐந்துவிதப் பெரிதான மடக்கை - ஒருவகை இசைக்கருவி

591. வல்லுலக்கை - பெரிய உலக்கை

591. தண்டு - தடிமரம்

591. சூலம் - ஒரு ஆயுதம்

591. சக்கிரம் - சக்கரம்

591. வல்லையம் - ஓர் இசைக் கருவி

595. வண்ணையானும் தேவர் தன்னரசே - இந்திரன்

596. மாமாட கூடம் - பெரிய உயர்ந்த மாளிகை

596. குலவு நன்னகர் - சிறந்த நகர்

602. முத்துமணிரதம் - முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட தேர்

603. யுத்தம் - போர்

604. துடுக்காக - துடிப்பாக

609. வெகுவெகு மாயம் - தந்திரமாக

711. பிரகப்பதி > பிரகஸ்பதி - வியாழன் - குருபகவான்

613. அட்டாட்சரம்-ஓம்நமோநாராயணாய என்ற விஷ்ணு மந்திரம்

616. வொளிதரு மகுடம் - ஒளி உமிழும்படியான திருமுடி

616. மகாகுண்டலம் - காதணி

616. இருகதிரென - சூரிய சந்திரர் என

618. சூது - வஞ்சகம்

620. கருடர்கொடி - கருடன் வரையப்பட்ட கொடி

621. கருடர் - விஷ்ணுவின் ஊர்தியாக விளங்குவது, பட்சிகளில் அரசன்

621. கின்னரர் - இசைவல்லார்

622. விண்ணகர்க்கரசனானோன் - இந்திரன்

624. கருங்கடல் சேனை - கருங்கடல் போன்று வரிந்து காணும் அசுரர் படை

627. பூதண்டர் - அசுர வீரர்கள்

630. பீரங்கி - ஒரு ஆயுதம்

630. துப்பாக்கி - ஒரு ஆயுதம்

631. வருணாத்திரம் - வருண பகவானால் தரப்பட்ட அத்திரம்

632. எரிவாணம் - ஒருவகை வெடிப்பொருள்

632. பொரிவாணம் - ஒருவகை வெடிப்பொருள்

635. அனுகூலம் - காரியம் கைகூடல்

642. கொக்கரித்து - ஆரவாரித்து

643. ஆயிரங்கண்ணன் - இந்திரன் (கௌதமரின் துணைவி அகலிகையை அவள் அறியாது புணர்ந்து கௌதம முனிவரால் உடல் எல்லாம் கண்கள் பெற்றவன் ஆகையின் இவனை ஆயிரங் கண்ணன் என்றனர்.)

646. கதிர மதியும் - சூரிய சந்திரர்

648. தேவமுடி சூடினானே - தேவர்களுக்கெல்லாம் அரசன் என முடி சூடுதல்

651. மூவர்பதி - பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் உலகம்

653. சேனுலகு - இந்திரலோகம்

654. பூமன்னர் - புவி மன்னர்

656. உறுவசி - தேவர் உலகத்து நடன மகளிரில் ஒருத்தி

658. விவேகம் - அறிவு

661. பராக் - 'எச்சரிக்கை' என்பதனை வெளிப்படுத்தும் விளி

662. விசுவகர்மா - தேவர் உலகத்துத் தச்சன்

664. சுக்கிரசாரி - அசுரகுல குரு

667. தேவவாத்தியம் - தேவர் உலகத்து இசைக்கருவி

669. சொரியு மழை - பெய்யும் மழை

672. சராசரங்கள் - உலகம்

673. வேதசாத்திரம் - நான்கு வேதம் கூறும் தத்துவம்

673. நித்தியா நித்திய பாபம் - அன்று அன்று செய்யும் பாவங்கள்

675. பிதா - தந்தை

675. ஆதிபிரம்மதேவன் - நான்முகன் - பிரம்மா

678. பொற்புரிநூல் - வைதிக காரியம் மற்றும் காயத்திரி செய்வதற்காக அணியப்படும் பூணூல்

678. சாரதாம்பாள் - இறைவி

679. தேவரிஷிகள் - விண்நாட்டு முனிவர்

679. வேத பாஷியம் - வேதத்தின் விரிந்த விளக்கம்

682. பங்கயன் - தாமரையில் உறையும் பிரமன்

683. நாபி - கொப்பூழ்

685. சத்தியலோகம் - சொர்க்கம் எனப்படும் தேவர் உலகு

685. சதுர்வேதம் - ரிக், யஜுர், சாம, அதர்வண என்ற நான்கு வேதம்

687. உயிர்கள் செய்கின்ற கர்ம பலன் - உயிர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட பிறவிக்கேற்பச் செய்யும் நல்வினை தீவினை

688. உலகளந்தவன் பாதம் - திருமாலின் பாதம்

690. திசைமுகன் - பிரம்மன்

693. புண்கள் - காயங்கள்

696. விசையம் > விசயம் - செய்தி

699. நைந்தான் - வருந்தினான்

701. செப்பு முப்பது கோடியான தேவர் - முப்பதுகோடி தேவர்கள்

703. மிண்டர் - முரடர்

704. கெதி > கதி - புகலிடம்

705. பிதாமகன் - பிரம்மன்

7-6. திக்குதிசை - எண்டிசை

709. பதறுதே - கலங்குதே

710. தஞ்சம் - அடைக்கலம்

713. புண்டரீகம் - புண்டரிகம் - தாமரை

713. புராதனப் பொருள் - பழமையான பொருள்

714. தண்டமிழ் வாணி மாது - சரஸ்வதி

715. நான்முகன் - பிரம்மா

716. வானவர்க்கிறைவர் - விண்ணோர்க்கு தேவன்

720. வேத நான்கு - நான்கு வேதம்

723. பாதகன் - பெரும்பாவத்தைச் செய்பவன்

724. பாவி - தீமையாளன்

725. பூவிலுறைவோன் - பிரம்மன்

726. ஆவி - உயிர்

731. தர்மமே செயம் என்று சொல்லிய வேதமொழி - தர்மத்தைச் சிறப்பித்துச் சொன்ன நான்கு வேதம்

733. வர்மம் - மறைவிடம்

737. வடவைய் - பெருந்தீ

738. போதும் போதும் பட்டதினி - போதும் இத்துயர்

742. பையறா அணையோன் - பாம்பைப் படுக்கையாகக் கொண்ட திருமால்

744. முப்புரமதனை வென்ற ஈசன் - பொன், வெள்ளி, இரும்பு ஆகிய உலோகங்களால் ஆன முக்கோட்டையை எரித்துச் சாம்பலாக்கிய சிவபிரான்

745. நரர்சிங்கமாய் அவதாரம் செய்து - இரணியனைக் கொல்ல, தலை சிம்மமாகவும் உடல் மனித வடிவமாகவும் அமைந்த அவதாரம்

746. இரணியன் - அசுரர்குல வேந்தன்

747. பிரகலாதன் - இரணியனின் மைந்தன், திருமால் பக்தன்

752. கயிலையான் - சிவபெருமான்

753. கற்பகமன்னா - இந்திரன்

756. வலங்கை - தமிழ் நாட்டுச் சாதியருள் ஒருசார் கூட்டத்தினர்.

758. கயிலைமலை யுச்சி - கயிலாயத்தின் உயர்ந்த இடம்

759. கின்னரர் - இசைவல்லார்

759. சித்தர வித்தியாதரர் - தேவர்கள்

760. நவமணியிழைத்த பீடம் - நவமணிகளால் அமைந்த ஆசனம்

761. அஞ்செழுத்து - நமசிவாய என்ற சிவபிரான் மந்திரம்

762. கங்கை தன்னை சிரசு தன்னிலணிந்திடு மாமூர்த்தி - சிவபெருமான்

763. பூதகெண நாதன் - சிவபிரான்

763. பிரம்மவித்து - மூலவித்து

673. போதாந்த ஞானன் - கடவுளை அறியும் ஞான உபாயம்

764. கார்குழல் - கரிய கூந்தல்

764. உமையவளோர் பாகன் - சிவன்

765. தில்லை - கோயில்களைப் பாராட்டபடும் சிவன் நடனமாடும் கோயில்

766. வெண்கவரிகள் - வெஞ்சாமரம்

767. நலமிகு கயிலை - சிறந்த கயிலாயம்

768. அரகரசிவசிவ - சிவனைத் துதிக்கப் பயன்படும் துதி

768. மான்மழு - கையில் சிவன் தாங்கியுள்ள பொருட்கள்

769. நிர்தனஞ்செய்ய > நர்த்தனஞ் செய்ய - தாண்டவம் ஆட

770. துய்யவண்ணன் - நல்லவன்

770. நெற்றிக்கண்ணன் - சிவபெருமான்

771. பிறையணி திண்ணன் - சிவபெருமான்

771. சாமவேதத்தின் பண்ணான் - சிவபெருமான்

772. படிகமாநிறணி - சிவபெருமான்

772. ரிஷபம் - காளை

773. கடம்பணிநித்தன் - கடம்பு என்னும் மலர் அணியும் நித்தன்

774. கயிலங்கிரி - கயிலைமலை

775. மயில்வீரன் - முருகன்

776. திரிபுராதிகள் - தாரகாசுரன் புதல்வர்களாகிய வித்துற்மாலி, தாரகாக்ஷன் கமலாக்ஷன் இவர்கள் அமைத்த பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளைக் கட்டியவர். ஆணவம் ஏற்பட்ட காலத்தில் சிவபிரானால் அழிக்கப்பட்டவர்கள்.

771. முக்கண்ணா - சிவன்

778. கெங்கையைச் சிரமீதணி சாமி - சிவன்

780. மழுமானேந்திய வாதா - சிவபிரான்

782. வெள்ளிமலை - கயிலயங்கிரி

785. அரகரமகதேவா - சிவனைப் போற்றும் நாமாவளி

785. அற்புதரூபா - அழகிய வடிவினை உடையவனே

786. பரமதயாநிதி - சிறந்த அருளாளன்

788. பயபவ பங்கா - பிறவித் துன்பத்தை நீக்க வல்லவனே

788. நமோ நமோ - வணக்கம் வணக்கம்

788. பக்தசெனப்பிரியா - இறையன்பர்கள் நேசிக்கும் இறையோனே

789. சந்திரசேகர - சந்திரனைத் தனது சடாமுடியில் தரித்த சிவன்

789. தாருகாவனவாசா - வனத்திலுறைகின்ற ஈசன்

790. கந்தனைத் தந்தவா - முருகப்பெருமானை ஈன்றவர்

790. கருணையங்கடல் - அருட்கடல்

791. தீனசென ரெட்சகன் - எளியோர்களைப் பேணிக்காக்கும் அருளாளனான சிவன்

792. தானவர்வந்திதா - தேவர்கள் வணங்கும் சிவன்

792. பூதசர்வ தயாபரா - பூதகணங்கள் மகிழும்படியாக அருள்பாலிக்கும் சிவன்

794. நீதிசேர் கயிலை நித்தன் - கங்கையை ஆபரணம் போல அணிந்தவன்

796. பார்வதி லோலா - பார்வதியின் அன்பைப் பெற்ற சிவபிரான்

800. கந்தமுறு மலரவன் - நறுமணம் மிக்க மலரை விரும்புபவன்

802. ஈனராம் அசுரர் - கீழ்மைக் குணம் படைத்த அசுரர்

805. அன்னியாயம் > அநியாயம் - நேர்மையற்ற செயல்

806 .தீதுட்டராம் அசுரர் - கொடுமனம் கொண்ட அசுரர்

807. வல்லடி வழக்கு - நியாயம் இன்றி பலத்தைப் பயன்படுத்துகை

810. துயரமாங்கடல் - துன்பமான பெருங்கடல்

813. தேவநாடு - இந்திரலோகம்

815. கஞ்சநற்பாதன் - சிறந்த இணையடியை உடையவன்

817. மேரு சார்பு - இமயமலை சாரல்

818. பிறையணியிறை - சந்திரனை தன் ஜடாமுடியில் தரித்த சிவபெருமான்

818. பூவுறையையன் - பிரம்மன்

819. மறைமொழி - வேதம்

820. க்ஷீரக்கடல் - பாற்கடல்

822. கேசவா - திருமால்

823. நாரணா - திருமால்

825. ஆயர்தன்னூர் - கோகுலம்

825. விண்ணமழை காத்த கோவிந்தன் - கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து ஆயர் மற்றும் கோவினத்தைக் காத்தவர்.

826. விட்டுணு - திருமால்

828. திருவிக்கிரமா - பலம் மிக்கவன்

829. வாமனா - குறளகன் வடிவம்; குள்ள மனித வடிவம் எடுத்தவன்

830. கானகத்தானை - காட்டு யானை

832. ஞாலம் உண்டு உமிழ் பத்துமநாபன் - மண்ணை உண்டு யசோதைக்கு தன்வாயினுள் உலகேழும் காட்டிய கண்ணபிரான்.

833. செனகன் மருமகன் - இராமன்

833. வெட்டுமுனி - பரசுராமன்

835. அச்சுதன் - திருமால்

836. மேவிய பாம்பணை - பாம்புப் படுக்கை

836. மன்னையார் சீதேவி > மனையாள் சீதேவி - இலக்குமி

837. கருடன்மிசை - கருடன்மீது

838. நமஸ்தே - வணக்கம்

839. கமலமுகம் - தாமரை போன்ற முகம்

840. நீலக்கடல் நீலமலை போலே - அகன்ற சிறகுகளை உடைய கருடன்

842. கோடி சூரியர் - கோடி சூரியர்கள் ஒன்றாய்த் திகழும்படியாக

842. குவட்டினிலுதித்த - மலை முகட்டிடை உதித்தாற்போல

843. நேமியுஞ் சங்கும் - சக்கரமும் சங்கும்

844. வாசுதேவன் - திருமால்

847. ஆரகடகம் - கங்கணம்

848. கவுத்துவ மாமணி - கவித்துவ மாமணி - கவிஞன்

849. அரையினிலணிந்த பீதாம்பரம் - இடையில் கட்டிய ஆடை

849. பூமங்கை - இலக்குமி

849. மலர்மங்கை - இலக்குமி

850. கன்றைப் பிரிந்து வரு காமதேனு - (வசிட்ட முனியிடம் இருந்த வள்ளற்பசுவை மன்னன் விசுவாமித்திரன் வலிய பற்றிவந்த காரணத்தால் வருந்திய காமதேனுபோல)

853. பரமதயா பரனே - நல்லருளாளன்

853. பங்கயமுக நிதியே - தாமரை போன்ற முகத்தை செல்வமாகப் பெற்றவன்

854. பூதேவி ஸ்ரீதேவி - நிலமகள் மற்றும் இலக்குமி

855. துருவனுக்கு பதவியளித்த நாதா - காண்க பின் இணைப்பு துருவன்கதை

859. துரோபதையைக் காத்தாய் - துரியோதனன் அவையில் துச்சாதனன் திரௌபதியினை மானபங்கப் படுத்தும்போது இறைவன் ஆடை தந்து காப்பாற்றினான்

861. மூலமென்ற சொல் - ஆதிமூலம்

863. வீடணருக்கு அம்பொன் முடித்தவர் - இராவணன் தம்பி வீடணன் அடைக்கலமாய் வர இறுதியில் அவனையே இலங்கை வேந்தன் ஆக்கிய அருளாளன்

864. கூடும் வேதத்தில் வளருங் கோவிந்தா - வேதம் அறிந்தவன்

867. சக்கரபாணி - கையிற் சக்கரம் பெற்ற திருமால்

868. எள்ளுக்குள் எண்ணெய் - எள்ளுக்குள் எண்ணையாக விளங்கும் இறைவன்

869. ஐந்துமூன்று மொன்றுமான சொரூபன் - எட்டெழுத்து மந்திரமாய் விளங்கும் திருமால்

874. பின்னைக் கெதி - பின்னே அடைக்கலம்

878. அஷ்டஐசுவரியம் - தனம், தானியம், நிதி, பசு, புத்திரர், வாகனம், சதம், தைரியம் என்ற எட்டு நிதிகள்

884. இந்திரலோகம் - இந்திரனின் ஆட்சிக்குரிய நாடு

885. தந்திரவித்தை - சாலவித்தை

887. அனுபோகம் - துய்த்தல்

888. வீரியம் - வேகம்

900. அத்துகள் - தடைகள்

904. அய்யன் - மரியாதைக்குரியவன்

907. பதில்மொழி - விடைமொழி

911. ஒருமொழியரிக்கை - ஒரு வரியில் சொல்லும் விடை

912. அமைச்சரே - மந்திரியாரே

913. தேகம் - உடல்

914. லோகம் - உலகம்

917. கூட்டினுட்புலிபோல் - அடைக்கப்பட்ட புலிபோல

919. கோட்டான் கூட்டைக் காகங் காத்ததுபோல - காகம் தன் முட்டைக்கும் கோட்டானின் முட்டைக்கும் வேற்றுமை தெரியாது அடைகாத்துக் குஞ்சு பொறிப்பதுபோல

921. அவைக்கல மென்றபோது அபயமே கொடுத்தானி ராமன் - அடைக்கலம் என்றதும் காத்துநின்ற இராமன்

923. சத்திரிய தருமம் - அரசகுலத்தார்க்கு உரிய தர்மம்

928. தஞ்சமுன்பாதம் - உன் பாதமே அடைக்கலம்

934. சோபிதம் - அழகு

935. தீபமே அறிய பாலும் தேனும் போலிருப்போம் - ஒளி விளக்கு மேல் ஆணையாக பாலும் தேனும் போலப் பிரியாது இருப்போம்.

942. பிரியம் - அன்பு

947. நமன்வினை - மரணத்திற்கு உரிய வினை

950. மரும மருந்து - யாரும் அறியாத மருந்து

952. சஞ்சீவி - மருந்து அல்லது மூலிகை

958. மந்தரகிரி - பெருமலைகளில் ஒன்று

961. கடப்பாரை - ஓர் ஆயுதம்

961. கூந்தல் - ''

961. தால் - ''

961. மண்வெட்டி - ''

961. கோடாரி - ''

961. கூடை - ''

963. கெர்வம் > கர்வம் - தலைகனம்

963. சதிர் - பெருமை

971. லேலோ வென்றொரு சத்தம் - விளி

973. கொடுமுடி - உயர்ந்த சிகரம்

976. சின்னாபின்னங்களாக - சிதறி

977. பாதாளம் - கீழ்உலகம்

979. இசையுங் சங்கிலி - கட்டும் சங்கிலி

981. சேஷன் - திருமால் பள்ளி கொள்ளும் பாம்பின் பெயர்

982. லெட்சம் யோசனை - பலகோடி தூரம்

988. ஏசலுக்கிடமாய் - வசைக்கிடமாய்

990. என்குரு - எனது ஆசான்

993. எம்பிரான் - எம் ஆண்டவன்

999. ஊழ்வினை - பழவினை

1000. ஓங்குந்துயர் - ஏற்படும் துன்பம்

1001. பட்ட காலிலே படுமோ - துன்பப்படுவரே துன்புறுதல் வேண்டுமோ

1001. பாவி - தீமையானவன்

1002. காரணா - காரியங்களுக்குக் காரணமானவனே

1002. ஆதிநாராணா - திருமாலே

1003. பெம்மான் - இறைவன்

1005. சக்கரமுஞ் சங்கும் - கையிற் கொண்டுள்ள சங்கும் சக்கரமும்

1006. சோபிதம் - அழகு

1007. பெற்றவள் தன் பிள்ளைகளுக்குதவினாப்போல் - பெற்ற தாய் என பேணிக் காப்பவன்

1009. கருடன் மேலெழுந்தாலுந்தருளும் நாதன் - திருமால்

1011. பருமலை - பெருத்த மலை

1015. ஐயனுரை - இறைவனுடைய

1017. வாயுவேகமாக - காற்றினும் கடிதாக

1021. தலைச்சுமை நீக்கினான் - தலைபாரம் நீங்கினான்

1023. சங்குசக்கர கையன் - சங்கு சக்கரம் இவற்றைக் கையில் ஏந்தியவன்

1024. பயிர்க்குதவிய மழைபோலே - தழைத்தோங்கும் பயிர்களுக்குத் தேவைப்படும் மழைபோல

1025. தோத்திரம் - துதி

1028. நாணாக - வில்லினை இணைக்கும் நரம்பாக

1033. தொடுத்த காரியம் - எடுத்த காரியம்

1037. பொறுப்பு - கடப்பாடு

1038. உயிருளதாய் வேணும் - உயிர் உள்ளதாக அமைய வேண்டும்

1039. நான்துயிலும் சேடன் - இறைவன் பள்ளி கொள்ளும் பாம்பணை

1040. வாசுகி - ஆதிசேடனின் தம்பி; தெய்வப் பாம்பு

1043. நம்பிக்கைதான் பொய்யாது - நம்பிக்கை வீண் போகாது

1051. சத்திய வாக்கியம் - உண்மையான சொல்

1052. மேனி காந்திமின்ன - உடல் தெய்வீகத் தன்மையால் ஒளிபெற

1055. நாக வராளி - ஒருவகைப் பண்

1059. செழுங்கமலம் - தாமரை

1060. வந்தனை - வணக்கம்

1061. பந்தவளை - பாசவளை

1062. கந்தலேரடி - மணம் பெறும் இணையடி

1062. கந்துமலை - பந்துபோன்ற மலை

1063. ஸ்ரீஹரி - திருமால்.

1065. நரகரி - நரசிங்க வடிவம் எடுத்த மாயவன்

1066. ஆண்டவர் - இறைவன்

1068. பாண்டவர் - தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற பாண்டுவின் புத்திரர்கள்

1070. மகத்தான வேலை - சிறப்பான பணி

1073. பத்தினான் > பற்றினான் - தொடர்ந்தான்

1075. மைநிறத்தின் சஞ்சீவி - கருமை நிறமுள்ள மூலிகைகள்

1076. வாயுபகவான் - காற்றுக் கடவுள்

1077. உய்யும் வகைப் பொருள் நான்கு - அறம், கொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருள்

1080. நல்மலை - சிறப்புடைய மலை - இமயமலை

1082. சஞ்சீவி - மருந்து

1085. வடம் - தேர் இழுக்கப் பயன்படுத்தப்படும் முரட்டுக் கயிறு

1088. பூமண்டலம் - உலகம்

1090. ரோஷம் - உணர்வு

1095. நெஞ்சகம் - மனது

1095. கூப்பி கும்பிட்டு - கைசேர்த்து வணங்கி

1098. சமுத்திரராசன் - கடலரசன்

1100. இந்திரன் முதல் தேவர் பந்தி - இந்திரன் முதல் முப்பத்து முக்கோடி தேவர்கள்

1101. பிரம்மலோகம் - பிரமனின் ஆட்சிகைக்கு உட்பட்ட நாடு

1102. கந்ததம் வாவாமல் - நறுமணம் விடாமல்

1106. நொந்து - வருந்தி

1108. சிறுத்து உடல் - உடல் சுருங்கி

1111. இசைகின்ற வாசுகி - அசைகின்ற வாசுகி

1114. பழுத்தபழமெனச் சுரர்அசுரர் - கனிந்த பழம்போன்ற தேவரும் அசுரரும்

1114. பதிறினார் - கலங்கினார்

1115. கைசலித்து - கை வலித்து

1116. மாதவன் - திருமால்

1119. அவதாரம் - பிறத்தல்

1119. கூர்ம அவதாரம் - ஆமை வடிவில் விஷ்ணு பிறந்தது

1133. கந்தருவர் - இசை அறிந்தோர்

1133. வித்தியாதரர் - தேவர்களிலே ஒருவகையினர்

1133. துந்துபி வாத்திய முழங்க - துந்துமி என்ற வாத்தியம் முழங்க

1139. தையல் - பெண்

1143. பரவாசுதேவன் - திருமால்

1348. லெகுவாக - எளிமையாக

1349. ஆய்ப்பாடி - ஆயர் குடியிருப்பு

1149. கிட்டிணாவதாரம் - கிருஷ்ணாவதாரம்

1153. தயாநிதி - அருளாளன்

1155. ஒரு பாவி.... நடுங்கினாரே - பஞ்சமா பாவியருள் ஒருவனால் உலகு அடையும் துன்பம் எத்தன்மையதோ அதேபோன்று வடாவாக்கினி போல ஆலகாலம் கடலில் இருந்து பொங்கி வரலாயிற்று.

1157. திடமிகு குலவரைகள் - வன்மைமிகுந்த சிறந்த மலைகள்

1157. திசை நான்கு நிலை பிசகிசுழல - திசைநான்கும் முரண்பட்டுச் சுழல

1159. கெயிலாச வாசன் > கயிலாசவாசன் - சிவபெருமான்

1160. அபயமைய்யா - ஆதரவு வேண்டுதல்

1162. அம்பரமே - வானமே

1164. கிணறு வெட்ட பெரும் பூதம் வந்த கெடுதி - அமிர்தம் கடைய எண்ணியபோது ஆலகாலம் தோன்றிய கெடுதி

1166. காலனை முன் காலாலே முன்கடிந்தான் - எமனை மார்க்கண்டேயனுக்காக எட்டி உதைத்தசிவபிரான்

1168. உய்யுமஞ்செழுத்து - உய்வைத் தரும் அல்லது உயர்வைத் தரும் நமசிவாயா என்ற மந்திரம்

1169. சத்தியமாய் - உண்மையாய்

1169. சிவமாய் - சிவரூபமாய்

1169. சராசரமாகி - உலகமாகி

1170. சசிரவி - சந்திர, சூரியர்கள்

1172.ஓம் நமசிவா - சிவமந்திரம்

1173. மான் மழுகை சிவபெருமான் கையில் ஏந்தியுள்ள ஆயுதம்

1174. துத்தியம் செய்யுந் தொண்டர்கள் - பணியாளர்

1174. தத்துவமிகு ஈசானன் - சதாசிவ ரூபமான சிவபெருமான்

1177. சின்மயம் - ஞானாகாரம்.

1180. எங்கள் பங்காளா - இறைநேயர் அருளாளனே

1181. திங்கள் சேர் சடையாய் - சந்திரனை முடிமேல் அணிந்த சிவபெருமான்

1183. இமையமாமலையோன் - இமயம் சார்ந்த கயிலையில் வாழும் சிவன்.

1183. ஏந்திழையாள் - அழகிய ஆபரணங்கள் அணிந்த பெண்

1189. நஞ்சினம் பயந்தோட - விடம் அஞ்சி ஓடிந்துபோக

1190. அரகர நுதல் கண்ண - நெற்றியில் கண்பெற்ற சிவன்

1198. மங்கள குணம் சேருங்கள் - நல்ல குணம் சேருங்கள்

1200. சரசமுடன் - காமச் சேட்டைகளுடன்

1201. மிஞ்சாதே மிஞ்சாதே - மீறாதே மீறாதே

1203. அரிய நாவல்க்கனி போல் - ஔவைக்கு முருகன் தந்த நாவல் கனிபோல்

1203. விஷமதனை ஒடுக்கினானே - நஞ்சுதனைப் பரவாமல் தடுத்தானே

1204. ஸ்ரீகண்டன் - அன்னை உமையவள் சிவபிரானின் கண்டத்தைக் (கழுத்தை) தொட்டதனால் ஸ்ரீகண்டன் எனப்படுகிறார்.

1208. நித்தியானந்த ரூபன் - என்றும் மகிழ்வுடன் விளங்கக்கூடிய இறை வடிவம்

1208. பிரதாபன் - கீர்த்தியுடையோன்

1209. நிட்டைகள் - யோகநிலை

பிரமாதி முதல் நிலையறியாதத் தனிப்பரஞ்சோதி - சோதி உருவாக உயர்ந்து நின்ற சிவபெருமான்

1214. வெங்கடாசல பூபாலன் - திருமால்

1220. சத்தியகடல் - உண்மையாகிய கடல்

1225. உபசரிக்க - வழிபாடு செய்ய

1225. செகதலம் புரக்க வந்த செந்திரு - உலகம் காக்க வந்த அழகிய வடிவானவன்

1228. மகாலெட்சுமி - திருமாலின் துணைவி

1231. பசும்பட்டு - நற்பட்டு

1231 . விசுவகர்மா ஆபரணங்கள் சமர்ப்பிக்க - தேவர் உலகத்துத் நற்தச்சன் அணிகலன்கள் செய்துதர

1232. கோதிலா முத்துச் சாமான் - பழுதற்ற சிறந்த முத்துக்களால் ஆன சாமான்கள்

1233. குளிர்ந்த பொற்றாமரை - குளிர்ச்சி பொருந்திய செந்தாமரை

1233. மலரயன் கொடுத்த - பிரமன் கொடுத்த

1233. பூரண கும்பம் - நிறைந்த கும்பம்

1234. பூமாதேவி மகிவையு மாந்தளிர் கொண்டு வைத்திட - பூமகள் இளம் மாந்தளிர் சமர்ப்பிக்க

1235. காமதேனு பஞ்சகெவ்வியம் தனை மொண்டு கொணர்கையில்.... தேவர் உலகத்துப் பசு பஞ்சகெவ்வியம் எனப்படும் பசு வழங்கும் பால், தயிர், நெய், கோமியம், சாணம் கொண்டு தந்தருள

1237. அரம்பையர் உறுவசி மேனகை - தேவர் உலகத்து நடனமாதர் - ஊர்வசி, மேனகை, திலோத்தமை.

1238. வசந்தன் - மன்மதன்

1238. பரிமளமாகிய தாம்பூலம் - மணம் மிகுந்த தாம்பூலம்

1241. பாவை என்று உயிர்களைப் பதிப்பித்து - மண் பதுமைகளாக உயிர்களைப் பதித்து

1241. சரஸ்வதி - கலைமகள்

1241. சகி - துணைவீ

1243. மலர்மாது - அலைமகள் - இலக்குமி

1246. வரம் செய்தாய் - அருள் செய்தாய்

1252. சாம்பிராச்சியம் - பேரரசு

1257. நித்திய சுமங்கலி - மங்களம் நிறைந்த மாங்கல்யத்தைப் பெற்ற பெண்மகள்

1261. திருமத்திமூலன் - மும்மூர்த்திகளில் நடுவனாக வணங்கும் காப்புக் கடவுள் ஆன திருமால்

1264. பாங்கி - தோழி

1265. கங்கைமேவிய கடவுள் - கங்கையைத் தலையில் சுமக்கும் சிவபெருமான்

1268. செங்கை - செம்மையான திருக்கை

1269. மலர்மாரி - பூமாரி

1272. பந்தவளை - பாசக்கட்டு

1273. சொர்ணபீடம் - தங்க ஆசனம்

1275. ஆலத்தி - திருட்டி கழிய

1276. சங்கொடு சக்கரக் கையான் - திருமால்

1277. ஸ்ரீநாதா - இலக்குமியின் நாதனே (திருமால்)

1277. பூநாதா - பூதேவியின் நாதனே (திருமால்)

1278. பரிமள கந்தம் - நறுமணப் பொருள்கள்

1279. மந்தகாசம் - தென்றலின் இனிய சுகம்

1281. தேக பரவசம் - உற்சாகம்

1282. செய செயமாம் பாஹி - வெற்றியே கிட்டுவதாக

1290. வேதமோர் நான்கு - ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம்

1297. தேவேந்திரன் - இந்திரலோகத்து அரசன்

1300. மங்களமொழி - உயர்ந்த மொழி

1303. மன்னு வயின்தலையெல்லாந் தரு மதுரம் பொழியமுதம் - இனிமை மிகுந்த உயர்வினைத் தரவல்ல தேவ பானம்

1304. சின்னஞ்சிறு மதி - குற்றமுடைய மதி

1308. இலவினைக் காத்த கிள்ளை யென இந்திரன் - அமிர்தம் தனக்கே கிடைக்கும் என கனவு கண்ட இந்திரன் நிலையை எடுத்துக் கூறுகின்றது.

பட்ட பாடெல்லாம் சாம்பலிட்டராய் ஆச்சுதே - அமிர்தம் வேண்டி அசுரருடன் இணைந்து செயல்பட்ட முயற்சி எல்லாம் பயனற்ற சாம்பலில் இட்ட நெய் ஆனதே!

1311. துட்டர் அமுதம் கொண்டால் நாங்கள் கடைத்தேறுவது எப்போ - துட்டராம் அசுரர் அமிர்தம் அருந்தினால் நிலைபேறு பெற்று தீமையே செய்வர். ஆகவே சுரர் ஆகிய தாங்கள் கடைத்தேறுவது எப்போது என்பதாகும்.

1315. புலையருக்கு அடிமையானோம் - சண்டாளர்க்கு அடிமைப்பட்டோம்.

1317. அனந்த சயனத்தான் - பாம்பணையில் உறங்குவது, துயில் கொள்வோன்

1319. தனந்திரள பெண்ணுருவாய் நின்று சேவை தருகிறான் - மோகினி அவதாரம் எடுத்து கண்டோர் மதிமயங்க பெருத்த தனங்களுடன் பெண்ணுரு வில் காட்சி தரும் மாயவன்.

1323. மேகமண்டலமோ இவள் சிகை - கருமேகத்தின் நிறங் கொண்ட கார்குழல் என்பது விளக்கம். ஐய உவமை

1324. சொர்ணக்குடம் - தங்கக் குடம்

1326. பதினாறு கலை சேர்ந்த நிலவு - முழுநிலவு அல்லது வெண்ணிலா போன்ற அழகு

1335. மதனே தேனே - காமனே இனிமைமிகு தேனே

1340. தோகை - நீண்ட கூந்தலை உடையவளே

1341. வீம்புரை அவுணர் - வீம்பு பேசும் அசுரர்

1342. பண்ணிய லீலை - செய்த காமச்சேட்டைகள்

1345. அற்புத உந்தி - அழகிய தொப்பூள்

1350. இருகுலமும் உய்ய - அசுர குலமும் தேவர் குலமும் உய்ய

1356. ஆரணத்திலுறைகின்ற நாரணர் - அழகிய ஆபரணங்களை அணிந்து காட்சி தரும் திருமால்

1360. திகிரி - சக்ராயுதம்

1361. - 1363. மதிக்கதிரருகில் வந்த வஞ்சக வசுரன் கேதுவுடன் ராகுவாகிப் பதிபெறும் கிரகமே மோட பரிந்து ரெண்டாகிச் சேர்ந்தான் - (அமுதம் உண்ண வடிவு மாறி வந்த அசுரனான ஒருவன் இறைவனின் சட்டுத்தால் அடிபட்டு உடல் இரண்டாகி ஓர் உடல் ராகு என்ற சர்ப்பமாகவும் பிறிதொரு உடல் கேதுவாக மாறி ஏழு கிரகங்களுடன் இவை சாயா கிரகங்கள்-2 எனச் சேர்ந்து கோள்கள் ஒன்பது ஆயின என்பது வரலாறு)

1366. பரியாசம் - கேலி செய்தல்

1370. நாணும் பெண்ணுரு - வெட்கம் நிறைந்த பெண்ணுரு

1376. ஸ்ரீவச்சன் - இலக்குமியை தன் மார்பில் அமைத்தவன்

1381.மாமயன் - தேவ தச்சன்

1385. சிங்கத்தின் முன் நரிகுட்டி - விலங்கின அர்சானாக ஒப்பிடும் சிங்கத்தின் முன் சிறுநரி என

1390. வருணாத்திரம் - ஒரு பாணத்தின் பெயர்

1400. திரணமாக - ஒரு பொருட்டாக

1409. ராகு விட்ட தினகரன் போல் ராகு மறைத்ததால் சூரியன் ஒளி பூமியில் படாது இதனை சூரிய கிரகணம் என்பர். பின்னர் ராகு விலகிய உடன் மீண்டும் ஒளி வரும். எது கொண்டும் மறைக்க முடியாத சூரியனை ராகு மறைப்பது பிரபஞ்ச வித்தை என்பர்.

1426. ரகசியம் - பிறர் அறியாது பேசுவது

1429. மகரிஷி நாரதர் - இல்லறம் துறந்து துறவறம் மேற்கொண்ட பிரம்மச்சாரியாக வாழ்ந்து வரும் முனிவன்

1434. கலகம் - குழப்பம்

1439. வனமாளிகையோன் - சுடுகாட்டில் நடமாடும் சிவபெருமான்

1444. கண்ணினுன்மணி - கண்ணின் பாவை

1454. அகமதிலடங்கிலாத அதிசயம் - உள்ளத்தை கொள்ளை கொள்ளும் ஆச்சரியம்

1459. பகவன் - இறைவன்

1465. ரஞ்சிதம் - இன்பமானது

1469. பந்தவளை - பாசகட்டு

1478. மூலமந்திரப் பொருள் - விடுபேற்றைத் தரும் ஓம் நமோ நாராயணாய என்ற எட்டு எழுத்து மந்திரப் பொருளாக விளங்குபவன்

1479. கயவர் - கீழ்க்குணம் உடையவர்

1480. அண்டங்கள் யாவையும் பெற்ற நாதன் - இறைவன்

1481. கொண்டல் வண்ணன் - கார்மேகத்தின் நிறத்தை வண்ண மேனியாகப் பெற்றவன்

1485. பிரக்கியாதி - கீர்த்தி

1488. மகதேவன் - சிவபெருமான்

1488. மாயவன் மோகினியுரு - திருமால் எடுத்த மோகினி உரு

1498. பகவன் - இறைவன்

1493. வேலன் - கையில் வேல் உடையவன்

1493. வினாயகன் - மூலப்பொருள் கணபதி

1495. நேசதேவர் - தேவர்கள்

1496. பார்வதியுடன் சேரும் லோலா - பார்வதியின் கணவனான சிவபெருமான்

1497. அபிஷ்டம் - அபீஷ்டம் - பிரியமான

1498. திரிபுரம் மெரித்த தேசிகா - சிவபெருமான்

1501. மனங்குடி கொன்று மெட்டெழுத்து - 'ஓம் நமோ நாராயணாய' என்ற எட்டெழுத்து

1505. விவேகி - அறிவுடையவன்

1519. சட்டமாய் நிட்டை பெற்ற தவசி - யோகம் அறிந்த தவத்தோன்

1524. வாவிசோலை - குளிர்சோலை

1526. கதலிநேர் துடை - வாழை போன்ற தொடை; துடை - தொடை

1527. கடம் போல் அழகிய தனம் - அழகிய குடம் போன்ற கொங்கைகள்

1527. அற்புதச் சங்கெனும் கழுத்து - சங்கு போன்ற அற்புதக் கழுத்து

1528. விசாலமாம் விழி - அகன்ற விழி

1530. பரிமளவாடை - நறுமண வாசம்

செங்காரம் > ரீங்காரம் - வண்டு எழுப்பும் ஓசை

1535. முல்லை மலர் வரிசையோ முத்துனுடை கோர்வையோ - முல்லையின் வரிசை போன்ற பல் வரிசையின் சிறப்பான கோர்வை

1536. சூலிடைய கொண்டலோ - நிறைந்த கார்மேகத்தினைப் போன்ற கூந்தல்

1536. கொல்லிரு அரவமோ - அரவம், பாம்பு போன்ற நீண்டு வளைந்த கூந்தலின் பின்னல் அழகு

1536. வண்டு நிகர் கூந்தல் - வண்டு போன்ற கருமை நிறக் கூந்தல்

1537. நவறெற்றின கும்பமோ - நவரெத்தினத்தால் செய்யப்பட்ட கும்பம்

1537. இருதன மலை யிதன் விம்மல் - இரண்டு கொங்கைகளும் பார்ப்பதற்கு இரு மலைகள் நிற்பது போன்ற தோற்றம்.

1539. நிசவேர்வை அன்ன வாடை - காமத்தின் விளைவால் உடலில் ஏற்படும் ஒருவகை மணம்

1545. சந்திரோதய முக விலாசம் - சந்திரன் போன்ற முகம்

1550. குதலை தொனி - குழந்தைகள் போன்ற பேச்சுமொழி

1554. காச்சிய பாலுடன் கற்கண்டு தோற்றிடும் - கற்கண்டு கலந்த பாலினும் இன்சுவைமிக்க பேச்சு

1566. கிட்டவாடி - அருகில் வா என அழைத்தல்

1567. பயரஞ்சி - தங்கம்

1570. மதப்பயல் - காமன் அல்லது மதன்

1573. கல்லுந்தவமுனிவர் கனமனமுந் தான் வருக கல்போன்று தவம் செய்யும் ஆற்றல் படைத்த முனிவரே வருக.

1580. சித்தம் - மனம்

1585. ஒருவராருணக்கிணை - யார் ஒருவர் உனக்கு இணை

1588. சின்னப்பயல் மதனன் - சிறுவன் மதன் - காமன்

1590. மோடி - வித்தை

1591. கன்னல் வில்மாரன் - கரும்பை வில்லாகப் பெற்றிருக்கும் காமன்

1600 பித்தர் - சித்தம்

1605. ஆனையின் தோலைக் கட்டிய நீ

1608. பருவ மாதர் - இளமடந்தையர்

1608. லீலை - காமச்சேட்டை

1612. வேலவன்றன் தந்தை - சிவபெருமான்

1613. பரியாசம் - கேலி

1614. ஏங்காணும் - விளிச்சொல்

1615. பிரமநிட்டை - யோகநிலை

1616. பெண்மாய்கை யொழித்த வருண்டோங் காணும் - பெண்ணாசை விட்டவர் யாரேனும் உண்டோ ஐயா

1619. திடசித்தர் போல் சொல்லிக் கொண்டிரே - சஞ்சலப்படாத மனத்தை உடையவர் எனக் கூறினீர்களே

1620. ஸ்திரி - பெண்

1621. ஆடெடுத்த கள்ளன்போல் - ஆடு திருடிய கள்ளன் போல

1626. நாதா - தலைவா

1631. வேசையர் - கணிகையர்

1632. காணுமடமயிலே - அழகு பொருந்திய இளமயிலே

1633. வீண்மாய்கை - மாயை ஸ்திரமற்றது

1635. புகட்டு - ஆடம்பரம்

1635. வித்தை - சிறந்த பயிற்சி

1640. சிறுமை கொண்டவர் மனம் பெருமை கொண்டா லல்லது தேறுவதோ சாமி - மனதில் சிறுமை உடையவர் அதனை நீக்கி பெருமை கொள்ளவில்லை எனில் அவர்கள் கடைத்தேற இயலாது.

1645. ஐயாயுதம் - ஐந்துவகை ஆயுதம்

1648. கனம் பொருந்தும் வைகுந்தை - சிறப்பைத் தரும் வைகுந்தை என்னும் திருமால் பட்டணம்

1651. தேவமுடி - தேவர்களின் அரசன் இந்திரன் அணியும் முடி

1656. உறுவசி மேனகை அரம்பையர் - தேவ நடன மகளிர்

1657. விசுவாசம் - நன்றிக்கடன்

1659. சித்தர் கின்னரர் முனிவோர் - தேவர்களில் சில வகையினர்

1660. பூரணகும்பங்கள் - நிறைகும்பங்கள்

1661. சப்தரிஷிகள் - ஏழு முனிவர்கள் விண்மீனாய்த் திகழ்பவர்கள்

1669. புரந்தரன் - காப்பவன்

1669. வண்ணமாளிகை - அழகு பொருந்திய மாளிகை

1672. கண்ணாயிரம் - ஆயிரம் கண்களை உடையவன்; இந்திரன்.

1678. மங்களம் மங்களம் - சுபம் சுபம்

1680. காராக அழலி வாணி - நீண்ட கரிய கூந்தலை உடைய கலைமகள்

1680. நான்முகன் - பிரமன்

1680. கன்னியிருவருடன் கந்தன் - வள்ளி தேவானை என்ற இரு பெண்களுடன் காட்சி தரும் கந்த பிரான்

1681. வேதந்தமிழ் செய்த நாவீரன் - வேதம் கூறும் கருத்தைத் தமிழில் செய்தவன்

1681. வேதியர் பணி ராமானுசன் - வேதியர் அனைவரும் பணியும்படியான பேற்றை உடைய ராமானுசன்

1682. நால் வேதம் - ரிக், யஜுர், சாம, அதர்வணம்

1684. கோதண்ட ராமர் - கையில் வில் கொண்டு நிற்கும் இராமர்

1684. திரிபுராந்தீசர் - திரிபுரத்தை எரித்த ஈசர் சிவபிரான்

1685. இசையுடன் தும்புரு நாரதர் - தேவ முனிவர்கள்

1688. தாரணி - உலகம்

1689. துந்திமுகன் - விநாயகன்

1690 வெங்கடாசல தீரன் - வெங்கடாசலப் பெருமான்

1690. வேலவன்றன் அடியான் - முருகனின் அடியவன்

1691. நித்திய சுப மங்களம் - நிறைந்த மங்களம்

பரிபாடல்

வாயடை யமிர்தநின் மனத்தகத் தடைத்தர
மூவாமரபு மோவா நோன்மையும்
சாவா மரபி னமரர்க்காச் சென்றநின்
.... மரபினோய் நின்னடி
தலையுற வணங்கினேம் பன்மாண்யாமும்
கலியி னெஞ்சினே மேத்தினேம் வாழ்த்தினேம்
சுடும் பொடுங் கடும்பொடும் பரவுதும்
கொடும்பா பரியற்க வெம்மறி வெனவே 2:69-75

அமிர்த பானம் 8:120

அமிர்தன நோக்கத் தணங்கு 12:57

காலமும் விசும்புங் காற்றொடு கனலும்
தன்னுரு வுறமும் பாற்கடனாப்பண்
மின்னவர் சுடர்மணி யாயிரம் விரித்த 13:25-27

எரிசனங் கொன்றோய்நின் புகழுரு வினைக
நகையச் சாக நல்லமிர்து கலந்த 13:33

அரிவையர் அமிர்த பானம்
உரிமை மாக்களுவகை யவர்துய்ப்ப 8:120-121

அமிர்தம் (2:69-71)

இறவாமை அளிக்கும் இனிய தேவருணவு. திருமால் அமரர்க்கு உணவாகிய அமிர்தத்தைக் கடைந்து கொடுக்க நினைத்த அளவில் அவர்க்கு அதன் பயன் உரியதாயிற்று.

(பரி.2.69:71)

அமுது: இறவாமை அளிக்கும் இனிய தேவருணவு
மலையினைக் கடலில் நட்டு அமரரும் அவுணரு
மாகிய இருசாரரும் அமுது கடைவதற்கு முற்பட்ட
போழ்து நாணாக விளங்கியவன் ஆதிசேடன்
பரி.திரட்டு 1:64-68

அமுதம் 65:1; 88-4

கணைக்கால் ஆம்பல் அமிழ்து நாறுதண் போது
நற்றிணை 230 -3

குறுந்தொகை

அமிழ்து பொதிசெந்நா அஞ்சவந்த 14-1
அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப் 83-1
அமிழ்தம் உண்க நம்அயல் இலாட்டி 201-1
அமிழ்தத்தன்ன அம்தீம் கிளவி 206-1
அமிழ்தம் ஊறும் செவ்வாய் 286-2

கலித்தொகை

மருந்தோவா நெஞ்சிற் கமிழ்த மயின் றற்றாய் 81-14
முள்ளூறழ் முளை யெயிற் றமிழ்துறந் தீநிரைக் 4-13
ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய் 20-11

அகநானூறு

உணங்கு திறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம் 207-2
அமிழ்தத்து அன்ன கமழ்தார் மார்பின் 332-13
அமிழ்தம் ஊறும் செவ்வாய் 335-25
கடல்வினை அமிழ்தின் கனம்சால் உமணர் 169-6
கமழ் இதழ் நாற்றம் அமிழ்து என நசைஇ 170-5
அரும்பெறல் உலகம் அமிழ்தொடு பெறினம் 213-18

புறநானூறு

அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை 10:7-8
நல்லமிழ் தாகநீ நயந்துண்ணு நறவே 125:8
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி 150:14
உண்டாலம்ம இவ்வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர் 182:1-3

புறநானூறு

அமிழ்தென மடுப்ப மாந்தி யிகழ்விலன் 361: - 19
அமிழ்தன மரபி னூன்றுவை யடிசில் 390:17
அரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்பிரவங் கடையே 392 : 20-21

மதுரைக்காஞ்சி

அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகை - 532

மூவர் தேவாரம்

...... உலகுய்யக்
காரின்மல்கு கடல் நஞ்ச மதுண்ட கடவுள் - 15

மத்தாவரை நிறுவிக் கடல் கடைந்தவ் விடமுண்ட
தொத்தார் தருமணி நீண்முடிச்சுடர் வண்ணன்ஞ - 119

தட நிலவிய மலை நிறுவியொர் தழலுமிழ் தருபட அரவுகொடு
அடல் அசுரரொடு அமரர்கள் அலைகடல் கடைவுழி எழுமிகு சின
விடம் அடைதரு மிடறுடை யவன் - 206

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சின மலி யரவது கொடுதிவி
தலமலிசுரர் அசுரர்கள் ஒலிசலசல கடல் கடை வுழிமிகு
கொலைமலி விடம் எழ அவருடல் குலைதர அது நுகர்பவன் - 228

நஞ்சினை உண்டு ஆரமுதம் அமரர்க்கருளி - 422

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடை நஞ்சு தன்னைத்
நினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்தியதேவ நின்னை - 560

உண்ணற்கரிய நஞ்சை யுண்டொரு தோழம் தேவர்
விண்ணற் பொலிய அமுத மளித்த.... - 804

நாகம்தான் கயிறாக தளிர்வரை அதற்கு மத்தாகப்
பாகந் தேவரராடசுரர் படுகடல் அளறெழக் கடைய
வேக நஞ்செழ ஆங்கே வெருவொடுமிரிந் தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்து அமிர்தம் ஆக்குவித்தான் - 2459

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல் வடேம்
தான் அமுது செய்து அருள் புரிந்த சிவன் - 3537

எண்பெரிய வானவர்கள் நின்று துதிசெய்ய இறையே கருணையாய்
உண்பரிய நஞ்சதனை யுண்டு உலகமுய்ய அருள் உத்தமன் - 3630

வடங்கெழுமலை மத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட எழுந்த நஞ்சம் பலதேவர் அஞ்சி
அடைந்து ஓம்சரணம் என்ன அருள்பெரிது உவையர் ஆகித்
தடங்கல் நஞ்சம் உண்டார் - சாய்க்காடு மேவினாரே - 4798

பொங்கிநின்று எழுந்த கடல் நஞ்சினைப்
பங்கி உண்டது ஓர்தெய்வம் உண்டோ சொலாய் - 5569

சங்கை ஒன்றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுஉண்டு சவாமூவாச்
சிங்கமே - 7227

கடிக்கும் அரவால் மலையில் அமரர்
கடலைக் கடைய எழுகாள கூடம்
ஒடிக்கும் உலகங்களை என்று அதனை
உமக்கே அமுதாக உண்டீர் - 7327

முன்தான் கடல்நஞ்சம் உண்ட அதனாலோ
பின்தான் பரவைக்கு உபகாரம் செய்தாயோ - 7556

சங்கு அலக்கும் தடங்கடல்வாய் விடம்சுட வந்து அமரர் தொழ
அங்கு அலக்கண் தீர்த்து விடம்உண்டு உகந்த அம்மான் - 7755

கோலம் மால்வரை மந்துஎன நாட்டி
கோள் அரவுசுற்றி கடைந்து எழுந்த
ஆலம் நஞ்சு கண்டு அவர் மிக இரிய
அமரர்க்கு அருள்புரிவது கருதி
நீலம்ஆர் கடல்விடம் தனை உண்டு
கண்டத்தே வைத்த பித்த! - 7799

வங்கம் மேவிய வேலை நஞ்சுஎழ வஞ்சகர்கள் கூடி
தங்கள்மேல் அடாமை உன்ன உண்டு இருள் கண்டன் - 7997

திருவாசகம்: எட்டாந்திருமுறை

ஆரா அமுதே! அளவு இலாப் பெம்மானே 1-67

ஊற்றான உண்ணா ரமுதே உடையானே 1-83

அருள் நனிசுரக்கும் அமுதே காண் (திரு.அண்டப்பகுதி 3-59)

நச்சரவு சூட்டிய அன்பன் போற்றி 3-106

வாக்கு இறந்து அமுதம் மயிர்க்கால்தோறும் 3-170

அற்புதமான அமுத தாரைகள் 3-174

அருளொடு பராஅமுது ஆக்கினான் 3-180

சண்டமாருதம் சுழித்து அடித்து ஆஆர்த்து
உலாகாயதன் எனும் ஒரு திறல் பாம்பின்
கலி பேதத்த கடுவிடம் எய்தி 4-55-57

இன்று எனக்கு ஆர் அமுது ஆனாய் போற்றி 4-93

அரைசே போற்றி அமுதே போற்றி 4-104

அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி 4-142

கண்ஆர் அமுதக் கடலே போற்றி 4-150

கடம்பூர் மேவிய விடங்கா போற்றி 4-160

நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி 4-173

ஆரா அமுதே அருளே போற்றி 4-199

மிகவே உயர்த்தி விண்ணோரைப்

பணித்தி; அண்ணா அமுதே 5-10

பொருந்திய பொன்சிலை குனித்தாய் அருள் அமுதம்
புரியாயேல்... 4-13

வந்து எனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மால் அமுதப்பெரும் கடலே! மலையே உன்னைத் 5-26

அச்சம் தீர்த்து ஆட்கொண்டான்: அமுதம் ஊறி 5-29

அறிவனே அமுதனே அடி நாயினேன் 5-50

தேனே அமுதே... 5-59

வார்த்த நஞ்சு அயின்று வானோர்க்கு
அமுதம் ஈவள்ளல் போற்றி 5-69

தேனே அமுதே சிந்தைக்கு அரியாய் 5-85

தேனே அமுதே கரும்பின் தெளிவே 5-90

வழிநின்று நின்அருள் ஆர் அமுது ஊட்ட 6-5

அமுதப்பெருங்கடலே 6-12

விருந்தினனேனை விடுதி கண்டாய்
மிக்க நஞ்சு அமுதா அருந்தினனே 6-18

.... அமுதத்தையும் ஒத்து 6-21
கடல் கரிது ஆய்எழு நஞ்சு அமுது
ஆக்கும் கறைக் கண்டனே 6-32

தொழும்பார்க்கு அமுதே 6-38

காய்சின ஆலம் உண்டாய் - அமுது
உண்ணக் கடையவனே 6-50

அத்தன் ஆனந்தன் அமுதன் 7-3

அடியோங்கட்கு ஆர்அமுது 7-17

கண்ணார் அமுதமும் ஆய் 7-18

ஆராஅமுது 8-2

அமுதின் தெளிவின் ஒளிவந்த 8-4

கண்டம் கரியான் 8-9

தேன்ஆய் அமுதமும் ஆய்திம் கரும்பின் கட்டியும் ஆய் 8-16

இன் அமுது 8-19

என்னுடைய ஆர் அமுது 9-13

போனகம் ஆக நஞ்சு உண்டல் பாடி
பொன்திருச் சுண்ணம் இடித்தும் நாமே 9-17

.... மனத்து அமுதுஆம் சங்கரனை.... 10-7
கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறை மிடற்றன் 10-9

கோலாலம் ஆகி குறைகடல்வாய் அன்று எழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர் தான்என் ஏடி
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன் மால் உள்ளிட்ட
மேல்ஆய தேவர் எல்லாம் விடுவீர்.... 12-8

அமுது செயப்பலி திரியும் 12-17

கார் ஆர்கடல் நஞ்சை உண்டு உகந்த காபாலி 13-11

ஆனநெடும் கடல் ஆலாலம் அமுது செய்ய 13-12

.... மதுரையில் பிட்டு அமுது செய்தருளி 13-16

... ஊன் அமுதம் 15-3

நஞ்சு அமர்கண்டத்தன் அண்டத்தவர் நாதன் 16-4

சால அமுதுண்டு... 16-8

அமுது அளித்து ஊனும் ஆனந்தன் 18-6

அது, பழச்சுவைஎன அமுதுஎன அறிதற்கு 20-7

ஆர்அமுதே பள்ளி எழுந்தருளாயே 20-8

... ஆர் அமுதே 20-10

அமுதே என்று உன் அருள் நோக்கி 21-5

அமுதத் தெண் கடலே... 22-3

அமுதுஊறும் புதுமலர்க்கழல் இணை அடி 23-1

உன் அருள் ஆர் அமுதத்தை வாரிக் கொண்டு 24-10

ஆரா அமுதே... 25-7

தன்னைத் தந்த என்கர் அமுதை 27-1

ஆண்டு கொண்ட என் ஆர் அமுதை 27-3

அமுதை அமுதின் சுவையை 27-4

கோதுஇல் அமுது 31-5

அருள் ஆர் அமுதப் பெருங்கடல் 32-3

... அமுதே! அருமா மணிமுத்தே 32-4

திருக்கோவையார்

அணியு மமிழ்துமென் னாவியு
மாயவன் தில்லைச் சிந்தா
மணியும்..... 5

சொற்பா வமுதிவள் 8

சிந்தாமணி தெண் கடலமிர்தம் தில்லையான் அருளால் 12

ஆலத்தினால் அமிர் தாக்கிய
கோன்தில்லை அம்பலம் போற் 27

தீங்கரும்பும் அமிர்தும் 46

பைந்நா ணரவன் படுகடல்
கோன்தில்லை அம்பலம் போற் 27
மைந்நாண் மணிகண்டன் மன்னும்
புலியூர் மணந்த பொன் 81

கனைகடற் செய்தநஞ் சுண்டுகண்
டார்க்கம் பலத்தமிழ்தாய்
வினைகெடச் செய்தவன் 141

மணியக் கணியும் அரன் நஞ்சம்
அஞ்சி மறுகி விண்ணோர்
பணியக் கருணை தரும்பரன் 195

அருந்தும் விடமணியாம் மணிகண்டன் 272

அருந்தோழிந்தனம் ஆலமென்
றோல மிடுமிமையோர்
மருந்தே ரணியம்பலத்தோன் 329

எட்டாந்திருமுறை: (பதி - ஆ) நமச்சிவாய முதலியார்
காவேரிப்பாக்கம், சென்னை - 1927

❋ ❋ ❋

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

பாற்கடலில் அமிர்தம் கடைந்த வரலாறு பற்றிய குறிப்புகள்

பெரியாழ்வார் திருமொழி

அன்னமும் மீனுருவு மாளரி யும்குறளும்
ஆமையு மானவனே! ஆயர்கள் நாயகனே 1-6-11

அடைந்திட டமரர்கள் ஆழ்கடல் தன்னை,
மிடைந்திட்டு மந்தரம் மத்தாக நாட்டி,
வடம்சுற்றி வாசுகி வன்கயி றாக
கடைந்திட்ட கைகளால் சப்பாணி
கார்முகில் வண்ணனே சப்பாணி 1-7-10

அங்கமரர்க் கமுதளித்த
அமரர்கோவே முலையுணாயே '' 2-2-0

'கடல்கடைந் தமுதங் கொண்டு
கலசத்ததை நிறைத்தாற்போல்' '' 5-4-4

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திருப்பாவை - 30

சங்கமா கடல்கடைந்தான்
நாச்.திருமொழி 8-7

கடலே கடலே உன்னைக்
கடைந்து கலக்குறுத்த
நாச்.திருமொழி 10-9

அலைகடலைக் கடைந் தமரர்க்
கமுதருளிச் செய்தவனே
பெருமாள்திருமொழி 8-8

நெருங்கநீ கடைந்த போது
நின்றசுர ரென்செய்தார்
திருச்சந்த விருத்தம் -21

கடைந்த பாற்க டல்கிடந்து
காலநேமி யைக்கடிந்து

திருச்சந்த விருத்தம் 81

அத்த னெந்தை யாதி
மூர்த்தி யாழ்கட லைக்கடைந்த

பெரியதிருமொழி-1-3-6

பெண்ணாகி யின்னமுதம் வஞ்சித்நானைப்
பிறை யெயிற்றன் றடலரியாய்ப் பெருகினானை

பெரியதிருமொழி 2-5-8

பெண்ணாகி யமுதூட்டும்
பெருமானார் மருவினியை

பெரிய திருமொழி - 2-6-1

திவளும்வெண் மதிபோல் திருமுகத் தரிவை
செழுங்கட லமுதினிற் பிறந்த

பெரிய திருமொழி 2-7-1

தடங்கடலைக் கடைந்தமுதங்
கொண்டுகந்த காளை

பெரிய திருமொழி 3-9-1

விண்ணவரகட்கு அன்று
குன்றுகொடு குரைகடலைக்
கடைந்தமுத மளிக்கும்
குருமணியென் னாரமுதம்
குலவியுறை கோயில்

பெரியதிருமொழி 3-10-2

பொங்கு நீள்முடி யமரர்கள் தொழுதெழ
அமுதினைக் கொடுத்தளிப்பான்

பெரியதிருமொழி 5-3-6

மாயிருங் குன்ற மொன்றும்மத் தாக
மாசுணா மதனொடும் அளவி
பாயிரும் பௌவம் பகடுவின் டலறப்
படுதிரை விசும்பிடைப் படர,
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும்
தேவரும் தாமுடன் திசைப்பப்
ஆயிரந் தோளா லலைகடல் கடைந்தான்
அரங்கமா நகரமர்ந் தானே.

பெரியதிருமொழி 5-7-4

அண்ணல்செய் தலைகடல் கடைந்ததனுள்
கண்ணுதல் நஞ்சுணக் கண்டவனே
விண்ணவ ரமுதுண அமுதில் வரும்
பெரியதிருமொழி 6-1-2

கலிங்க முந்நீர் கடைந்தமு
தங்கொண்டு இமையோர் '' 6-5-1

முன்னீரை முன்னாள் கடைந்தானை '' 6-8-2

கலங்க மாக்கடல் கடைந்த
பெரியதிருமொழி 85-7

மலங்கு விலங்கு நெடுவெள்ளம்
மறுக அங்கோர் வரைநட்டு
இலங்கு சோதி யாரமுதம்
எய்து மளவோர் அமையாய்
விலங்கல் திரியத தடங் கடலுள்
சுமந்து கிடந்த வித்தகனை
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேன் '' 8-8-2

திருமாலை யம்மானை யமுதத்தைக்
கடற்கிடந்த பெருமானை '' 8-9-2

தெள்ளியார் கைதொழும் தேவனார்
மாமுநீர் அமுத தந்த '' 9-7-9

குன்றொன்று மத்தா அரவம் அளவிக்
குரைமா கடலைக் கடைந்திட்டு '' 10-6-2

பாயிரும் பரவை தன்னுள்
பருவரை திரித்து வானோர்க்
காயிருள் தமுதங் கொண்ட
அப்பனை எம்பிரானை
திருக்குறுந்தாண்டகம் -3

பெருவிடியில் கடலமுதம் கொண்ட காலம்
பெருமானைக் கருநீல வண்ணன் றன்னை
திருநெடுந்தாண்டகம் -3

அலைகடலைக் கடைந்தடைத்த அம்மான்
றன்னை - திருநெடுந்தாண்டகம் - 29

என்று கடல் கடைந்த தெவ்வுலகம் நீரேற்று
முதற்றிடுவந்தாதி-2

கண்ணன் நெடுமால் கடல்கடைந்த காரோத
முதற்றிருவந்தாதி - 7

ஆளமர் வென்றி யடுகளத்துள் அஞ்ஞான்று
வாளமர் வேண்டி வரை நட்டு - நீளரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே தொன்னரகைப்
பற்றிக் கடத்தும் படை.
முதற்றிடுவந்தாதி -81

நீயன் றுலகளந்தாய் நீண்ட திருமாலே
நீயன் றுலகிடந்தா யென்பரால் - நீயன்று
காரோதம் முன்கடைந்து பின்னடைத்தாய் மாகடலை
பேரோத மேனிப் பிரான் - இரண்டாந்திருவந்தாதி - 30

பேராழி நின்று பெயர்ந்து கடல் கடைந்த
இரண்டாந்திருவந்தாதி - 51

வாணாகம் சுற்றி மறுகக் கடல் கடைந்தான் '' 68
காரே மலிந்த கருங்கடலை - நேரே
கடைந்தானைக் காரணனை - மூன்றாந்திருவந்தாதி - 27

மந்தரத்தால் மாநீர்க் கடல்கிடைந்து வானமுதம்
அந்தரத்தார்க் கீந்தாய்நீ அன்று '' - 33

மலைமுகடு மேல் வைத்து வாசுகியைச் சுற்றி
தலைமுகடு தானொருகை பற்றி - அலை முகட்
டண்டம்போய் நீர்தெளிபம் அன்று கடல் கடைந்தான்
பிண்டமாய் நின்ற பிரான்.
மூன்றாம் திருவந்தாதி - 46

இசைந்த அரவமும் வெற்பும் கடலும்
வசைந்தங் கமுது படுப்ப - அசைந்து
மூன்றாந்திருவந்தாதி - 64

மலையாமை மேல்வைத்து வாசுகியைச் சுற்றி
தலையாமை தானொருவகை பற்றி - அலையாமல்
பீறக் கடைந்த பெருமான் திருநாமம்
கூறுவதே யாவர்க்கும் கூற்று
நான்முகன்திருவந்தாதி - 49

மலை கொண்டு மத்தா அரவால்
சுழற்றிய மாயப்பிரான்
அலைகண்டு கொண்ட அமுதம்கொள்
ளாதுகடல் பரதர் நான்முகன் திருவந்தாதி - 51

.... அழிநீர்
ஆரால் கடைந்திடப் பட்டது அவன் காண்மின்
சிறிய திருமடல் 26-27

ஆராத போரில் அசுரர்களும் தானுமாய்
காரார் வரைநட்டு நாகம் கயிராக
பேராமல் தாங்கிக் கடைந்தான் - திருத்துழாய்த்
தாராந்த மார்வன் தடமால் வதை போலும்
சிறிய திருமடல் 46-48

தன்னின் உடனே சுழல மலைதிரிந்து ஆங்கு
இன்னமுதம் வானவரை யூட்டி பெரியதிருமடல் - 106

அமரர்கள் தொழுதெழு அலைகடல்
கடைந்தவன் றன்னை நம் - திருவாய்மொழி 1-3-11

அமுதம் அமரர்க் கீந்த '' 1-6-6

அமரர்க் கதீந்த ஆயர் கொழுந்தை '' 1-7-9

கண்ணனை மாயன் றன்னைக்
கடல்கடைந் தமுதங்கொண்ட
நம் - திருவாய் மொழி 3-4-9

...... ஆழ்கடலைக் கடைந்தாய் '' 3-8-1

அப்பனே அடலாழி யானே
ஆழ்கட லைக்கடைந்த நம்-திருவாய்மொழி 4-7-5

கண்ணாளா கடல் கடைந்தாய் நம்-திருவாய்மொழி 4-9-1

திறம்பாமல் கடல் கடைந்தேனே நம்-திருவாய்மொழி 5-6-5

கூடிநீரைக் கடைந்த வாறும்
அமுதம் தேவர் உண்ண, அசுரரை
வீடும் வண்ணங்க ளேசெய்து போன வித்திகமும்
'' 5-10-10

முன்பரவை கடைந்தமுதங் கொண்ட மூர்த்தியே " 7-1-1

ஆவியே! அமுதே! அலைகடல் கடைந்து

அப்பனே காணுமா றருளாய் " 8-1-1
கடலினுள் அமுதமே... " 8-1-7

குறியமாண் எம்மான் குரைகடல் கடைந்த
கோலமா ணிக்கமென் எம்மான் " 8-4-2

கடைவதும் கடலுள் அமுது " 9-3-6

நீலக்கடல் கடைந் தாயுன்னைப்

பெற்றனிப் போக்குவனோ " 10-10-7

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற் காணும் அமுது (அமிர்தம்) பற்றிய குறிப்புகள்

'ஆரா இன்னமுது'	பெரியாழ்வார் திருமொழி	3-1-11
என்னிளங் கொங்கை அமுதமூட்டி	,,	3-2-8
ஆடி யமுதுசெய் அப்பன்	,,	3-3-3
அமுத கீதவலையால் சுடுக்குண்டு	,,	3-6-6
.... அமுதப்புனல் ...	,,	3-6-11
ஊத்தைக் குழியி லமுதம் பாய்வது போல்	,,	4-6-7
பக்தர்க்கு அமுதன்	,,	5-2-2
அறிவை யென்னு மமுத ஆறு	,,	5-4-2
... வாய் அமுதம்	நாச்சியார் திருமொழி	7-8
.. அமுது செய்திட	,,	9-7
ஆரா அமுத மனை பான்றன் அமுத வாயி லூறிய	,,	13-4
தொண்டு பூண்ட முத முண்ணாத்	திருமாலை	-5
வெந்திறல் களிறும் வேலைவா யமுதும் விண்ணொடு விண்ணவர்க் கரசும் -	பெரியதிருமொழி	1-4-4
நறுநெய் யமுதமாக	,,	1-10-4
அஞ்சுவை யமுதம்	,,	2-3-3
அந்தணர்தம் அமுதத்தை	,,	2-5-4
அமுது செய்த திருவயிற்றின்	,,	3-9-3
உளங்குளிர அமுது செய்தில்	,,	3-9-7
ஞால மெல்லா மமுது செய்து	,,	4-1-6
பேணான் வாங்கி யமுதம் கொண்ட	,,	6-10-3
ஆராவின்னமுதைத்..	,,	7-6-9
அருமா கடலமுதே	,,	7-9-9
அமுதம் பொதி யின்சுவை	,,	7-10-1
மாமுநீர் அமுது தந்த	,,	9-7-9
ஆரா அமுதம் தந்த வள்ளல்	,,	10-1-6

வானோர்க்காயிருள் அமுதங் கொண்ட	திருக்குறிந்தாண்டகம் 3
அமுதன்று கொண்டு	இரண்டாந் திருவந்தாதி 85
அமுதா அமுது செய்திட்ட	நம் - திருவாய்மொழி 1-5-9
தகவுயிக்கமுதே	,, 2-4-6
ஆரா அமுதமாய்	,, 2-5-5
நல்லமுதம்	,, 2-5-9
துழாயினாய்!அமுதே!	,, 2-6-9
தீதவம் கெடுக்கும் அமுதம்	,, 2-7-3
கற்பகம் என்னமுதம்	,, 2-7-71
வேதியர் முழுவேதத் தமுதத்தை	,, 3-3-5
நலங்கடல் அமுதம் என்கோ	,, 3-4-5
... தேனை அமுதை	,, 3-5-6
ஆவியே ஆராமுதே	,, 3-8-7
அமுதமாகித் தித்திப்பதே	,, 4-3-10
... அமுதே ...	,, 4-9-6
தேனே இன்னமுதே	,, 5-1-2
கருமாணிக்கத்தை யமுதை	,, 5-1-5
ஆராஅமுதே	,, 5-8-1
...தித்திக்கும் அமுதே	,, 6-10-3
...மேவி அமர்கின்ற அமுதே	,, 6-10-7
அண்ணலே அமுதே	,, 7-1-1
கன்னலே அமுதே	,, 7-1-2
அலைகடல் கடைந்த வாரமுதே	,, 7-2-5
ஆவியே அமுதே	8-1-1
அமரர்தம் அமுதே அசுரர்கள் நஞ்சே	,, 8-1-4
கடலினுள் அமுதமே	8-1-7
... அமுதம்...	,, 8-4-2
கடைவதும் கடலுள் அமுது	,, 9-3-6
சுரக்கும் திருவும் உணர்வும் சொல்லப்புகில் வாயமுதம்	இராமானுச நூற்றந்தாதி 43
அடியார்க்கமுதம்	,, -51

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற் காணும் 'பாற்கடல்' பற்றிய குறிப்புக்கள்

பன்றியு மாமையு மீனமு மாகிய
பாற்கடல் வண்ணா பெரியாழ்வார் திருமொழி 3-3-7

பையர வினணைப் பாற்கடலுள்
பள்ளி கொள்கின்ற பரமமூர்த்தி " 4-10-5

அரவத் தமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும் " 5-2-10

செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள் திருப்பாவை 2

பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே நாச் - திருமொழி 9

பொங்கிய பாற்கடல் பள்ளிகொள் வானைப் " 5-7

ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்
பெருமாள் திருமொழி 4-4

பாடியைப் பெரிதும் பரிசழித் திட்டேன்
பரமனே பாற்கடல் கிடந்தாய் பெரிய திருமொழி 1-6-6

பள்ளி யாவது பாற்க டலரங்

கம்இ ரங்கவன்... " 1-8-2

காவியொப் பாற்கடலேயு மொப்பார் " 2-8-8

மீனா யாமையுமாய்... நம் - திருவாய்மொழி 5-1-10

பறவைமுன் னுயர்த்துப் பாற்கடல் துயின்ற
பரமனார் பள்ளிகொள் கோயில் பெரிய திருமொழி 4-10-4

தெண்டிரை வருடப் பாற்கடல் துயின்ற " 4-10-10

பரிசு நறுமலரால் பாற்கடலான் பாதம்
இரண்டாந் திருவந்தாதி

பாற்கடலான் பாம்பணையின் மேலான்

மூன்றாந் திருவந்தாதி 11

பாற்கடலும் வெங்கடமும் பாம்பும் பனி விசும்பும் " 32

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம் ,, 6

பாற்கடல் கிடக்கு மாதி நெடுமால்
நான்முகன் திருவந்தாதி 3

பழுதாகா தொன்றிறிந்தேன் பாற்கடலான் பாதம் ,, 8

பாம்பணை மேல் பாற்கடலுள் பள்ளி யமர்ந்ததுவும்
நம். திருவாய்மொழி 2-5

பாற்கடல் யோக நித்திரை ,, 2-6

பயில இனியறம் பாற்கடல்

சேர்ந்த பரமனை ,, 3-7

அடையும் வைகுந்த மும்பாற் கடலும் ,, 8-2

குன்றமும் வைகுந்த நாடும் குலவிய பாற்கடல்
இராமானுச நூற்றந்தாதி 7

செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில் மாயன்
திருவடிக்கீழ் ,, 10

வைகுந்தம் பாற்கடல் மாநீர் அயோத்திநகர்

பொய்குன்றச் செய்மதுரைப் பொன்னகரம்-மொய்குன்றா
திருப்பதிக்கோவை

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் மாபலி பற்றிய குறிப்புகள்

மாவலி வேள்வியில் மாணுரு வாய்ச்சென்று
மூவடி தாவென் றிரந்தஇம் மண்ணினை
ஓரடி யிட்டிரண் டாமடி தன்னிலே
தாவடி யிட்டானா லின்று முற்றும்
தரணி யளந்தானா லின்று முற்றும்
பெரியாழ்வார் திருமொழி 2-10-7

சலங்கொண்டு கிளந்தெழுந்த
தண்முகல்காள மாவலியை
நிலங் கொண்டான் நாச்.திருமொழி 8-6

வந்து குறளுரு வாய் நிமிர்ந்து
மாவலி வேள்வியில்.. பெரிய திருமொழி 2-8-2

இலகிய நீண்முடி மாவலி தன்பெரு
வேள்வியில்... " 2-9-7

ஆங்கு மாவலி வேள்வியி லிரந்து " 3-1-5

தருகவென மாவலியைச் சிறையில் வைத்த " 3-4-1

கண்டவர்தம் மனம் மகிழ மாவலிதன் வேள்வி " 3-10-5

வசையறு குறளாய் மாவலி வேள்வி
மண்ணை விட்டவன் றன்னை " 4-3-4

ஒள்ளிய கருமம் செய்வனென் றுணர்ந்த
மாவலி வேள்வி புக்கு " 4-10-7

கள்ளக்குறளாய் மாவலியை
வஞ்சித்துலகம் கைப்படுத்து " 5-1-2

ஆங்குமாவலி வேள்வி யிலிரந்து " 5-3-9

பண்டிவ் வைய மளப்பான்
சென்று மாவலி கையில் நீர் " 5-4-3

துரந்தான் இரந்தான் மாவலிமண் " 6-7-3

மாவலி மண் " 6-8-1

...... மாவலியால்

முழுநீர் வையம் முன்கொண்ட ,, 8-8-5

நீணிலா வெண்குடை வாணனார் ,, 9-7-3

வளர்ந்திட்ட தொல்சீர் விறல்மா வலியை 10-6-4

'வெந்திறல் வாணன் வேள்வி' 11-4-5

கள்ளத்தால் மாவலியை மூவடிமண்
கொண்டளந்தான் ,, 11-5-10

மண்தா என விரைந்து மாவலியை முதற்றிருவந்தாதி 79

.... பண்டொருகால் மாவலியை
மாணியாய்க் கொண்டிலையே மண்
இரண்டாந் திருவந்தாதி 89

.... வாமன னாய் மாவலி பால்
மூன்றாந் திருவந்தாதி 18

வயிரம் குழைத்துண்ணும் மாவலி
நான்முகன் திருவந்தாதி 75

மாவலி மாட்டு இருங்குறள் ஆகி ,, 91

.... மாவலிதன்
பொன்னியலும் வேள்விக்கண் பெரிய திருமடல் 108

'கொள்வன் நான் மாவலி மூவடி தா'
நம் - திருமொழி 3-8-9

'அரவு' பற்றிய சங்க இலக்கியக் குறிப்புகள்

அகநானூறு

1. வெஞ்சின அரவின் பை அணந்தன்ன 154:6
2. உத்தி அரவிஎன் பயத்தலை துமிய 202:10
3. அரவு இரை தேடும் 258:10
4. அரவின் பைந்தலை இடறி 328:4
5. வள்ளெயிற்று அரவு 340:10
6. பாம்பு மதனழியும் 8:4
7. பாம்புறை புற்று 64:10
8. பாம்பென முழுமுதல் துமிய 68:607
9. பாம்பு 88:13
10. உருமுச் சிவந்து எறிந்த உரனிழி பாம்பு 92:11
11. பாம்பின் பைந்துணி 119:6
12. பாம்புயர் தலை 322:5
13. பாம்பொறி கோல் 322:5
14. பாம்பின் பைபட இடிக்கும் 323:11
15. நிரை செல் பாம்பு 324:13
16. பாம்பென முடுகு நீர் ஓட 339:3
17. கல்லூர் பாம்பு 349:13
18. பாம்புடை விடர் 362:1
19. மணியிழந்த பாம்பு 372:13
20. குன்று புகு பாம்பு 391:13

ஐங்குறு நூறு

அரவு உறுதுயரம் எய்துப 173:2

கலித்தொகை

1. தலைவன் அரவு அஞ்சாது வருதல் 38:10
2. அருமணி அவிர்உத்தி அரவு 45:3
3. அரவின் பொறியும் அணங்கும் 50:6
4. அரவுக்கண் 64:4
5. பால்மதி சேர்ந்த அரவினைக்கோள் விடுக்கும் நீல்நிற வண்ணன் 104:37, 38
6. அரவின் வாய்க் கோட்பாட்டுப் போதரும் பால்மதியம் 105:45

7. அரவுற்று உருமின் அதிரும் 113:26
8. திங்கள் அரவு உறின் கலி 140:17
9. அரவிணை அசைஇய ஆடுகொள் நேமியாற் பரவுதும் 105:71
10. பாம்பு சேர் மதி 15:17
11. மதியோடு பாம்பு மடுப்பேன் 144:22

குறிஞ்சிப்பாட்டு

அரவு உறழ் அஞ்சிலை (158)
இரைதேர் அரவம் (256)
பாம்பு மணி உமிழ (221)

குறுந்தொகை

1. நல்லராக் கது யங்கு 43:4
2. சிறுவெள்ளரவின் அவ்வரிக் குருளை 119:1
3. வெஞ்சின அரவின் பைந்தலை துமிய உரவு வரும் 190:4
4. அரவு நுங்கு மதி 395:4
5. பாம்பின் சூல் 35:2
6. பாம்பின் உரி நிமிர்ந்தன்ன உருப்பு அவிர் அமையத்து 154:1, 2
7. பாம்பு பை அவிதல் (குறு 185:5; 391:3,4)
8. பாம்பின் பையுடை இருந்தலை துமிக்கும் ஏறு 278:3, 4
9. கடும் பாம்பு வழங்கும் தெரு 354:5

சிறுபாணாற்றுப்படை

1. மதிசேர் அரவு (185)
2. நீலநாகம் நல்கிய கலிங்கம் ஆலமர்
செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த (96, 97)
3. பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன (221)
4. பாம்பு வெகுண்டன்ன தேறல் (237)

திருமுருகாற்றுப்படை

1. கடும் பாம்பு தூங்க (49)
2. பாம்ப படப்புடைக்கும் புள்ளணி நீள் கொடி
(150, 151)

நற்றிணை

1. அணங்குடை அரவு 168:3
2. திருமணி அரவுத் தேர்ந்து உழல். 255:10
3. பாம்பு உடன்று 51:2
4. பாம்புயிர் அணங்கியாங்கு 75:3
5. பாம்புடை விடர் 104:9
6. பாம்பு பை மழுங்கல் 238:9
7. பாம்பு அளை 264:1

பதிற்றுப்பத்து

1. செயிருடைய அரவு எறிந்து 51:28
2. பெருமலை வெள்ளயிற் விலங்கும்
அருமணி அரவழுங்கும் 51:12-14

பரிபாடல்

1. பாம்பு தொடு பாம்பு முடி மேலன பாம்பு பூணா பாம்பு
   தலை மேலது பாம்பு சிறை தலையன பாம்பு படமதும்
   சாய்த்தோய் 4:41-47
2. பாம்பு ஒல்லை மதியம் மறைய வருநாளில் 11:9, 10
3. அரவு சேர் உஃக மதி 11:73
4. ஐந்தலை அவிர் பொறி அரவம் 13:72
5. அரவு உரிவுண்ட 21:6

புறநானூறு

1. அரவுத்தலை பனிப்ப இடிப்பன முழங்கும் முரசு
   17:38, 39
2. [illegible]னையிற்று அரவு எறி உருமின் முரசு
   126:18, 19
3. அரவு உமிழ் மணியின் 294:8
4. அரவு உளர் புரு 129:6
5. அரவு எறி உருமு 366:3
6. அரவு உரீஇ ஆரம் 366:16 366:27
7. அரவு வெகுண்டன்ன தேறல் 376:14
8. கிளை அரா எறியும் அருநரை உருமு 58:6-7
9. நல்லரா உறையும் புற்றம் 309:3
10. அரசு அராப் பனிக்கும் அணங்குறு பொலமுது 366:6
11. எழுமணி அங்கேழ் அணிபதத்தி. கணை கொள் கலை
    நாவின் நீற்றமுற்ற அரா அ 362:17, 14, 15
12. ஓங்குமலை பெருவில் பாம்பு ஞாண் கொளீஇ 55:1

பெரும் பாணாற்றுப்படை

1. அரவும் தப்பா (43)
2. அரவு (134)
3. பாம்புறை மருது (232)
4. பாம்புறை புற்று (277)
5. பாம்பறைப் பள்ளி அமர்ந்தோன் (373)

பொருநறாற்றுப்படை

1. அரவு உரியன்ன அறுவை (83)
2. பாம்பு அணந்தன்ன ஓங்கிரும் மருப்பு (13)
3. பாம்பின் துத்தி (69)

மலைபடு கடாஅம்

1. அரவுக் குறும்பெறிந்த சிறுகட் தீர்வை (504)
2. பாம்பு ஒடுங்கும் பயம்பு (199)

முல்லைப் பாட்டு

பாம்பு பதைப்பன்ன (70)

பொது

நாகம் - நாகர் பற்றிய குறிப்புகள்

1. திருமணி உமிழ்ந்த நாகம் (அகம் 138:17)
2. நாகம் நாணாக (பரி. 5:24)
3. பாகர் இறைவழை மதுநுகர்பு களிபரந்த நாகரின் நல்வள வினைவயவு ஏற நளிபுணர்மார் (பரி.11:66, 67)
4. நாகநீள்மணிவரை (பரி.திரட்.2:3)
5. நாகம் போத்தன் (குறு 282)
6. நாலை கிழவன் நாகம் (புறம் 179)
7. ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை தீஉமிழ் திறலொடு முடிமிசை அணவர (1:1, 27)
8. ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல் (பரி.1:46)
9. ஆயிர அணர்தலை அரவுவாய்க் கொண்ட சேவல் ஊர்தியும்செங்கண் மாஅல்ஓ எனக் கிலிக்கும் (பரி.3:60, 61)

பாகவதம்

3. கடல் கடைந்த அத்தியாயம்

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

1815. ஐந்தா மனுரை வதனாகு
மவன்றா மதனுக் கருந்துணைவன்
நந்தா துலக மளித்தருணா
ணலஞ்சேர் விபுவா னவர்க்கிறைவன்
பைந்தார் புனைபூ தரயன்முதற்
பகர்வோ ரமர ரெழுமுனிவர்
முந்தாம் வேத சிருடனென
மொழியு மறையோன் முதலினரால். (1)

1816. துலங்கு தவச்சுப் பிரன்மேவுந்
துணைவி விகுண்டை யிடத்துதித்து
நலங்கொள் யெர்வை குண்டனென
நண்ணி நளினை வேண்டுதலால்
இலங்கு மெழில்வை குண்டமென
வேத்து நகர மொன்றிழைத்தான்
வலங்கொ டிகிரிப் படைவலக்கை
மனஞ்சொற் கெட்டா மாயவனே. (2)

1815. அவன் - ரைவதகன். தாமதனின் சகோதரனாதலின் துணைவன் என்றார். அளித்து அருளும் நாளில். விபு என்பவன். இறைவன் - இந்திரன். வேதசிருடன் - வேத சீர்ஷன்.

(பிம்) 3. பூதரதன் முதற்.

1817. ஆறா மனுசக் குசனளித்த
வடற்சாக் குசனா மக்காலம்
மாறா துலவு பெரும்புகழ்மந்
திரத்துய் மன்னாம் வானவர்கோன்
பாறார் வடிவே லமரரென்போர்
பகரு மார்ப்பி யாதியராம்
வீறார் தவத்தா ரெதிர்வனதேர்
விரகா தியரேழ் முனிவரரால். (3)

1818. மருவார் கூந்தற் சம்பூதி
வயிற்றில் வயிரா சற்கெழில்சேர்
உருவாய் மகவா யசிதனென
வுதித்தான் மாய னக்காலம்
துருவா சப்பே ரொருதவத்தோன்
றுனைவி னடந்து சுரர்பதிக்குத்
திருவார் தொடைய லொன்றளித்தான்
சிரத்திற் றரித்தா னிலைமன்னோ. (4)

1819. கண்ட முனிவ னிருவிழியுங்
கனலும் புலிங்கக் கணங்கால
மண்டு முயிர்ப்புக் கடைக்காலின்
வளர வானோர் குழாமிரிய

1816. நளினை - திருமகள். வலம்கொள் - வெற்றியைக் கொண்ட. திகிரிப்படை - சக்கராயுதம். கையையுடைய மாயவன். மாயவன், வைகுண்டன் என எண்ணி, நளினை வேண்டுதலால் நரகம் இழைத்தான்.

1817. ஆறாம் மனு சாக்குசன் ஆம்; சாக்குசன் - சாக்ஷுஸன். வானவர்கோன் மந்திரத்துயும்னன் ஆம். பாறு - பருந்து. எதிர்வன தேர் - எதிர்காலத்தில் நிகழ்பவற்றை அறியும். விரகாதியர் - விரகர் முதலியோர்.

(பிம்). 4. விறார் தவத்தா ராகவனல் விரிடா தியரேழ்.

1818. மாயன் வயிராசற்குச் சம்பூதி வயிற்றில் அசின் என உதித்தான். வயிராசன் - வைரராஜன். அசிதன் - அஜிதன். அக்காலம் - மாயன் அஜிதனாக உதித்தபொழுது. துனைவின் - விரைவில், திரு - அழகு. சுரர் பதிக்குத் தவத்தோன் அளித்தான்; சுரர்பதி - இந்திரன். சிரத்தில் - தலையில். தரித்தானில்லை - சூடவில்லை.

கொண்ட லசனி யுட்கநெடுங்
குவடு குலுங்கக் கதிர்மதியம்
விண்டு செலவெண் ணகைபுரிந்து
வெகுண்டு நோக்கி யிதுவிளம்பும் (5)

1802. என்னை யென்னை நறுந்துளவ
மிலையா திகழ்ந்தா யேழாய்நீ
முன்னை முளரிப் பூம்பொகுட்டின்
முளைத்தோன் முளைவெண் பிறையிதழி
துன்னு சடையோ னும்மூவிர்
துய்க்குஞ் செல்வச் செருக்கியாவும்
அன்னை திருமா மகட்பணிந்த
வரும்பே றென்ன வறிதியால். (6)

1821. முந்த யான்செய் பெருந்தவத்தான்
முளரி யாளுக் கிசைபயில்வாள்
தந்த தெய்வத் தண்டெரிய
றனைநீ யிகழ்ந்த காரணத்தால்

1819. கண்ட முனிவன் - மாலையைச் சூடாமல் இருப்பதைப் பார்த்த துருவாசஜ். புலிங்கக்கணம் - தீப்பொறிக் கூட்டத்தை. கால - கக்க. உயிர்ப்பு - சுவாசம். கடைக்காலிஜ் - பிரளயகாலக் காற்றைப்போல. இரிய - ஓட, கொண்டல் அசனி - மேகத்தினாற் பிறக்கும் இடி. குவடு - மலை, கதிர் மதியம் - சூரியனும் சந்திரனும்

1820. மிலையாது - சூடாமல். ஏழாய் - அறிவில்லாதவனே. முளரி - தாமரை. முளைத்தோன் - பிரமன். பிறையும் இதழியும்; இதழி - கொன்றை. நீ, முளைத்தோன், சடையோன் ஆகிய மூவிரும் துய்க்கும் செல்வச்செருக்கு; நீ என்றது இந்திரனை நோக்கி. சடையோன் - ருத்திரன். பேறு - பாக்கியம். அறிதி - அறிவாயாக.

''வண்டுளருந் தண்டுழாய் மாயையா னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசகித்த பேறேன் றுணர்ந்திலையால்''
(திருவிளை. வெள்ளாணை.14)

1821. முளரியாளுக்கு - திருமகளுக்கு. இசை பயில்வாள் - வித்தியாதர மங்கை; கம்ப. அகலிகைப். 5. தெரியல்தனை - மாலையை, இழத்தி -

இந்த வரம்பில் பெருஞ்செல்வம்
யாவு மிழத்தி யெனவுரைத்தான்
கந்த மலர்க்கற் பகமுதல
கடலிற் றுனைந்து கரந்தனவால். (7)

1822. செழுந்தார்ப் பொருட்டு மறைமுனிவன்
சீறிச் சவித்த செயலினால்
கொழுந்தார்ப் பச்சைப் பசுங்கிள்ளைக்
குதலைச் சகிகா தலன்முதலோர்
இழந்தார் செல்வம் வாளமரி
லேற்ற வவுணர்க் கிகலழிந்தார்
உழந்தா ரிடற்போய் மலரவன்பா
லுற்றா ருற்ற துரைசெய்தார் (8)

1823. கேட்ட மலரோன் ஞானமொடு
கிளரா நந்தச் சுடரைமணிச்
சூட்டுப் படவா ளரவணையிற்
றுயிறொன் முதலை யுண்ணினையின்
காட்டுங் கருணைக் கடலையிவட்
கருதிற் றுயர்போம் வழிகாட்டி
வேட்ட தளிக்கு மெனவணங்கி
விருப்பால் வழுத்தத் தொடங்கினரால். (9)

1824. குணமாய்க் குணியாய்க் குவலயமாய்க்
கொழுந்தீம் புனலாய்க் கனலாகித்
தணவா வளியாய் வெளியாகித்
தன்மாத் திரையாய்ச் சார்பொறியாய்

இழப்பாய். கற்பகம் முதல - கற்பகத்தரு முதலியன. துனைந்து - விரைந்து. கரந்தன - மறைந்தன.

1819, 1820, 1821 ஆகிய பாடல்கள் சில ஏட்டுப் பிரதிகளிற் காணப்படவில்லை.

1822. தார்ப்பொருட்டு - மாலையின் காரணமாக. முனிவன் - துருவாசன். சசிகாதலன் - இந்திரன்; சசி - இந்திராணி. செல்வம் இழந்தார். இடர் உழந்தார். மலரவன்பால் போய் உற்றதை உரைசெய்தார்; மலரவன் - பிரமன்.

1823. மலரோன் - பிரமன். மலரோன் சுடரை, முதலை, கருணைக் கடலைக் கருதின், துயர் போம் வழிகாட்டி வேட்டது அளிக்கும் என. சுடர், முதல், கடல்: திருமால். வேட்டது - விரும்பியதை. என - என்று கூற. வழுத்தத் தொடங்கியவர் தேவர்.

கணமாய்க் முக்கா லமுமாகிக்
கருணைக் கடல்போற் பாற்கடலின்
பணவா ளரவி னறிதுயில்செய்
பரமா வெங்கட் கருளுதியால் (10)

1825. ஓரேழ் பிறவி யுடனுயிரா
யுலக மனைத்து மோருருவாச்
சீரா யுறைவாய் நின்னையல்லாற்
செப்புந் தேவே றொன்றுளதோ
தோரார்க் கிருளாய்த் தெளிபவர்க்குச்
சித்தா யுறையுஞ் செழுஞ்சுடரே
ஆரா வமுதே நங்களுக்கிங்
கருளா யென்றன் றேத்தினரால். (11)

1826. வேட்ட தறிந்து விரைத்துளவோன்
வெளிவந் தமரர் முகனோக்கி
ஆட்டுந் தரங்கப் பாற்கடலி
லமுத மெழமந் தரவரையை
நாட்டிக் கவைதற் கவுணரொடு
நட்புப் புரிதி ரெனப்பணிப்ப
மோட்டுத் திறல்வா ளவுணரொடு
முயங்கி யமரர் நனிநட்டார். (12)

1827. நூறா யிரயோ சனையுயர்ந்து
நூறா யிரயோ சனையகன்று
வீறாய் விளங்கு மந்தரத்தை
மிடலால் வேரி னொடுபறித்துப்

பொறி - இந்திரியம். கணம் - நிமிடம். பணவாளரவு - ஆதிசேடன்; பணம் - படம். பரமா என்றது திருமாலை நோக்கிய விளி.

1825. உடலில் உயிராய். தே - தெய்வம். தேரார்க்கு - அறியாத மூடர்க்கு. சித்தாய் - அறிவாக. சுடரே, அமுதே என்பன திருமாலை நோக்கிய விளிகள்.

1826. வேட்டது - தேவர் விரும்பியதை. விரைத்துளவோன்: திருமால்; விரை - வாசனை. தரங்கம் - அலை. மந்தரவரையை - மந்தரம் என்ற மலையை. புரிதிர் - செய்யுங்கள். மோடு - உயர்வு. நட்டார் - நட்புக் கொண்டனர்.

1827. வீறு - வலிமை. மிடலால் - பலத்தால். பாறு - பருந்து.

பாறா யிரம்வீழ்ந் துணக்குருதி
பாயுங் கதிர்வேற் றானவரோ
மூறாப் பிழிவண் டுண்டுறைதா
ரும்பர் குழுக்கொண் டெழுந்தனரால். (13)

1828. எடுக்குங் குடுமி மால்வரைவீழ்ந்
திமையோர் குழுவுந் தானவரும்
தொடுக்கும் பசும்பொற் றொடைமார்புந்
தோளு நெரிந்து துஞ்சமுகில்
கடுக்குந் துளவோ னவருய்யக்
கடைக்கட் கருணை பொழிந்தெய்திக்
கிடக்குங் கிரியோர் விரலேந்திக்
கிளர்புள் ளரசூர்ந் தெழுந்தனனால். (14)

1829. கிளர்வெண் டிரைப்பாற் கடல்வயிறு
கீளப் பசும்பொன் வரைநிறுவி
விளையு மமுது தருதுமென
விறல்வா சுகியை யிடைப்பிணித்துத்
தெளியும் விசும்பி னமரரொடுஞ்
செந்தா மதரைக்கட் கருங்கொண்டல்
ஒளிரு மணிச்சூட் டவ்வரவி
னோங்குந் தலைபற் றினனின்றான். (15)

1830. வாழி யவுணர் யாமோகொல்
வால்பற் றுவதிங் கெனவெகுள
ஆழி முதல்வ னமரர்முக
மருளி னோக்கி வால்பற்றிப்

தானவரோடு - அசுரரோடு. பிழி - தேனை. உம்பர் - தேவர். மந்தரத்தைப் பறித்துத் தானவரொடு உம்பர் எழுந்தனர்.

1828. இமையோர் - தேவர். துஞ்ச - சோர்ந்து விழ. கடுக்கும் - ஒக்கும். துளவோன் - திருமால். கிரியை ஓர் விரலில் ஏந்தி; கிரி - மந்தர மலை. புள்ளரசு - கருடனை.

1829. வயிறு - நடு; "கடல் வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே" (சிலபந். ஆய்ச்சியர் குரவை) கீள - கிழிய. பொன்வரை - பொன் பொருந்திய வரை; மந்தரம். நிறுவி - நிறுத்தி. தருதுமு - தருவோம். விறல் - வலிமையுடைய. இடை - மலையின் இடையில். பிணித்து - சுற்றிக்கட்டி. கொண்டல் - திருமால். அவ்வரவின் - அவ்வாசுகியினது. கொண்டல் - தலையைப் பற்றினனாய் நின்றான்.

830. வாழி, கொல்: அசை. அவுணர் 'யாமோ வாலைப்பற்றுவது' என வெகுள முதல்வன் - திருமால். பாழி - பெரிய. அரவின் - வாசுகி

பாழி யரவின் பணாமகுடம்

படுவெங் கொலைத்தா னவர்பற்ற
ஆழி யகடு கிழந்தலறி
யார்த்து மறுகக் கடைந்தனரால் (16)

1831. வழிந்த நறைத்தா ரணிதிணிதோள்
வருந்த வாங்கி யானாது
தழைந்த மிடலாற் கடைந்திடலுந்
தழலும் பாம்பின் பெரும்பகுவாய்
முழைந்து பொழிவெங் கொடியவிட
மூழ்கி யுடல முழுதெரிந்து
விழுந்தாரசுரர் பலரமரர்
மெல்லென் முறுவன் முகிழ்விளைப்ப (17)

1832. அழியும் பனிவெண் டிரைபுரட்டு
மாழி வயிறு கிடங்கெழுந்து
கிழிய நெடுமால் வரைதுளங்கிக்
கீழ்வீழ்ந் திடலுந் தனிநின்று
சுழலும் பசும்பொற் கிரிமுதுகு
சொறிந்தாங் கணிதி னிளநறவம்
முழுகுந் துளவோன் மோட்டாமை
யுருவ மெடுத்துத் தாங்கினனால். (18)

1833. தாங்கும் வரைப்பொற் குடுமிமிசைத்
தடக்கை யமைத்து நிலைநிறுவத்
தேங்கொள் கமல மலர்க்கைசில
தீவா யரவம் பணிகொள்ள

---

*1*யின். பணாமகுடம் - படத்தையுடைய தலையை. ஆழி - பாற்கடல். அகடு - வயிறு. ஆர்த்து - ஒலித்து.

1831. வாங்கி - இழுத்து. ஆனாது - அமையாமல், மிடலால் - வலிமையால். பாம்பின் - வாசுகியின். முழைந்து=முழைஞ்சு - குகை. அமரர் முகிழ் விளைப்ப அசுரர் உடல் முழுதும் எரிந்து விழுந்தார்; முழுது - முழுதும்; முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது; "ஐந்தவித்தானாற்றல்" (குறள். 25) என்புழிப் போல.

1832. அழியும் - மிக்க. அழிதுளி - மிக்கதுளி (ஐங்குறு.251). வயிற்றில் கிடங்கெழுந்து கிழிய. வரை - மந்தரமலை. துளங்கி - அசைந்து. கீழ் - கடலின்கீழே. துளவோன் - திருமால். மோட்டாமை - பெரிய ஆமையினது.

1833. வரையினது குடுமிமிசை; வரை - மந்தரமலை. குடுமி - சிகரம். தேம் - இனிமை. சில மலர்க்கை அரவத்தைப் பணிகொள்ள; பணிகொள்ள - வேலைகொள்ளும்படி. தொடி -

ஓங்கு சுடர்ப்பூந் தொடியுடுத்த
வோரா யிரந்தோ ளுடையபிரான்
எங்குமு பாவைக் கடல்கடைந்த
விறும்பூ தென்னென் றியம்புதுமால். (19)

(வேறு)

1834. ஆழிவா யலறிப் பொங்க
வாழியந் தடக்கை யம்மான்
பாழிவா யரவு வாங்கிப்
படுவலி காட்ட லோடும்
ஊழிவாய் நெருப்பொ டொப்ப
வுயிரெலா முடிக்கு மென்ன
ஏழொடே ழுலகு மஞ்ச
வெழுந்தது காள கூடம் (20)

1835. எழுதலு மமர ரஞ்சி
யிரிந்தனர் பரந்து செந்தீ
விழுதுவிட் வனைய கற்றை
வேணியன் விமல மாகி
அழிவறு பரமா னந்த
மாள்பவன் மலர்த்தாள் வீழ்ந்து
தொழுதன ரளித்தி யென்னத்
துதித்தனர் பலவு மாதோ. (21)

1836. மூவுரு முறையிற் றாங்கி
முத்தொழி னடாத்து முக்கட்
டேவனே யுலக மெல்லாந்
திருவுரு வாகி நின்றாய்

தோளணி. உடுத்த - அணிந்த. பிரான் - திருமால். பரவை - பரத்தல், இறும்பூது - ஆச்சரியத்தை. இயம்புதும் என்றவன் சுகன்.

1834. ஆழி - கடல். ஆழி - சக்கரம். அம்மான் - திருமால். அரவு - வாசுகியை. வாங்கி - இழுத்து. ஊழிவாய் நெருப்பு - பிரளய காலத்தில் உண்டாகும் தீ. ஏழொடேழுலகும் - பதினான்கு உலகும். காளகூடம் எழுந்தது; காளகூடம் - ஒருவகை விஷம்.

1835. இரிந்தனர் - கெட்டு ஓடிப்போயினர். வேணியன் - சிவபிரான்; வேணி - சடை; வேணிக்குச் செந்தீயின் விழுது உவமை. ஆள்பவனது தாளில் வீழ்ந்து; ஆள்பவன் - சிவபிரான். அளித்தி - பாதுகாப்பாயாக.

(பிம்) 1. யிரியல்போ யினராற்.

காவென வணங்க லோடுங்
கலங்கன்மி னீவி ரென்னத்
தாவருங் கொடிய நஞ்சந்
தானுணக் கருத்துக் கொண்டான் (22)

1837. மருக்குழன் மலைம டந்தை
வாண்முக நோக்கி நங்காய்
ஒருத்தருக் கொருவர் நன்றி
யுதவுறி னுயிர்க்கு ளெங்கும்
இருக்குமத் திருமா லுள்ள
மினிதுவந் தருளும் விண்ணோர்
வெருக்கொணஞ் சுண்ப லென்னா
மிசைந்தனன் விரைந்து மன்னோ (23)

1838. விடமும்வந் தீசன் கோல
மிடற்றினி னீல வண்ண
வடிவுபெற் றணிய தாகி
வயங்கிற்றுப் பெரிது மென்றால்
கொடியரும் பெருமை யோரைக்
கூடின்வெங் கோது நீங்கி
ஒடிவரு நலம்பெற் றுய்த
லுரைப்பதென் னுலகி னம்மா. (24)

1839. உந்துவெண் டரங்க வேலைக்
குற்கட விடமென் றோதும்
வெந்திறற் கொடிய நஞ்சம்
விமனலங் கருந்துங் காலைச்

1836. முக்கண் தேவனே - சிவபிரானே. கா - காப்பாயாக. நீவிர் கலங்கன்மீன்; நீவிர் என்றது தேவரை. தாவரும் - கெடுதல் இல்லாத. நஞ்சைத் தான் உண.

***(பிம்) 4.* கொடி நஞ்சந் தனைநுகர்ந் தருளி னானே.**

1837. மரு - வாசனை. மலைமடந்தை - பார்வதி. நங்காய் என்றது பார்வதியை. விண்ணோர் - தேவர். வெருக்கொள் - அச்சம் கொள்ளத்தக்க. உண்பல் - உண்பேன். என்னா - என்று. விரைந்து மிசைந்தனன்; மிசைதல் - உண்ணுதல். இச்செய்யுள் சில ஏட்டுப் பிரதிகளிற் காணப்படவில்லை.

1838. கோலமிடற்றின் - அழகிய கழுத்தில். அணியதாகி - அழகையுடையதாகி; ''கறைமிட றணியலு மணிந்தன்று'' (புறநா.1) வயங்கிற்று - ஒளிவிட்டது. கொடியரும் - தீயோரும். கோது - குற்றம். ஒடிவு அறு - நீங்குதல் இல்லாத. நலம் - தன்மையை. உரைப்பதென் - சொல்ல வேண்டுமோ?

சிந்துகில் விடத்தை வெய்ய
தேளர வாதி யெல்லாம்
தந்திரப் பாவை வேந்தே
சார்ந்தன நுகர்ந்த மாதோ. (25)

1840. வேற்கடற் றானை வேந்தே
மீளவுங் கடையுங் காலை
நூற்கடல் கடந்த மும்மை
நூலினர் மகிழும் வண்ணம்
பாற்கடல் பிறந்த தோமப்
பயன்றரு சுரபி மீட்டும்
சேற்கடற் றிரைநீர் வெள்ளைச்
செழும்பரி யெழுந்த தன்றே. (26)

1841. சும்மைவெண் டிரையின் வந்து
துனைபரி யெழுத லோடுமுட
பெய்ம்மதக் களிறு வெள்ளிப்
பிறங்கல்போற் பிறந்த பின்னர்க்
கொய்ம்மல ரலங்கன் மாலைக்
குருதிவேற் குரியன் மற்றுன்
கைம்மலர் புரையுஞ் செம்பொற்
கற்பகம் பிறந்த தன்றே. (27)

1842. துய்யபொற் றருமுன் வந்து
தோன்றிய பின்னர்ச் சங்கும்
செய்யபங் கயமும் வானிற்
செழுங்கலை முழுதும் பெற்று

1839. வேலைக்கு - கடலுக்கு. உற்கடவிடம் - எல்லை மீறிய விஷம் விமலன் - சிவபிரான். சிந்திய சில விஷத்தை.தேள், அரவு முதலிய. தந்திரப் பரவை வேந்தே - சேனைக் கடலையுடைய அரசே; என்றது பரிட்சித்தை நோக்கி. எல்லாம் சார்ந்தனவாகி நுகர்ந்த.

*1840.*வேந்தே தஎன்றது பரிட்சித்தை. மும்மை நூலினர் - அந்தணர். ஓமப் பயன்தரும் சுரபி பாற்கடலில் பிறந்தது; சுரபி - காமதேனு. மீட்டும் திரை நீரினின்றும் வெள்ளைப் பரி எழுந்தது; பரி - உச்சைச் சிரவம் என்னும் குதிரை.

1841. சும்மை - ஒலி. துணை - வேகத்தையுடைய. களிறு - ஐராவதம். வெள்ளிப் பிறங்கல் - கைலாயமலை. கொய்ம்மலர் அலங்கல் - கத்திரி கையால் மட்டம் செய்யப்பட்ட பூவால் ஆகிய மாலை. குரிசில் என்றது பரிட்சித்தை நோக்கிய விளி. புரையும் - ஒக்கும். கற்பகம் - கற்பகத்தரு.

1842. துய்ய - பரிசுத்தமான. சங்கும் பங்கயமும் - சங்க நிதியும் பதும நிதியும். மையறு - களங்கமில்லாத. ஐயரி - அழகிய செவ்வரிகள்.

மையறு மதியு மென்ன
வயங்கிய முகத்து வாணோர்
ஐயரி பரந்த மைக்க
ணாம்பைய ருதித்தார் பின்னர். (28)

1843. செய்யசீ றடியுங் கையுந்
தெண்ணிலா முறுவல் வாயும்
ஐயசெந் தளிரா வெண்முத்
தணிமுலை பசும்பொற் கொத்தா
மையரி நெடுங்கண் டேனா
மரைமல ருறையு மன்னை
கொய்யிணர்த் தருவின் பொன்னங்
கொடியெனத் தோன்றுற் றாளால். (29)

1844. இந்திரன் றவிசாங் கீய
விரும்புன னதிக ணல்கக்
கந்தமாம் பொருள்க ளெல்லாங்
காசினி மடந்தை யுய்க்க
ஐந்தெனும் புனித வான்பா
லாதிய வளிப்ப வான்சீர்
மந்திர முனிவோர் பொன்னை
வழுத்திநீ ராட்டி னாரால். (30)

1843. செய்ய - சிவந்த. நிலாமுறுவல் - ஒளிவிடும் புன்சிரிப்பு. ஐயதளிரா - அழகிய தளிராகவும், கண் தேனா; தேன் - வண்டு. மரைமலருறையும் அன்னை - திருமகள்; மரை - தாமரை. இணர் - கொத்துக்களையுடைய. தருவின் - கற்பக மரத்தின். பொன்னங்கொடி - பொற்கொடி. கொடி என்றதற்கேற்பத் தளிரும், கொத்தும், தேனும் கூறப்பட்டன; ''கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா, அருமிபிவர் மென்முலை தொத்தாப் - பெரும்பணைத்தோட, பெண்டகைப் பொலிந்த பூங்கொடி'' (பு.வெ.285)

1844. தவிசு - ஆசனம். கந்தம் - வாசனை. காசினி மடந்தை - பூமியாகிய பெண். உய்க்க - அளிக்க. ஐந்தெனும் புனித ஆண் - ஐந்து வகையான பசுக்கள்; ''நந்தைசுபத் திரைசுரபி நற்சுசிலை நமனையென நவின்ற நாமம், ஐந்தினுக்கு மறிகநிறங் காபிலமே கரியவுரு வணிகொள் வெண்மை, சுந்தரத்த தூமிரமே தாமிரமே யெனத்துணிந்து நாமஞ்சொல்லி, வந்தனை செய். தவற்றுதித்த விருமூன்று மாட்டிடுக வாதற் கென்றும்'' (சிவதரு மோத்தா. கோபுரவியல்.122.) பாலாதிய - பால் முதலியவற்றை. பொன்னை - திருமகளை. நீராடலுக்குரிய பொருள்கள் கூறப்பட்டன.

1845. அம்பா மீது பைங்கா
ரார்த்தலர் மாறி தூற்ற
அம்பா மெழுந்து பொன்னி
னம்பர முதவ யாழோர்
அம்பர மான வன்னா
யருள்கென வமுதிற் பாட
அம்பரம் பொருவே லுண்க
ணரம்பையர் நடந வின்றார். (31)

1846. வருணன்வை சயந்தி மாலை
வழங்கின னயனும் வந்து
விரிகதிர்ப் பசும்பொ னாற்செய்
விளங்கிழை பலவு மீந்தான்
அருவிலை முத்தின் கோவை
யளித்தனள் வாக்கின் செல்வி
குருமணிச் சுடிகை நாகர்
குண்டலங் கொணர்ந்தீந் தாரால். (32)

1847. ஈனமி லெவரு மிவ்வா
றியைந்தன வியந்து நல்க
ஆனபே ரணிகட் கெல்லா
மணியென வணிந்த செல்வி
தேனமர் நீல மாலை
செழுந்தளிர்க் காத்தி னேந்தி
வானவர் தொழுது வாழ்த்த
வான்றனை நோக்கி னாளால். (37)

1845. அம்பரம் மீது - ஆகாயத்தின் மீது. கார் - மேகம். அலராகிய மாரியை; அலர் - மலர். அம்பரம் - கடல். பொன்னின் அம்பரம் - பொன்மயமான ஆடையை. உதவ - அளிக்க. யாழோர் - கந்தருவர். அம் பரமான அன்னாய் - அழகிய பரம்பொருளானவனே; என்றது திருமகளை நோக்கிய விளி. யாழோர் பாட. அம்பு அரம் பொருவேல் உண் -, அம்பையும் அரத்தையும் பொருகின்ற வேலையும் ஒத்த. நடம் நவின்றார் - நடனமாடினர்.

1846. வைசயந்தி என்ற மாலையை. அயனும் - பிரமனும். இழை பலவும் - ஆபரணங்கள் பலவற்றையும். வாக்கின் செல்வி முத்தின் கோவையை அளித்தனள்; செல்வி - நாமகள். கோவை - மாலை. சுடிகை - நெற்றி. நாகர் - பாதாளலோக வாசிகள். குண்டலத்தை ஈந்தார்.

1847. ஈனம் - குறைவு இயைந்தனவற்றை வியந்து நல்க. அணிகட்கெல்லாம் அணி: ம்ப. கோலங்காண். 3. செல்வி - திருமகள். நீல மாலை - கரு நெய்தற்பூ மாலையை. வரன்தனை - சிறந்த கணவனை.

(பிம்) 2. அணியென வணிந்து நம்மோய்

1848. செப்பிய துருவா சப்பேர்
சேர்தவன் முதலாஞ் சில்லோர்
தப்பறு தவத்தின் மிக்க
ராயினும் வெகுளி சார்வார்
ஒப்பறு சனக னாதி
யொண்டவ ரறிவு முற்றிடி
முப்பகை யெறிந்தா ரேனு
முன்னுவர் பேத ஞானம். (34)

1849. சாற்றுமார்க் கண்ட ராதி
தவத்தினர் மாயா ரேனும்
ஆற்றல்சேர் புலன்க ளைந்து
மடக்கில ரடக்கி மாயா
வூற்றமோ டீச னென்பா
னுறையினு முரைக்கு மீனம்
மாற்றிடா னீமத் தென்று
மருவுவ னெலும்புஞ் சூடி. (35)

1850. இன்னண முலகு ளோர்தா
மியைந்தனர் குணமென் றாலும்
பின்னுமோர் குணம்பெ றாது
குற்றமே பெறுவ ரென்று
மன்னுநற் குணங்கட் கெல்லாம்
வைப்பென மருவி நின்ற
முன்னவன் மாய னல்லால்
மொழியின்வே றில்லை யென்னா. (36)

1851. உளத்திடை யிவ்வா றுன்னி
யுவந்தில னெனையென் றாலும்
களிப்புறும் யானை சென்று
கலப்பனென் றமலை யாவும்

1848. சில்லோர் - சிலர். வெகுளி - கோபத்தை. முப்பகை - காமம், வெகுளி, மயக்கம். சனகனாதி தவா பேதஞானம் முன்னுவர்.

1949. மாயாரேனும் - இறவாவிடினும். ஈசனும் என்பான் மாயா ஊற்றமோடு உறையினும் ஈனத்தை மாற்றிடனாய் எலும்பும் சூடி என்றும் ஈமத்து மருவுவன்; மாயா ஊற்றம் - சாவாத வலிமை. ஈனம் - இழிவு. ஈமம் - சுடுகாடு.

1850. முன்னவன் - முதன்மையானவன். மாயனல்லால் - திருமாலைத்தவிர.

1851. உன்னி - நினைந்து. எனை உவந்திலன் என்றாலும் யானே சென்று கலப்பேன் என்று. அமலை - திருமகள். அளிப்பவள் மறை முதலிமார்பின் அலங்கலைச் சூட்டி; அளிப்பவள் - திருமகள். முதலி: திருமால்

அளிப்பவ ளலங்கல் சூட்டி
யருமறை முதலி மார்பின்
துளிப்புயன் மணக்கு மின்னிற்
றோய்ந்தன டுயக்கற் றாளால். (37)

1852. பூரணை புவனம் பூத்த
பூமகள் பொருவி லெம்மான்
தாரணி நிறஞ்செய்ய மார்வஞ்
சார்ந்தபின் கடைய வாங்கு
வாருணி யென்னு மாது
வந்தன ளவளை வானோர்
சீரணி முகுந்தன் சொல்லாற்
சேர்ந்தனர் சேர்ந்த பின்னர். (38)

1853. வேட்டிடு மதுல தன்வந்
திரியெனும் விமல னேந்த
மோட்டுவெண் டிங்க ளென்ன
முளைத்தது முளைத்த லோடும்
சேட்டிளம் பருதி மார்பிற்
றேவரோ டிகலி யேற்று
வாட்டிற லவுண ரோடி
வளைத்தனர் வவ்வி னாரால். (39)

(கலிவிருத்தம்)

1854. வவ்வின ரெமக்கென மதித்தன ருரைத்தார்
அவ்வுரை செவிப்பட வழன்றுசில ருற்றார்
கவ்வைநெடு வாரிதி கலக்கின ரெவர்க்கும்
இவ்வமுத முண்டுபொது வென்றின விசைத்தார். (40)

அலங்கல் - மாலை. புயல் - மேகத்தை. மணக்கும் - சேரும். மின்னின் - மின்னலைப்போல். மாலுக்குப் புயலும், திருமகளுக்கு மின்னும் உவமை. துயக்கு அற்றான்; துயக்கு அசைவு.

1852. பூரணை, புவனத்தைப் பூத்த பூமகள்: திருமகள்; பூத்த - அளித்த. பூ - தாமரை. பொருவில் - ஒப்பில்லாத. எம்மான் - திருமாலது. வாருணி - கள். வானோர் அவளைச் சேர்ந்தனர்; அவளை - வாருணியை.

1853. வேட்டிடும் - விரும்பும். அமுதைத் தன்வந்திரி என்னும் விமலன் ஏந்த முளைத்தது. அமுதுக்குத் திங்கள் உவமை. இகலி - போரிட்டு. அவுணர், முளைத்தலோடும், ஓடி, தேவரொடு இகலி, ஏற்று வவ்வினார். அவுணர் - அசுரர். வவ்வினர் - அபகரித்தனர்.

1854. அவ்வுரை - எமக்கு என்ற உரை. கவ்வை - ஒலி. வாரிதி - கடலை. எவர்க்கும் அமுதம் உண்டு; பொது. என்றின - என்ற இப்படிப் பட்ட வார்த்தைகளை.

1855. எஞ்சுதலி லாவவுண ரின்னண மிசைப்பத்
தஞ்சமென வந்தருரு சார்ந்தபுல வோரை
அஞ்சுசெய லோவுமி னளித்துமமிழ் தென்ன
மஞ்சனைய மாயவன் வருட்டினன் மறைந்தான். (41)

1856. செய்யமணி மேகலை சிலம்பொடு சிலம்ப
மையொழுகு வார்குழுவின் வண்டிசை மிழற்ற
வெய்யமுலை யாரமொடு வெள்வளை யெறிப்பப்
பெய்யுமுகில் வண்ணனொரு பெண்ணுரு வெடுத்தான்.(42)

1857. வேளைவிறல் கொள்ளுமுலை மெல்லிய னகைத்துக்
காளமொடு வேலனைய கட்கடை யெறிந்து
தாளிணை சிவப்பவணி தானைகுழல் சோர
மாளவுணர் சீற்றமொடு வைகுழி நடந்தாள். (43)

1858. முருக்கலர் முருக்கிதழ் முகிழ்க்குநகை யாலோ
அரக்கெறி மலர்க்குவளை யன்னவிழி யாலோ
திருப்புருவ மென்றொளிர் செழுஞ்சிலையி னாலோ
உருத்ததிறல் வாளவுண ருள்ளமயர் வுற்றார். (44)

1855. இன்னணம் - இவ்விதம். புலவோரை - தேவர்களை. அஞ்ச செயல் - பயப்படுவதை. ஓவுமின் - ஒழியுங்கள். அமிழ்து அளித்தும்; அளித்தும் - கொடுப்போம்; என்றவன் திருமால். வருட்டினன் - தன்வசம் செய்தனனாகி; சிற்.270. மாயவன் அளித்தும் என மறைந்தான்.

1856. மேகலை - இடையிலணியும் அணி. சிலம்பு - காலணி. சிலம்ப - ஒலிக்க. வண்டு இசையை மிழற்ற. ஆரம் - முத்துமாலை. எறிப்ப - ஒளிவிட. வண்ணன் - திருமால். வண்ணன், சிலம்ப, மிழற்ற, எறிப்பப் பெண்ணுரு எடுத்தான்; பெண்ணுரு - மோகினி வடிவம்.

1857. வேளை - மன்மதனை. விறல்கொள்ளும் - வெற்றிகொள்ளும். மெல்லியல் - மோகினி. காளம் - விடம். அனைய - ஒத்த. தானையும் குழலும் சோர; தானை - உடை. வைகுழி - தங்கும் இடத்தில். மெல்லியல் - நடந்தாள்.

1858. முருக்கலர் - முள்ளு, முருங்கைப்பூவை. முருக்கு - கோபிக்கின்ற. அரக்கு - சிவப்பு. இதழ் - உதடு. உருத்த - கோபித்த. அவுணர், நகையாலோ, விழியாலோ, சிலையினாலோ அயர்வுற்றார்; ஓகாரங்கள் ஐயப்பொருளன.

1859. பொன்னொழுகு குன்றனைய பூண்முலை சுமந்து
மின்னெழுகு நுண்ணிடை மெலிந்துதடு மாற
அன்னமென நின்றவ ளடித்தளி ரிறைஞ்சி
இன்னமுத நல்குது யெமக்கென வளித்தார். (45)

1860. உண்ணுமுறை நீயமுது வந்துதவு கென்னத்
தண்ணமுத நல்குதலுஞ் சாற்றுமதி யில்லாப்
பெண்ணிவ ளுரைத்திடுத லென்றுபெரி யீர்நீர்
எண்ணும்வகை யெங்ஙன மியைந்திடுவ தென்றாள். (46)

1861. மன்னவுண ரன்னவள் வழங்குமொழி கேளா
இன்னமுது போலநீ யியம்புமொழி யெம்மைப்
பன்னுகுரு வானவர் பணித்தமொழி யன்றோ
சொன்னசெயல் செய்குது மெனத்தொழுது சொன்னார். (47)

1862. என்றலு மிரும்புனல் படிந்தினிதின் யாரும்
நன்றுண வொழிந்துவரு நாளையமு துண்மின்
வென்றிதரு வீரென விளம்புதலு மன்னோர்
அன்றுண வொழிந்தன ரரும்புனல் படிந்தார். (48)

1863. வழுத்திமணி வண்ணனை மனங்குழையு மன்பு
பழுத்ததிறல் வானவர் பரிந்தொர்புற மேவி
விழுப்புனல் படிந்தனர் விரித்தனர் தருப்பை
ஒழுக்கினொடும் வாளவுண ரோர்தலை யிருந்தார். (49)

1859. நின்றவளது அடித்தளிரை; நின்றவள் - மோகினி. எமக்கு அமுதம் நல்குதி என; என - என்று கூறி. அளித்தார் - அமுதகலசத்தைக் கொடுத்தார்; கொடுத்தவர் அவுணர்.

1860. உண்ணுமுறை - உண்ணத்தக்க முறைப்படியே. நீ என்றது மோகினியை நோக்கி. நல்குதலும் - அசுரர் கொடுத்தவுடன். மதி - அறிவு. இவள் மதியில்லாப் பெண் என்று உரைத்திடுதல்; உரைத்திடுதல் - கூற வேண்டா.

1861. அன்னவள் - மோகினியினது. கேளா - கேட்டு. நீ இயம்பும் மொழி எம்மைக் குருவானவர் பணித்த மொழி. நீ என்றது மோகினியை.

1862. புனல் படிந்து - நீராடி. உண்மின் - உண்ணுங்கள். எனலும் - என்று மோகினி கூறலும். அன்னோய் - அவ்வசுரரும் தேவரும்.

1863. மணிவண்ணனை வழுத்தி; வண்ணன் - திருமால். திறல் - வலிமை. பரிந்து - விரும்பி. வானவர் படிந்தனர்; தருப்பையை விரித்தனர். அவுணர் -அசுரர். ஓர்தலை - ஒரு பக்கத்தில்.

1864. ஆரமுது வானவ ரருந்திட வளித்தாள்
தாரவுணர் கண்டமுது தாவென வுரைப்பின்
நீருரை கடத்தனெறி யோவென வெறுக்கும்
நாரியிவள் செய்ந்நய நமக்கமிழ்த மென்றார். (50)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

1865. இருந்தவா ளவுண ரெல்லா
மேக்கற வெய்தச் சாவா
மருந்தினை யமரர் தாமே
மகிழ்ந்துணப் பொழிந்து போக்கிக்
காந்தமு துண்டாற் செங்கேழ்க்
கதிரொடு திங்க ணோக்க
அரிந்திட வைய னந்நா
ளவுணனாங் கிறந்தி லானால். (51)

1866. அங்கரிந் திடவி ராகு
வாகிய வவுணன் சென்னி
துங்கவெவ் விராகு வென்றுஞ்
சொல்லுடல் கேது வென்றும்
தங்கிரு பெயர்சேர் கோளாய்ச்
சார்ந்திடுங் கோள்க ளோடு
திங்களைக் கதிர்வெய் யோனைத்
தீண்டுமீ ருவாவிற் சேரின். (52)

1867. விண்ணவ ரமுத முண்ண
வெகுண்டிழந் தவுணர் நொந்தார்
கண்ணனை நினைந்து ளோர்தாங்
கருதிய பயன்கொண் மாறும்.

1864. ஆரமுது - இனிமை மிக்க அமுதை. அருந்திட - உண்ண. தார் - மாலை. நீர் என்றது அவுணரை. உரை - சொற்படி கேட்போம் என்று கூறிய மொழியை. நெறியோ - முறையோ. நாரி - பெண்.

1865. ஏக்கறவு - யாம். இது பெற்றிலேமே யென்னும் வருத்தம். சாவா மருந்தினை - அமிர்தத்தை. உண - உண்ணுவதற்கு. கரந்து அமுதை யுண்டவனைக் கதிரொடு திங்கள் நோக்க; கரந்து - வஞ்சகமாக. உண்டவன்: இராகு என்ற அவுணன். கதிர் - சூரியன். ஐயன் அரிந்திட; அரிந்திட - வெட்ட.

1866. அவுணனது சென்னி. துங்கம் - சிறப்பு. கோளாய் - கிரகங்களாய். கோள்களோடு - ஆதித்தன் முதலிய கிரகங்களொடு. கோள்களோடு சார்ந்திடும். ஈருவா - பௌர்ணமி, அமாவாசை. ஈருவாவில் தீண்டும்.

1867. விண்ணவர் - தேவர். இழந்து - அமுதை இழந்து. அவுணர்

அண்ணலை நினையா தாசை
யடைந்தவ ரரிய போகம்
நண்ணினு மடைந்தி டாது
நலிதலு மியற்கை யன்றே. (53)

1868. முன்னவ னெடுத்து நின்ற
மோகினி யுருவ மாற்றி
மன்னுதன் னுருவம் பெற்று
வான்மிசைப் புள்ளிப் போனான்
பின்னரங் கவுணர் சீறப்
பேரமர் விளைத்தார் விண்ணோர்
அன்னது மொழிதுங் கேட்டி
பாசவென் றியம்ப லுற்றான். (54)

4.தேவாசுரர் போர்செய்த அத்தியாயம்

(கலிநிலைத்துறை)

1869. காதற் பெண்ணுரு நீங்கிமா லேகுதல் காணாச்
சூதிற் றீங்கிவர் செய்தன ரெனச்சுடு சினத்தால்
பேதுற் றங்குறை மாவலிப் பெயரினான் முதலோர்
கோதற் றேதிகழ் விண்ணவர்க் கோறுமென் றெழுந்தார். (1)

வெகுண்டு நொந்தார். கண்ணனை - திருமாலை. கொள்மாறும் - அடையும் விதமும். அண்ணலை - திருமாலை. ஆசையை அடைந்தவர். நலிதலும் - துன்புறுதலும். கொண்மாறும் நலிதலும் இயற்கை.

1868. முன்னவன் - திருமால். முன்னவன் மாற்றிப் புள்ளில் போனான்; புள் - கருடன். அவுணர் சீற விண்ணோர் அமர் விளைத்தார். மொழிதலும் - கூறுவோம்; என்றவன் சுகன். அரச, மொழிதலும், கேட்டி; கேட்டி - கேட்பாயாக.

1869. மால், பெண்ணினது உருவை நீங்கி. காணா - கண்டு. இவர் சூதில் தீங்கு செய்தனர்; இவர் - தேவர்; சூதில் - வஞ்சகத்தினால். பேது - மயக்கம். கோது - குற்றம். முதலோர் 'விண்ணவரைக் கோறும்' என்று எழுந்தார்; கோறும் - கொல்வோம்.

1870. ஆனை மேற்சில ராளிகள் மேற்சில ரடலார்
சேன மேற்சிலர் செழுங்கலை மேற்சிலர் தகரோ
டேன மேற்சிலர் திமிங்கில மெனுமெறுழ் வலிசேர்
மீன மேற்சிலர் வேசரி மேற்சிலர் மேவி. (2)

1871. தேரின் மேற்சிலர் செம்பரி மேற்சிலர் கழுகோ
டோரி மேற்சில ரோதிம மேற்சில ருடற்றும்
மூரி மேற்சில ரெண்கின்மா மேற்சிலர் முனிவால்
போரின்' மேற்செலும் பொருபுவி மேற்சிலர் பொலிந்து. (3)

1872. நெரிந்த தண்டமென் றுரைசெய நெடும்பணை துவைப்ப
விரிந்த பொன்னின்மா னத்தின்மேன் மாவலி மேவிப்
பரந்து சுற்றிய பண்ணவ ரொடும்பகட் டெழுந்த
புரந்த ரன்முனஞ் செருக்கினன் வெகுண்டமர் பொருதான். (4)

1873. தாரு காசுரன் சண்முக னொடும்பொரச் சமைந்தான்
கோர மார்கவி குபோனோ டமர்செயக் குறித்தான்
காரின் மேலிடி போல்வரு காலகே யரும்போர்
வீர மேதரு வசுக்களும் வெஞ்சமர் விளைத்தார். (5)

1874. வாண னேமுத னூற்றுவர் மாவலி மைந்தர்
சேனு லாவிய செஞ்சுட ரொடுசமர் செய்தார்
ஏனு லாந்துவட் டாவொடு சம்பா னெதிர்த்தான்
காண மாமதி முன்னிரா குவுநனி கடுத்தான். (6)

1870. ஆடல் - வலிமை. சேனம் - பருந்து. கலை - மான். தகர் - ஆடு. ஏனம் - பன்றி. எறுழ்வலி - மிக்கவலி. வேசரி - கோவேறு கழுதை.

1871. பரி - குதிரை. ஓரி - நரி. ஓதிமம் - அன்னம். மூரி - காளை. எண்கு - கரடி. பொலிந்து செலும்.

1872. அண்டம் நெரிந்து என.பணை - முரசு. துவைப்ப - ஒலிக்க. மானத்தின் - விமானத்தில். பண்ணவரொடும் - தேவரொடும். பகடு - வெள்ளானை. புரந்தரன் -இந்திரன். மாவலி மேவிப் பொருதான்.

1873. பொர - போர் செய்ய. கோரம் - கொடுமை. கவி - சுக்கிரன். கார் - மேகம்.

1874. சுடரொடு - சூரியனொடு. ஏண் - வலி துவட்டா - சூரியர் பன்னிருவருள் ஒருவன். மதி - சந்திரன்.

1875. கால நேமிவந் துபேந்திர னோடுபோர் கலந்தான்
ஆல மாமென வடன்மகி டாசுர னார்த்துச்
சீல மேதரு மழற்கிறை யொடுசெருச் செய்தான்
வேல்வி டாவிரோ சனன்விதா தாவொடு வெகுண்டான். (7)

1876. மாலி மாலிய வான்முதன் மற்றுள பேரும்
கால வேள்கொடு கடவுள ரொடுபோர்க் கலந்தார்
வேலை வேலையோ டேற்றது போலவிண் ணவரும்
சூல வேற்படை யவுணரும் பொருதனர் தொடர்ந்தே. (8)

1877. தலையற் றார்சிலர் தாள்களற் றார்சிலர் தருக்கும்
சிலையற் றார்சிலர் செங்கையற் றார்சிலர் செழும்பொன்
கலையற் றாரரை யற்றனர் சிலர்சிலர் கலங்கி
நிலையற் றாரிரிந் தங்ஙன நிகழ்ந்ததார் நினைப்பார். (9)

1878. சீர்திக் கோடிடா திருத்திய வவுணரிற் சிலரெண்
பேர்திக் கோடிடச் சிலர்பெருஞ் சமரினிற் குருதி
நீர்திக் கோடிடத் தம்முட னிணங்கழு காதி
ஊர்திக் கீந்தன ரவர்கொடை யெவர்புகழ் துரைப்பார்.(10)

1879. ஏரி னால்விளங் கவருட லினிதுமுற் பொறுத்துப்
போரி னால்விழ வவ்வுடல் வாய்வழிப் புகுத்தி
வீர மோடுமுள் வைத்தன பொறுத்துமிக் கோடுமு
ஓரி யேமுத லூர்தியி னுணர்வையா ருரைப்பார். (11)

1875. காலநேமி: ஓரசுரன். அழற்கிறை - அக்கினி. விதாதா - பிரமன்

1876. கடவுளரொடு - தேவரொடு. பொர - போரிட. வேலை - கடல். தொடர்ந்து பொருதனர்.

1877. அற்றார் - நீங்கினர். சிலை - வில். கலை - உடை. அரை - இடை.

1878. சீர் - புகழ். திக்கு - திசைகளில். எண்பேர் திக்கு - எட்டுப் பெரிய திசைகளில். உடல் நிணம் - உடலிலுள்ள மாமிசத்தை. கழுகாதி ஊர்திக்கு - கழுகு முதலிய வாகனங்களுக்கு. சிலர் ஈந்தனர்; வஞ்சப் புகழ்ச்சியணி.

1879. ஏர் - அழகு. அவர் - உடல் அவுணரது உடலை. முன் - போரிடுவதற்குமுன். பொறுத்து - சுமந்து. வாய்வழி - தம் வாயின் வழியாக. உள்ளே வைத்தனவாய்ப் பொறுத்து; பொறுத்து - சுமந்து. மிக்க - மிகுதியாக. ஓரி - நரிகள். ஊர்தி - வாகனங்களின். உணர்வை - அறிவை. நரிகள் தம்மேல் எறிந்தவரது உடலையே தின்றதை இவ்விதம் கூறினர்.

1880. வரைவி றேர்கரி வாசிபுண் ணீர்ச்சுழல் வருதல்
வரைகள் பற்பல வயின்றொறும் வயின்றொறும் வகுத்துக்
கரையி லாதெழுங் குருதிவெங் கடலையுங் கடையக்
கரையு மாங்குப்பற் பலகரி பரிவால் காட்டும். (12)

1881. அமுது கண்ணினீ ராக்கைமுன் னொழுகிடத் திசையின்
அழுவ மெங்கணு மவுணர்க ளோடுத லடைந்து
கழுகுங் காகமுங் கூட்டுணுங் களத்திடை வீரம்
கழுவி நீக்கியங் கேகுறுங் காட்சியே காட்டும். (13)

1882. கரையி றானவர் மடிதலிற் கரையழிந் தெழுந்த
குருதி மாக்கட லாயது பாற்கடல் குறிக்கின்
உருவப் பேர்வரை யாற்கடை பொழுதக டுடையப்
பெருகிச் செய்யபுண் ணீரெழு பெற்றிபோன் றதுவே. (14)

1883. அரிய போரிடை யசுரர்த மாருயிர் விடுத்தால்
மருவில் வானவ ரெனும்பகைப் பெயர்வரும் வலிசேர்ந்
தொருவி டாததம் பெயரொழிந் திடுமென வுணர்ந்தோ
விரியு நாற்றிசைக் கால்விசைத் தோடினர் விரைந்தே. (15)

1884. ஆற்றல் சேரிமை யோரொடு வெகுண்டன ரடைந்தாங்
கேற்ற போரிடை யவுணர்க ளிகலழிந் திரிதல்

1880. வரைவு - எல்லை. கரி - யானை. வாசி - குதிரை. நீர்ச்சுழலில் வருதல். வரைகள் - மலைகள். குருதியாகிய வெங்கடலையும். வருதல் காட்டும்.

1881. அழுவம் - பரப்பில். களத்திடை - போர்க்களத்தில். அவுணர்கள் ஓடுதல், ஏகுறும் காட்சியே காட்டும்; அவுணர் தம் வீரத்தைக் கண்ணீரால் கழுவினர் என்றபடி.

1882. கரையில் - எல்லையில்லாத. தானவர் - அசுரர். மடிதலின் - இறத்தலின். குறிக்கின் பாற்கடலைப் பேர்வரையால் கடைபொழுது; குறிக்கின் - ஆராய்ந்தால். அகடு - வயிறு. செய்ய - சிவந்த. கடலாயது போன்றது.

1883. உயிரை விடுத்தால். மரு - குற்றம். வானவர் - தேவர். பகை - பகைவரது. ஒருவிடா - நீங்காத. தம்பெயர் - அவுணரென்ற தமது பெயர். அசுரர் 'விடுத்தால் பகைப்பெயர் வரும், ஒழிந்திடும்' என உணர்ந்தோ விரைந்து ஓடினர். போர்க்களத்தில் வீரத்தோடு இறப்பவர் தேவராவர் என்பது நூற்கொள்கையாதலால் இங்ஙனம் கூறினார்.

1884. இகல் - போர்த்திறம். இரிதலைக் காற்றொடு கதிர் ஓடியும் கண்டில; இரிதலை - ஓடுதலை. கதிர் - சூரியன். தோற்றல் - தோல்வியை. அம

காற்றொ டொண்கதி ரோடியுங் கண்டில வதனால்
தோற்றன் மேயின ரமாரிற் சிலரெனச் சொலலாம். (16)

1885. கூற்று வன்முனங் குறுகியுங் கொலையுணார் சிலபேர்
காற்றி னுக்கிறை தொடரவுங் கைப்படார் சிலபேர்
நாற்றி சைக்கணு மோடின ரன்றவர் நடந்த
ஊற்ற மும்முறு விசையுமூங் கெவரெடுத் துரைப்பார்.(17)

1886. அன்ன காலையி லவுணர்போ ரழிந்தமை யறியாத்
துன்னு மாவலி பற்பல கணைதுரந் தார்த்தான்
மின்னு லாங்கணை வேறுவே றிந்திரன் விடுத்துக்
கொன்னு லாங்கணை யறுத்தலு மவுணனுங் கொதித்தான்.(18)

1887. அலைக ளோடெழு வாரிகா லாலலைந் திடவும்
தலைக ணீளெரி பரந்தென விரித்திரைத் தவற்றின்
கலைக ளொன்றற வாக்கியர் வளைப்பவுங் கரிசேர்
மலைகள் வீழ்வு மறைந்திருந் தியற்றினன் மாயை. (19)

1888. தேவ ரன்னவன் செய்தவம் மாயையிற் றேம்பிப்
பூவில் வைகிய பூவைசேர் புனிதனை நினைப்பத்
தாவி லாதபுட் பாகனு மவ்வழிச் சார்ந்தான்
காவி வண்ணனைக் கண்டவர் மாயைகாண் கிலரால்.(20)

ரிற் சிலர் தோற்றலை மேயினர். காற்றும் கதிரும் தேவரானமையின் இவ்விதம் கூறினார்.

1885. சிலபேர் கொலையுணார்; கொலையுணார் - கொல்லப்படமாட்டார். ஊற்றம் - வலிமை. உறுவிசை - மிக்க வேகம்.

1886. அறியா - அறிந்து. துரந்து - செலுத்தி. கொன் - அச்சம். அவுணனும் - மாவலியும்.

1887. வாரி - கடல்கள். காலால் - காற்றால்; பாதத்தால் என்றுமாம். தலைகள் - கூந்தல்; ஆகுபெயர். அரக்கியர் கூந்தலுக்கு எரி உவமை; எரி - நெருப்பு. இரைத்து - ஆரவாரித்து. கலைகள் - ஆடைகள். அற - நீங்கும்படியாக. கரி - யானை. அலைத்திடவும், அவற்றில் வளைப்பவும், வீழவும் மாயை இயற்றினான்.

1888. அன்னவன் - அம்மாவலி. தேம்பி - வருந்தி. பூவை சேர்புனிதன்: திருமால்; பூவை - திருமகள். தர - குற்றம். புட்பாகன் - திருமால்; புள் - கருடன். தேவர் நினைப்பப் புட்பாகன் சார்ந்தான். காவி வண்ணனை - திருமாலை. கண்டவர் - தேவர்.

1889. மாயன் சேவடி மனக்கொளிற் பிறப்பிற் பென்னும்
மாயை போய்விடு மாயனைக் கண்டவர்க் கவன்றன்
மாயை யால்வரு மாவலி முதலியோர் வளர்த்த
மாயை யோவுதற் கையமுண் டோவகுத் துரைப்பின். (21)

1890. கொடிய வேலினைக் காலநே மிப்பெயர் கொண்டோன்
நெடிய னூர்திமேல் விட்டன னெடியனும் பிடித்துக்
கடிய வேலினை யன்னவன் களத்திடை விழுந்து
மடிய வேவினன் மற்றவன் றென்புல மணந்தான். (22)

1891. கால நேமியங் கிறத்தலும் கண்ணன்முன் கனன்று
மாலி மாலிய வானொடு சுமாலிவந் துடன்று
கோல வாழியெம் மான்விடக் கொடியமா லியவான்
சூல மோடிரிந் தானுயி ரிருவருந் தொலைந்தார். (23)

1892. வெய்ய மாயைசெய் கூற்றின னீயென வெகுளாக்
கையின் வச்சிரங் கொண்டவன் வெய்துரை கழற
எய்யும் வெங்கணை மாவலி யிவ்வுரை யிரும்போர்
செய்ய வல்லுநர் தெரிப்பரோ சீச்சியென் றுரைத்தான்.(24)

1893. கதிர்கொள் வேலினான் கழறுசொல் கேட்டலுங் கடுகித்
துதியின் மேம்படு வச்சிரந் துனைவினிற் றூண்டி
எதிரின் மேவுமம் மாவலிக் கியைந்தமா வலிநேர்ந்
துதவி யாய்வரு சம்பனை யும்பர்கோ னொறுத்தான். (25)

1889. மனக்கொளின் - மனத்திற் கொண்டால். அவன் தன் - அத்திருமாலினது. ஓவுதற்கு - நீங்குவதற்கு. திருமாலின் பாதங்களை நினைப்பவர்க்கே மாயை நீங்கும்போது அவனை நேரிற்கண்ட தேவர்க்கு அது நீங்கியது வியப்பன்று என்றபடி.

1890. நெடியன் - திருமாலினது. ஊர்தி - வாகனமாகிய - கருடன். கடிய - கூர்மையான. அன்னவன் - காலநேமி. அவன் - காலநேமி.

1891. கோல ஆழி - அழகிய சக்கரத்தை. எம்மான் - திருமால். இரிந்தான் - ஓடினான். இருவரும்: மாலியும் சுமாலியும்.

1892. நீ என்றது மாவலியை நோக்கி. வெகுளா - வெகுண்டு. கொண்டவன்: இந்திரன். கழற - சொல்ல. வெங்கணையையுடைய மாவலி. இரும்போர் - கொடிய போரை. தெரிப்பரோ - சொல்வரோ. மாவலி உரைத்தான்.

1893. கதிர் - ஒளி. துனைவினில் - விரைவில். மாவலி - மிக்க வலிமையை. உம்பர்கோன், வச்சிரத்தைத் தூண்டிச் சம்பனை ஒறுத்தான்; கோன் - இந்திரன்; ஒறுத்தான் - கொன்றான்.

1894. சம்பன்ட மாய்தலு மாவலி மடங்கலிற் சார்ந்து
வெம்பு நெஞ்சமோ டொருகதை யெடுத்தனன் வெகுளா
உம்பர் நாயக னூரும்வெங் களிற்றுட லடித்தான்
கம்ப முற்றது நிலனிடை வீழ்ந்தது கலங்கி. (26)

1895. களிறு வீழ்தலு மாயிரம் பரியொடுங் கவின
ஒளிசெய் தேரவண் மாதவி யுதவுற வூர்ந்த
நளிகொ ளிந்திரற் காண்டலு நமுசியே முதலோர்
பிளிறு மையென வார்த்தனர் பெருங்கதை சொரிந்தார். (27)

1896. பாகன் மாதலி துண்ணெனப் பதைப்புற வடித்தான்
மேக வாம்பரி மெலிவுற வெங்கணை விடுத்தான்
சோக வார்கணைப் பஞ்சாம் படைகொடு துணித்துப்
போகி காரிருள் போகிய கதிரினைப் போன்றான். (28)

1897. வலனும் பாகனு மடிதர வச்சிரத் தறுத்தாங்
கிலகு மப்படை நமுசிமே லேவின னேவக்
குலவு கந்தரந் தடியுமோர் வலிகொளா தாகப்
புலவர் நாதனும் புதுமையீ தெனப்புலம் புற்றான். (29)

1994. மடங்கலின் - சிங்கத்தைப்போல. கதையை எடுத்தனனாய். வெகுளா - வெகுண்டு. உம்பர்நாயகன் - இந்திரன். களிற்றின் உடலில்; களிறு - ஐராவதம். அது கம்பமுற்றுக் கலங்கி நிலனிடை வீழ்ந்தது; அது - ஐராவதம்; கம்பம் - நடுக்கம்.

1895. களிறு - ஐராவதம். பரியொடும் - குதிரைகளோடும். கவின - அழகுடன் விளங்க. அவண் மாதலி தேரை உதவுற; அவண் - அங்கே. மாதலி - இந்திரனுடைய தேர்ப்பாகன். இந்திரனைக் காண்டலும். மைஎன - மேகம் என்னும்படி. நமுசி முதலோர் கதைகளைச் சொரிந்தார்.

1896. மேகத்தில் வாவும் பரி; வாவும் - தாவும். கணைப்பஞ்சரம் - அம்பறாத்தூணியை. படைகொடு - ஆயுதத்தைக்கொண்டு. போகி - இந்திரன். கதிரினை - சூரியனை. போன்றவன் இந்திரன்.

1897. வலனும் - வலன் என்னும் அவுணனும். வச்சிரத்தால் அறுத்து. அப்படை - வச்சிராயுதத்தை. ஏவினவன் இந்திரன். கந்தரம் - கழுத்தை. தடியும் - வெட்டும். வன்கொளாதாக - வன்மையற்றதாக. புலவர் நாதன் - இந்திரன்; புலவர் - தேவர். புலம்புற்றான் - வருந்தினான்.

1898. கானத் தோங்கிய வரைச்சிறை கடியுமிப் படைதான்
ஈனத் தாயதென் காரண மென்னுமிந் திரன்முன்
வானத் தோருரை நமுசியை மாய்ப்பது வனத்தார்
பேனத் தாமெனப் பேனம்விட் டவனுடல் பிளந்தான்.(30)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

1899. கடுந்திறற் கால நேமி
காலவே னமுசி யாதி
மடங்கல்வெஞ் சீற்றத் துப்பின்
மன்னவர் மடித லோடும்
தடங்கட லுலகம் பூத்த
தாமரைத் தவிசின் மேலான்
விடுந்தயாழ் முனிவ னெய்தி
வெஞ்சமம் விலக்கி னானால். (31)

1900. வெள்ளிதன் விஞ்சை யாலவ்
வெஞ்சமர்க் களத்தின் வீந்த
அள்ளிலை யலங்க லொள்வே
லவுணரு மாவி பெற்றார்
புள்ளா சுயர்த்த பெம்மான்
பூங்கழ றொழுது விண்ணோர்
கள்ளவிழ் தருவி னீழல்
கதுவினர் களிமிக் காரால். (32)

1989. வரையினது சிறையை; வரை - மலை. சிறை - சிறகு. இப்படை - இந்த வச்சிராயுதம். ஈனத்தாயது - குறைவுடையதாயிற்று. என்னும் - என்று கூறும். வானத்து - ஆகாயத்தில். ஓர் உரை - ஒரு வார்த்தை. வனத்து - நீரில். பேனத்து - நுரையால். இந்திரன் முன் 'ஓர் உரை, பேனத்து ஆம்' என. பேனத்தை விட்டு. அவன் - நமுசியினது.* பிளந்தவன் - இந்திரன்.

1899. திறல் - வலிமை. மடங்கல் - ஊழித்தீப்போன்ற; சிங்கமெனலுமாம். துப்பின் - வலிமையையுடைய. கடல்சூழ்ந்த உலகத்தைப் பூத்த; பூத்த - படைத்த. மேலான் - பிரமன். விடுந்த - விடுத்த; மெலித்தல் விகாரம். முனிவன்: நாரதன். சமம் - போரை.

1900. வெள்ளிதன் - சுக்கிரனது. விஞ்சையால் - மந்திரத்தால். வீந்த - இறந்த. அலங்கல் - மாலையையணிந்த. அவுணர்: காலநேமி, நமுசி முதலியோர். ஆவி - உயிரை. புள்ளரசு - கருடனை. பெம்மான் - திருமாலினது. கழலைத் தொழுது. கள் - தேன். தருவின் - கற்பகத் தருவினது.

1901. தேவர்க ளமுது பெற்றுத்
தெறுசின நிருதர் தம்மை
ஆவலி னமரிற் செற்ற
தறைந்தன மனைத்தும் வல்லோன்
பாவையாம் படிவ நக்கன்
பரிவொடு பார்த்த காதை
கழறினன் முனிவன் மாதோ. (33)

5. மோகினியுருக்காட்டிய அத்தியாயம்

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

1902. மொய்கடந் தொளிறும் வாட்கை
முரண்வலி யவுணர் மாழ்கப்
பெய்கடல் கடைந்த நம்பி
பெண்ணுரு வெடுத்தல் காண்பான்
மைகனிந் தொழுகு கண்டன்
மருங்குறை மங்கை யோடு
நெய்கனிந் தொழுகும் வெவ்வாய்
நேமியா னிருக்கை சேர்ந்தான். (1)

1903. மாய்வில்வை குந்த மேவி
மதியணி சடையோ னெந்தாய்
தூயவ ரொன்றே யென்னத்
தொழுமவ ரிரண்டே யென்ன

1901. வல்லோன் - திருமாலினது. பாவையாம் படிவத்தை; பாவை - மோகினி. நக்கன் - உருத்திரன். காவல என்றது பரிட்சித்தை நோக்கிய விளி. முனிவன்: சுகன்.

1902. மொய் - போர். மாழ்க - மயங்க. நம்பி - திருமால். எடுத்தலைக் காண்பான்; காண்பான் - காணும்பொருட்டு. மைகனிந்து - கருமை மிக்கு. கண்டன்: உருத்திரன். மங்கையொடு - பார்வதியொடு. நேமியான் - திருமாலது.

1903. மாய்வு இல் - அழிவில்லாத. சடையோன் - உருத்திரன். எந்தாள் என்றது திருமாலை நோக்கிய விளி. தூயவர் - பிரம்ம ஞானியர்.

ஆயினை யுலக மாதி
யமர்ந்தனை யணுகிப் போகம்
நீயலா திதுவென் றென்ன
நினைக்கினொன் றில்லை யென்றான். (2)

1904. விண்ணவர் பரவை வேலை
விளைந்ததெள் ளமுத மெல்லாம்
உண்ணவா ளவுணர் காம
முழந்தன ருயங்கத் தாங்கும்
பெண்ணுருக் காண வேண்டிப்
பெரிதுளம் பெட்ட தின்னே
கண்ணவென் றுரைத்தான் வெய்ய
கனலுமிழ் கணிச்சி யானே. (3)

1905. குன்றவிற் குழைத்த நக்கன்
கூறிய மாற்றங் கேளா
நன்றெனப் பவளச் செவ்வாய்
நகைநிலாத் தவழ நக்குத்
துன்னிறர் விழைந்த நல்குந்
தொல்புரு டோத்த மன்றான்
மன்றலங் கடுக்கை யான்கண்
மறைந்தன னாங்கண் மன்னோ. (4)

1906. விழுந்தொரு கோடி வண்டு
மிதிப்பவாய் நெகிழ்ந்து பைந்தேன்
வழிந்தபூந் கடுக்கை மார்பன்
வாள்விழி பரப்பி நோக்க

ஒன்றே - ஒரு பொருளே. என்ன - என்று கூற. உலகத்துக்கு ஆதியாய் அமர்தனை. சடையோன் என்றான்.

1904. பரவை வேலை - பரந்த பாற்கடலில். விண்ணவர். விண்ணவர் உண்ண, அவுணர் காமம் உழந்தனராய் உயங்க; உயங்க - வருந்த. உளம் - உள்ளம். பெட்டது - விரும்பியது. கணிச்சியான், 'கண்ண, உளம் பெட்டது' என்று உரைத்தான்; கணிச்சியான்: உருத்திரன். கண்ண என்றது திருமாலை.

1905. குன்றை வில்லாகக் குழைத்த நக்கன்: உருத்திரன்; குன்று - மேருமலை. மாற்றம் - வார்த்தையை. கேளா - கேட்டு. துன்றினர் - தன்னை அடைந்தவர். விழைந்த - விரும்பியவற்றை. புருடோத்தமன் - திருமால். கடுக்கையான் - உருத்திரனது. கண் - கண்ணினின்றும்.

1906. கடுக்கை மார்பன்: உருத்திரன்; கடுக்கை - கொன்றை மாலை. ஆழி - சக்கரம். ஆழிக்குப் பருதி உவமை. மாயோன் - திருமால். செவ்வி -

எழுஞ்சுடர்ப் பருதி யென்ன
விலங்குகூ ராழி மாயோன்
பிழிந்துகொள் வனைய செவ்விப்
பெண்ணுரு வெடுத்து நின்றான். (5)

(கலிநிலைத்துறை)

1907. அன்ன பெண்கொடி யள்ளிலைப் பூண்சுமந் தொசியும்
பொன்னங் கொம்பெனப் பொழிமழைக் கரும்புயல் கிழித்து
மின்னு மின்னென விரிசிறைச் சுரும்பின மிழற்றி
மன்னு காவிலோர் மாதவிப் பந்தரிற் றோன்றி. (6)

1908. அயிலும் வாளுமிட் டளாயின வனையகட் பேதை
குயிலும் பூவையுங் குழைவுறக் குதலையந் தீஞ்சொல்
பயிலு மஞ்சிறைப் பச்சிளங் கிள்ளிபின் படா
இயலு மென்மெல விளமயி லியற்குடைந் திரிய. (7)

1909. மழையை நோக்கிய மடமயிற் சாயலாண் மதர்த்த
விழியை நோக்குமவ் விடத்தினை நோக்கும்வெங் காமம்
தழையு நோக்கினை நோக்குமுட் டளருந்தன் செங்கை
உழையை நோக்கும்பிஞ் ஞகன்மயல் யாதென வுரைக்கேன்.(8)

1910. பெய்யுந் தண்கதிர் வளையெனப் பெருங்கடல் கடைந்து
மையில் வானவர்க் கேந்துதெள் ளமுதென மலரும்
செய்ய தாமரை மலருறை யனமெனத் திகழப்
பைய நித்திலப் பந்துகைப் பரித்துநின் றாடும். (9)

அழகையுடைய. மாயோன், மார்பன் நோக்கப் பெண்ணுரு எடுத்து நின்றான்.

1907. பெண்கொடி - மோகினி. பூண் - ஆபரணங்களை. ஓசியும் - துவளும். புயல் - மேகத்தை. மின்னுகின்ற மின் எனும்படி. காவில் - சோலையில். பெண்கொடி, கொம்பென மின்னெனத் தோன்றி.

1908. அயில் - வேல். அளாயின அனைய - கலந்தன போன்ற; இது கண்ணுக்கு அடை. பேதை - மோகினி. கிள்ளை - கிளி. இயற்கு - சாயலுக்கு. உடைந்து - தோற்று. இரிய - ஓட. பேதை, படா இரிய மெனமெல இயலும்; மென்மெல - மெல்ல மெல்ல; இயலும் - சஞ்சரிக்கும்.

1909. மழையை - நீருண்ட மேகத்தை. சாயலாள் - மோகினியினது. நோக்கினை - பார்வையை. உள் தளரும். கையிலுள்ள உழையை நோக்கும்; உழை - மான். பிஞ்ஞகன் - உருத்திரனது. உரைக்கேன் என்றவன் சுகன்.

1910. வளை - சங்கு. மையில் - குற்றமில்லாத. செய்ய - சிவந்த. அனம் - அன்னம். நித்திப்பந்து - முத்துக்களாலாகிய பந்தை. கையில் பரித்து; பரித்து - தாங்கி. பந்துக்கு வளையும், அமுதமும், அன்னமும் உவமை.

1911. முகிழ்ந்த வெம்முலை முத்தாணி திருத்தியும் வீழ்ந்து
மகிழ்ந்து வண்டொடு மாலைதாழ் கருங்குழல் வனைந்தும்
நெகிழ்ந்த பூந்துகி றிருத்தியு நிலவுபொற் கொடியின்
திகழ்ந்து பந்தெறிந் தாடுமச் செவ்வியார் தெரிப்பார். (10)

1912. எறிந்த பந்துசேய்த் தகறலு மெறிந்தவே லென்ன
மறிந்த சேலென மானென மதர்விழி பிறழ
நெறிந்த பூங்குழ னிலவுதூந் தூச்சிறை யனம்போல்
செறிந்த சில்லரி மணிச்சிலம் பொலியெழச் செல்லும்.(11)

1913. அழல்கட் பாய்புலி யதளுடைய நெகிழ்தர வலர்தீ
விழுது விட்டென மிளிர்ச்சடை வெந்நிடை விரிய
ஒழுகு தீங்கதிர் வெண்மதி யின்னமு துறைப்பச்
சுழலும் வண்டிமிர் கொன்றையந் தொங்கலான் றொடரும்.(12)

1914. நுணுகு நுண்ணிடை யலம்வர நூபுரஞ் சிலம்பத்
துணிநி லாக்கதிர் தூற்றுபொன் மேகலை யிரங்கப்
பணிய ணிந்தவன் கையகப் படும்படு மென்ன
அணுகும் பைப்யைய வைகுமெல் லடிசிவப் பூர. (13)

1915. அன்ன காலையி லசைநடைக் காறவழ்ந் திசைப்ப
மின்னு தண்கதிர் நித்தில மணிவிளிம் படுத்த
பொன்னஞ் சேலமும் புனைமணிக் காஞ்சியு நெகிழ
மன்னு நாணொடு மன்றலஞ் சினைதொறு மறையும்.(14)

1911. முலையில் அணிந்த முத்தணியைத் திருத்தியும். வனைந்தும் - சூட்டிக்கொண்டும். துகில் - ஆடையை. பொற்கொடியின் பந்து ஆடும் செவ்வியை யார் தெரிப்பார்; பொற்கொடியின் - பொன்னாலாகிய கொடியைப் போல. செவ்வி - அழகை. தெரிப்பார் - சொல்லுவார்; என்றான் சுகன்.

1912. சேய்த்து - மிக்க தூரத்தில். அகறலும் - நீங்கலும். சேல் - ஒருவகை மீன். பூங்குழல் - மோகினி. பூங்குழல், பந்து அகறலும் விழி பிறழ அனம்போல் சிலம்பொலி எழச் செல்லும்.

1913. அழலுகின்ற கண்ணையுடைய பாயும் புலி. அதள் - தோல். வெந்நிடை - முதுகில். சடைக்குத் தீ உவமை. உறைப்ப - துளிப்ப. தொங்கலான், நெகிழ்தர, விரிய, உறைப்பத் தொடரும்; தொங்கலான் - உருத்திரன்.

1914. அலம்வா - சுழல. இரங்க - ஒலிக்க. பணி யணிந்தவன் - உருத்திரன்; பணி - பாம்பு. அணுகும் - நெருங்கும். சிவப்பூர வைகும்.

1915. அசைகின்ற நடையையுடைய கால்; கால் - காற்று; மந்தமாருதம் என்பர். நித்திலம் - முத்து. சேலம் - ஆடை. காஞ்சி - ஒருவகை மேகலை. மன்றல் - வாசனை. சினை - கிளை.

1916. பிறையும் வில்லுமொத் திலகிய திருநுதற் பேதை
அறையும் வண்டிமி ரணிமலர்த் தடஞ்சினை தோறும்
மறையு மாற்றரு மாதர்மீ தூரமுக் கண்ணன்
இறையு நாணிலன் பின்செலு மிருங்களி றேய்ப்ப. (15)

1917. நெறித்து நெய்கனி குழலுமை நகுவது நினையான்
பொறுத்த கங்கையாள் புன்னகை கோட்டலுங் கருதான்
அறற்க ருங்குழல் பற்றின னங்கையாற் றழுவ
எறிக்குஞ் சேயிழை மின்னெனக் கைப்படா திலகும். (16)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

1918. ஞானநல் விளக்க மென்ன
நவையறு நல்லோர் நெஞ்சின்
பானகு முளரி யூறு
பசுநறுந் தேற லென்ன
ஆனதொன் முதறாய் தந்தை
யாமவ னுருவீ தென்னான்
கானலைப் புனலென் றோடுங்
கலையென மயர்ந்து செல்வான். (17)

1919. பார்த்தனன் வேனில் வேந்தன்
பழம்பகை தீர மற்றாங்
கார்த்தனன் சிலைகால் கோட்டி
யயின்முகப் பகழி மாரி

1916. பேதை - மோகினி. மாற்றருமாதர் - போக்குதற்கு முடியாத காதல். முக்கண்ணன்: உருத்திரன். இறையும் -சிறிதளவும். நாணிலனாய்க் களிறு ஏய்ப்பப் பின் செலும்; ஏய்ப்ப - ஒப்ப.

1917. உமை - பார்வதி. கோட்டலும் - கொளுத்தலும். குழலைப் பற்றினாய். சேயிழை - மோகினி.

1918. பால்நகுமுளரி - பாலை இகழ்கின்ற வெண்டாமரை. தொன் முதலும், தாயும் தந்தையும் ஆம் அவண்; அவன் - திருமாலது. என்னான் - என்று கருதானாய். கலையென - மான்போல். மயர்ந்து - மயங்கி.

இச்செய்யுள் சில ஏட்டுப் பிரதிகளிற் காணப்படவில்லை.

1919. வேனில் வேந்தன் - மன்மதன். பழம்பகை - முன் தன்னை எரித்த பகை. சிலையின்காலைக் கோட்டி; கோட்டி - வளைத்து. அயில்முகப் பகழி- கூர்மையான நுனியையுடைய அம்பு. வேந்தன் பார்த்தனனாய், ஆர்த்

தூர்த்தன னிளவெண் டிங்கள்
சூடுசெஞ் சடையினானும்
போர்த்தனி யேறு போலப்
புலனழிந் தொழுகி நின்றான். (18)

1920. மின்புரிந் தனைய கற்றை
விரிசடை மகுடத் தண்ணல்
என்புரிந் தனமென் றுட்கி
யெருத்திறைஞ் சினனின் றானால்
பொன்புரி யார மார்பன்
புரிவளை யோடு வெய்ய
கொன்புரி யாழி யேந்திக்
கொண்டலிற் றிகழ நின்றான். (19)

1921. படுகழை வெடித்த முத்தம்
பளிக்கறை தழுவித் திங்கட்
புடைபரந் திமைக்கு மீனிற்
பொலிவுறு கயிலை சேர்ந்து
மடலவிழ் துளவப் பெம்மான்
மாயையார் கடப்ப ரென்னாக்
கடல்விட நுகர்ந்தோன் வெற்புக்
காரிகைக் குரைசெய் தானால். (20)

1922. குடுமிவான் றோய நின்ற
கொழுஞ்சுடர் வெள்ளிக் குன்றம்
நடைநவின் றென்னத் தோன்று
நரைவிடப் பாகனென்றும்

தனனாய்ப் பகழிமாரி தூர்த்தனன். சடையினான் - உருத்திரன். புலன் - இந்திரியம்.

1920. மின் புரிந்தனைய - மின்னை முறுக்கினாற்போன்ற. அண்ணல் - உருத்திரன். என் புரிந்தனம் - என்ன செய்தோம். உட்கி - அஞ்சி. எருத்திறைஞ்சினன் - வணங்கி; எருத்து - கழுத்து. மார்பன் - திருமால். வளையோடு - சங்கோடு. கொன் - அச்சத்தை, கொண்டலின் - மேகத்தைப் போல.

1921. கழை - மூங்கில். கழைமுத்தத்திற்கு மீன்களும் பளிக்கறைக்குச் சந்திரனும் உவமைகள்; மீன் - நட்சத்திரம். பெம்மான் - திருமாலினது. விடம் - விடத்தை. நுகர்ந்தோன் - உருத்திரன். வெற்புக்காரிகைக்கு - பார்வதிக்கு; வெற்பு - இமயமலை. ஆல்: ஆசை.

1922. குடுமி - சிகரம். வெள்ளிக்குன்றம் - கைலாயம். நரைவிடை - வெள்ளெருது. எருதுக்குக் கைலாயம் உவமை. ''வெள்ளி மலையன்ன மால்

மடவால் பாகனென்று
மாமறை புகழ நின்றோன்
விடுபுலன் மண்ணில் வீழ்ந்து
வெறுக்கையாய் விளைந்த தன்றே. (21)

(கலிவிருத்தம்)

1923. கொன்றை சூடுங் குழகனு மிவ்வகை
ஒன்று காம முழந்தன னென்னின்யார்
வென்றி வேல்விழி யார்மயல் வெல்பவர்
என்று வேந்துக் கிருந்தவ னோதினான். (22)

6. வைவச்சுதனாதியரையுரைத்த அத்தியாயம்

(கலிவிருத்தம்)

1924. அற்றல் மில்புக ழாதி மனுமுதல்
உற்றவாறு மனுவை யுரைத்தனம்
மற்றை யெண்மனுப் பேரும் வழங்குவாம்
வெற்றி மன்னவ வென்ன விளம்புவான். (1)

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

1925. எழுநிலம் புகழே ழாமனு வென்பா
னிலங்கிய விவச்சுவா னீன்ற
தழைவுறு பெயர்வை வச்சுத னாகுஞ்
சாற்றுமிக் காலத்து மனுவாய்

விடையோன்'' (சிந். *128*) மடவால் பாகன் - பெண்ணைப் பாகத்தில் உடையோன்; மடவால் - பார்வதி. மறை வேதம். நின்றோன் - உருத்திரன். விட்ட புலன்; புலன் - இந்திரியம், வெறுக்கை - பொன்.

1923. குழகன் - உருத்திரன். ஒன்றிய காமத்தை; ஒன்றுதல் - பொருந்துதல். விழியர் - மகளிரது. மயல் - மயக்கத்தை. வேந்துக்கு - பரிட்சித்துக்கு. தவன் - சுகன்.

1924. அற்றம் - முடிவு. ஆதிமனு - சுவாயம்புவமனு. உற்ற ஆறு மனுவை. எண் மனு - எட்டு மனுக்களத. மன்னவ என்றது பரிட்சித்தை. விளம்புபவன் சுகன்.

1925. இக்காலத்து என்றது பரிட்சித்துக்குச் சுகன் கதை சொன்ன

மொழிதரு மன்னோ னிக்குவா குவையே
முதலிய பதின்மரை யுயிர்த்தான்
பொழிகதிர் வெற்வேற் புரந்தர வென்பான்
பொன்னிலம் புரந்திருக் கின்றான். (2)

1926. கலைபயில் சமதக் கினிகவு தமன்சீர்க்
காசிபன் கோசிகன் வசிட்டன்
பலர்புகழ் பரத்து வாசனென் றுரைக்கும்
பண்ணவ னத்திரி பகர்வோர்
இலகுமேழ் முனிவ ராயிருக்கின்றா
ரிறையன் வாமனனாகி
அலகறு புகழ்சேர் மாவலி பாற்போ
யவனிமூ வடியிரந் தனனால் (3)

1927 திரைப்புவி யேழு மொருதனித் திகிரி
செலப்புரி மணிமுடி யரச
அருத்திசெய் வைவைச் சுதமனு வென்பா
னரசுசெய் கின்றவிக் காலம்
உருத்திரர் வசுக்க ளததியென் றுரைப்பா
ளுயிர்த்தவா தித்திய ரொளிசெய்
மருத்துவ பரிப்போர்த் தேவரென் றுரைப்போர்
வானவ ராகிமன் னுவரால். (4)

1928. இசைத்திடும் விவச்சு வாவெனும் பெயரோ
னெழிறிகழ் சாயையை மணந்து
வசக்குழு வகற்ற வளித்தசா வன்னி
வழங்குமெட் டாமனு வாவான்
திசைத்தலம் புகழு மாவலி யென்பான்
செப்புமிந் திரனெனச் சேர்வான்
மிசைப்புகழ்ச் சுதபா தியரென வுறைவோர்
விண்ணவ ராகிவீற் றிருப்பார். (5)

காலத்தை, அன்னோன் - வைவச்சுதன், இக்குவாகு - இக்ஷ்வாகு, பதிமரை - பத்துப்புதல்வரை. பொன்னிலம் - தேவலோகத்தை.

1926. கலை-கல்வி. இறையவன் - திருமால். அலகு - அளவு. அவனி - பூமி. மூவடி - மூன்று அடிகள்.

1927. அரச என்றது பரிட்சித்தை நோக்கிய விளி. அருத்தி - ஆசை. உருத்திரர், வசுக்கள், ஆதித்தியர், மருத்துவர், பரிப்போர்த்தேவர் வானவராகி மன்னுவர்; பரிப்போர்த்தேவர் - அசுவினி தேவர்.

1928. சாவன்னி - சாவர்ணி; இவன் எட்டாம் மனு. சுதபாதியர்: சுதபர், விரஜர், அமிருதப் பிரபர் முதலியோர்.

1929. அரசவென் றாதை யாகிய வியாத
னச்சுவத் தாமனற் கிருபன்
உரைமழு விராமன் முதலின ருறைவா
ரோரெழு முனிவரா யந்நாள்
மருவிய திருமால் வானுல காள
மாவலிக் கரசியல் வழங்கித்
தரைமுத லுலக முவந்தினி தளிப்பான்
சாருவ பூமினென் றுதித்தே. (6)

1930. சாற்றுமொன் பானா மனுவெனச் சார்வான்
றக்கசா வன்னியஞ் ஞான்று
போற்றுமிந் திரனற் புதனெனப் புகல்வ...
புலவர்க்க் கராதிய ராவார்
சீற்றமி றுதிமான் முதலினர் முனிவர்
திகழ்பு தரைவயிற் றுதித்தங்
காற்றல்சே ரிடப னெனும்பெய ரினனா
யாழியான் பகைகடிந் தளிப்பான். (7)

1931. பெருகுசீர்ப் பத்தா மனுவெனும் பெயரோன்
பிரமசா வன்னியென் றுரைப்பான்
தரியலர் புகழுஞ் சம்புவென் பவன்றான்
சாற்றுமிந் திரனெனச் சார்வான்
மருவிபுத் திரனே முதலின ரமார்
வருசயன் மூர்த்தியே முதலோர்
அருமறை முனிவர் விடவச்சே னன்னா
யமலனிவ் வுலகினுக் கருள்வான். (8)

1920. அரச என்றது பரிட்சித்தை. என் என்றது சுகன். மழு இராமன் - பரசுராமன், முதலினர் அந்நாள் எழுமுனிவராய் உறைவார். திருமால் சாருவபூமன் என்று உதித்து அளிப்பான்.

1930. ஒப்பான் - ஒன்பதாம், தட்சசாவன்னி மனுவெனச் சார்வான். அற்புதன் இந்திரன். புலவர் கர்க்கராதியர் ஆவர்; புலவர் - தேவர். துதிமான் - த்யுதிமான். முனிவர் - சப்த ரிஷிகள். ஆழியான், அம்புதரை என்பவளது வயிற்றில் உதித்து இடபன் எனும் பெயரையுடையவனாய் அளிப்பான்; ஆழியான் - திருமால்.

1931. தரியலர் - பகைவர். விபுத்திரன் முதலியோர்; விபுத்தர் என்பர். சயன்மூர்த்தி: சடாமூர்த்தி என்பர். மறைமுனிவர் - சப்தரிஷிகள். அமலன் இடவச் சேனனாய் அருள்வான்; அமலன் - திருமால். இடவச்சேனன்: அமூர்த்தி யென்பர்.

1932. வயங்கிய பதினொன் றாமனு வாவான்
வளர்புகழ்த் தருமசா வன்னி
தயங்கிய விகங்கர் முதலின ரமார்
சாரரு ணாதியர் முனிவர்
பயன்றரு மமார்க் கிந்திர னாவான்
பகரும்வை திருதன்யா வருக்கும்
நயந்தரு தரும சேதுவா யுதித்து
நளினைநா யகனுல களிப்பான். (9)

1933. பகருருத் திரசா வன்னியென் றுரைப்பான்
பன்னிரண்டாமனு வாவான்
திகழ்தரு மிருது தாமனாம் பெயரான்
றேவர்கோ னரிகனே முதலோர்
அகமகி ழமர ராவரேழ் முனிவ
ரருந்தவ மூர்த்தியே முதலோர்
துகளறு திருமால் சுதாமனென் றுதித்துத்
தொல்லுல கருள்சுரந் தளிக்கும். (10)

1934. செப்பிய பதின்மூன் றாமனு வாவான்
றேவசா வன்னியா மாசன்
எப்புவி யோரும் புகழ்திவப் பதிதா
னிந்திர னாகும்விண் ணவராய்த்
துப்புறு சுகன்மன் முதலின ருறைவார்
சுதபனா தியர்முனி வரராம்
ஒப்பறு யோக விபுவென மாய
னுதித்துல களிக்குவன் மாதோ. (11)

1932. தருமசாவன்னி மனுஆவான். விகங்கர் அமரர். அருணாதியர் - அருணன் முதலியவர். முனிவர் - சப்தரிஷிகள். வைதிருதன் இந்திரனாவான். நளினை நாயகன் தரும சேதுவாய் உதித்து அளிப்பான்; நளினை நாயகன் - திருமால்; நளினை - திருமகள்.

1933. உருத்திரசாவன்னி மனுஆவான். இருதுதாமன் தேவர்கோன். அரிகன் - ஹரிகன். அருந்தவமூர்த்தியே முதலோர் ஏழ் முனிவர்; தவமூர்த்தி - தபோ மூர்த்தி.

1934. தேவசாவன்னியாம், அரசன் மனுஆவான். திவப்பதி - திவஸ்பதி என்போன். சுகன்மர் முதலினர் விண்ணவராய் உறைவார். சுதபனாதியர் முனிவரர் ஆம்; முனிவரர் - வழுமுனிவர். மாயன் யோகவிபு என உதித்து அளிக்குவன்; யோகேச்வரன் என்பர்.

1935. எண்ணுறு பதினான் காமனு வாவா
னிந்திர சாவன்னி யென்பான்
விண்ணவ ராவார் பவித்திரா தியர்தாம்
விளங்கிய சுசிபுரந் தானாம்
தண்ணறுந் தொடைசே ரக்கினி முதலோர்
சாற்றுமேழ் முனிவராய்ச் சார்வார்
பண்ணவர் பராவுந் துழாயணி பாமன்
பானுவா யுதித்துல களிப்பான். (12)

1936. ஆயிரஞ் சதுரு யுகத்தினின் மனுக்க
ளடைகுவர் முறைமுறை யடைந்து
மேயவீ ரேழு மனுக்களு மடங்கின்
விரிஞ்சனுக் கொருபக லிறத்தல்
நேயமார் பகலி னளவையா யவற்கு
நிசியும்வந் துற்றநீங் கியபின்
மாயனா ரருளான் மற்றைய நாளு
மறையவ னின்னணம் வகுக்கும். (13)

1937. தன்னுழை யுதித்த மாயையை மருவிச்
சாற்றிய பெயரொடு முருவம்
பன்னுபற் பலவாய் முக்குணத் தோடும்
பயின்றனன் போன்றிருந்தாலும்
துன்னிய விருள்சே ரலங்கல்வெவ் வரவாய்த்
தோன்றியோர் சுடருறத் தானே
மன்னுதல் போன்மா யவன்மனங் கடந்து
வயங்குவன் மதிக்கினென் றுரைத்தான். (14)

1935. சுசி என்பவன் புரந்தரன் ஆம்; புரந்தரன் - இந்திரன். பண்ணவர் - கந்தருவர். பராவும் - புகழும். பரமன் - திருமால். பிரஹத்பானு என்பர்.

1936. ஈரேழு மனுக்கள் - பதினான்கு மனுக்கள். விரிஞ்சனுக்கு - பிரமனுக்கு. இறத்தல் - கடத்தல். அவற்கு - பிரமனுக்கு. நிசியும் - இரவும். மாயனார் - திருமால். மறையவன் - பிரமன்.

1937. தன்னுழை - தன்னிடம். முக்குணம் - சத்வம், ரஜஸ், தமஸ் என்பன. இருளில் காணப்படும் அலங்கல்; அலங்கல்-மாலை. வெவ்வரவாய் - கொடிய பாம்பாய். சுடர் - ஒளி. மன்னுதல் போல் - மாலைத் தன்மையை யடைதலைப்போல். திருமாலுக்கு மாலையும், மாயைக்கு இருளும், முக்குணத்தோடு தோன்றுதலுக்கு அரவும், ஒளிக்கு ஞானமும் உவமைகள்.

மார்க்கண்டேயன் கதைப் பாடலில் பாற்கடல் கடைந்த குறிப்பு

அவர்கள் மயங்குவதைப் பாகனுமனதிரங்கி யஞ்ச லென்றார்
விண்ணு மண்ணு மோங்கி மிகுத்த விடந்தனிலே
மண்ணு விண்ணிறங்கி வானர்க்காக வந்து நின்றார்
வந்தவரை நோக்கி வணங்கு மிடமதனை

கந்தர் தந்தை கண்டுக் கடுகியது சீறில்
எங்குந் தூளார்க்கு மென்று யெவர்க்குந் தரிக்கரிது
பொங்கமுட னுண்ணவென்று புண்ணயனு மோரணுவாய்
பக்கம் பிசுங்காமல் பாங்காய்க் கரமேந்தி

அக்கை யணியு மரனாரு முண்டு விட்டார்
அந்த நிமாச மரனார் மயக்கமுற
கந்தமிகு பார்ப்தியாள் கண்டத்த மத்தி விட்டாள்
அன்னா ளிலேதான் அரனுக்குச் சோபமென

கன்ன லுமையுங் கருணைநெடு மால்வேதன்
கலைமகளும் லச்சிமியுல காச்சிதெய்வ மங்கையரும்
எல்லாருந் திரண்டு யேகமொரு பொருளை
சங்கரனாற் காத்திருந் தாரன்று சிவன்ராத்திரியாம்

கந்தமிகு கோபங் கருணையுட னீங்கியபின்
இச்சையுரன் சியலால் மீண்டுயமுற்றங் கடைந்தார்
பொங்குநிறை அமுந்தம் புனிதமாய் வந்ததுவே
தங்கு அமுற்தசுகந் தானவர்க ளின்ப முற்றார்

216 - 260

மார்க்கண்டேயன் கதைப் பாடல்
(ப.அ) டாக்டர் ஆ. தசரதன்
தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்
சென்னை - 1992

சித்தமகிழ் தேவர்சிறந்த ரிசியோர் பாலர்
மெத்தமகிழ் மூவுலகோர் மீறு மரிவேதன்
எல்லோர்களுந் திரண்டு யேகமாய்த் தான் கூடி
வல்லபுகழ் மந்திரிகிர மற்றாய்க் கடலிலிட்டு

சந்திரனு மேற்குவடு தாங்க யடியாமையைப் போல்
தந்திரஞ்சீர் மாலவனார் தாங்கக் கடலில் நின்று
வாசுகியின் பாம்பை வடமாய் வளமாக்கி
நேசமுடன் யாவர்களும் நீண்டகயத் தோர்பிறத்தில்

வாலியொரு பிறத்தில் வாருகடல் கடைந்தார்
கோலியவர் கடையக் கோவித் தரனாரும்
எந்தன்தனை நினையா தின்னாளி லேயிவர்கள்
அந்தயமுற்தங் கடைந்து யடுக்கு முன்னே

நஞ்சிலவர் மாண்டுவிட நஞ்சை விடுவோமெனவே
அஞ்செழுத்து யீசுபதனா ரப்போவிசம் விடுத்தார்
அன்னேரம் நஞ்சு அலைகடலில் கோடிகடல்
இன்னேரம் வந்தனென எங்குமது முழங்க

கொப்பிளித்துப் பொங்கிக் குமுறிய வர்களை
செப்பமிகு நஞ்சு சினந்து முறுகியதே
அந்த நிமிச மனைவோர்களும் பயந்து
சிந்தா கலங்கித் திகைத்துப் பரதவித்து

ஆத்யே யீசா யரனே பராபரனே
நீதியே சோதி நிறைந்த யருள் விளக்கே
யிந்த யிடரி லெவரும் பிழைக்கரிது
கந்தனுட தந்தையரே காத்திருளீர் தஞ்சமென்று
தேவரொடு மங்கையர்கள் சேர மயங்கியதால்

ஐவர் அம்மானையில் பாற்கடல் கடைந்த வரலாறு

இந்த வண்ணம் தம்பியரே இன்னமொரு கதைதான்
மாயவரு மிநதிரரும் வானோரும் வேதியரும்
நாரதர் முனிரிஷிகள் நால்வகையி லுள்ளோரும்
அந்நாளில் தேவர் அமிர்தங் கடையவென்று

பொன்னாரு மேருப் பொருப்பேதான் தூணாக
நாக மதுகயிறாய் நாட்டியதோர் தூண்தனக்கு
வாகனனயு மாமலையு மத்தாகத் தான் சேர்த்து
வானவர்க ளோர்புறமும் வாலி யொரு புறமும்

ஆனவர்கள் பாற்கடலில் அமிர்தங் கடையு நந்நாள்
மலைதானுங் கழன்றிடவே வாசுகியு மப்போது
நிலைதாங்க மாட்டாமல் நீள்விஷங்கள் தான் கழன்று
சீறி யுலகெங்குஞ் சென்றுபுறந் தப்பாமல்

அண்ட மட்டுக்கும் அகண்டமுதற் நான்பரந்து
விண்டலமு மூடுருவி விரிஞ்சனுட லோகமெல்லாம்
பொங்கி விஷம் பெருகிப் புகையெழுந்து கோபமுடன்
தங்கியே மூவுலகுந் தானுண்டு மீள்வதுபோல்

வார விஷந்தன்னை வானவருங் கண்டேகிப்
போற வழியெங்கும் போகவழி காணாமல்
கண்டுவிஷந் தன்னைக் கலங்கியே வானவர்கள்
தெண்டனிட்டுக் கண்டு சிவனை யடிபணிந்து

தொண்டருக்கு வந்த தோஷங்கள் தீர்த்தருளும்
அரவணியுஞ் சடையான் அண்ணலே நீர்கேளும்
கடைந்தமிர்தந் தன்னில் காலவிஷந் தான்பிறந்து
அடரத்திரி லோகமெல்லாம் அந்தகால மாமெனவே

எண்டிசையுந் தான்படைத்த இறையோனே காவலென்று
தெணடிரைசூழ் வையமெல்லாம் சிவனே யினிக்காளும்
என்றவர்கள் கூறி இறையோர்க் கபயமென்று
நின்றவர்கள் தன்னை நீள்சடையோ னஞ்செலென்று

சென்று பிறந்துவந்து தீதான நஞ்சுதனை
ஒன்று போல் தான்திரட்டி உட்கொண்டா ரீச்சுரனார்
எவ்வுயிருங் காக்கவென்று ஈச்சுவரனார் நஞ்சு தின்றால்
அவ்வுயிரெல் லாம்பிழைக்கு மலர்மடிந்து போவாரென்று

கோளவிஷம் பாயாமல் குறுக்கே மடறடியில்
தாலி தழைக்கவென்று தடுத்தாள் கரத்தாலே
கண்டத்தில் நின்று கறுத்த கறைவிடமாய்
அன்று பிழைத்தார்கள் அமரர் முனிவ ரெல்லாம்

வரிகள் 2468 - 2503

ஐவர் அம்மானை
(ப) அ. விநாயகமூர்த்தி
பாலமுருகன் பதிப்பகம்,
மதுரை - *1981*

அமிர்த மதனம் - கோட்பாட்டை ஒட்டி எழுந்த புராண கிளைக் கதைகள் மற்றும் பிற செய்திகள்

1. அமிர்த மதனமும் நீலகண்டரும்

2. அமிர்த மதனமும் இராகு கேது வரலாறும்

3. அமிர்த மதனமும் மோகினி அவதாரமும்

4. அமிர்த மதனமும் கூர்ம அவதாரமும்

5.. அமிர்த மதனமும் மாவலியும்

6. அமிர்த மதனமும் ஐயப்பனும்

7. அமிர்த மதனமும் கருடன் வரலாறும்

8. அமிர்த மதனமும் ஆதிசேசனும்

9. அமிர்த மதனமும் மாசிக் கடலாட்டும்

10. அமிர்த மதனமும் வாசுகியும்

11. அமிர்த மதனமும் திருக்காகர்ணத் தலமும்

12. அமிர்த மதனமும் திருக்கடம்பவனமும்

13. அமிர்த மதனமும் திருக்கடவூரும்

14. அமிர்த மதனமும் அதிகச்சபேச தலமும்

15. அமிர்த மதனமும் சுரட்டபள்ளி தலமும்

16. அமிர்த மதனமும் காஞ்சிபுரம்

17. அமிர்த மதனமும் ஆலங்குடியும்

18. அமிர்த மதனமும் கும்பகோணமும்

19. அமிர்த மதனமும் மண்ணிப்படிக் கரையும்

20. அமிர்த மதனமும் கொங்குநாட்டு நஞ்சுண்டேச்சரமும் or காரமடைத் தலமும்

21. அமிர்த மதனமும் மகாப் பிரதோஷமும்

22. அமிர்த மதனத்தில் தோன்றிய உயர் செல்வங்கள்

அமிர்த மதனமும் நீலகண்டரும்

பாற்கடல் கடையத் தொடங்கி ஓராயிரம் ஆண்டுகள் ஆயின. இரண்டு பக்கத்தினரும் மாற்றி மாற்றி இழுத்ததால் வாசுகியின் உடம்பு புண்ணானது. அத்துன்பத்தால் அவன் கண்கள் சிவந்தன. அவன் தன்னையுமறியாமல் வலி பொறுக்க மாட்டாமல் தன்னுடைய ஆயிரம் வாயிலும் பெரும் நஞ்சைக் கக்கினான். அத்தருணத்தில் கடலில் இருந்தும் விஷம் பொங்கியது. இப்படிப் பாம்பினால் கக்கப்பட்ட நஞ்சு காளம் என்ற பெயருடையது; நீலநிறத்தைப் பெற்றது; பாற்கடலில் பொங்கி எழுந்த நஞ்சு ஆலம்என்ற பெயருடையது. கருப்பு வண்ணம்கொண்ட ஆலமும் முன்சொன்ன காளமும் இணைந்து ஆலகாளம் எனப்பெயர் பெற்றுப் புயல்போல கொடிய வெப்பமும் கரும்புகையும் கொண்டதாக மாறி மாறி உலகெங்கும் சூழ்ந்தது. தேவர்கள் இதுகண்டு அஞ்சித் தறிகெட்டு இடமும் வலமுமாக ஓடினர்.

பொங்கிவரும் நஞ்சின் தன்மையால் பல அசுரர்கள் மடிந்தனர். பிரமன் ஓடி ஒழிந்தான். பிரகாசமான ஒளிவீசும் வெண்ணிறம் கொண்ட திருமால் விடத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி விடுவதாகக் கூறி, அவர் முயற்சியில் தோற்றதோடு அல்லாது விடத்தின் வெம்மை காரணமாக அவர் கருப்பு உடல் கொண்டவர் ஆனார்.

தேவர்கள் அனைவரும் கயிலாயம் விரைந்தனர். நந்தியம் பெருமானின் அனுமதி பெற்று சிவபிரானை வணங்கி, விட வேகத்தில் இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டினர். அப்போது அவர் பார்வதியை நோக்கி என்ன செய்யலாம் என்று கேட்கப் பார்வதி தேவியும் தேவர்களைக் காத்து அருள்புரியுமாறு வேண்டினாள்.

அப்போது சிவபெருமான் தன்நிழலில் இருந்து தோன்றியவரும் பேரழகரும் ஆகிய சுந்தரர் என்னும் தன் அணுக்கத் தொண்டரை அனுப்பி அவ்விஷத்தைத் திரட்டிப் பற்றிக் கொண்டு வருமாறு கூறினார்.

சுந்தரரும் வெளியே சென்று உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய ஆலகால விஷத்தைப் பற்றித் திரட்டி ஒரு கருநாவற் பழம் போல் ஆக்கி அடக்கி ஒரு சிறுபாத்திரத்தில் வைத்துக் கொண்டுவந்து சிவபெருமானிடம் அளித்தார்.

அப்போது தேவர்கள் இறைவனை (சிவபிரானை)ப் பார்த்து உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த விஷம் பலருடைய உயிரைக் குடித்து இருக்கிறது. ஆனால் தற்போது இறைவனது கரத்தில் கட்டுண்டு கிடக்கிறது. ஆதலின் அதனை வெளியே விடாது அவரையே ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டினர். சிவபெருமான் ஒருகணம் நேரம் நஞ்சு உண்பதற்கு ஏற்றார்போல 'விஷாபகரண மூர்த்தி' என்னும் ரௌத்திர வடிவம் தாங்கி அவ்விஷத்தை உண்டருளினார்.

அந்த விடத்தைப் பெருமான் உட்கொண்டால் சகல புவனமும் அழியுமே என்று அஞ்சிய அன்னை பார்வதி அவ்விஷம் உட்செல்ல வொட்டாமல் அவருடைய கழுத்தாகிய கண்டத்தில் தங்கும்படி செய்தார். தேவர்கள் இறைவனுடைய அச்சமூட்டும் வடிவைக் கண்டு அஞ்சி பெருமானே உலகை முழுவதும் காத்தருளியதன் காரணமாக அவ்விடம் தங்கள் கண்டத்திலேயே விளங்கட்டும் என்று வேண்டினர். மேலும் ரௌத்திர வடிவத்தையும் துறந்து அமைதிபெற வேண்டினர். அதனைக் கேட்டு இறைவன் அச்சம் தரும் அப்பழைய உருவில் இருந்து இயல்பான வடிவம் பெற்றார்.

இவ்வாறாக சிவபெருமான் நீலகண்டர் என்ற சிறப்பு பெயரினையும் பெற்றார். விடம் உண்ட நீலகண்டர் ஒரு திருவிளையாடல் புரியக் கருதி மயக்கம் கொண்டவர் போலப்படுத்துக் கொண்டார். சிவன் இவ்வாறு துயில் கொண்ட நிலை அறிந்த தேவர்கள் கலங்கினர். எல்லோரும் அவரைப் போற்றித் துதிபாடிக் கொண்டிருந்தனர்.

ஏகாதசி அன்று விடம் உண்ட சிவபெருமான் துவாதசி முழுவதும் பள்ளி கொண்ட நிலையில் இருந்தார். பின்னர் திரயோத்சி நாளில் பகலும் இரவும் சந்திக்கும் மாலை

வேளையில் எழுந்து உமையவளை ஒருபக்கம் கொண்டு சூலத்தைச் சுழற்றி டமருகத்தை ஒலித்து 'சந்தியா நிருத்தம்' என்ற சந்திக் கூத்தினை நடம் செய்து அருளினார் எனப் புராணங்கள் கூறும்.

இக்கூத்தில் சரஸ்வதி என்னும் கலைமகள் வீணையையும் பிரமன் தாளத்தையும் நந்தி மத்தளத்தையும் திருமால் புல்லாங்குழலையும் பூதகணங்கள் எண்ணற்ற இசைக் கருவிகளையும் இயக்கிக் கொண்டு அக்கூத்திற்குத் துணை நிற்பதாக வேதம் கூறும்.

நீலகண்டன் என்ற திருப்பெயர் ஏற்படவும் சந்திக்கூத்து நிகழ்வதற்கும் அடிப்படைப் பொருண்மையாக விளங்குவது பாற்கடல் நிகழ்வு அல்லது அமிர்த மதனமே என்பது மேற்கண்ட கதைமூலம் தெளிவுறுவதைக் காணலாம்.

இராகு கேது வரலாறு

நவகோள்களில் சாயா கிரகங்களாகவும் செம்பாம்பு, கரும்பாம்பு என்று பெயர் கொண்டவர்களான இராகு கேது இருவருமே அசுரர் குலத்தினர். இவர்கள் விண்ணில் கோள்களான வரலாற்றைக் காண்போம்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதம் கண்டெடுத்தனர். அசுரர்கள் வலிந்து அக்கலசத்தைப் பறித்துச் செல்ல, இறைவன் திருமால் தேவர்களைக் காக்க வேண்டி பெண் வடிவு எடுத்து இருகுலத்தாருக்கும் அமுதம் பங்கிடுவதாகக் கூறி அப் பணியைச் செய்லானார். அப்போது அசுரகுலத்தைச் சேர்ந்தவனும் மாவலியின் அன்பிற்குப் பாத்திர மானவனுமான 'ராகு' என்பான் தேவர் உரு எடுத்து, தேவர்கள் இருக்கும் பக்கத்தில் சென்று அமுதம் பருலனான். சந்திரன் சூரியன் ஆகிய தேவர்கள் உருமாறி வந்துள்ள அசுரனைத் திருமாலுக்கு இனங் காட்டினர்.

திருமால் வெகுண்டு தன் கையில் இருந்த சட்டுத்தால் அவ்வசுரனின் தலையைத் துண்டித்தார். ஆனால் அவனோ அமுதம் உண்டுள்ளான். ஆகையின் இறவாத்தன்மை பெற்றவனாவான். ஆகையின் ஒரு பாம்பின் தலையைக் கொய்து அசுரனின் உடலுடன் பொருத்தினார். அவ்வுருவம் பாம்புத் தலையும் அசுர உடலும் பெற்றுக் கேது என்னும் பெயரோடும், அசுரன் தலையும் பாம்பு உடலும் கூடி ராகு

என்ற பெயரும் பெற்றன. இவைகளே இன்று இரு கிரகங்களாக உள்ளன.

சூரிய சந்திரர் காட்டிக் கொடுத்தமையால் தமக்கு இந்நிலை ஏற்பட்டது எனக் கருதி ராகு சூரியனையும் கேது சந்திரனையும் பற்றும்படியாக வரத்தினைப் பெற்றனர். இதன் காரணமாகவே ராகு பிடித்த சூரியன் நாள் சூரிய கிரகணம் எனவும் கேது கௌவ்விய சந்திர நாள் சந்திர கிரகணம் என இன்றும் கூறப்படுவதைக் காணலாம்.

இவ்வாறாக ராகு, கேது வரலாறு அல்லது கிரகண வரலாறு இக்கதையின் கிளைக் கதைகளாக அமைவதைக் காணலாம்.

மோகினி அவதாரம்

காலம் காலமாக தேவர்களோடு அசுரர்களுக்குப் போர் ஏற்படுவதும் இறைவனால் தேவர்கள் காப்பாற்றப்படுவதும் புராணங்களில் பல நிலைகளில் கூறப்பட்டுள்ளன. அசுர வம்சத்தைச் சேர்ந்த மாபலி தேவர்களுக்குத் தாங்கொணாத் துயரைத் தந்து வந்தான். மகாவிஷ்ணு தேவர்களை ஆறுதல்படுத்திப் பாற்கடலைக் கடைய ஆணையிட்டார். அப்பணியில் தேவர்கள் அசுரர்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஆணையிட்டார்.

அதன்படி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் கண்டனர். வலிமையுள்ள அசுரர்கள் அமிர்தம் தாங்கிய கலசத்தைக் கையகப்படுத்திக் கொண்டு அதனில் சிறு அளவுகூட தேவர்களுக்குப் பகிரந்து தர விரும்பாது மறுத்துவிட்டனர்.

தேவர்கள் கலக்கமுடன் திருமாலிடம் சென்று முறையிட்டனர். திருமாலும் பெண்ணுருவான மோகினி அவதாரம் எடுத்து அசுரர்கள் இடம் இருந்து அமிர்த கலசத்தைப் பெற்று அவர்கள் துயர் துடைப்பதாகக் கூறி அவ்வாறே, யாவரையும் மயக்கவல்ல அழகிய பெண்ணுருவைக் கொண்டு எழுந்தருளினார்.

அவ்வடிவைக் கண்டு தேவர்கள் வணங்கி நின்றனர். அசுரர் ஒருவருக்கு ஒருவர் கருத்து மாறுபட்டு மோகினியின் கவர்ச்சியில் சிந்தை தடுமாறினர். மோகினியும் இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு அமிர்த கலசத்தை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டதோடு தேவர்

அசுரர் ஆகிய இரு குலத்தார்க்கும் தானே அமிர்தத்தைப் பங்கிட்டுத் தருவதாக வாக்குறுதியும் கொடுக்கலானாள், அசுரர் அம் மொழியை ஏற்றனர். திருமால் ஆகிய மோகினி அமிர்தத்தைத் தேவர்க்குப் பங்கிட்டுத் தந்தார். மாயை உருவில் மனம் இழுத்துச் செல்லப்பட்ட அசுரர் அமிர்தம் பெறும் வாய்ப்பை இழந்தனர்.

இவ்வாறு தேவர் துயர் துடைக்க இறைவன் எடுத்த மோகினி அவதாரம் பாற்கடல் கடைதல் என்ற நிகழ்வின் பின்னணியிலேயே நிகழ்வதைக் காணலாம்.

கூர்ம அவதாரம்

பாற்கடல் கடையும் பணியைத் திருமால் அருளினால், தேவர்களும் அசுரர்களும் செய்யத் தொடங்கினர். மந்தரமலை பாற்கடலைக் கடையும் மத்து ஆனது. இறைவன் திருமால் ஆணைப்படி வாசுகி நாணாக விளங்கியது.

அசுரர்கள் தலைப்பக்கமும் தேவர்கள் வாசுகியின் வால்பக்கமும் நின்று கடையத் தொடங்கினர். தேவையான சஞ்சிவிகள் பாற்கடலில் சேர்க்கப்பட்டது.

பெருத்த ஒலியுடன் மந்திரமலை சுழலலானது. வாசுகி பேரிறைச்சலுடன் தேவர் அசுரர் கைவாகுக் கேற்படி செயல்பட்டது. ஆனால் தேவர்கள் அசுரர்கள் எதிர் பார்த்தபடி பாற்கடல் கடைய இயலவில்லை.

மத்தாக நின்ற மந்திரமலை இப்பெரும் பணியின் காரணமாகப் பணி தொடரத் தொடர அது சிறிது சிறிதாக கடலில் மூழ்கத் தொடங்கியது. மந்தரமலை நிலைபெயர்ந்து மூழ்குவதைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் குழப் பத்திற்கு உள்ளாயினர். வாசுகியும் மந்தரமலையோடு சேர்ந்து மூழ்கலாயிற்று. தேவர்கள் இனித் தங்களால் எதுவும் செய்ய இயலாது என்று திருமாலிடம் சென்று முறையிட்டனர்.

துயரச் செய்தியைக் கேட்ட திருமால் உடனே கூர்மம் என்ற ஆமைரூபம் எடுத்துக் கடலுள் பாய்ந்தார். சமுத் திரத்தின் அடியிற் சென்று மந்தரமலையின் அடிப்பகுதி யினைக் கண்டு கடினமான தன் ஓட்டின் உதவியால் மந்தரமலையை தூக்கினார்.

வாசுகியும் மந்திரமலையும் மீண்டும் இருந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. பாற்கடல் கடைந்து முடியும்வரை மந்தரமலை சுழல்வதற்கு ஏற்றாற்போல 'இருசு' ஆக இருந்து அருளினார்.

பத்து அவதாரங்களில் ஒன்றாகத் திகழும் கூர்ம அவதாரக் கதையும் பாற்கடல் கடைதல் அல்லது அமிர்த மதனம் என்ற கதையின் கிளைக்கதையே என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மாவலி கதை

திருமால் எடுத்தருளிய பத்து அவதாரங்களில் வாமன அவதாரமும் ஒன்று. வாமனன் என்பதற்கு குறுகிய உயரம் உடையவன் என்பது பொருள். அசுரகுல சக்கரவர்த்தியான மாவலி செருக்குடையவனாகத் திகழ்ந்தான். அவனின் அகந்தையை அடக்க எண்ணிய திருமால் வாமனரூபம் எடுத்து அவன்முன் தோன்றிட மூன்றடி மண் கேட்கலானார். அந்தணர் கோலத்தில் வந்திருப்பது திருமால் என அவனின் குலகுரு சுக்கிராச்சாரியார் எச்சரித்தும் அவன் கேட்கவில்லை.

கேட்டதைக் கொடுப்பதாக அவன் கூறியதைக் கேட்ட வாமனனான திருமால் தன் நெடிய உருவை வெளிக்கொணர்ந்து காட்டினார். ஓர் காலால் விண்ணையும் இரண்டாவது அடியாக மண்ணையும் அளந்து முடித்தார். மூன்றாவது அடிக்கு இடம் இன்மையால் மாவலி தன் தலையைத் தந்தான்.

இறைவன் அவனைத் தன் பாதத்தால் பாதாள உலகத்திற்குச் செல்லும்படி அழுத்தினார். அங்கே அவன் சகல போகங்களையும் அனுபவித்துப் பின் இறைவன் திருநாடு ஏகினான்.

இந்த மாவலியே பாற்கடல் கடையத் துணை நின்றவன். ஆகவே மாவலியின் கதையின் முன்பகுதி வாமன அவதாரத்துடனும் பின்பகுதி பாற்கடல் கடைதலோடும் தொடர்பு பெற்று விளங்குவதைக் காணலாம்.

❋ ❋ ❋

ஐயனார் - ஐயப்பன் சாஸ்தா கதை

பாற்கடல் கடையப் பெற்றவுடன் கிடைத்த அமுத கலசத்தை அசுரர் கவர்ந்து செல்ல தேவர்கள் மயங்கினர். திருமால் அவர்கள் துயர் துடைக்க மோகினி அவதாரம் எடுத்தருளினார். அம்மோகினி வடிவினைக் கண்ட அசுரர்கள் காம வயப்பட்டனர். இதனைச் சாதகமாக்கிக் கொண்டு திருமால் அமிர்தத்தை தேவர்களுக்கே தந்து அருளினார்.

பின்னர் அம்மோகினி வடிவோடு தனித்து நின்ற திருமாலின் அழகைக் கண்ணுற்ற மூவுலக சஞ்சாரி முனிபுங்கவன் எனச் சிறப்பித்துப் பேசப்படும் பிரமனின் மைந்தனான நாரத முனிவன், இச்செய்தியை உடனே கையிலாயம் கொண்டு சென்றான். திருமாலின் அழகைப் பலபடியாக நாரதன் சிவபெருமானுக்கு எடுத்து இயம்பினான்.

நாரதனின் பேச்சில் மயங்கிய சிவபிரான் உடனே மோகினியைக் காண எழுந்தருளினார். கயிலாயம் விட்டு வந்த சிவன் தன் மைத்துனரின் வடிவம் கண்டு காமுற்றார்.

முன்னொரு காலத்தில் மகிஷி என்ற அரக்கி தன்னுடைய மரணம் அரியும் அயனும் ஒன்றாகக் கூடி கலத்தலால் பிறக்கும் அரிஹரபுத்திரன் கையால்தான் சம்பவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபடிக்கும் தற்போது அவளது விதி முடிவு நெருங்கி விட்ட காரணத்தாலும் மோகினி வடிவுடன் கூடிய திருமாலுடன் சிவபிரான் கூடி ஐயன் என்ற ஐயப்பன் உருவாகினார்.

இவ்வரிஹர புத்திரனே அய்யனார், சாஸ்தா, ஐயப்பன் எனப் புராணங்கள் நிறுவுகின்றன.

டாக்டர் அ. தசரதன் தனது அய்யனார் கதைப் பாடல் என்ற நூலில் தென்பாண்டி நாட்டு பல்வேறுபட்ட அய்யனார் பற்றிய கதைகளை நிரல்படுத்தித் தொடுத்துத்

தந்துள்ளனவற்றைக் கீழே காணலாம். அவற்றில் சில: அருஞ்சுனை காத்த அய்யனார், கருக்கு வேலய்யனார், இளம் வாளை அய்யனார், வணங்காமுடி அய்யனார், குன்னிமலை அய்யனார், தூத்துவால் அய்யனார், மானாடு அய்யனார், தலையூனி அய்யனார், பொன்வண்டு அய்யனார், பலவேச முத்தைய்யனார், மருதமலை அய்யனார், அல்லியூத்து அய்யனார் அல்லது கல்வாழை அய்யனார் போன்றனவாகும்.

ஆகவே பாற்கடல் கடைதல் என்ற நிகழ்வின் அடிப்படைக்கு இக்கதைகள் பொருண்மைத் தொடர்பு உடையன என்றால் அது பிழையன்று.

கருடன் வரலாற்றில் 'பாற்கடல் கடைதல் நிகழ்வு'

மரீசி முனிவரின் மைந்தரான காசிபருக்குப் பதின்மூன்று மனைவியர். அவர்களுள் விநதை மற்றும் கத்துரு என்ற இருவர் குறிப்பிடத்தக்கவர். மூத்தவள் விநதையின் மகன்தான் கருடன். மகாவிட்டுணுவின் தொண்டன். 'பெரிய திருவடி' என்று திருநாமம் கொண்டு பகவானுக்குச் சேவை புரிந்து வந்தான். இளையவளான கத்துருக்குக் கொடிய நச்சு கொண்ட பாம்புகள் பிள்ளைகளாப் பிறந்தன.

ஒருசமயம்... விருதையும் கத்துருவும் கடற்கரையில் உல்லாசமாகக் காற்று வாங்கியவாறு அமர்ந்திருந்தனர். அப்போது தேவேந்திரன் உச்சைச்சசிரவம் என்ற வெண்ணிறக் குதிரை மீது ஏறியவண்ணம் போய்க் கொண்டிருந்தான். அதீதமான அழகுடைய இக்குதிரை திருப்பாற் கடலில் இருந்து வரப்பெற்ற ஒன்றாகும்.

விநதை அக்குதிரையினை முழுமையாக இரசித்து தனது கருத்தினைக் கத்துருவிடம் பகிர்ந்து கொண்டாள். அப்பழுக்கு இல்லாத வெண்மை நிறத்திற்கே உருவகமாகத் திகழ்வது இக்குதிரை எனப் பாராட்டினாள். இதனைக் கேட்ட கத்துரு விநதையை ஏளனம் செய்வதுபோல கறுப்புநிற வால் இருப்பதுகூட கண்களுக்குப் புலப்படாமல் முழுமையான வெண்குதிரையாகத் திகழ்வதாகக் கூறுவது விந்தையே என்றாள்.

விநதை எவ்வளவோ நல்லவிதமாக மறுப்புக் கூறி, உண்மையை நிலைநாட்ட முயன்றபோதும் கத்துரு ஏற்கவில்லை. கடைசியாக விநதையைக் கருவமுடனும், அகந்தையுடனும் அகங்காரத்துடனும் குதிரையின் வால் மட்டும் கறுப்பு நிறம் என நிறுவி விடடால்? என்று கேட்டாள் கத்துரு.

அவ்வாறு நிருபணம் செய்துவிட்டால் கத்துருவுக்கு விநதையும் அவள் மகனும் அடிமை ஆகிக் கொள்வதாக மறுமொழி பகர்ந்தாள் விநதை.

எப்படியேனும் வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற பேரவாவில் கத்துரு அதர்மத்துக்கும் துணிந்தாள். கடற்கரையில் நடந்தவற்றை தன் குழந்தைகளான நாகர்கள் என்ற பாம்புகளிடம் கூறினாள்.

கத்துருவின் வஞ்சகச் செயலுக்கு அவளுடைய குழந்தைகள் யாரும் முன்வரவில்லை. கோபம் கொண்ட கத்துரு தன் பிள்ளைகளைப் பார்த்துத் தாய் சொல்லை தட்டிய குழந்தைகளான அவைகள் சர்வ நாசமடையவும் தன் பார்ப்புகளைத் தானே தின்று அழிக்கும்படியான குணத்தையும் பெறுவார்களாக என சாபமிட்டாள்.

கத்துருவின் குழந்தைகளில் கார்க்கோடன் என்ற ஒருவன் மட்டும் அன்னைக்குத் துணை நிற்பதாகக் கூறினான். அவன் கூறியபடியே உச்சைச்சிரவம் இருந்த தேவலோகத்திற்குச் சென்று அந்த வெண்ணிறக் குதிரையின் வாலைத் தனது உடலால் சுற்றிக் கொண்டு நச்சான மூச்சை வெளி யேற்றினான். வெண்மைநிற வால் கருத்து விட்டது.

மீண்டும் ஒருநாள் விநதையும் கத்துருவும் தேவேந்திரனின் அக்குதிரையைக் காண நேரிட்டனர். அப்போது அதன் வால்ப்பகுதி கருத்துக் காணப்பட்டது. விநதையும் தன் தோல்வியை ஏற்றுக் கொண்டு கத்துருக்கு அடிமையானாள்.

அதிர்ச்சியுற்ற விநதை நடந்த நிகழ்ச்சிகளை முறையாக கருடனிடம் கூறினாள். கருடன் தன் தாயைத் தேற்றி இவ்வடிமைத் தனத்தில் இருந்து விடுபட என்ன செய்யலாம் என வினவினாள்.

அமிர்த கலசத்தை கருடனின் சிறிய தாயார் விரும்புவதாகவும் அதனைக் கொணர்ந்தால் விடுதலை உறுதி என விநதை தன் மகன் கருடனிடம் கூறினாள்.

கருடன் உடனே தேவேந்திரன் ஆட்சி செய்யும் இந்திரலோகம் செல்லலுற்றான். அமிர்த கலசத்தைக் கருடன்

மிக்க கவனத்துடன் எடுத்துக் கொண்டான். இதைப் பார்த்த தேவர்கள் போரிடத் துவங்கினர். ஆனால் கருடன் யாவரையும் எளிதில் வென்றான். தேவேந்திரன் தனது வச்சிரத்தைப் பயன்படுத்தினான். கருடன் தேவேந்திரவுனுக்கும் அவன் விடுத்த வச்சிரத்திற்கும் மரியாதை செலுத்தும் வண்ணம் ஒரு சிறகை உதிர்ப்பித்தான்.

தேவேந்திரன் கருடாழ்வார் செயல் கண்டு மகிழ்ந்தான். கருடன் தன் தாயின் நிலைமையைக் கூறி, அமிர்த கலசத்தைத் தன் சிறிய தாயாரிடம் காட்டிவிட்டுத் தந்து விடுவதாகவும் அதனை அவர் பருக அனுமதிக்க மாட்டாது என்றும் தேவேந்திரனிடம் உறுதி கூறினான்.

அமிர்த கலசத்துடன் வந்து கொண்டிருந்த கருடனைக் குடவாயில் என்ற தலத்தருகே பலவாண்டுகளாத் தவமேற் கொண்டிருந்த ‘மகா பயங்கரன்’ என்ற அசுரன் கருடனைத் தாக்க முனைந்தான்.

கருடன் அமிர்த கலசத்திற்கு எந்தவிதமான தீங்கும் நேர்ந்துவிடக் கூடாது என்று அதனைத் தருபைப் புல் பரப்பி அதன் மீது நேர்த்தியாக வைத்துவிட்டு, போருக்குத் துணிந்த அசுரன் மகா பயங்கரனுடன் போரிட்டு வென்றான்.

அமிர்த கலசத்தை வைத்த இடம் ஒரு பாம்புப் புற்றாகும். அமிர்த கலசம் வைக்கப்பட்ட இடத்தில் இருந்து நகர்ந்து மெதுவாகப் புற்றுக்குள் செல்வதைக் கண்ட கருடன் திகைத்தான். தன் வலிய அலகினாலும் கால் நகங்களினாலும் அப்புற்றை இடித்துத் தள்ளலானான்.

புற்றுக்குள் அமிர்த கலசத்துடன் சிவபிரான் கருடனுக்குக் காட்சி தந்தருளினார். அவன் அன்னையைக் காக்கவும் அடிமைத்தனத்தில் இருந்து விடுபடவும் இறைவன் நல்லாசி அருளி அமிர்த கலசத்தையும் தந்து அருளினார்.

கத்துரு அமிர்த கலசத்தைக் கண்டதும் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டாள். விந்தையையும் கருடனையும் அன்புடன் அழைத்து அவர்களை அடிமைத் தளையிலிரந்து விடுவித்தாள். கருடனிடம் இருந்து பெற்ற அமிர்த குடத்தைத்

தர்பாசனம் என்ற தருப்பைப் புல்லின் மீது வைத்துவிட்டுக் குளிக்கச் சென்றாள். இந்திரன் இதுதான் தருணம் என வாயுபகவானை விட்டு அமிர்த கலசத்தை தன்வயப்படுத்திக் கொண்டான்.

நீராடிவிட்டு வந்த கத்துரு அமிர்த குடத்தைக் காணாமல் திடுக்கிட்டாள். காவலுக்கு தக்க ஏற்பாடு செய்யாது போனதால் கைவரை வந்த குடம் கைநழுவிப் போனதே என்று வருத்தமடைந்தாள்.

கத்துருவும் அவள் பிள்ளைகளான நாகர்களும் தர்பை மீது சிதறியிருந்த அமிர்த துளிகளை நாவினால் நக்கினார்கள்.

தர்பைப் புல்லின் கூர்மையான ஓரங்கள் அந்நாகர் (பாம்பு)களின் நாக்குகளை அறுத்து விட்டன.

பாம்புகளின் நாக்கு இன்றைக்கும் இரண்டாகப் பிளவுபட்டு இருப்பதற்கு இதுவே காரணம் என நம்பப்படுகிறது. அமிர்தத்தின் சுவையைச் சுவைத்த தாலேயே பாம்புகள் அச்சுவையை மீண்டும் பெறுதல் வேண்டும் என்ற அவாவில் நாக்கை அடிக்கடி வெளியே நீட்டி நீட்டி அலைகின்றன என்ற செவிவழிச் செய்தியும் உண்டு.

விடுதலை பெற்ற கருடன் தனக்கு அருட்காட்சி நல்கிய சிவபெருமானுக்குக் குடவாயிலில் ஓர் ஆலயம் கட்டினார். அமிர்த லிங்கேஸ்வரர் என இறைவன் அங்கு அழைக்கப் படுகிறார். இதற்குக் காரணம் கருடாழ்வார் தாம் கொண்டுவந்த அமிர்தத்தால் அபிடேகம் செய்தார் என்பதே. இறைவி அமிர்தவல்லி என்று இன்றும் அழைக்கப் படுகிறாள்.

இவ்வாறு கருடனின் கதையிலும் பாற்கடல் நிகழ்வு இயைந்து செல்வதைக் காணலாம்.

ஆதிசேடனும் ஆயிரந் தலையும்

திருக்கயிலையில் சிவபெருமானும் அன்னை பார்வதியும் பிரதோஷ காலத்தில் தேவர்களும் முனிவர்களும் வந்து வணங்க எழுந்தருளியிருந்தார்கள். மூவுலகையும் படைத்தும் காத்தும் அருள்பாலிக்கும் அயனும் திருமாலும் அரனின் பக்கம் வணங்கி நின்றனர். முனிவர்களும் தேவர்களும் இறைவனை வணங்கிவிட்டுப் பெற வேண்டிய மேன்களைப் பெற்றுச் சென்ற வண்ணம் இருந்தனர்.

சிவபெருமானின் சடையினை அழகு செய்து கொண்டிருந்த ஆதிசேடன் இக்காட்சிகளை எல்லாம் பார்த்து மனட கிழ்ச்சி கொண்டிருந்தான். அவன் மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆணவமாக மாறியது. ஆணவத்தின் காரணமாக சடையின்மீது நெளிந்து தலை தூக்கி நின்றான்.

எத்தனை தவசீலர்கள்! எத்தனை முனிவர்கள்! எத்தனை அருளாளர்கள்! படைப்புக் கடவுளும் காக்கும் கடவுளும் கூட அல்லவா தன் முடியின் கீழே வணங்கி நின்கின்றனர்! ஆகவே தனது பெருமை அளவிடற்கரியது என ஆதிசேடன் அகந்தையால் நிலை தடுமாறி நின்றான்.

ஆதிசேடனின் ஆணவமூச்சு 'உஸ் உஸ்' என்று சிவபிரான் காதுகளில் ஒலித்தது. புன்னகை தவழ சிவபெருமான் அன்னை பார்வதியிடம் ஆதிசேடன் ஆணவப் போக்கைப் பற்றிக் கூறினார். ஆதிசேடன் இவ்வுரையாடலைக் கவனிக்கவில்லை. புகழ் மயக்கத்தில் அவன் கண் மயக்கப்பட்டுக் கிடந்தது.

தலையை உயர்த்தி நாக்கை சுழற்றி, கர்வம் பொங்க நோக்கிக் கொண்டிருந்த ஆதிசேடனை சிவபெருமான் திடும் என்று சடையில் இருந்து இழுத்து வெள்ளியங்கிரி மண்ணில் படுமாறு வீசி எறிந்தார். கர்வத்தினால் கனத்துப்போன

ஆதிசேடன் தலை ஆயிரம் பிளவுகளாகிக் கிடந்தது. ஆணவம் துன்பத்தை மட்டும் தருவதன்று கூடவே இருக்கின்ற பெருமைகளையும் அழிக்கக் கூடியது என்பதற்கு ஏற்ப ஆதிசேடன் நிலமகளைத் தாங்கும் வலிமையும் அவனை விட்டு அக்கணமே அகன்றது.

அத்தருணத்தில் பிரமலோகம், வைகுந்தம், கயிலாயம் என்று மேல் உலகம் மூன்றும் சென்று வரும் ஆற்றல் படைத்த நாரத முனிவர் அங்கு வந்து சேர்ந்தார்.

ஆதிசேடனின் மனவருத்தத்திற்கும் உடல் வேதனைக் கும் யாது காரணம் என்பதனை தமது ஞானத்தினால் உணர்ந்து கொண்டார். அதோடு மட்டுமல்லாது ஆதி சேடன் மீண்டும் இழந்த பெருமையைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறினார்.

அடைக்கலம் என வந்தவரை அரவணைக்கும் ஆற்றல் முழுமுதற் கடவுளான விநாயகருக்கு உண்டு. அவர் ஒருவரே அனைத்து விக்கினங்களையும் (குறைகளையு) விலக்கி நன்மை செய்ய வல்லவர். அப்பிரணவ மந்திரத்தின் மூலமுதல்வனின் அடியினைப் பற்றித் தொழுதால் இழந்ததைப் பெறலாம் என ஆதிசேடனுக்கு நாரதர் நல்வழி காட்டினார்.

'கணேசாய நம' என்ற கணபதி மந்திரத்தை இடைவிடாது ஆதிசேடன் ஓதி வரலானான். அவனுக்கு இறைவன் தூக்கி எறிந்ததால் உடலில் ஏற்பட்ட இரணங்கள் குணமாயின. மலையில் ஊர்ந்து பிரவாள நகரம் சென்று விநாயகப் பெருமானை உளமுருகி மறையோதத் தொடங்கினான்.

ஆதிசேடனின் உண்மையான இறைநேயத்தை உணர்ந்த விநாயகர் அவன் முன்பு பத்து திருக்கைகளில் பத்துவிதமான படைக்கலங்களுடன் சித்தி, புத்தி என்ற தேவியருடனும் எழுந்தருளி காட்சி தரலானார்.

ஆயிரம் பிளவாக இருக்கின்ற அவன் தலையானது இனி ஆயிரம் தலையாக விளங்கட்டும் எனவும் அவ்வாயிரம் தலைகளாலும் அகில புவனத்தையும் முன்போல காக்கும் வல்லமை வந்து சேரும் எனவும் தன் தந்தையின் சடைமுடியில் இனி ஐந்து தலையோடு காட்சி தருவாய் என்றும் மேலும் தன்னுடைய இடுப்பை அலங்காரம் செய்யும் உதர பந்தனமாகவும் இருக்கும் பேற்றினையும் நல்கினார்.

உடனே ஆதிசேடன் விநாயகனின் இடுப்பில் ஆபரணமாகப் பரிமளித்ததோடு, அல்லாமல் பிரவாள நகரில் அரவரசனான ஆதிசேடன் விநாயகனுக்கு கோயில் எழுப்பி வழிபட்டு வரலானான்.

இவ்வாறு ஆதிசேடன் ஆயிரம் தலை பெற்ற கதை அமைகிறது. இக்கதையும் பாற்கடலுடன் தொடர்புடையது என்பது ஈண்டு அங்கை நெல்லி ஆகும்.

மாசிக் கடலாட்டு

தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டிப் பாற்கடல் கடைந்தபோது வெளித்தோன்றியவர் இலக்குமி என்ற மகாலக்ஷ்மி. இம்மகாலக்ஷ்மியை மகாவிஷ்ணு மணந்து கொண்டார். அதன் காரணமாக மகாலக்ஷ்மியின் தந்தை எனக் கருதப்படும் சமுத்திரராசன் திருமாலின் மாமன் ஆனான்.

சமுத்திர ராசனுக்கு இரண்டுவிதமான கவலைகள் அவன் மனதில் துளிர்த்தன. தன் மகள் இலக்குமியைப் பிரிய வேண்டியுள்ளதே என்ற கவலை ஒன்று; பிரிந்து செல்லும் மகளை மீண்டும் காணுகின்ற பேறு கிட்டுமா என்ற இரண்டாவது கவலை. வைகுந்தம் சென்றுவிட்டால் அதற்குப் பிறகு காணும் வாய்ப்பு எவ்வாறு அமையுமோ எனப் புலம்பலானான் சமுத்திர ராசன்.

அன்னை இலக்குமி தன் தந்தை படும் துயரத்தைத் தன் கணவன் திருமாலிடம் எடுத்துரைத்தாள். தந்தையின் மனக்குறையைத் தீர்த்து அருள வேண்டும் என தன் மணவாளனான மகாவிஷ்ணுவிடம் முறையிட்டாள். அன்னையின் வேண்டுகோளுக்கு இணங்கிய திருமால் ஆண்டிற்கு ஒருமுறை ஒரு புண்ணிய தினத்தில் தாம் கடற்கரைக்கு எழுந்தருளி காட்சி கொடுப்பதாக வரம் தந்து அருளினார். அப்புண்ணிய தினம்தான் மாசி மாதம் சுக்கிலபட்ச பௌர்ணமி திதி.

ஒவ்வொரு ஆண்டு மாசித் திங்கள் வளர்பிறை பௌர்ணமி திதி அன்று ஒவ்வொரு கடற்கரை அருகே உள்ள பெருமாள் கோயிலில் இருந்து பெருமாள் அலங்கரிக்கப் பட்டுத் தாயாருடனும் சக்கரத்தாழ்வாருடனும் கடற்கரைக்கு எழுந்தருளி கடல் நீராடல் செய்வர். இறைநேயர்கள் அதன்பின் கடல் நீராடி இறைவழிபாடு செய்வர்.

தூபதீப ஆராதனைகளுடன் வெள்ளரிப் பிஞ்சு, கற்கண்டு, திராட்சை போன்ற குளிர்ச்சியான பொருட்கள் நிவேதனம் செய்யப்பட்டு பக்தர்களுக்கப் பிரசாதமாக வழங்கப்படுவதுடன் கடலாடு விழா நிறைவடையும்.

இவ்வாறு மாசிக் கடலாட்டு விழாவுடன் பாற்கடல் கடைந்த நிகழ்வு தொடர்பு பெறுவதைக் காணலாம்.

பாற்கடல் கடைந்த நிகழ்வுடன் தொடர்பு இல்லை எனினும் சிவபெருமானும் இதே நன்னாளில் கடலாட்டு விழாவில் பங்கு கொள்வதை இன்றும் காணலாம். இதற்கான கதை வருமாறு.

அன்னை பார்வதி ஒருமுறை மீனவ குலப் பெண்ணாக தோன்றினார். அம்பாளை மணந்திட இறைவன் தக்க வயதுடைய இளைஞனாக மீனவராக வடிவம் கொண்டு அம்பிகையின் இருப்பிடம் வந்தார்.

ஈசனின் ஆணைப்படி ஒரு பெரிய திமிங்கலம் கடற்பகுதியில் வருவோர் போவோர்க்கெல்லாம் தொல்லை செய்து வந்தது. மீனவ குலத்தலைவன் இதனை அறிந்து பல வழிகளில் முயன்றும் அத் திமிங்கலத்தை அழிக்க முடியவில்லை.

செய்வதறியாது அத் திமிங்கலத்தை வென்று கொன்று வருவோர்க்குத் தம் மகளை மணம் செய்து வைப்பதாகப் பறை அறிவித்தான். இறைவனும் தன்னை யார் என்று அடையாளம் காட்டிக் கொள்ளாமல் அத் திமிங்கலத்தை வென்று அன்னையை மணந்தார். பின்னர் அன்னையோடு அனைவர்க்கும் அருட்காட்சி நல்கினார்.

மீனவர் தலைவன் ஈசனை வணங்கி அவரது தரிசனம் அக்குலத்தவர்க்கு அடிக்கடி கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும் என வேண்டினான். ஆடல்வல்லான் புன்னகை புரிந்து ஆண்டிற்கு ஒருமுறை மாசிமாதம் சுக்கில பட்ச பௌர்ணமி திதியில் அம்பிகையோடு எழுந்தருளுவதாக வாக்களித்து அன்னையோடு கயிலை சென்றார்.,

அன்றுமுதல் இந்நன்னாளில் கடற்கரையோரம் உள்ள சிவாலயங்களில் சுவாமி, அம்பாளை நன்றாக அலங்கரித்து பல்லக்கில் இருத்தி கடற்கரைக்கு எழுந்தருளச் செய்வர்.

கடல் இல்லாத ஊர்களில் இறைவர்களை அருகே உள்ள ஆற்றிற்கோ அல்லது குளம் போன்ற நீர்நிலைகளுக்கோ எடுத்துச் செல்வர். இவ்விழாவில் அனைத்துக் கடவுளர்களும் கலந்து கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமகள் வரலாற்றில்...

துர்வாச முனிவர் ஒருமுறை பூலோகத்தைப் பவனி வந்த நேரம். அப்போது வித்யாதரப் பெண் ஒருத்தி எதிர்ப்பட்டாள். அவளது கையில் நறுமணங் கமழும் பவளமல்லி மலர் மாலை ஒன்று இருந்தது. முனிவர் அம்மலரின் நறுமணத்தால் கவரப்பட்டு அப்பெண்ணிடம் அதுபற்றி விவனலானார். அப்பெண் அம்மாலையானது திருமகள் தன் தலையிலே சூடிய மாலை என்றும் அன்னையே அதனை அப்பெண்ணிற்கு அன்பளிப்பாக நல்கினாள் என்றும் எடுத்துக் கூறி மரியாதைக்குரிய இதனை விரும்பிய காரணத்தால் அம்மாலையை அவள் அவருக்கு அன்பளிப்பாகத் தந்து அருளினாள்.

முனிபுங்கவரும் மிக்க மரியாதையுடன் அன்புடனும் அத்திருமகள் அணிந்த மாலையை இருகரம் நீட்டிப் பெற்றுக் கொண்டார். பின்னர் முனிவர் இந்திரன் அரசவை நோக்கி வரலானார்.

அப்போது இந்திரன் தன் துணைவி இந்திராணியுடனும் முப்பத்து முக்கோடித் தேவருடனும் ஐராவதத்தின் மேல் இருந்தவாறாக பவனி வரலானான். முனிவர் தேவர் தலைவனுக்குத் தான் வித்தியாதரப் பெண்ணிடம் இருந்து பெற்ற பாரிஜாத மாலையைத் தனது அன்பளிப்பாக துர்வாசர் இந்திரனுக்கு நல்கினார்.

தேவேந்திரனான இந்திரன் முனிவர் அருளிய மாலையை வணங்கி வாங்கிடாமல் அங்குசத்தினால் வாங்கி செருக்கோடு யானையின் பிடரி மீது வீசினான். யானையோ அந்த மாலையை துதிக்கையால் இழுத்துக் காலின் கீழே போட்டுத் தேய்த்தது.

முனிவர் இதனைக் கண்ணுற்றார். அடங்காச் சினம் கொண்டார். செருக்கின் காரணமாக சிந்தை தடுமாறிய உம்பர் நாட்டு அதிபன் இந்திரனை நோக்கி இனி அவனுடைய

மூன்று உலகிலும் திருமகள் வாசம் செய்ய மாட்டாள் என்றும் அவன் அவனது பெருஞ் செல்வங்களை இழந்து வறுமையினாலும், நோயின் காரணமாகவும் வறகடத்தின் காரணமாகவும் துன்பம் சூழ்ந்து அவதி உறும்படியாக சாபம் இட்டார்.

வேந்தன் செய்வதறியாது முனிபுங்கவரின் பாதத்தைப் பற்றினான். பலமுறை தன் தவறுக்காக வருத்தம் தெரிவித்தான். ஆனால் துர்வாச முனிவர் மற்ற மகரிஷிகள் போல் பரிகாரம் என்ன என்று கூறவும் மறுத்து விட்டார்.

இந்திரனின் செல்வங்கள் யாவும் பாற்கடலில் போய் மறைந்து விட்டன. இலக்குமியின் அருட்பார்வை நீங்கியது. தேவர்கள் அசுரர்களால் அவதியுறலாயினர். செய்வது அறியாது இந்திரன் படைப்புக் கடவுளாகிய பிரம்மனிடம் சென்று முறையிட்டான். பிரமன் பாற்கடலில் துயிலும் திருமாலிடம் முறையிட திருமால் இந்திரனின் துயரை நீக்குவதாக உறுதி அளித்துப் பாற்கடல் கடைந்து இந்திரன் இழந்த பொருட்களை மீட்க அருள் பாலிக்கலானார்.

தேவர்கள் அசுரர்கள் இணைந்து செயலாற்றி பாற்கடலைக் கடையலாயினர். காமதேனு, வாருணி, தன்வந்திரி போன்ற சிறந்த பொருட்கள் எல்லாம் தோன்றின.

பிறகு செந்தாமரைப் பூவில் விற்றிருப்ட வளாய், தாமரை மலரைக் கையில் பிடித்தவண்ணம் மி ப் பேரழகுடன் திருமகளாகத் தோன்றினார். உடனே முன் பர்கள் அவளைத் தரிசித்தனர். ஸ்ரீசூக்தம் பாடித் துதித்தனர். தேவ கன்னியர் நடனம் ஆடி வரவேற்றனர். அட்டதி கஜங்களும் மகாநதியின் தீர்த்தங்களைக் கொண்டு வந்து நீராட்டின. உம்பர் உலகத்து தேவதச்சன் அழகிய ஆபரணங்களைச் சமர்ப்பித்தான்.

அன்னை திருமகள் திருமாலைக் கரம்பற்றி அவர் திருமார்பில் உறையலுற்றாள்.

மிருகண்டு முனிவர் வரலாற்றில்...

பாற்கடல் கடையும் காலத்து அசுர வேந்தனாக இலங்கியவன் மகாபலி ஆவான். மன்னர் மன்னனாக விளங்கியவன். இவன் பெற்ற புகழ் அளவிற்கு அகந்தையும் தலைத்தோங்கி நின்றது. மாவலியின் அகந்தையை அழிப்பதற்ககவே வாமன அவதாரம் எடுத்தார் திருமால். மூன்றடி மண் கேட்டு மாவேந்தனின் உள்ளத்தில் வேர் ஊன்றிநின்ற 'அகந்தை'யைக் கிள்ளி எறிந்தார்.

பூர்வத்தில் நடந்த உலகளந்த நிகழ்வை மாமுனிவர் மிருகண்டு தான் நேர்முகமாகக் காணக் கொடுத்து வைக்கவில்லையே என வருந்தி எப்படியேனும் அக்காட்சியை மீண்டும் கண்டுவிட வேண்டும் என்ற நோக்கோடு திருமாலை நோக்கிக் கடுந்தவம் இருக்கத் தொடங்கினார். நாரதமுனி இத்தருணத்தில் தோன்றி தனது தந்தையான பிரம்மாவைக் குறித்து தவம் செய்யும்படியும் அவர் இதற்குத் தக்க யோசனை சொல்லுவார் என்றும் தெரிவித்தார்.

மிருகண்டுவும் பிரம்மனைக் குறித்துத் தவம் செய்தார். பிரமனும் மிகவும் மகிழ்ந்து என்ன வரம் வேண்டும் என்று வினவ மகரிஷி தான் மறுபடியும் திருவிக்கிரம அவதார ஸேவையை சேவிக்க வேண்டும் என்பதாகத் தெரிவிக்க பிரமனும் சந்தோஷித்து மிகப் பரிசுத்தமானதும் மிகப் புண்ணிய தலமுமாகிய இந்த கிருஷ்ண தலத்தில் எழுந்தருளியிருக்கும் கண்ணனைக் குறித்துத் தவம் இயற்றும்படி தெரிவித்து தன்னுடைய ஸ்தானத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

பின்பு மிருகண்டுவும் தன் பத்தினியுடன் இத்தலத்திற்கு வந்து தென்பெண்ணையின் தென்கரையில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு இங்கு எழுந்தருளியிருக்கும் கண்ணனைக் குறித்துக் கடுந்தவம் பல்லாண்டுகள் செய்தார். பகவானும் ஒருநாள் நடுப்பகலில் இவருடைய கருத்தைச் சோதிக்கத் திருவுள்ளம் கொண்டு அவர் ஒரு வயது முதிர்ந்த

அந்தணர் உருக்கொண்டு தன் துணைவியுடன் முனிவரின் குடில்தனை அடைந்து தனக்கு உணவு வேண்டும் என்று முனிவரின் மனைவியிடம் கேட்க, செய்வது அறியாது அகால நேரத்தில் வந்து பசியுடன் ஒருவர் உணவு கேட்கும் நிலையில் தன்னால் ஏதும் கூடவில்லையே என வருந்தித் திருமகளை நோக்கித் தொழ அன்னபூரணி அன்னை அவளும் வேண்டுமென்ற உணவுகளை வழங்க அதனை எடுத்துக் கொண்டு முதியோராக வந்த விருந்தினரைக் காணவர அங்கே அவர்கள் இல்லாது இருப்பது கண்டு வருந்தும் வேளையில் அவ்வம்மையார் கண்முன்னே சோதிரூபமாக இறைவன் எழுந்தருளி அத்தீப்பிழம்பின் உள்ளே திருமால் முனிவர் பல்லாண்டுகளாகக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் அத்திருவிக்கிரம சேவையை பகவான் காட்சி தந்து அருளினார். வலது திருவடியை உயரத் தூக்கியும் இடது திருவடி பூமியிலும் வலது திருக்கையில் சங்கத்தை மாற்றியும் இடத் திருக்கையில் சுதர்சனத்தையும் வைத்து, திருமார்பில் திருமகளும் வைஜயந்தீ வனமாலையும் இடையில் பீதாம்பரமும் துலங்க காண்போர் கண் இமையாது காணுமாறு சேவை சாத்தினார்.

இறைவன் பின்னர் முனிவரிடம் வேண்டுவது என்ன என்று வினவ முனிவரும் உலகோரும் இத்திருக்காட்சியை கண்டு உய்தல் பொருட்டு இத்தலத்தில் தாங்கள் காட்சி தந்தபடியே எழுந்தருள வேண்டும் எனத் தன் விருப்பத்தைத் தெரிவிக்க இறைவனும் அவ்வாறே சேவை சாதித்ததை ஈண்டுக் காணலாம்.

திருக்கோவலூர் புராணத்தில் கிருஷ்ண க்ஷேத்திரம் எனவும் கோபாலபுரம் எனவும் இத்தேசம் கூறப்படுகின்றது. இப் புண்ணிய தேசம் இன்றைய விழுப்புரம் அருகே உள்ளது.

பாற்கடல் நிகழ்வதற்குப் பெருந்துணையாகவும், காரணனாகவும் விளங்கிய மகாபலி சக்கிரவர்த்தி திருமால் நிகழ்வுகள் பாற்கடல் கடைதல் என்ற நிகழ்விற்கு முற்பட்டது என்ற வகையில் அதனுடன் தொடர்பு கொண்டது. ஆகவே இதனையும் ஓர் கிளைக் கதையாகக் கொள்வதில் தவறில்லை.

அமிர்த மதனமும் வாசுகியும்

வாசுகீசுவரர்

பாற்கடல் கடைவதற்குத் தாம்புக் கயிறாக விளங்கியது அஷ்டமா நாகங்களில் (அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன்) ஒன்றான வாசுகி என்னும் பாம்பாகும். அவன் ஆயிரம் பணாமுடிகளைக் கொண்டவன். தேவர்களும் அசுரர்களும் கூடிநின்று கடைந்த போது வலி தாங்காது விஷத்தைக் கக்கினான். அவ்விஷத்தை சிவனார் உண்டருளினார்.

வாசுகி வேண்டி விரும்பி இச்செயலை அஃதாவது விஷத்தைக் கக்கவில்லை. ஆனாலும் அவன் உள்ளத்தில் பரமசிவனுக்கு விஷத்தைக் கொடுத்து விட்டோமே என்ற மனக்கலக்கம் தோன்றியது. எனவே அப்படியும் பாவம் தீரும் பொருட்டு காஞ்சிபுரத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தான்.

அவனின் விஷத்தை வாங்கி அருந்திய சிவமூர்த்தி மணிகண்டேச்சுவரர் எனவும் வாசுகியால் வழிபடப்பட்ட இறைவன் பணா மணீச்சுரர் எனவும் வாசுகியின் அச்சத்தைப் போக்கி தனது மேனியில் சிவபிரான் அணிந்து கொண்ட நிலையில் பணாதரேச்சுவரர் என்னும் பெயரிலும் காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ளார்.

இன்றைக்கும் இவ்வாலயங்கள் காஞ்சியில் உள்ளன. தேவர்களுடன் வாசுகி வழிபட்ட (வாசுகியின் விடத்தை உண்ட) மணிச்சுரர் - மணிகண்டீச்சுரர் கோயில் என்ற பெயரில் திருக்கச்சி நம்பி தெருவில் உள்ளது. வாசுகி வழிபட்ட பணாமணபச்சுர் - பணா மணீச்சுரம் என்ற பெயரில் சின்னக் காஞ்சிபுரம் ஐயங்கார் பாளையத் தெருவிலும் பணாதரேச்சுவரர் ஆலயம் காஞ்சிபுரம் ஆலடிப் பிள்ளை கோவில் தெருவிலும் அமைந்துள்ளன.

சென்னையை அடுத்த திருவொற்றியூரில் வாசுகி பூசித்துப் பேறு பெற்றான் என்று திருவொற்றியூர் தலப் புராணம் கூறுகிறது. வாசுகியை தன் உடலில் ஒடுக்கிக் கொண்டதனால் திருஒற்றியூர் பெருமான் வாசுகீசுவரர் என வடமொழியிலும் பாம்பைத் தன் மேனியில் பக்க வைத்திருந்தலின் தமிழில் படம்பக்கநாதர் எனவும் அழைக்கப்படுகிறார்.

நேபாளத்தில் உள்ள பசுபதி நாதர் கோயிலிலும் வாசுகிநாதருக்குத் தனிச் சந்நிதி உண்டு.

இவ்வாறு இக்கதை பாற்கடல் கடைந்த வரலாற்றுடன் தொடர்பு பெற்று இருத்தலைக் காணலாம்.

அமிர்த மதனமும் திருக்கோகர்ணத் தலமும்

பாற்கடலில் இருந்து தோன்றிய காமதேனு, கற்பக மரம் போன்றன தேவலோகத்தில் இந்திரனி கட்டுப்பாட்டில் இருப்பனவாகும். ஒருநாள் தேவேந்திரனுடைய சபை கூடிற்று. தேவர்கள் எல்லோரும் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்து விட்டனர். ஆனால் காமதேனுப் பசுமட்டும் காலதாமதமாக அவைக்கு வந்து சேர்ந்தது.

காமதேனுவின் பொறுப்பற்ற தன்மையினைக் கண்ட இந்திரன் கோபங் கொண்டு காமதேனுவைப் பூவுலகில் காட்டுப் பசுவாகப் பிறக்கும்படி சாபமிட்டான்.

காமதேனு இந்திராணியின் உதவியால் சிவபெருனின் அருளோடு சாபம் நீங்கப் பெற்று மீண்டும் பழைய நிலையை அடைவதற்கு ஆன வழிமுறைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டது. அதன்படி காமதேனு கபில முனிவரின் ஆசிரமத்தைச் சேர்ந்தது. முனிவரின் அறிவுரைப்படி காமதேனுப் பசு தினந்தோறும் கங்கை நீரைக் காதுகளில் நிரப்பிக் கொண்டுவந்து வகுளாரண்யப் பெருமானுக்கு அபிடேகம் செய்து வழிபட்டு வந்தது.

இவ்வாறு காமதேனுப் பசு வழிபட்டுக் கொண்டு வருகையில் சிவபெருமான் பசுவின் பக்தியைச் சோதிக்கவும் இதன் மூலமாய் உலகத்திற்கு ஓர் உண்மையைக் காட்டவும் எண்ணங் கொண்டு, ஒருநாள் பெருமான் புலியின் வடிவத்துடன் பசு வரும் வழியில் காத்திருந்தார். காமதேனு வழக்கம்போல் காதில் நீரை நிரப்பிக் கொண்டு அவ்வழியே வரும்போது, புலி பசுவைக் கொல்ல முயன்றது. அப்போது பசு, புலியினிடத்தில் நான் சிவனுக்குச் செய்யும் வழிபாட்டை முடித்துவிட்டு, தன்னை எதிர்பார்த்திருக்கும் கன்றுக்குப் பாலூட்டி விட்டுத் திரும்பி வருவதாகச் சத்தியம் செய்துவிட்டுச் சென்று பிறகு தன் கடமைகளை நிறைவேற்றி

விட்டுத் திரும்பித் தான் முன்னே கூறியபடி புலியின் இடத்திற்குத் திரும்பி வந்தது. பசுவின் கடமையையும் வாக்குத் தவறாத செயலையும் கண்டு வியந்து புலி உருவத்துடன் இருந்த சிவபெருமான் ரிஷப வாகனத்தில் காமதேனுப் பசுவுக்குக் காட்சி கொடுத்து முத்தியையும் தந்து மறைந்தருளினார்.

சிவபெருமான் புலி உருவத்துடன் பசுவுக்குக் காட்சி கொடுத்த இடமே திருவேங்கைவாசல் என்று அழைக்கப்படுகிறது. காமதேனுப் பசு தன் காதுகளில் நீர் கொண்டுவந்து, பெருமானுக்கு அபிடேகம் செய்ததால் இத்தலத்திற்குக் கோகர்ணம் எனப் பெயராயிற்று. கோ என்பது பசுவையும் கர்ணம் என்பது காதுதனையும் குறிக்கும். கோ தன் காதுகளின் துணையோடு பூசை செய்ததால் இத்தலம் மேற்கண்டவாறு அழைக்கப்படுகிறது.

இன்னும் இத்தலத்தில் திருவிழாவின்போது மரத்தால் செய்யப்பட்ட பசுவையும் கன்றையும் முன்னே வைப்பர்; புலி வேடம் பூண்ட ஒருவன் கூத்தாடுவான்; பிறகு சிவபெருமான் காளை வாகனத்தில் எழுந்தருளி பசுவுக்குக் காட்சி தருவார் என்பதாக இன்றளவும் திருவிழாக் காட்சியாக நடைபெற்று வருகின்றது.

ஆக, இக்கதையை நோக்கும்போது பாற்கடலில் தோன்றிய காமதேனுவே கோகர்ண தலம் உருவாகக் காரணம் ஆயிற்று எனும்போது பாற்கடல் நிகழ்வின் பின்னணியைக் கொண்டே இக்கதையும் அமைந்துள்ளது எனலாம்.

ஐராவதம் வரலாற்றில்...
அமிர்த மதனமும் திருக்கடம்பவனமும்

துருவாச முனிவர் சிவபெருமானை முறைப்படி வழிபாடு செய்யும்பொழுது பெருமான் திருமுடியிலிருந்து நறுமணம் மிக்க பொன்நிறத் தாமரை மலர் ஒன்று முனிவர் கையகத்து விழுந்தது. அதைப் பன்முறையும் வணங்கிக் கையில் ஏந்திக் கொண்டு பொன்னுலகுக்குச் சென்றார். அங்கு இந்திரன், பேரார்வத்துடன் தேவர்களும் முனிவர் களும் பல்லாண்டு இசைக்கவும் அரமகளிர் ஆடிப்பாடி சூழ்ந்து வரவும் இன்னியம் பல ஒலிக்கவும் சாமரைகள் இரட்டவும் வெண்கொற்றக்குடை நிழற்றவும், ஐராவதத்தின் மேல் இவர்ந்து உலா வருவதைக் கண்ணுற்றார். உலாப் போந்த வாசவனை வணங்கி, வானவர் பல கையுறை வழங்கினர். முனிவரும் தம் கையில் இருந்த பொன்மலரைக் கையுறையாகக் கொடுத்தார். அத்தெய்வ மலரின் மாட்சிமை அறிய மாட்டாத தேவேந்திரன், அதைப் பொருட்படுத்தாமல் ஒரு கையால் வாங்கித் தான் ஊர்ந்து வந்த ஐராவதத்தின் முடியில் வைத்தான். அந்த வெள்ளையானை களிப்பு மிகுதியால் அம்மலரைக் கீழே தள்ளிக் காலால் தேய்த்து விட்டது.

தான் கையுறையாகத் தந்த மலரை அதுவும் சிவபெருமான் முடியினை அலங்கரித்த அழகுமலரை இழிவுபடுத்திய ஆகண்டலன் ஆணவத்தையும் நான்கு கொம்பு யானையின் செருக்கையும் கண்டு மனங் கொதிப்பேறிய முனிவர் சினம் கொண்டு இந்திரனைப் பார்த்து மண்ணுலக மன்னன் பாண்டியன் ஒருவனால் அவன் முடி சிதறக் கடவது எனவும் மேன்மை பொருந்திய அந்த வெள்ளை யானை மண்ணுலகில் காட்டானையாகப் பிறந்து உழலக் கடவது எனச் சாபமிட்டார்.

காட்டு யானையாக ஐராவதம் காடுமலை எல்லாம் சுற்றி அலையலுற்றது. இவ்வாறு அலையும் காலத்து ஓர் நாள் கடம்படனத்துள் நுழைந்து அங்கிருந்த தாமரைக் குளத்தில் நீராடியது. முனிவர் சுடுசொல் விடுதலையாகும் காலம் வந்துற்றபடியால் காட்டானை உருவில் இருந்த ஐராவதம் தன் நிலையை உணர்ந்து கொண்டது.

அன்றிலிருந்து பலநாட்கள் சிவபெருமானுக்கு அஃதாவது கடம்ப வனத்தில் எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கத்திற்கு ஐராவதம் புனித நீராட்டி பூசை செய்தது. தாமரை மலர்களைச் சாத்தியது. இறைவன் மகிழ்ந்து அதன் சாபம் நீக்கி விண்ணுலகு அனுப்பி வைத்தார்.

இவ்வாறு பாற்கடல் கடையும்போது தோன்றிய ஐராவதம் காட்டு யானையாக அலைந்து கடம்பவனத்து இறைவனால் கவைத்தேறிய வரலாறும் ‘பாற்கடல் கடைதலும் நிகழ்வன்’ கிளைக்கதையே எனலாம்.

பாற்கடல் கடைதல் நிகழ்வும் - திருக்கடவூரும்

தேவரும் அசுரரும் கூடி அமுதம் வேண்டிக் கடல் கடைய, உண்டாகிய அவ்வமுதத்தினைக் கடத்திலடைத்துத் தவ சித்திபுரமாகிய இவ்வில்வ வனத்திடை வைத்துவிட்டு நீராடச் சென்று திரும்பி வந்த தேவர்கள் கடத்தினை எடுக்க முயன்றனர். அது பாதாலம் வரை ஊடுருவிய சுயம்பு மூர்த்தியாக இருக்கக் கண்டனர். கடத்தில் உள்ள அமுதமே சிவலிங்க வடிவமாகக் கண்டமையால் அமுதலிங்கம் என்றும் கடவூர் என்றும் இறைவனுக்கும் ஊருக்கும் பெயராயின.

திருக்கடவூர் என்பது இக்காலத்தில் திருக்கடையூர் என மருவி வழங்குகின்றது.

இத்தலம் பிரமன் வழிபட்ட தலமாகும். ஒருமுறை ஞானபோதேசம் பெற விரும்பிய பிரமன் சிவபெருமானை எண்ணித் தொழலானான். அப்போது இறைவன் வில்வ விதையினைப் பிரமன் கையிற் கொடுத்து இவ்வித்தானது ஒரு முகூர்த்தத்துள் எந்த இடத்தில் முளைக்கின்றதோ, அவ்விடத்தில் தங்கித் தன்னைத் துதித்து வர ஞானசித்தி கிட்டும் என அருளினார். சிவபெருமானின் அருள்வாக்கைக் கேட்ட பிரமன் இறுதியில் ஓரிடத்தில் அவ்வித்து இறைவன் கூறியபடி ஒரு முகூர்த்தத்துள் முளைத்ததைக் கண்டான். ஆகவே அவ்விடத்தை வில்வவனம் எனப் பெயரிடலானான்.

கள்ள வாரணப் பிள்ளையார்

திருக்கடவூரில் அமுதம் வேண்டி பிரம்மன், விட்டுணு, இந்திரன் ஆகியோர் அமிர்தலிங்கமாக எழுந்தருளியிருக்கும் சிவபிரானைத் துதித்து வரலாயினர். தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிய சிவபிரான் ஞானமிர்தத்தினை

ஆண்டுள்ள திருக்குளத்தில் பெற்று மகிழ்க என அருள்பாலித்தார். தேவர்கள் சென்று தேடித் திகைத்துக் காணாது வருந்தி நின்றனர். கணபதியை மறந்த காரணத்தாலேயே அவர்கள் பெறவேண்டிய அமுதம் கணபதியால் மறைக்கப்பட்டது என்ற உண்மையை இறைவன் சிவபிரான் எடுத்துக் கூறினார்.

உடனே அனைத்துத் தேவர்களும் உள்ளத்திற் கரந்த கள்ளக் கணபதியாய ஓங்காரத் தொருவனை வழிபட்டனர். வினாயகரும் காட்சி தந்து தன்னை மறந்ததால் அவ்வமுதம் மறைக்கப்பட்டது எனவும் அதனால் அமுதத்தினை அடைந்தும் அடையாதவர்கள் ஆனார்கள் எனக் கூறி இனி இக்கவலையை அகற்றி விடலாம் எனவும் தான் மனமகிழ்வு கொண்டு தற்போது தோன்றியது போல, அமுதமும் அவ்வாவியில் தோன்றும் எனக் கூறி அருளினார்.

இறைவன் அமுதத்தை மறைத்ததால் கணபதி இங்கு 'சோரகணபதி' எனவும் கள்ள வாரணப் பிள்ளையார்' எனவும் திருப்பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறார்.

இன்றளவும் கணபதியை ஈண்டு வந்து வணங்குவோர்க்கு அவ்வாவியில் இருந்து அமுதம் கணபதியால் வழங்கப்படுவதாக இறைநேயர்கள் நம்புவதைக் காணலாம்.

❋ ❋ ❋

ஆதிகச்சபேசம்

திருமால் மந்திரமலையைத் தாங்க, கூர்ம அவதாரம் எடுப்பதற்கு முன் மந்திரமலையைத் தாங்கும் வலிமையைப் பெறவும் அமிர்தம் எளிதில் வெளிப்படவும் ஒரு சிவலிங்கத்தை அமைத்து வழிபட்டார். அச்சிவலிங்கம் அமைந்துள்ள திருத்தலமே செங்கற்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ள திருக்கச்சூர் ஆகும்.

இங்குத் திருமால் கச்சாபாவதாரம் (கூர்மாவதாரம்) எடுத்து வழிபட்டதால் இறைவன் கச்சபேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். இவ்வூரும் கட்சூர் என்று பெயர் பெறுவதாயிற்று.

இங்கு எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமான் அமிர்தம் கிடைக்க என்று அருள் செய்ததால் அமிர்தத் தியாகர் எனச் சிறப்பிக்கப்படுகின்றார்.

காஞ்சிபுரத்திலும் திருமால் வழிபட்ட கச்சபேசுவரர் கோயில் இருப்பதால் திருக்கச்சூரை ஆதிகாஞ்சி எனவும் இங்குள்ள பெருமானை ஆதிகச்சபேசுவரர் எனவும் இன்றுவரை மக்கள் அழைத்து வருகின்றனர்.

இக்கதையும் பாற்கடல் கடைதல் எனும் நிகழ்வுடன் தொடர்புள்ளதைக் காணலாம்.

அமிர்த மதனமும் சுரட்டப்பள்ளி தலமும்

பள்ளிகொண்ட பரமேசுவரர்

பொதுவாகத் திருமால் ஒருவரே மூன்று விதமான கோலங்களில் காட்சி தருவதாகக் கூறுவர். நின்ற திருக்கோலம், இருந்த திருக்கோலம், கிடந்த திருக்கோலம் அல்லது அனந்தசயனம் என அம்மூன்றைக் கூறுவர். இதனில் அனந்தசயனக் கோலமே சிறப்புடையதாக வைணவர்களால் போற்றப்படுவது.

சிவபெருமான் இலிங்க வடிவமாகவும், ஆடல்வல்லான் என்ற நடராசனாகவும் ஆலமர் கடவுளாக தெட்சணாமூர்த்தி வடிவிலும் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். கிடந்த திருக்கோலம் திருமாலைத் தவிர வேறு இறைவர்களுக்கு இல்லை என்பது போல நடனம் ஆடும் ஆற்றல் ஆடல்வல்லான் ஆன சிவபெருமானுக்கன்றி வேறு யாருக்கும் இல்லை எனலாம்.

ஆனால், சிவபெருமான் துயிலும் காட்சி அபூர்வமாக ஒன்று காணப்படுகிறது. அஃதும் பாற்கடல் கடைதல் என்ற நிகழ்வுடன் தொடர்பு உடையது என்பதனால் ஈண்டு எடுத்துரைக்கப்படுகின்றது. விபரம் வருமாறு:

ஆலகாலத்தை அருந்திய பின் விடத்தின் வேகத்தால் ஏற்பட்ட களைப்பினாலும் திருவிளையாடல் புரியும் எண்ணத்துடனும் ஒருநாள் முழுவதும் சயன கோலத்தில் சிவபிரான் கண் அயர்ந்து இருந்தார். அப்போது தேவர்கள் மயிற்பீலியான விசிறி கொண்டு வீசினர். அம்பிகை தனது மடியில் சிவபிரானின் தலையைத் தாங்கிக் கொண்டார். அசுவனித் தேவர்கள் ஆலவட்டம் வீசினர். பிரமன், திருமால் அருகே நின்று வணங்கியவாறு நின்றனர்.

இத்தகைய அரிய காட்சியை அபூர்வமாக ஆந்திர மாநிலத்தில் உள்ள சுரட்டப்பள்ளி என்னும் தலத்தில்

சிவபெருமான் சயன கோலத்தில் இருப்பதைக் காணலாம். இங்குப் பெரிய மேடையில் சுமார் 15 அடி நீள சுதைத் திருமேனியோடு தலையை அம்பிகை மங்களேசுவரியின் மடியில் வைத்துள்ளார். முகம் வானத்தைப் பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது. அம்பிகை தேவர்களுக்கு அபய முத்திரை காட்டுவதுடன் மலரையும் ஏந்தியுள்ளார். குபேரன் வெண்சாமரம் வீசுகின்றான். மேலே கந்தருவர் இசை பொழிகின்றனர். அகத்தியர், கௌதமர், புலத்தியர், தும்புரு, வசிட்டர், விசுவாமித்திரர், இந்திரன் முதலாய தேவாதி தேவர்கள் காலடியிற் நிற்கின்றனர். அம்பிகையின் வலப்புறம் சந்திரனும் இடப்புறம் சூரியனும் தம் பிரபா மண்டலத்துடன் காட்சியளிக்கின்றனர்.

இப்படி ஓர் அரிய காட்சியை வேறு எங்கும் காணஇயலாது. தமிழகத்தில் சிவபெருமான் படுத்த நிலையிலான திருவுருவத்தைக் கோயில்களில் காணக்கூடவில்லை. ஆனால், சென்னை திருவான்மியூர் என்ற தேவாரம் பாடப்பெற்ற தலத்தில் அம்பிகை சந்நதி மகா மண்டபத்தின் வடக்குக் கூரைப் பக்கத்தில் புராணம் கூறும் வகையிலான சிற்பத் தொடர் அமைக்கப்பட்டுள்ளது காணலாம்.

ஆகவே சிவபிரானின் இத்திருக்கதையும் பாற்கடல் நிகழ்வுடன் தொடர்புடைய தன்மையை உணரலாம்.

அமிர்த மதனமும் காஞ்சிபுரமும்

கூர்ம சங்கார மூர்த்தி

அமிர்தம் பெற்று அமரர்கள் சுகமாகக் களித்திருந்த ஒரு நாளில் தேவர்கள் ஒன்றுகூடித் திருமாலிடம் பாற்கடல் கடையும்போது அவர் எடுத்த கூர்மாவதார வடிவத்தை மீண்டும் எடுத்துக்காட்ட வேண்டினர். திருமாலும் முன் போலவே ஆமை வடிவம் கொண்டார். வடிவு மாறிய சிறிது நேரத்தில் அமிர்தம் தன்னால்தான் கிடைக்கப் பெற்றது என்ற எண்ணம் மேலோங்க மேலோங்க அவர் மனதில் அகந்தை தோன்றலாயிற்று. அதன் காரணமாகப் பாற்கடலில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்த திருமால் உலகமே அழியும்படியாகப் பாற்கடலைக் கலக்கத் தொடங்கினார்.

ஆர்வத்தின் காரணமாக தேவர்கள் வேண்டிய வேண்டுகோள் விபரீதமான வகையில் திசை திரும்பி விட்டதை எண்ணி மனம் கலங்கினர். அனைவரும் அஞ்சிப்போய் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

சிவபெருமான் கயிலையில் இருந்து வந்து பாற்கடலைக் கலக்கிக் கொண்டிருக்கும் திருமாலைப் பாற்கடலை விட்டு வந்தருள பலமுறை வேண்டினார். கூர்ம வடிவில் இருந்த திருமால் இதற்குச் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை. இதனால் சிவனுக்குச் சினம் மிகுந்தது. சிவன் பெருவடிவம் எடுத்து (விஸ்வரூபம்) ஆமை வடிவாக விளங்கும் திருமாலைப் பிடித்து அதன் ஓட்டைப் பறித்துத் தன் மார்பில் பதக்கமாக அணிந்து கொண்டார்.

அதன் பின்னரே திருமால் தன் விளையாட்டை நிறுத்திக் கொண்டு சிவபிரானைத் துதிக்கலானார். காஞ்சிபுரம் தனில் முருக்கமரத்தின் கீழ் சோதி வடிவமாக விளங்கும் சிவ பிரானையே திருமால் துதித்து வரலானார். ஆமை வடிவம் கொண்ட திருமாலால் பூசிக்கப் பெற்றதால் இக்கோயில் கச்சபேசுவரர் கோயில் என்று அழைக்கப்படுகின்றது.

ஆமை ஓட்டைப் பறித்து அணிந்த சிவபெருமானை சிவபராக்கிரமம் கூர்ம சங்காரி எனப் போற்றுகின்றது. கூர்ம சங்காரியாக எழுந்தருளியுள்ள சிவபிரான் வாள், சூலம், கேடயம் ஏந்தியவராய் விளங்குகிறார்.

இவ்வாறு பாற்கடல் கடைந்த நிகழ்வுடன் இக்கதை தொடர்பு பெற்றிருப்பதைக் காணலாம்.

ஆலங்குடி குருபகவான்

பாற்கடலில் எழுந்த ஆலகாலத்தைச் சிவபெருமான் அருந்திய இடம் ஆலங்குடி ஆகும். ஆலகால விடத்தை உண்ட சிவபெருமான் இங்கே ஆபத்சகாயேசுவரர் ஆக சிறப்புப் பெயர் பெற்று விளங்குகிறார்.

நவகிரகங்களைப் படைத்த பரமேசுவரனே ஆலங்குடியில் தட்சிணா மூர்த்தியாக, குருவாக விளங்குகிறார் என்கிறது இத்தல புராணம்.

இந்த ஊரில் எழுந்தருளிய பரமேசுவரன் ஆலகால விடத்தை உண்டதால் இந்த ஊர் நான்கு வீதிகளிலும் நல்ல பாம்பு கடித்து யாரும் இறந்ததே இல்லை என்பது இவ்வூரில் ஒரு செவிவழிச் செய்தியாகப் பேசிக் கொள்ளப்படுகிறது.

இத்தலம் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்குப் பதினேழு கல் தொலைவில் உள்ளது.

கும்பகோணமும் அமிர்த மதனமும்

ஆதிகாலத்தில் உலகம் பிரளயம் நேரிடுவதற்கு முன் அப்பிரளயத்தினால் சகல உயர்களும் அழிந்து போகக்கூடிய நிலைமையைக் குறித்துப் படைப்புக் கடவுளாகிய பிரம்ம தேவன் கவலையுற்று அதைத் தவிர்க்கக் கருதி, கைலாச நாதனான சிவபிரானைக் குறித்துத்துதித்து நிற்கலானார். சிவபிரான் பிரம்ம தேவனின் வேண்டுகோளுக்கு இணங்கி அவ்வித அழிவை நிவர்த்திக்கும் பொருட்டு சிருஷ்டி பீஜத்தைப் பிரம்மதேவரிடம் அளித்து அதை அமிர்தத்துடன் கலந்து பிசைந்து அமிர்தம் நிறைந்த ஓர் குடத்துள் வைத்து அலங்கரித்து மூடி, அதை மகாப்பிரளயத்தில் விட்டு விடும்படி சிவன் பிரம்மாவிடம் சொல்லவும் அவ்வாறே பிரம்மதேவனும் பிரளய காலத்தில் அந்த அமிர்த குடத்தை மிதக்க விடடார். அந்தக் கும்பம் இந்தத் தலத்தின்கண் மிதந்து வந்தது.

பிரளய முடிவில் பிரம்மதேவர் முதலியோர் அக்குடத்தைக் கண்டு களித்து ஒருமுறை சிவபிரானைத் துதிக்கவும் அவரும் ஒரு வேடனாக வடிவு எடுத்து அங்குத் தோன்றினார். ஓர் அம்பு எடுத்து அவ்வமிர்த கும்பத்தின் மூக்கை உடைக்கவே அதனுள் இருந்த அமிர்தம் இப்பிரதேசத்தில் பரவியது பற்றி இந்தத் தலத்திற்கு 'கும்ப கேணம்' எனப் பெயர் வரலாயிற்று. கேணம் என்றால் குறைபடுதல்; கும்பம் குறைபட்டதால் கும்பகேணம் என இருக்க வேண்டிய பெயர். மருவி கும்பகோணம் ஆனது.

அக்குடத்தினின்றும் வெளிப்பட்ட அமிர்தம் இரு குளங்களாகத் தங்கலுற்றது. அவைகளில் ஒன்று மகாமகக் குளம். மற்றொன்று தாமரைக் குளம்.

சிவபெருமானால் உடைக்கப்பட்ட குடத்தின் பாகங்கள் அதிலிருந்த அமிர்தத்தைக் கொண்டே பிசையப் பெற்று ஒரு

இலிங்கமாக அமைக்கப்பட்டது. அதற்குக் கும்பேசர் என்று பெயர். இந்நகரம் சுற்றி அமுத கலசத்திற் இருந்த அலங்காரச் சாமான்களான தேங்காய், மாவிலை, வில்வம், பூணூல் ஆகியன சிவாலயங்களாக இன்றும் எழும்பி நிற்கின்றன.

இறவாப் பேற்றையும் நோய் அகற்றும் தன்மையும் பெற்ற அமிர்தம் பட்ட இடம் என்பதனால் பிறவியால் ஏற்படும் பாவங்கள் இங்கே உள்ள மகாமக குளத்தில் நீராடத் தீரும் என மக்கள் எண்ணுகின்றனர்.

நவகன்னிகைகளாகிய ஒன்பது நதிகள் - கங்கை, யமுனை, நர்மதை, சரசுவதி, கோதாவரி, பயோனி, காவேரி, சரயூ, கன்யா என்ற நதிகள் சகல ஜனங்களும் தங்கள் தங்கள் பாபங்களைப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு தங்கள் பாவங்களை எவ்விதம் போக்கிக் கொள்வது என்ற கவலை நவகன்னிகைகளுக்கு ஏற்பட்டு அவர்கள் பரமசிவனைக் குறித்து வேண்டிக் கொள்ளவே சிவனாரும் அவர்களை நோக்கி இத்திருத்தலத்தில் பன்னிரண்டு வருடங்கட்கு ஒருமுறை பிரகஸ்பதி என்னும் குரு சிம்மராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் மக நட்சத்திரத்தில் அன்று இம்மகாமகக் குளத்தில் நீராடித் தங்கள் பாபங்களைப் போக்கிக் கொள்ளும்படி கூறி அருளினார்.

அவ்வகையில் இத்தல வரலாறும் அமிர்த மதனத்தோடு தொடர்பு பெற்றிருப்பதை அறியலாம்.

பொதுவாக விடம் தாக்கியவர்களுக்கு நல்லெண்ணெய் பண்டம் அளிக்கக் கூடாது என்பர். ஏனெனில் எண்ணெய் விட வேகத்தை அதிகப்படுத்துவதாகும். ஆனால் சிவபெருமானோ இயல்புக்கு மாறாக விடம் கொண்ட மேனியிலேயே எண்ணெய்தனையும் ஏற்றுக்கொண்டு மக்களுக்கு அருள்பாலிக்கும் சிறப்பு எண்ணி இன்புறத் தக்கது.

மண்ணிப்படிக்கரை நீலகண்டர்:

இந்நாளில் இலுப்பைக்குடி என வழங்கும் இத்தலத்திற்கு வைத்தீசுவரன் கோயில் - திருப்பனந்தாள் சாலையில் உள்ள இளந்தோப்பு வழியாக பாப்பாக்குடி

என்ற ஊரை அடைந்து அங்கிருந்து நடந்து செல்ல வேண்டும்.

பஞ்ச பாண்டவர் இந்த ஆலயத்தைப் பௌர்ணமி நாளில் வழிபட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. இங்குத் தருமன் திரௌபதியோடு மூலவரான நீலகண்டேசுவரரை வழி பட்டார். வீமன் மதகீசுவரரையும் அருச்சுனன் படிக்கரை நாதரையும், நகுலன் பரமேசுவரரையும், சகாதேவன் முத்தீச்சுவரரையும் வழிபட்ட திருத்தலம். இவ்வாறாக இங்கு ஐந்து லிங்கங்கள் உள்ளன.

சிவபிரான் உண்ட நஞ்சினை அமுதமாக்கிய அன்னை பார்வதி அதனைச் செய்த இடம் இத்தலம் என்பதனால் இங்குள்ள அம்பிகை அமிர்தகரவல்லி என்று அழைக்கப்படுகிறாள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இப்பெருமானை 'நீலமிடற்று எம்பிரான்'' என்று பாடித் துதிக்கின்றனர். இவ்வூர்க் கல்வெட்டுகள் இறைவனை ஸ்ரீ நீலகண்டம் உடையார் என்றே குறிப்பிடுகின்றன.

கொங்கு நாட்டு நஞ்சுண்டேச்சரம்:

கோவை மாவட்டத்தில் உள்ள காரமடையில் கலைச்சிறப்பு வாய்ந்த நஞ்சுண்டேசுவரர் ஆலயம் ஒன்று உள்ளது. இது மதுரை சுந்தரேசுவரர் கருவறை போல எட்டு யானைகளால் தாங்கப் பெற்றதும் ஒரே பெருங்கல்லிலான அடித்தளத்தையும் உடையது.

கார்போன்ற கருத்த விடமானது மேகம் போல விரைந்து பரவி வந்து பின் அடங்கி சிவபெருமான் நெஞ்சில் இடம் கொண்டதாக எண்ணி இத்தலம் (கார்+அம்+அடைந்தபதி) காரமடைப்பதி என பெயர் பெற்றது. இறைவன் நஞ்சுண்டேசுவரர் என அழைக்கப்படுகின்றார்.

மகா பிரதோஷமும் அமிர்த மதனத்தின் தொடர்பும்

பாற்கடல் கடைந்தபோது வெளியான வாசுகியின் விடமான காளமும் பாற்கடலில் எழுந்த ஆலமும் இணைந்து ஆலகாலமாகப் புயல்போல கொடிய வெப்பமும் கரும்புகையும் கொண்டதாக மாறிமாறி உலகெங்கும் சூழ்ந்தது. இதற்கு அஞ்சிய தேவர்கள் அசுரர்கள் செய்வதறியாது தறிகெட்டு இடமும் வலமுமாக ஓடினர்.

இறைவன் சிவபிரான் எழுந்தருளி, அந்த நஞ்சினை உட்கொண்டு உலகைக் காப்பாற்றினார். இந்நிகழ்வே பிரதோசமாக இன்றும் சிவன் கோயில்களில் நடைபெறுகின்றன.

பாற்கடல் கடைந்தபோது விடம் வெளியேறியதும் தேவர்கள் அசுரர்கள் விடத்தைக் கண்டு அங்கும் இங்கும் ஓடியதும் இறைவன் காத்தருளியதும் ஆகிய நிகழ்வுகள் அனைத்தும் சூரிய மறைவுக்கு முன் 1½ மணி நேரத்தில் இருந்து தொடங்கி சூரிய மறைவுக்குப் பின் 1 மணி நேரம் வரை எனலாம். ஆகவே பிரதோஷ காலம் என்பது சுமார் 4.30 மணி முதல் இரவு 7.00 வரை எனலாம்.

வளர்பிறையின் திரயோதசியன்று ஒவ்வொரு மாதமும் அதேபோன்று தேய்பிறை திரயோதசியன்றும் மேற்குறிப்பிட்ட மாலைக் காலத்தை பிரதோஷம் என சிறப்பாகக் கூறுவர்.

சிவபிரான் நஞ்சினை உண்ட கிழமை சனிக்கிழமை என்பதனால் சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் மகாபிரதோஷம் எனச் சிறப்புடன் அழைக்கப்படுகின்றது. இன்னும்

சிலர் சிவராத்திரிக்கு முன்தினம் வருகின்ற பிரதோஷத்தையே மகாபிரதோஷம் எனக் கூறுவர்.

தொடர்ந்து பன்னிரெண்டு ஆண்டுக்காலம் பிரதோஷ நாளில் சிவாலய தரிசனத்தை முறைப்படி செய்பவர்கள் சாரூப பதவி பெற்று, சிவகணங்களாகத் திகழ்வர் என்று புராணங்கள் இயம்பும்.

சிவபெருமான் ஆடிய நடனங்கள் பல. அவற்றுள் கால்மாறியாடிய நடனம், பாண்டரங்க நடனம், கொடி கொட்டி நடனம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம்,. வீராட்டாகாசம், ஆனந்த தாண்டவம், அநவரத தாண்டவம், மகாசங்கார நடனம் ஆகியன அவற்றுள் சில. இத்தகைய நடனங்களை இறைவன் புரியும் இடங்கள் அறுபத்து நான்கு என நூல்கள் நவிலும். இவை அன்றுயும் சப்தவிடங்களாய் திருவாரூர், திருநள்ளாறு, திருநாகை, திருவாய்மூர், திருமறைக்காடு, திருகோளிலி, திருவொற்றியூர் ஆகிய ஏழு இடங்களிலும் முறையே அசபா நடனம், உன்மத்த நடனம், அலைநடனம், கமல நடனம், அமிர்த நடனம், பரமர நடனம், வகுள நடனம் ஆகிய நடனங்களைப் புரிந்தருளியுள்ளார்.

பிரதோஷ காலத்தில் இறைவன் ஆடிய திருநடனக் காட்சியைக் குறிப்பிடும்போது வடமொழி பிரமோத்தர காண்டம் பின்வருமாறு வருணிக்கிறது.

''வாக்தேவீ த்ருத வில்லகீ சதமகோ
வேணும் ததத்ஃ பத்மஜஃ
தாலோன் னித்ரகரோஃ ரமா பகவதீ
கேயப் ரயோ காஞ்சிதா
விஷ்ணுஸ் ஸாந்த்ரம்ரு தங்க வாதனபடுர்
தேவாஸ் ஸமந்தாத் ஸ்திதாஃ
ஸேவந்தே தமனுப் ரதோஷ ஸமயே
தேவம் ம்ருடானி பதிம்''

இதன் பொருள்: சூலம் சுழற்றி திருநடனம் புரியும் சிவபிரானுக்குக் கலைமகள் வீணை வாசிக்கவும், இந்திரன் குழல் ஊதவும், பிரம்மதேவர் தாளம் இசைக்கவும், இலக்குமி கீதம் பாடவும் திருமால் சிறந்த மத்தளம் வாசிக்கவும், பார்வதியின் கணவராகிய சிவபெருமானை ஒவ்வொரு பிரதோஷ காலத்திலும் தேவர்கள் எல்லாப் பக்கமும் சூழ்ந்து நின்று கொண்டு வாழ்த்தி வணங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்பான நடனத்தைக் காணும் பாவனையில் சிவன் கோயிலில் மூலத்தானத்திற்கு எதிரேயுள்ள திரு இடபதேவரின் இரு கொம்புகளின் நடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசனம் செய்தல் வேண்டும். சிவபெருமான் நடனமாடும்போது அவருடைய திருநடனக் காட்சி மட்டும் அல்லாது முப்பத்து முக்கோடித் தேவர்களும் காக்கும் கடவுளான திருமால், படைக்கும் கடவுளான பிரமன் ஆகியோரின் காட்சியும் அருளும் கிட்டும் என்பதே இப்பிரதோச வழிபாட்டின் பயனாகும்.

❋ ❋ ❋

சோம சூக்த வலம் அல்லது பிரதோஷ வழிபாட்டு முறை

பிரதோஷ காலத்தில் சிவபெருமானையும் நந்தியம் பெருமானையும் வலம் வருவதை 'சோம சூக்த வலம்' என்று கூறுவர். இம்முறைப்படித் திருக்கோயிலில் பின்பற்ற வேண்டிய வழிபாட்டு முறைகள் வருமாறு:

1. முதலாவது திருநந்தி தேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்துச் சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசிக்க வேண்டும்.

2. பின் இடப தேவரிடமிருந்து வலமாகவே சென்று வடதிசையில் சேர்ந்து கோமுகத்தைக் கடவாது முன்சென்ற வழியே திரும்பி வந்து திருநந்தித் தேவரைத் தரிசித்து (3) அங்கு நின்றும் பலிபீடத்தைச் சுற்றிக் கொண்டு இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசியாது (4) பலிபீடத்தைச் சுற்றிக் கொண்டு வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து கோமுகம் கடவாது அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசியாது (5) பலிபீடத்தைச் சுற்றிக் கொண்டு இடமாகச் சென்று சண்டேசுவரரை தரிசித்து, திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து (6) பின்பு பலிபீடத்தைச் சுற்றிக் கொண்டு வலமாக வந்து சிவலிங்கப் பெருமானைத் திருநந்தித் தேவரின் இருகொம்புகளின் நடுவே பிரணவத்தோடு சிவசிவ என்று சொல்லி வணங்குதல் வேண்டும். (7) இறுதியில் வீடு திரும்பும்போது ஆத்ம பிரதட்சணம் செய்தல் வேண்டும்.

இதனை வேறு ஒரு வகையாகவும் இவ்வழிபாட்டு முறையைக் கூறுவர். அதன் விபரம் வருமாறு: முதலில்,

திருநந்திதேவரைத் தரிசித்து அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, சிவ சந்நிதானத்துள் புகுந்து சிவலிங்கத்தை வணங்கி வலமாக கோமுகம் (அதாவது அபிடேக நீர் விழும் இடம்) வரையில் சென்று அங்குள்ள சண்டேசுவரரை தரிசித்து மீண்டும் இடமக வந்து சிவபெருமானை வணங்கி, பலிபீடம், துவஜஸ்தம்பம் (கொடிமரம்) தனையும் இடமாகச் சுற்றி மீண்டும் திருநந்தி தேவரை வணங்கி இடமாகச் சிவ சந்நிதானத்துள் புகுந்து சிவலிங்கப் பெருமானை வணங்கி, இடமாக கோமுகம் வரை சென்று, சண்டேசுவரரை வணங்கி, மீண்டும் வலமாக வந்து சிவபெருமானை வணங்கி கொடிமரம் வரையில் வந்து அட்டாங்க நமஸ்காரம் என்னும் உடற் மண்ணில் படும்படி விழுந்து வணங்கி நிறைவு செய்தல் நன்மை பயப்பதாகும்.

அமிர்த மதனத்தில் தோன்றிய உயர் செல்வங்கள்

தன்வந்திரி:

தேவர்களும் அசரர்களும் நோய்களில் இருந்தும், துன்பங்களில் இருந்தும் விடுபெற வேண்டும் என்ற பேரவாவுடன் திருமாலின் அருளோடு பாற்கடல் கடையத் தொடங்கினர். விஷ்ணு உலக நன்மை கருதி, தன் அம்சங்களில் ஒன்றான தன்வந்திரியாக அவதாரம் செய்யலானார்.

தேவ மருத்துவரான தன்வந்திரி ஒரு கையில் கமண்டலம் ஒரு கையில் கதை மற்ற இரு கைகளில் ஒரு கையில் அமிர்த கலசமும், பிறிதொரு கையில் சீந்தில் கொடி, அட்டைப்பூச்சி போன்ற பொருள்களும் ஏந்தியவாறு நீலமேனி நிறத்துடன் மஞ்சள் நிற பீதாம்பர ஆடை அணிந்து கடல் அலைகள் மீது தோன்றினார்.

இவரை ஆயுர்வேதத்தின் கடவுளாகவும் முதல் வைத்தியராகவும் வேதம் சொல்லும். இவர் அருளிச் செய்த நூலாக, தன்வந்திரி நிகண்டு, வைத்திய சிந்தாமணி, சிமிட்டு ரத்தனச் சுருக்கம், கலைஞானம் முதலிய நூல்கள் என அபிதான சிந்தாமணி கூறும்.

ஆகவே, ஆயுர்வேதத்தின் கடவுள் எனப் போற்றப்படும் தன்வந்திரி வரலாறும் பாற்கடல் கடைதல் நிகழ்வுடன் தொடர்புடையது என்பது தெளியலாம்.

காமதேனு: இறையருள் பெற்றுப் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் எழுந்தது காமதேனு என்னும் தேவபசு ஆகும். காமம் என்பதற்கு விருப்பம் என்று

பொருள். விரும்பிய தெல்லாம் அளிக்கவல்ல இந்த தெய்வீகப் பசுவை இருடிகள் ஏற்றுக் கொண்டனர். பெண்ணின் முகத்தையும், பெண்களுக்குரிய தனங்களையும் ஆவினத்திற்குரிய மடியையும் தலையில் கொம்பினையும் பொன்மயமான இறக்கைகளையும் அழகிய வண்ணமயமானத் தோகையையும் பெற்றுத் திகழ்வது.

யாகங்களுக்கு உரிய (ஹவிஸ்) அவிர்பாகமாகிய நெய்யையும் பிறபொருள்களையும் இப்பசு தருவதாகும். இப்பசுவின் தேகத்தில் தேவர் விரும்பி வாழ்வார். இவற்றின் கொம்புகளினடியில் பிரம விஷ்ணுக்களும் கொம்புகளின் நுனியில் தீர்த்தங்களனைத்தும் தங்கும். சிரத்திற் சிவ மூர்த்தியும், நடுநெற்றியிற் சக்தியும், மூக்கின் நுனியில் கந்த மூர்த்தியும், மூக்குக்குள் இந்திரனும் கன்னங்களின் நடுவில் அச்சுவினி தேவர்களும் இரண்டு கண்களில் சூரிய சந்திரரும், தந்தத்தில் வாயுவும், நாவில் வருணனும் நெஞ்சிற் சரசுவதியும் மணிகளில் இயமனும் இயக்கரும் உதட்டில் சந்தியா தேவதைகளும் முசுப்பில் அருக்கத் தேவரும் மார்பில் சாத்தியரும் நான்கு கால்களில் வாயுவும் முழங்காலிலும் குளம்பு நுனிகளிலும் தன்வந்திரியும் குளம்பின் மேல்பகுதியில் அரம்பயரும் முதுகில் உருத்திரரும், சந்துகளில் அட்டவசுக்களும் யோனியில் சத்தமாதர்களும் அபானத்திற் றிருமகளும் அடிவாலில் நாகதேவதைகளும் வாலின் உரோமத்தில் ஆதித்தரும் கோசலம் அல்லது கோமியத்தில் ஆகாய கங்கையும், வயிற்றில் பூமிதேவியும் தனத்தில் எல்லாச் சமுத்திரங்களும் வயிறு இதயம் முகம் ஆகிய பகுதிகளில் காருகபத்தியம் முதலிய முத்தீகளும் இடம் பெற்று நற்பலன்கள் நல்குவதாகத் வேதம் கூறும்.

நந்தை, சுபத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்ற பஞ்ச பசுக்களாகவும் காமதேனு விளங்குவதாகக் கூறுவர்.

இவ்வாறு காமதேனு பசுக்களில் சிறந்ததாகக் கருதப்படுகிறது. மேற்சொன்ன அம்சங்கள் அத்தனையும் பசுக்குண்டு. ஆகையால்தான் இன்றும் பசு தெய்வீகத் தன்மை பெற்றதாகக் கருதப்படுகின்றது.

உச்சை சிரவஸ்: இது வெள்ளை நிறமான குதிரை. பொன்மயமான ஒளியுடன் தோன்றியது. பறக்கும் ஆற்றல் படைத்தது. இதனை மாபலி தன்வயப்படுத்திக் கொண்டதாகவும் இந்திரன் தனதாக்கிக் கொண்டதாகவும் இரு கருத்து உண்டு.

ஒற்றைக் கொம்பும் சிறகுகளும் கொண்டது. இதுபெற்ற கொம்பைக் கொண்டு பலரைத் துன்புறுத்தியதால் பின்னர் இறைவனால் கொம்பு அகற்றப்பட்டதாகவும் அதற்குப் பின்பு படைக்கப்பட்ட குதிரை இனத்திற்கு கொம்பு கொடுக்கப்படவில்லை என்றும் அதன் காரணமாகவே 'குதிரையின் குணம் அறிந்துதான் கொம்பு தரப்படவில்லை' என்ற பழமொழியும் மக்களிடையே தோன்றியதாக செவிவழிச் செய்தி ஒன்று உண்டு.

ஐராவதம்: பாற்கடலில் தோன்றிய விந்தையான பொருட்களில் ஐராவதமும் ஒன்று. வெண்மை நிறமும் நான்கு கொம்புகளும் பெருத்த உடம்பும் பெற்றதாக விளங்குவது. இந்த யானையை இந்திரன் ஏற்றுக் கொண்டான். அதுமுதல் அந்த யானை அவனுக்கு வாகனமாயிற்று.

இதுவே முருகனின் தேவியான தெய்வயானையை அன்புடன் வளர்த்ததாகும். சிறந்த சிவபக்தியுடைய இந்த யானை அனேகத் திருத்தலங்களில் சிவலிங்கம் அமைத்துப் பூசை செய்துள்ளதாக புராணங்கள் கூறும்.

கற்பகத் தரு: பாற்கடலில் தோன்றிய சிறப்புறு பொருட்களில் கற்பகத்தருவும் ஒன்று. இதோடு கூடி இன்னும் நான்கு தருக்கள் தோன்றின. ஆகவே இப்பஞ்ச தருக்கள் முறையே ஹரிசந்தனம், கற்பகம், பாரிசாதம், மந்தாரம், சந்தனம் என்பவைகளே ஆகும். இவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தது கற்பகம் ஆகும்.

கற்பக மரம் தன் நிழலில் இருந்து வேண்டுபவர்க்கு வேண்டியதெல்லாம் கொடுக்கும் ஆற்றலுடையது. இது எட்டுக் கிளைகளைக் கொண்டதாகும். இதனைச் சுற்றிலும் காமவல்லி என்னும் கொடி படர்ந்துள்ளதாகக் கூறுவர். இச்செல்வத்தை இந்திரன் தனது சோலையில் சேர்த்துக் கொண்டான்.

ஏனைய மரங்கள் பலன்தரு மலர்களைத் தந்து அதனைக் கொண்டு துதிப்பார்க்கு நன்மை செய்வனவாக அமைந்துள்ளன.

கௌஸ்துபம்: பாற்கடலில் தோன்றிய ஒளிவீசும் மாலை. இது ஒளிப் பேழைபோன்று மிகுந்த ஒளியை உடையது. இது தன்னை அணிபவர்க்கு அளவற்ற ஆற்றலையும் வெற்றியையும் கொடுக்க வல்லதாகும். இதனைத் திருமால் ஏற்றுக் கொண்டார்.

மூதேவி: பாற்கடல் தந்த செல்வத்தில் மூதேவியும் ஒருத்தி. அழகில் குறைந்தவளாகவும் சோம்பல், ஆற்றல் இன்மை, தூக்கம் ஆகியவற்றைத் தரவல்ல இவள் யராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இவளைப் பொதுவாக மூத்தாள் என்று அழைப்பர். காளாஞ்சநிறம் (கருமை நிறம்) இவ்ளுடையது. சர்ப்பமே இவளது ஆபரணம். கழுதை இவளது வாகனம். காகம் இவளது கொடியாகும்.

அரச மரத்தின் நிழல், விளாமரத்தடி, விளக்கின் நிழல், மனிதர் நிழல், ஆகாரம் இல்லாத அல்லது உண்ணாத பசியோடு இருக்கும் வேதியனின் நிழல், உண்ட நீர்ச் சேடம், ஆடை தோய்த்த நீர், விளக்குமாற்றின் புழுதி, மயிர்ப் புழுதி, கழுதை, நாய் இவை புரளுவதால் ஏற்படும் புழுதி, ஆட்டுத்தூசு போன்ற இடங்களில் இவள் வாசம் செய்வாள் எனப் புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

வாருணி அல்லது சுராதேவியும் சுராவும்:

அடுத்துத் தோன்றியது சுரா என்னும் மதுவும் அதன் அதிதேவதையான சுராதேவி என்ற வலிய சிறந்த அழகுள்ள பெண் கணக்கற்ற தோழியருடன் தோன்றினாள். அவளையும் அவளுடைய தோழியரையும் அசுரர்கள் ஏற்றுக் கொண்டனர்.

சந்திரன்: இவர்களை அடுத்து சந்திரன் அமுத கலைகளுடனும் விடம் நீக்கும் மூலிகைச் செடிகளை ஏந்தியவனாக வெளிப்பட்டான். நீலோற்ப மலர்களையும் காமசாத்திரச் சுவடிகளையும் கையிற் கொண்டவனாக விளங்கினான்.

ஸ்யமந்தக மணி என்ற தினமணி தோன்றியது. இதனைச் சூரியன் ஏற்றுக் கொண்டான். இது 100 கோடி சூரியப் பிரகாசமுடையது என்பர். இதனைத் தமிழில் சிந்தாமணி என்பர்.

இவ்வாறாகப் பாற்கடலில் இருந்து எண்ணற்ற பொருட்கள் தோன்றின. அவ்வவற்றிற்கு ஒரு கதை ஏற்பகளும் ஏற்பட்டு அவைகள் பாற்கடல் கடைந்த வரலாற்றிற்குக் கிளைக் கதைகளாக விளங்குவதைக் காணலாம்.

ஆனைக்குத் திருமால் அருளியது

ஒரு சமயம் பாண்டி நாட்டின் மன்னனாகத் திகழ்ந்த இந்திரத்யுமனன் என்பான், மாமுனிவர் அகத்தியர், அவன் நாட்டுக்கு எழுந்தருளியபோது தக்கமுறையில் வரவேற்புச் செய்யவில்லை. இதனால் கோபம் கொண்ட அகத்தியர் அவனைக் காட்டு ஆணையாகத் திகழ ஆனையிட்டார். தீவிர திருமால் பக்தனான அவன், காட்டு யானையாகத் திரிகூடமலை பக்கம் திரியலானான்.

'ஹீஹீ' என்னும் பெயரில் விளங்கிய கந்தருவன் ஒருவன் தேவரிஷி ஒருவரை ஏளனம் செய்ததனால் அவரால் முதலையாகும்படி சமிக்கப்பட்டான். அதன்படி அவன் ஒரு குளத்தில் வாழ்ந்து வந்தான்.

காட்டு யானையாகத் திரிந்த இந்திரத்யூமனன் திருமாலின் தொண்டனாக இருந்தவன். ஆகவே அவன் காலை மாலை இருபொழுதும் இறைவனை வணங்காது போகமாட்டான். அன்று அதேபோல் திருமாலுக்கு நீர் எடுத்து வரவேண்டி கந்தருவன் முதலையாகக் கிடக்கும் குளத்திற்கு வந்தான். யானை நீரில் இறங்கியதும் முதலை அதன் காலைப் பற்றியது. யானை 'ஆதிமூலமே' என அலற திருமால் உடனே அக்குளத்தருகே தோன்றித் தன் சக்கரத்தால் முதலையைத் துண்டித்தார். இதன்காரணமாக முதலையாய் இருந்த கந்தருவன் இறைவன் அருளால் சாப விமோசனம் பெற்றான்.

திருமாலின் அருள் பெற்ற யானையும் முக்தி அடைந்தது.

நூலில் கையாளப் பட்டுள்ள உவமைவழியாக கூறப்பட்ட புராணக்கதைகள்

முன்னொரு காலத்தில் யானை வடிவம் கொண்ட கயாதரன் என்னும் ஓர் அசுரன். நான்முகனை நோக்கித் தவம் செய்து அழியாத வலிமை, வாழ்நாள், செல்வம் முதலிய பல வரங்களைப் பெற்று மூன்று உலகங்களிலும் சுற்றித் திரிந்து எல்லோருக்கும் துன்பம் செய்து வந்தான். திசைக் காவலர்களை வெருட்டினான்; இந்திரன் ஏறிச் செல்லும் ஐராவதத்தின் வாலைப் பிடித்துச் சுழற்றி எறிந்து இந்திரனும் தேவர்களும் புறங்கொடுத்து ஓடச் செய்தான். தேவர்களும், முனிவர்களும் மற்றுமுள்ளோரும் பெரு நடுக்கம் கொண்டு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் காசிப் பகுதியில் அடைக்கலம் புகுந்தார்கள். தியாதரன் தான்பெற்ற வரங்கள் எல்லாம் சிவபிரான் முன்னம் நில்லாது என்பதை அறவே மறந்தும், தன்வெற்றியிலும் வலிமையிலும் செருக்குற்றும் அரனின் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்தவர்களையும் கொன்று சிதைக்க எண்ணி திருக்கோயிலின் முன்பு சீற்றத்துடன் சென்று இடிபோலப் பெரு முழக்கம் செய்தான்.

இச்செயல் கண்டு சீற்றம் கொண்ட சிவபிரான் கண்டார் நடுங்கும் தோற்றத்துடன் கயாதரன் முன் தோன்றினார். முடிவு நெருங்கிய படியால் சிவபெருமானுடன் போர் செய்வதற்காகத் துடித்து ஓடினான். சிவபெருமானின் திருவடியால் உதைக்கப்பெற்றுப் பதைபதைத்துக் கீழே விழுந்தான். அவ்வாறு விழுந்த கயாசுரனாகிய யானையின் தலையை ஒரு திருவடியாலும் தொடையை மற்றொரு திருவடியாலும் மிதித்துக்கொண்டு திருக்கைகளின் நகங்களால் முதுகில் கிழித்து நான்கு கால்களும் பக்கங்களில் பொருந்தும் படித்தோலை உரித்தார். இதைக்கண்டு உமையம்மையும் நடுங்கினார். பெருமானின் உக்கிரத் திருமேனியின் பேரொளியால் உயிர்களின் கண்கள் பார்வையை இழந்தன. ஒளியின் கொடுமையைக் குறைத்து, உயிர்களின் கண்ணொளி மயக்கத்தைப் போக்கத் திருவுளங் கொண்டு உரித்த யானைத தோலைத் திருப்புயத்தின் மேல் போர்த்துக் தன்கடுவொளியை மாற்றினார். கயாசுரன் இவ்வாறு அழிந்து பட்டதைக் கண்டு விண்ணுலகே மகிழ்ந்தது.

மிக மிகப் பழங்காலத்தில் மிருகண்டு முனிவரும் அவருடைய மனைவி மருத்துவதியும் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து எல்லா வித நற்குணங்களும், பேரழகும், சிவனடிமறவாத சிந்தையும் உடைய ஓர் உன்னத ஆண்மகவைப் பெற்றனர். அக்குழந்தையும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வரலாயிற்று. நாட்கள் ஆக ஆக முனிவரையும் அவர் துணைவி யாரையும் கவலை வாட்டத் தொடங்கியது. அவர்கள் துயரத்திற்கு யாது காரணம் என சிறுகுழந்தையான மார்க்கண் டேயன் பலமுறை வினவியும் பெற்றோர்கள் கூறத் தயங்கினர்.

இறுதியில் இறைவன் மீது பாரத்தைப் போட்டு விட்டுக் குழந்தை மார்க்கண்டேயனிடம் அவன் வாழ்நாள் குறித்து, அன்று இறைவன் சொன்னதைச் சொல்லலாயினர். பதினாறு வயது வந்தவுடன் மார்க்கண்டேயன் இறந்து படுவான் என்ற உண்மையை மிக்கத் துயரத்துடன் பெற்றோர் மார்க் கண்டேயனுக்கு கூறினர்.

மார்க்கண்டேயன் தன் தாய் தந்தைக்கு ஆறுதல் கூறிவிட்டுச் சிவனை நோக்கித் தவம் இருந்து இத்துயரத்தில் இருந்து முழுமையாக விடுதலை பெறுவதாகக் கூறி, மார்க்கண்டேயன் இடைவிடாது சிவபிரானைக் துதித்து வரலானான்.

காலன், மார்க்கண்டேயன் காலம் முடிவதை உணர்ந்து அவனை அழைத்துச் செல்ல, மார்க்கண்டேயன் இருக்கும் இடத்திற்கு அவனது பணியாளர்களை அனுப்பினான். ஆனால் மார்க்கண்டேயனின் தவ ஆற்றல், ாவரும் நெருங்க முடியவில்லை. பாசமும், தண்டமும் ந ழம் ஏந்தி, தன் வீரர்கள் சூழ இயமனே மார்க்கண் யனை அணுகி அழைத்தான். அச்சிறுவன் காலனின் அழைப்பைப் பொருட்படுத்தாது சிவபிரான் திருவடிகளைப் பற்றிக் கொண்டான். காலன் வெகுண்டு தன் பாசக் கயிற்றைச் சுழற்றி வீசினான். தன் அடைக்கலமாக உள்ள ஒருவன் மீது காலன் பாசம் வீசியதை அறிந்த சிவபிரான் எருமைக்கடா மீது அமர்ந்து இருந்து கொண்டு பாசக் கயிறு வீசிய காலனை, சிவபிரான் தன் இடது காலால் ஓங்கி உதைத்துத் தள்ளினார். காலன் தன் தவறு உணர்ந்தான். பின் சிவபிரானிடம் மன்னித்து அருள மன்றாடினான். சிவனார் நீண்ட ஆயுளை மார்க்கண்டேயனுக்கு நல்கியதோடு தர்மம் தவறாது நேர்மையோடு நடந்து கொண்ட காலனையும் 'தரும ராசன்' எனப் பாராட்டினார்.

துருவன் விண்மீன் ஆனது

வாசுதேவருடைய அம்சமாக விளங்கிய உத்தான பாதருக்குச் சுருசி, சுநீதி என்று இரு மனைவியர் இருந்தனர். சுருசி என்னும் இளைய மனைவியிடத்து மன்னன் உத்தானபாதன் அதிகமாக அன்பு செலுத்தி வந்தான். மூத்தவள் சுநீதிக்குப் பிறந்தவன் தான் துருவன்.

ஒரு சமயம், அரசன் உத்தான பாதன் சுருசியின் புதல்வன் உத்தமனைத் தன்மடிமீது வைத்துக்கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது சுநீதியின் புதல்வன் துருவன் அங்கே வந்தான். அவனும் அவன் தந்தையின் மடியில் அமர விரும்பி, தந்தையின் அருகே போகலானான். ஆனால் உத்தான பாதன் தனது மைந்தனை ஏறிட்டும் நோக்கவில்லை.

துருவனின் விருப்பத்தை உய்த்து உணர்ந்த சுருசி கர்வம் மிக்கவளாகி துருவனைப் பார்த்துக் கடிந்து பேசினாள். அவளின் பேச்சை மன்னனும் கேட்டுக் கொண்டு வீணே இருந்தான்.

தன் வயிற்றில் பிறவாத காரணத்தால்தான், துருவனை மன்னன் எடுத்துப் பாராட்ட வில்லை என்றும் அதனால் அரசர்க்கு அடுத்து உரிமை பூணும் தகுதியும் அவனுக்கு இல்லை என வாயிற்று எனவும் மறுபிறவியில் அவளுக்குப் புதல்வனாகப் பிறந்தால், அவன் எண்ணியது ஈடேறும் யென்றும் பலபடியாகப் பேசினாள்.

சிற்றன்னையின் இச்சொற்களால் பாதிக்கப்பட்ட துருவன் தன் தாயிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான்.

சுநீதி நடந்தவற்றை அறிந்து திசைமாறிச் செல்லும் தந்தையைத் திருத்தவும் தன்னுடைய தந்தையை அடுத்து அரசுப் பொறுப்பு ஏற்க வல்லமையைத் தரக்கூடியவர் திருமால் ஒருவரே எனக் கூறினாள்.

தாயின் சொல்லைக் கேட்டுத் துருவனும் காடு சென்று திருமாலை எண்ணித் தியானம் செய்யலானான். அப்போது நாரதர் தோன்றி, 'ஓம் நமோ வாசுதேவாய' என்ற மந்திரத்தைத் துருவனுக்கு உபதேசித்துக் கடுமையாகத் தவம் செய்யும்படி கூறினர்.

இவனது தவவலிமையால் வைகுந்தமே பக்தியின் அனலால் தாக்கப்பட்டது. திருமாலும் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்யும் துருவனின் ஆற்றலை எண்ணி வியந்து அவன் பக்தியை சிறப்பிக்கும் வண்ணம் சப்தரிஷிகள் கூட்டத்திற்கு அருகே என்றும் நின்று நிலவும் விண்மீனாக வரம் அருளி, அவன் வேண்டிய விருப்பங்களையும் நிறைவு செய்து ஆசிவழங்கி பாராட்டினார்.

பாடல் முதற்குறிப்பு அகராதி

❋ ❋ ❋

யாப்பும் இசையும் (அகராதி வடிவில்)

பா.எண்	தரு	விருத்தம்	இராகம் பெயர்
89	தரு	-	அடானா
67	-	விருத்	ஆனந்தபயிரவி
69	-	,,	,,
72	-	,,	,,
74	-	,,	,,
79	-	,,	,,
88	-	,,	,,
92	-	,,	,,
93	-	,,	,,
94	-	,,	,,
95	தரு	-	,,
98	-	,,	,,
105	-	,,	,,
108	-	,,	,,
109	-	,,	,,
110	-	,,	,,
111	-	,,	,,
113	தரு	-	,,
116	-	,,	,,
122	-	,,	,,
128	-	,,	,,
132	-	,,	,,
134	-	,,	,,

142	-	விருத்தம்	ஆனந்தபயிரவி
149	-"	"	
171	-	"	"
174	-	"	"
175	-	"	"
195	தரு	-	"
197	"	-"	
217	-	"	"
219	-	"	"
220	-	"	"
222	-	"	"
237	பத்தியம்	-	"
238	தரு	-	"
250	-	விருத்தம்	"
144	-தரு	-	உசாணி
190	தரு	-	எதுகுல காம்போதி
203	அகவல்	-	" "
212	தரு	-	கலியாணி
226	தரு	-	கலியாணி
5	தரு	-	காம்போதி
11	-	விருத்	"
12	தரு	-	"
13	-	விருத்	"
15	-	"	"
16	தரு	-	"
18	-	"	"
20	-	"	"
21	-	"	"
22	-	"	"

23	-	,,	,,
24	-	,,	,,
25	-	,,	,,
26	-	,,	,,
27	-	,,	,,
28	-	,,	,,
30	-	,,	,,
31	-	,,	,,
32	-	,,	,,
33	-	,,	,,
34	-	,,	,,
36	-	,,	,,
38	-	,,	,,
39	-	,,	,,
40	-	,,	,,
42	-	விருத்	காம்போதி
43	-	,,	,,
44	-	,,	,,
45	-	,,	,,
46	-	,,	,,
47	-	,,	,,
48	-	,,	,,
49	-	,,	,,
50	-	,,	,,
51	-	,,	,,
52	-	,,	,,
53	-	,,	,,
55	-	,,	,,
57	-	,,	,,
58	-	,,	,,

59	-	,,	,,
61	-	,,	,,
62	-	,,	,,
63	-	,,	,,
64	-	விருத்	,,
66	தரு	-	,,
70	தரு	-	,,
71	தரு	-	,,
83	-	,,	,,
117	தரு	-	,,
123	-	விரு	காம்போதி
124	-	,,	,,
125	-	,,	,,
126	-	,,	,,
127	-	,,	,,
129	-	,,	,,
133	-	,,	,,
135-	,,	,,	
141	-	,,	,,
157	-	+,,	,,
158	-	,,	,,
170	தரு	-	,,
172	-	,,	,,
194	-	,,	,,
215	-	,,	,,
249	-	,,	,,
198	தரு	-	குறிஞ்சி
97	தரு	-	,,
228	தரு	-	,,
248	தரு	-	,,

78	நொண்டி	-	,,
239	பத்தியம்		கெண்டை
241	இன்னிசை		கெண்டை
245	இன்னிசை		கெண்டை
251	தரு		கேதாளகவுளை
19	,,		,,
41	தரு		கௌளிபந்து
102	,,		,,
50	தரு		சகானா
7	தரு		சங்கரா பரணம்
29	-	விருத்	,,
84	தரு	-	,,
147	,,	-	,,
210	,,	-	,,
183	தரு	-	சபாஷ்டகம்
3	-	விருத்	சாவேரி
6	-	,,	,,
8	-	,,	,,
60	தரு	-	,,
77	-	விருத்	,,
80	-	,,	,,
82	-	,,	,,
85	-	விருத்	சாவேரி
86	தரு	-	,,
87	-	விருத்	,,
90	-	,,	,,
99	-	,,	,,
100	-	,,	,,
103	-	+,,	,,
106	-	,,	,,

120	-	,,	,,
130	-	,,	,,
131	-	,,	,,
136	-	,,	,,
138	-	,,	,,
140	-	,,	,,
143	-	,,	,,
160	-	,,	,,
161	-	,,	,,
166	-	,,	,,
167	-	,,	,,
169	-	,,	,,
176	-	,,	,,
177	-	,,	,,
189	தரு	-	,,
193	-	விருத்	சாவேரி
196	-	விருத்	,,
209	-	,,	,,
211	-	,,	,,
213	-	,,	,,
214	-	,,	,,
216	-	,,	,,
247	-	,,	,,
252	-	,,	,,
10	தரு	-	சுருட்டி
14	,,	-	,,
73	,,	-	,,
173	,,	-	,,
254	,,	-	,,
192	தரு	-	சைந்தவி
115	தரு	-	சௌராஷ்டகம்
253	தரு	-	,,

230	தரு	-	,,
218	தரு	-	தன்னாசி
240	தரு	-	,,
242	தரு	-	,,
37	தரு	-	தோடி
4	தொடைய	-	நாட்டை
137	தரு	-	நாதநாமக்கிரியை
107	தரு	-	நீலாம்பரி
191	நலுங்கு	-	-
23	தரு	-	பந்து வராளி
244	,,	-	++
246	,,	-	பரசு
54	தரு	-	புன்னாகவராளி
151	,,	-	,,
153	,,	-	,,
208	,,	-	,,
35	,,	-	மங்கள கவுசிகை
75	,,	-	,,
101	,,	-	,,
178	,,	-	,,
9	-	விருத்	மத்திமாவதி
17	-	,,	,,
68	தரு	-	,,
76	-	விருத்	,,
81	தரு	-	,,
104	,,	-	,,
112	-	விருத்	,,
114	-	விருத்	,,
118	-	விருத்	,,
145	-	விருத்	,,
146	-	விருத்	,,
148	-	விருத்	,,

150	-	விருத்	,,
152	-	,,	,,
155	-	,,	,,
156	-	,,	,,
162	-	,,	,,
164	-	,,	,,
179	-	,,	,,
180	-	,,	,,
181	-	,,	,,
182	-	,,	,,
184	-	,,	,,
185	-	,,	,,
186	-	,,	,,
187	தரு	-	மத்திமாவதி
188	-	விரு	,,
198	-	விரு	,,
201	-	,,	,,
204	-	,,	,,
206.	-	,,	,,
207	-	,,	,,
224	-	,,	,,
225	-	,,	,,
227	-	,,	,,
229	-	,,	,,
231	-	,,	,,
232	-	,,	,,
233	-	,,	,,
234	-	,,	,,
235	-	,,	,,
236	-	,,	,,
223	தரு	-	மாஞ்சி

சொல் அடைவு

அ

இ

ஈ

உ

கா

கி

சா

சூ

செ

சே

சொ

சோ

சௌ

ஞா

ட

த

தா

தி

தீ

து

பா

பி

மா

மி

மீ

மு

மூ

மெ

மே

வி

வீ

வெ

வே

வை

ஸ்ரீ

ஸ்

ஷி

சிறப்புப் பெயர் அகராதி

இறைப்பெயர்கள்

இறை அடைப் பெயர்கள்

சிவன்

சமய சித்தாந்த சொற்கள்

தேவர்

மனிதர்

அசுரர்

இறை அம்சம் உடையோர்

வடமொழிப் பெயர்கள்

உறவுமுறைப் பெயர்

இசைக்கருவிப் பெயர்கள்

மலைப் பெயர்கள்

திசைப் பெயர்

தொழில்முறைப் பெயர்கள்

பறப்பன

நடப்பன

ஊர்வன

மலர்ப் பெயர்கள்

பரிமளப் பொருட்கள்

உடலுறுப்புப் பெயர்கள்

அடுக்குத் தொடர்

ஒலி பற்றி வரும் சொற்கள்

ஆடை அணிகலன் பெயர்கள்

ஆயுதப் பெயர்கள்

வசைப் பெயர்கள்

வழக்காற்றுப் பெயர்கள்

உவமைகள் - அகர நிரல்

நூலில் இடம் பெற்றுள்ள புராணச் செய்திகள் - திருமால்

சிவபிரான்

இதிகாசக் குறிப்புகள்

இராமாணம்

அஞ்சலென் வீடணார்க்கு
மதளாய் செனகன் மகன்தனை வெட்டுமனி
செனகர்க் குதவு தாமோதரா வபையம் - *111*
படைக்கலம் முழுதுங் கொண்டு
பகைத்தவன் தம்பியானோன்
அடைக்கல மென்றபோது
அபையமே கொடுத்தானிராமன் - *126*
அம்பொன் முடி தரித்தவர் - *116*

பாரதம்

அரிவை துரோபதையைக் காத்தாய் - *116*

மூலபாட உரைநடைச் சொல்லடைவு

பக்க எண்களில்

அ

ஆ

இ

ஈ

உ

ஊ

எ

ஏ

ஒ

ஞ

த

ம

துணை நூல் பட்டியல்

அகநானூறு, கழக வெளியீடு, சென்னை, 1992

கலித்தொகை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1984

சிலப்பதிகாரம், பொ.வெ. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை, 1974

தசாவதாரத் தத்துவம், ராஜன், பரதிபா பிரசுரம், சென்னை, 1979

தமிழில் கீர்த்தனை இலக்கியம், சௌந்திரபாண்டியன், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1984

தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1953

நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ராஜகோபாலாச்சாரியார், (ப.ஆ) திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973

பத்துப்பாட்டு, (ப.ஆ) உ.வே. சாமிநாதையர், சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1974

பதிற்றுப்பத்து, கழக வெளியீடு, சென்னை, 1968

புறநானூறு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985

வில்லிபாரதம், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1970

The Serpent Cult, K.P. Aravaanan, Naval Arts Printers, Madras, 1988